
நுணசை ஆரம்
2017



யா/கைதடி நுணாவில் அ.த.க பாடசாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுணசை ஆரம்

ஆசிச்செய்தி
வாழ்த்துச் செய்தி





யா/ கைதடி நுணாவில் அ.த.க பாடசாலை

J/Kaithady Nunavil GTMS

2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைக் கீதம்

கைதடி நுணாவில் வித்தியசாலை
சீருடன் வாழியவே
கைதடி நுணாவில் கலங்கரை விளக்காய்
கலையகம் வாழியவே

(கைதடி நுணாவில்)

பத்தொன்பதாம் நூற்றாண்டதில் மலர்ந்து
பலர் மகிழக் கல்வி கலை வளர்ந்து
சித்தி தரும் அறிவு வீரம் செல்வம் யாவும்
முத்தென நல்கும் அறிவாலயம்

(கைதடி நுணாவில்)

சமயம் கணிதம் தமிழ் ஆங்கிலம் விஞ்ஞானம்
புவியியல் அழகியல் மனையியல் குடியியல்
விவசாயம் வரலாறு தொழிநுட்பம் சுகாதாரம்
விளையாட்டிலும் வெற்றி மேம்படச் செய்திடும்

(கைதடி நுணாவில்)

பண்பொடு பழக்கமும் பல நமக்களித்து
அன்பொடு அருளும் ஒழுக்கமும் ஊட்டி
மண்ணிசை மக்களும் மதிப்பையும் சேர்த்திங்கே
இன்புடை யோராய் இனிதெமை ஆக்கிடும்

(கைதடி நுணாவில்)

இயற்றியவர்
இசையமைத்தவர் } **: சங்கீத வித்துவான் பொன் ஸ்ரீ வாமதேவன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூரநோக்கு (Vision)

பண்பொடும் கல்வியும் கலையும் ஒழுக்கமும்
மிகுந்த நற்சமூகம் உருவாக

To produce a healthy society with good education, culture and ethics

பணிக்கூற்று (Mision)


ஆளுமை, ஆரோக்கியம் உயர்ந்து விளங்கிட கல்வியும்
கலாசாரமும் இரு கண்களாக

To heighten the personality and health through education and culture as two years

மகுடவாசகம் (Moto)

"ஒதுவது ஒழியேல்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மலர்க்குழு

தலைவர்	: திரு.ஆ.தங்கவேலு
இதழாசிரிர்	: திருமதி.சி.நாகலிங்கம்
துணை ஆசிரியர்	: திருமதி.ஜெ.விநாயகமூர்த்தி
உறுப்பினர்கள்	: திருமதி.ஜெ.பரம்சோதி
	திருமதி.ந.சர்மிலன்
	செல்வி.செ.கானப்பிரியா
	திருமதி.ச.நிமலரங்கன்
	திருமதி. க.உதயசந்தர்
	திருமதி.த.பஞ்சலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதழின் உள்ளே

பாடசாலை கீதம்	i
தூரநோக்கு, பணிக்கூற்று, மகுடவாசகம்	ii
மலர்க்குழு	iii
ஆசிச்செய்தி	1 – 2
வாழ்த்துச்செய்தி	3 – 40
நான் கண்ட நல்ல மனிதன்	41 – 42
அனுபவப்பகிர்வு	43 – 46
அதிபரின் அகத்திலிருந்து	47 – 49
இதழாசிரியரின் இதயத்திலிருந்து	50 – 52
பாடசாலைத்தகவல்கள்	53 – 57
பாடசாலை வரலாறு	58 – 65
சிறப்புப்பகுதி	67 – 115
மாணவர் பகுதி	119 – 144
பரீட்சைப்பெறுபேறுகள்	145 – 146
சாதனையாளர்கள்	147 – 150
நன்றிகள்	151

நன்றிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதிபர்.ஆறுமுகம் தங்கவேலு

SLPS II, B-Ed, Sp Trained



உப அதிபர்.திருமதி. சிவமலர் நாகலிங்கம்

SLTS I, BA, dip in Edu

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆசிச் செய்தி

சிவஸ்ரீ.து.ஜெகதீஸ்வரக்குருக்கள்
விளைவேலி ஆதீனம்
இந்துசமய பிரதம குரு

மானுடம் சிறக்க உழைக்கும் கல்விக்கோவில்

சைவமும் தமிழும் மனித நேயமும் நிறைந்து மக்கள் மனங்களில் அறநெறியும் சிவநெறியும் முகிழ்ந்த தென்மராட்சியின் நுதலாம் கைதடி நுணாவில் கிராமத்தின் கல்வியின் மூலம், அஞ்ஞான இருளை அகற்றும் யா/கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலையில் 03.08.2017 இல் நிகழ்வுறும் பரிசளிப்பு விழாவின் போது இப் பாடசாலையின் வரலாற்றைச் சித்திரிக்கும் வகையில் மலர் வெளிவருவது சிறப்பாகும்.

அறிவுசார் குழுமத்துடன் இணைந்து இயைந்து மகிழ்வதையிட்டு புளகாங்கிதம் அடைகின்றேன்.

இப்பாடசாலை சமூகம் மகாவித்துவான்களையும், மகாத்துமாக்களையும், மகா மேதைகளையும் மனிதம் நிறைந்த மானுடத்தையும் தன்தரிசனவீச்சாகக்கொண்டு விரைந்து செல்லும் உலகில் நின்று நிலைத்த வரலாற்றை உருவாக்க வேண்டுமென மனத்தால் விரும்பி ஆசிகளைத் தெரிவிக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆசியுரை

ஈழவூர் சைவப்புலவர்
சிவஸ்ரீ கதிர்குமாரசாமி
சுமூகலிங்க சிவாச்சாரியார் MA/JP
திருச்சபை நாயகர் , உலக சைவத் திருச்சபை - இலங்கை

ஓம் நமசிவாய சிவாய நம ஓம்

தென்மராட்சிக் கல்வி வலயத்தில் இயங்கும் பாடசாலைகளுள் ஒன்றாகிய யா/ கைதடி நுணாவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை நுணசை ஆரம் என்னும் நூல் வெளியீடு செய்வது அனைவருக்கும் மட்டற்ற ஆனந்தம் தரும் நற்செய்தியாகும். அவ்வகையில் அடியேனும் ஆனந்தமடைகின்றேன். எத்தனையோ பிறவிகள் பூவுலகில் தோன்றி மறைகின்றன.

"தோன்றிலப்புகழொடு தோன்றுக
அஃது இன்றேன் தோன்றலிற் தோன்றாமை நன்று"
"புகலுடம்பு அழியும் புகழுடம்பு அழியாது"
அரிது அரிது மானிடராகப் பிறத்தல் அரிது"

இவ்வகைச் சிறப்புக்கள் மனிதர் என்ற பெயருடைய பிறவியிலேயே பெறமுடியும் என்பதனை உணர்த்துகின்றது.

இன்றைய நவீன உலகிலே சாதனை பல புரியும் மனிதர்களிடம் "மானிடம்" தளைக்க வேண்டும். அவ்வாறு தளைத்தவர்கள் "மனிதருள் மாணிக்கம்" என்றழைக்கப்படுகின்றார்கள்.

மனிதன் மனிதனாக இருந்தால், வாழ்ந்தால் எல்லா வகை உயிரினங்களுக்கும் உதவி செய்ய முடியும். மனிதனிடம் மனிதனாக வாழ முடியாமைக்கு காரணம் புத்திசாதுரியமாகத் தொழிற்படாமையாகும். சமூகம் சார்ந்து நடுநிலையாக நின்று சிந்தனை செய்ய நல்ல யுக்தி, புத்தி, அவசியமாகின்றது. நேரிய சிந்தனை இருந்தால் இவை பயன்படும்.

மூன்றெழுத்துள் வாழ்க்கையே உள்ளடக்கமாக உள்ளது. சிவம், சைவம், தமிழ், கல்வி, அறிவு, பொறுமை, பலம், புகழ், சித்து, புத்தி, பக்தி, பணிவு, பண்பு, தயவு என்பன தனித்தனி தனி மனிதன் ஒவ்வொருவருக்கும் உரிமையானது. இவ்வுணர்வை ஏற்படுத்தும் முதலிடங்கள், இல்லங்கள், பாடசாலைகள், ஆலயங்கள், சமய சமூக நிறுவனங்கள், உயர்கல்விப் பீடங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் ஆதீனங்கள் எனப்பல உள்ளடங்குகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவை இருப்பினும் முதலிடம் பெறுபவை தன்னுடைய வீடு, தான் கல்வி கற்கும் பாடசாலை, தான் வணங்கும் ஆலயம் இவை மூன்றும் ஒவ்வொரு மனிதனுக்கும் இன்றியமையாத முதற்படியான தர்ம நிலையங்களாகும்.

கல்வி கற்கும் பாடசாலையில் மாணவனாக இருக்கும் காலம் வாழ்க்கையின் பொற்காலம் என்பதனை உணர்த்தும் ஆசிரியர், அதிபர், வாய்க்கப் பெறல் மாணவன் முற்பிறவியின் பயனாக அமைவதாகும்.

"தாரமும் குருவும் தலை எழுத்து
என்ற முதுமொழி இதனை உணர்த்துகின்றது.

இவ்வகை இப்பாடசாலையில் உணர்வுள்ள முதல்வரின் சிந்தனை வெளிப்பட, பயன்பட முதல்வரின் இரு கரங்களாக மிழிருபவர்கள் ஆசிரிய மணிகள். முதல்வரின் சிந்தனையை மெருகூட்டுபவர் வலயக் கல்விப் பணிப்பாளரும் வலயக்கல்வி அலுவலமும் வழிகாட்டும் பணியார்களும் ஆவார்கள்.

முதல்வருக்கு உதவிக்கரம் கொடுப்போராகத் திகழ்பவர்கள் பெற்றோர்கள். பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள். எல்லாவற்றிலும் மேலாக முதல்வரின் இரு கண்களாக மனக்கண் முன் நிற்பவர்கள் மாணவச் செல்வங்களேயாகும்.

மாணவச் செல்வங்களின் செழிப்பு பாடசாலைகளை உயர்நிலைக்குக் கொண்டு செல்லும். தன் குடும்பத்தை உயர்த்தி நிற்கும் வலயக்கல்வி அலுவலகம் பெருமை அடையும் மாணவனே மனிதருள் மாணிக்கமாகத் திகழ தன்னைச் சுத்திகரித்துக் கொள்வான். நாடுகாண விளைகின்ற சான்றோனைக் காணலாம். இவ்வகை மாணவர்களின் செயற்றிறன்களை வைத்தும் பாடசாலை வரலாறுகளை உள்ளடக்கியும் நற்செய்திகளையும் தாங்கி வரும் நூல் சிறப்புற அமைய வேண்டும் என்பது எனது அவாவாகும்.

திரு.ஆ. தங்கவேலு அவர்கள் இபப்பாடசாலை முதல்வர். பல கஸ்டங்களை சந்தித்து தன்னை மேல் நிலைக்கு கொண்டு சென்றவர். இவரது ஆரம்ப நியமனம் தொடக்கம் நற்பணியாற்றியவர். கிளி/ முழங்காவில் மகா வித்தியாலத்தில் தன் பணியின் சிறப்பை பல சிரமங்களுக்கு மத்தியில் மேலோங்கச் செய்தவர். இவர் போன்றவர்களின் அர்ப்பணிப்புப்பணி இன்று அவ் வித்தியாலயம் தேசிய பாடசாலையாக மிளிர்கின்றது.

இவ்வகையாக யா/கைதடி நுணாவில் அ. த. க. பாடசாலையின் வளர்ச்சிக்கு அரும்பணியாற்றி வரும் அனைவருக்கும் நல்லாசிகள் கிடைக்கவும் நூல் வெளியீடு சிறப்புற அமையவும் திருக்கைலாயன் திருப்பாதங்களை வழுத்தி இறைஞ்சுகின்றேன். நல்லாசிகளைத் தெரிவிப்பதும் அவனருளேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழ்த்துச்செய்தி

திரு.செ.உதயகுமார்
மாகாணக்கல்விப் பணிப்பாளர்
வடக்கு மாகாணம்

யா/கைதடி நுணாவில் அ. த. க. பாடசாலையினது பரிசளிப்பு விழாவையொட்டி வெளியிடப்படும் மலரிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

பல ஆண்டுகள் வரலாற்றினைக் கொண்ட இப்பாடசாலை நுணாவில் கிராமத்தில் சிறப்புடன் இயங்கி வருகின்றது. அண்மைக் காலங்களில் இப்பாடசாலையினது பரீட்சைப் பெறுபேறுகளும், இணைப்பாடவிதான செயற்பாடுகளினது அடைவுகளும் உயர்வைக் காட்டி நிற்கின்றன. க. பொ. த (சா.த) இல் 2015 ஆம் ஆண்டில் 11 மாணவர்கள் தோற்றி 8 மாணவர்கள் உயர்தரம் கற்பதற்குத் தகுதி பெற்றுள்ளனர். 2016 ஆம் ஆண்டில் 8 மாணவர்கள் தோற்றி 4 மாணவர்கள் உயர்தரம் கற்பதற்குத் தகுதி பெற்றுள்ளனர். இப்பாடசாலையில் கற்ற மாணவர்கள் பலர் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டு பட்டதாரிகளாக வெளியேறி உயர் தொழில்களைப் புரிந்து வருகின்றனர்.

இப்பாடசாலையினது வரலாறு தொடர்பான விடயங்கள் இம்மலரில் இடம்பெற்றுள்ளமை பாராட்டுதற்குரியதாகும். பாடசாலையின் வரலாறுகள் இவ்வாறு ஆவணப்படுத்தப்படும் பொழுது எதிர்கால சந்ததியினர் பாடசாலை தொடர்பான விபரங்களை இலகுவில் அறிந்து கொள்ள முடியும். எனவே மிகுந்த சிரமங்களின் மத்தியில் வரலாறு தொடர்பான விடயங்களை தேடித் தொகுப்பதில் ஈடுபட்ட அதிபருக்கும், மலர்க்குழுவினருக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இப்பாடசாலை மென்மேலும் வளர்ச்சி பெற்று சிறப்புற வாழ்த்துவதுடன், இப்பிரதேச மாணவர்களிற்கு சிறந்த கல்வியை தொடர்ந்து வழங்க வாழ்த்துகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழ்த்துச்செய்தி

திரு. கு.பிறேமகாந்தன்
மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் (நிர்வாகம்)
வடமாகாணம்

யா/கைதடி நுணாவில் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் 2017.08.03 அன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ள பரிசளிப்பு விழாவில் வெளியிடப்படுவதற்கு திருவருள் கூடியிருக்கும் "நுணசை ஆரம்" எனும் நூலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்வெய்துகிறேன்.

பழம் பெருமைமிக்க ஈழத்தமிழர் வேண்டுமென்றே திட்டமிடப்பட்டும், சிதைக்கபட்டும், மறைக்கப்பட்டும், திரிபுபடுத்தப்பட்டும் வருவது அனைவரும் அறிந்ததே. எமது சாதனைகளையும், வேதனைகளையும் முறையாக ஆவணப்படுத்தல் வரலாற்றை பேணிப்பாதுகாப்பதில் முக்கியமான தேவையாகும்.

இந்த வகையில் தென்மராட்சியின் கல்வி, மற்றும் பண்பாட்டு மறுமலர்ச்சியில் மிகவும் காத்திரமான பங்களிப்பினை வழங்கி வரும் யாழ் கைதடி.நுணாவில் அ.த.க பாடசாலையின் வரலாற்றினை ஆவணப்படுத்தல் மற்றும் மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் சுயவாக்கங்களிற்கு களம் அமைத்து கொடுத்தல் ஆகிய பெரும் பணிகளை தலைமேற்கொண்டு மேற்கொள்ளப்படும் இக் கன்னி முயற்சிக்கு எனது இதய பூர்வமான பாராட்டுக்களை தெரிவிப்பதுடன் இப்பணி மென்மேலும் சிறக்க எல்லாம் வல்ல விநாயகப் பெருமான் திருவடிகளை வழுத்தி நல்லாசி வழங்குகின்றேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழ்த்துச்செய்தி

திரு.சு.கிருஸ்ணகுமார்
வலயக்கல்விப் பணிப்பாளர்
தென்மராட்சி

தென்மராட்சியிக் கல்வி வலயத்திற்குட்பட்ட வகை II பாடசாலைகளில் ஒன்றான யா/கைதடி நுணாவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை சென்ற கல்வியாண்டில் கல்வி மற்றும் இணைபாடவிதான செயற்பாடுகளில் திறமை காட்டிய மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கி ஊக்கப்படுத்துவதன் மூலம் ஏனைய மாணவர்களையும் திறமையை நோக்கிய தடத்தில் பயணிக்கத் தூண்டும் முகமாக ஏற்பாடு செய்திருக்கும் பரிசளிப்பு விழா சிறப்புற வேண்டும் என எல்லோருக்கும் பொதுவான இறைவனை மனமொழி மெய்களால் வேண்டிப் பணிகின்றேன்.

இருபத்தோராம் நூற்றாண்டு தொழிநுட்ப வளத்தால் புதுமைகளைப் படைக்கும் ஆண்டாக மலர்ந்துள்ளது. அத்தகைய புதுமைகளுக்கு முகம் கொடுத்து அவற்றை தம் வாழ்வியலோடு பொருந்தச் செய்யக் கூடியவர்களாக மாணவர்களை வளர்த்தெடுக்க வேண்டிய பாரிய பொறுப்பு பாடசாலைகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சிறப்பாகச் சொல்லப் போனால் 2018ம் ஆண்டு முதல் அறிமுகமாவிருக்கின்ற 13 வருடக் கட்டாயக் கல்வித் திட்டம் மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும் எனில் மிகையில்லை. இத்திட்டத்தின்படி எந்தவொரு மாணவனோ, மாணவியோ தமது தகுதிக்கும் திறமைக்குமேற்ற கல்வியைக் கற்றுத் தொழில் உலகில் பிரகாசிக்க கூடியதான சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருக்கிறது. மாறிவரும் தேவைகளுக்கேற்ப மாணவ சமுதாயத்தின் கல்வி மற்றும் இணைபாடவிதான செயற்பாடுகளும் புதுமைகளை உள்வாங்கியதாகப் பயிற்றுவிக்கப்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அக்கட்டாய நிலையை எதிர்கொண்டு திறமை காட்டுகின்ற மாணவர்களுக்காக வழங்கப்படும் வெகுமதிகள் மாணவர்களின் முன்னேற்றத்திற்குப் பெரிதும் வழிசமைக்கும் எனில் மிகையில்லை. இப்பாடசாலை மாணவர்களின் தனித் திறமைக்கு ஓர் எடுத்துக் காட்டாக இவ்வாண்டு நடைபெற்ற தடகளப் போட்டிகளில் மாகாண மட்டத்தில் இரணடு தங்கப் பதக்கங்களை வென்று சாதனை படைத்திருக்கின்றது என்ற செய்தியினை வலயக் கல்விப் பணிப்பாளர் என்ற வகையில் இவ்விடத்தில் பதிவு செய்வதில் மகிழ்ச்சியடைகின்றேன். இதற்காக உழைத்த அனைவரையும் நான் பாராட்டுகின்றேன்.

இப்பாடசாலை இவ்வாண்டுக்கான பரிசில் நாள் தினப் பதிவாக "நுணசை ஆரம்" என்ற மலர் ஒன்றை வெளியிடவிருப்பது பாராட்டுக்குரியதாகும். மாணவர்களின் திறமையை வெளிக்காட்டும் பதிவுகளோடு பாடசாலை வரலாற்றினையும் தொகுத்தெடுத்து தூரநோக்குச் சிந்தனையோடு வெளியிடுவதும் மிகவும் பாராட்டுக்குரியதும் முக்கியத்துவமானதுமான செயலாகும் என்றால் மாற்றுக் கருத்துக்கு இடமிருக்காது. இத்தகையதொரு செயற்பாட்டை மனங்கொண்டு அதனை நூல் வடிவில் ஆதாரப்படுத்தும் சிந்தனை மிக உயர்ந்ததாகும். இதற்கான சிந்தனையை முன்னிறுத்திச் செயற்பட்ட பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாராவூழியர்கள், நலன்விரும்பிகள், பழைய மாணவர்கள், பெற்றோர் அனைவருக்கும் எனது மனம் நிறைந்த வாழ்த்துக்கள், பரிசில் நாள் சிறக்கவும் இம்மலர் பெருமையுறவும் எனது நல்லாசியுடன் வாழ்த்துக்களையும் கூறி மகிழ்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழ்த்துச்செய்தி

திருமதி. சிவத்திரை சிவநாதன்
பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி)
தென்மராட்சிக் கல்வி வலயம்

கல்வி நலம் பெருக்கி ஒளிர்க!

யா/கைதடி நுணாவில் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையானது சைவமும், தமிழும் தழைக்க வேண்டும் என்ற பெரு நோக்கோடு ஆரம்பிக்கப்பட்டதாகும். ஆரம்ப காலத்தில் ஓலைக்குடிசையில் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுத்த இப்பாடசாலையானது படிப்படியாக வளர்ச்சி பெற்று இன்று கல்வி மற்றும் இணைபாடவிதானச் செயற்பாடுகளில் சாதனைகள் படைத்து தேசிய மட்டச் சாதனைப் பட்டியலில் தனது நாமத்தைப் பதித்து வருகின்றமை விதந்துரைக்கப்பட வேண்டியதொன்றாகும். இதன் வளர்ச்சிக்கு வித்திட்ட பெரும் தகைகள் என்றும் உள்ளத்தில் வைத்து பூசிக்கத்தக்கவர்கள்.

இவ்வருடத்துக்கான பரிசில் நாளுக்குப் பெருமை சேர்ப்பது இப்பாடசாலையின் வரலாற்றைத் தாங்கி வெளிவரும் மலராகும். இன்று பல கல்வி நிறுவனங்களின் வரலாறுகளை மிகுந்த சிரமத்தின் மத்தியிலேயே தேடிக் கண்டு பிடிக்க வேண்டியிருக்கின்றது. அத்தகையதொரு நிலையில் இவ் வித்தியாலயம் தனது வரலாற்றைப் பதிவாக்கியிருப்பது பாராட்டுதற்குரியது.

இம் மலரானது பாடசாலை வரலாற்றுடன் ஆசிரியர்கள், மாணவர்களின் சிறந்த ஆக்கங்கள் உள்ளடக்கியிருப்பது எழுத்துலகப் பயணத்தின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையிலான ஒரு முன்மாதிரி எனில் தவறில்லை. இச்சிறப்பு மிக்க மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்க எனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை எண்ணிப் புளகாங்கிதம் அடைகிறேன்.

இவ் வித்தியாலயத்தின் பரிசில் நாள் சிறக்கவும், பரிசில் நாள் மலர் சிறப்புற வெளிவரவும் எனது உளம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றேன். இத்தகையதொரு கைங்கரியத்தை முன்னெடுத்துச் செயற்படுத்துகின்ற அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் கல்விசாரா ஊழியர்கள், பெற்றோர், நலன்விரும்பிகள் அனைவருக்கும் எனது பாராட்டுக்களையும் தெரிவித்து வாழ்த்துகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Wishing Message

Mrs.C.A.Thirukumar,
A.D.E (English) PSI
Zonal Education Office, Thenmaradchchy.

Sharing one's sensations and opinions of a school with others who are in someway part of it, sounds exciting to me as such when the principal approached me for a message, I, at once jumped at the chance, happily conveying it in here.

Kaithady Nunavil GTMS has a poignant meaning for me; since my childhood until now, it comes with me. As a child I accompanied my mother whenever she went there to cast her vote at the local local council an parliamentary elections; for me that was a thrilling event seeing the anxiety written on the people's faces. And I too exercised my first franchise in 1983 at the District Council Elections in here.

Aftermath of the 1983 communal riots I taught in here for 3 months from September to November though the time was comparatively short, I enjoyed my time working in my village.

My contact with Kaithady – Nunavil as an In-service advisor began in 2001. Since then I keep in touch with the school both personally and professionally, which makes me to hear witness the progress achievements and of course the requirements it needs. I would honestly proclaim that the school journeys towards progress in every field – education. Religious studies , sports, aesthetic and value education, school – home link and the intergrity and intent among staff.

The school always gives prominence to English Education celebrating it with great interest; the principal's eagerness on providing best possible education makes a great success; extra school hour lessons are being run with mass participation; the interest community shows towards school and its children is genuine and comprehensive; the school, I am aware of maintains a regular system for keeping in touch with the former pupils and also notice, it takes evey effort to establish a healthy working partnership with the parents.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Staff contribution for success has been fabulous; principal's leadership style has been cooperative and collaborative, as he actively consolidates every one's effort for the betterment of the school teachers and students make significant achievements, acknowledging the endeavours the principal instills in them. At this juncture I would like to highlight the principal's (Mr.A.Thangavelu's) active part as the instructional head; major preopsition of his time is spent with students and teaches to improve education. He creates the school a platform, anticipating a positive difference in the lives of students.

I would be able to witness the more sensitive and humane climate at Kaithady-Nunavil GTMS moulding it an effective and welcoming school.

I feel proud, being the zonal representative for this renowned school. May the almighty God Our Lord Jesus Christ's blessings surround you.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழ்த்துச்செய்தி

திரு.பி.மூத்துலிங்கம்
ஒய்வு நிலைப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
தென்மராட்சிக் கல்வி வலயம்

யா/கைதடி நுணாவில் அ.த.க.பாடசாயின் வரலாற்றைச் சித்திரிக்கப் போகும் "நுணசை ஆரம்" மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன். இப் பாடசாலை அமெரிக்க மிஷனால் 19ம் நூற்றாண்டின் இறுதியில் ஆரம்பிக்கப்பட்டு மாணவர்கள் குறைந்து வந்த நிலையில் சைவப் பெரியார் அமரர் அப்பா வெற்றிவேலு அவர்களால் பொறுப்பேற்கப்பட்டு 1930 தொடக்கம் 1940 வரை சிறப்பாக நடாத்தப்பட்டு பின்னர் இந்து போர்ட் (HINDU BOARD) பாடசாலையைப் பொறுப்பேற்று 1959 வரை நடாத்தியது. 1960 இல் இப் பாடசாலை அரச பாடசாலையாக க.பொ.த (சாதர) வகுப்புக்களைக் கொண்ட வகை 2 பாடசாலையாக வளர்ச்சி கண்டது

இப் பாடசாலை மட்டுவில் கொத்தணியின் கீழ் இருந்த காலத்தில் 5ம் தர புலமை பரிசில் பரீட்சையில் நல்ல பெறுபேறுகளைப் பெற்றமை ஞாபகம் இருக்கின்றது. அண்மைக் காலத்திலும் புலமைப்பரிசில் க.பொ.த(சாதர) ப் பரீட்சைகளில் தனது சித்தி வீதத்தினை உயர்த்தி தென்மராட்சி வலயத்தில் முதன்மை நிலை வகிப்பது குறிப்பிடத்தக்கது. மிகச் சிறிய காணியில் பௌதிக வளங்களைக் கொண்ட இப் பாடசாலையின் அதிபர் ஆசிரியர்கள் பாடவிதான இணைபாடவிதான செயற்பாடுகளில் பல சவால்களை எதிர் கொண்டார்கள். அவ்வேளையில் அதிபரான திரு.ஆ.தங்கவேலு பெற்றோர்கள் பழைய மாணவர்கள் மற்றும் நலன் விரும்பிகளின் உதவியுடன் காணியொன்றைக் கொள்வனவு செய்து மைதானம் ஒன்றை வடிவமைத்தார் வருடா வருடம் தரமான மெய்வல்லுநர் போட்டிகளை நடாத்தி மாணவர்களுக்கு தொடர் பயிற்சியளிக்கப்படுகின்றது. இதனால் 2016 மாகாண மட்ட விளையாட்டுப் போட்டியில் இப் பாடசாலை மாணவனொருவன் நீளம் பாய்தலில் தங்கப்பதக்கம் வென்று சாதனை படைத்ததோடு தென்மராட்சி கல்வி வலயம் நடாத்திய வர்ண இரவுகள் நிகழ்விலும் பாராட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவ் வருடம் நடைபெற்ற வடமாகாண விளையாட்டுப் போட்டியிலும் இப் பாடசாலை இரு நிகழ்வுகளில் தங்கப்பதக்கம் பெற்றதோடு அம் மாணவன் அப் பிரிவில் அதி கூடிய புள்ளிகளைப் பெற்று மாகாண மட்ட சிறந்த வீரனாக தெரிவு செய்யப்பட்டார். இந் நிலையில் பாடசாலையின் வரலாறு, அபிவிருத்தி, ஆசிரியர், மாணவர் ஆக்கங்களைத் தொகுத்து நூலொன்றை வெளியிடுவது பாரட்டிற்குரியதே. இவ்வரிய முயற்சிக்கு வழிகாட்டி உதவும் அதிபர் அவர்களையும், ஆசிரியர் குழாமையும், பாடசாலை சமூகத்தையும் மீண்டும் பாராட்டி எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழ்த்துச்செய்தி

திரு.ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி
ஓய்வுநிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர்
தென்மராட்சி

கல்விச் செழிப்பு மிகு தென்மராட்சிப் பிரதேசத்தில் சிறப்புப் பெற்றோங்கும் கைதடி நுணாவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் "நுணசை ஆரம்" மலர்ந்து மணம் வீச மனதார வாழ்த்தும் வாய்ப்புக் கிடைத்தமைக்கு மன மகிழ்வடைகிறேன்.

"அன்ன சத்திரம் ஆயிரம் அமைத்தல், ஆலயங்கள் பத்தாயிரம் அமைத்தல் போன்ற பல்வேறு தரும காரியங்களிலும் பார்க்க புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்" என்ற பாரதி உணர்வை உயிர்ப்பித்தவர்கள் எமது மூதாதையர்கள். அதிலும் சைவத் தமிழ் பாரம்பரியத்தோடு ஏழைக்கு எழுத்தறிவூட்ட எம்நாட்டு நாவலர் வாழ்ந்து காட்டி வழிப்படுத்தினார்.

'பிச்சை புகினும் கற்கை நன்றே" என்பதை உணர்ந்து மடிப்பிச்சை எடுத்தும் மனிதம் மாண்புற கல்விக் கோயில்களைக் கட்டிக் காத்தனர். கற்றவர்,கல்வி நாட்டமிருந்தும் வாய்ப்பிழந்தோர் யாவரும் கல்விப் பணி செய்து தம் சந்ததி வாழ ஊர் தோறும் பாடசாலைகள் அமைத்தனர். அவ்வாறு பலரது உணர்வு பூர்வமான செயற்பாட்டில் எழுந்து வளர்ந்த இவ்வித்தியாலயத்தின் வரலாற்றுப் பதிவாகி அவர்கள் பணி போற்றி அணியப்படும் ஆரமாக வெளிவரும் "நுணசை ஆரம்" பெறுமதி மிக்க நன்றிப் பரிசாகும்.

இவ்வித்தியாலயத்தின் மேன்மைக்கு உழைத்த ஒவ்வொருவரையும் நன்றியோடு நினைவு கூர்ந்து இன்றைய தலைமுறையினரின் கடமைகளையும் மெச்சி மேலும் மேன்மையுற ஊக்கிவிக்கும் உன்னத பணியையும் இவ் ஆரம் மேற்கொண்டுள்ளது.

"கற்றாரைக் கற்றாரே காமுறுவர்" என்பதற்கு இணங்க கல்வியில் நாட்டமிகு முதல்வர் திரு.ஆ.தங்கவேலு வித்தியாலயத்தை விவேகமாக வழிநடத்துகின்றார். இவரது உன்னதமான பணிச்சிறப்பை உளமாரப் பாராட்டுகின்றேன். வித்தியாலய முதல்வரோடு இணைந்துது நேர் மனப்பாங்குடன் மாணவச்செல்வங்களை வழிநடாத்தும் ஆசிரியப் பெருந்தகைகளின் அர்ப்பணிப்பான சேவைகளையும் நன்றியோடு போற்றுகின்றேன். பெற்றோர்கள், பழைய மாணவர்கள் அதிபருக்குத் தோன்றாத் துணையாக இருப்பது கல்விச் சமூகத்திற்கு எடுத்துக் காட்டாகும்.

ஊடகத் துறையில் எவ்வளவு நவீனத்துவங்கள் நுழைந்தாலும் அச் சேவையிலும் பதிப்புக்கள் காலத்தால் அழியாது கதை கூறும் என்பதை உணர்த்தும் தம் நூலாக்க முயற்சிக்கும் வாழ்த்துக்கள். காலந்தோறும் 'நுணசை ஆரம்" கனதியாக வெளிவந்து பயனுற வாழத்துகின்றேன். 'நல்ல வாழ்த்துக்கள் எங்கள் மத்தியில் உறுதியும் ஊக்கமும் உற்சாகமும் மனத்தெம்பும் மனமகிழ்வும் ஊற்றெடுத்து உங்கள் சேவைத்திறனை மேன்மேலும் மேம்படுத்தட்டும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழ்த்துச்செய்தி

திரு.கு.சிவானந்தம்
ஒய்வுநிலை கோட்டக் கல்விப் பணிப்பாளர்
தென்மராட்சி.

ஒரு கல்லூரியின் வரலாற்றினைப் பேணிப் பாதுகாத்து, இன்னும் பல நூற்றாண்டுகளுக்குப் பின்னரும் இதன் வரலாற்றினை எடுத்துக் கூறும் பொக்கிஷமாக விளங்குவது கல்லூரியினால் வெளியிடப்படும் மலராகும்.இந்த வகையில் இக் கல்லூரியினால் வெளியிடப்படும் "நுணசை ஆரம்" என்னும் மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெரு மகிழ்வடைந்து இவ் நற்காரியத்தைச் செய்யும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலைச் சமூகத்தினர் யாவரையும் பாராட்டுகின்றேன்.

தென்மராட்சி பிரதேசத்தில் நூறு ஆண்டுகளுக்கு மேலாக கல்விப் பணியை சிறப்பாக ஆற்றுகின்ற ஒரு சில பாடசாலைகளில் யா/கைதடி நுணாவில் அ.த.க பாடசாலையும் ஒன்றாகும். ஒரு பாடசாலை நூறு ஆண்டுகளுக்கு மேல் கல்விப் பணியை ஆற்றுகின்றதென்பது சாதாரண விடயமல்ல. இக் காலப்பகுதியில் பல வரலாற்றுச் சாதனைகளில் தடம் பதித்த அதிபர்களையும், ஆசிரியர்களையும் நன்றியுடன் நினைவு கூர்வது நம் கடமையாகும்.

நான் அறிந்த வரையில் இவ் அறிவாலயமானது ஏறத்தாழ 115 ஆண்டுகளுக்கு முன்னர் கைதடி நுணாவில் அமெரிக்கமிஷன் பாடசாலையாக மிஷனரிமாரால் 5 ஆம் வகுப்பு வரை நடாத்தப்பட்டதாகவும் பின்னர் 1960 இல் அரசாங்கம் இப் பாடசாலையைப் பொறுப்பெடுப்பதற்கு முன்னர் இந்துமகா சபையினரால் பல ஆண்டுகள் நடாத்தப்பட்டு வந்ததாகவும் 1980 ஆம் ஆண்டிற்கு பின்னர் தொடர்ச்சியாக க.பொ.த சாதாரண தரம் வரை வகுப்புக்கள் நடாத்தப்பட்டு தென்மராட்சியின் சிறந்த பாடசாலைகளில் இதுவும் ஒன்றாக இன்று காட்சியளிக்கின்றது.

இயல்பாகவே பிள்ளைகளிடம் ஆற்றல்கள் நிறைந்து கிடக்கின்றன. அவை ஆசிரியர்களால் சரியான முறையில் இனங்காணப்பட்டு தட்டிஎழுப்பி நெறிப்படுத்தப்படும்பொழுது உயர்நிலை எய்துவர். அந்தவகையில தற்போதைய அதிபர் திரு.ஆ.தங்கவேலு அவர்களதுகாலத்தில் ஆசிரியர்களது அயராத உழைப்பினால் அண்மைக்காலத்தில் இப்பாடசாலை மாணவர்கள் பலர் கல்வியிலும் இணைபாடவிதான செயற்பாடுகளிலும் வலயமாகாண, தேசிய நிலைகளில் பல வெற்றிகளை ஈட்டியும்,தங்கப்பதக்கங்களைப் பெற்றும் இவ்வித்தியாலயத்தின் பெயரை பல இடங்களிலும் உச்சரிக்கச் செய்து பாடசாலைக்கு பெருமை சேர்த்து வருவதை காண்கின்றேன். இச்செயற்பாடுகள் மேலும் விரிவடைந்து இன்னும் பல நூற்றாண்டுகள் கல்விப் பணியாற்ற இறைவனை வேண்டி, எனது நல்லாசிகளை வழங்குகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழ்த்துச்செய்தி

திரு.அ.கயிலாயபிள்ளை
ஒய்வு நிலை அதிபர் ,
யாழ் சாவகச்சேரி இந்துக்கல்லூரி

கைதடி நுணாவில் அ.த.க பாடசாலையின் பரிசளிப்பு விழாவையொட்டி வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். கைதடி நுணாவில் கிரா மக்களின் வாழ்க்கையில் ஒளியூட்டி நிற்கின்ற இவ் வித்தியாலயம் பரோபகார சிந்தனை மிக்க இவ்வூர் பெரியவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இப்பாடசாலை அறுபதுகளின் ஆரம்பத்தில் அரச பாடசாலையாக மாறியது. தென்மராட்சிக் கல்வி வலயத்தின் இரண்டாம் தரப் பாடசாலைகளில் ஒன்றாகிய இது கல்வித் தரத்திலும் பௌதீக வள வளர்ச்சியிலும் இன்று மிக உயர்ந்த நிலையில் வளர்ந்து வருவது பாராட்டுக்குரியதாகும்.

இக்கல்லூரியின் அதிபர் திரு.ஆ.தங்கவேலு அவர்கள் நல்ல தொடர்பாடல் அணுகு முறையூடாக கல்வித்திணைக்களத்தினதும், உள்நாட்டு, வெளிநாட்டு பழைய மாணவர்கள், நலன்விரும்பிகளின் நிதி உதவியுடனும் இக் கல்லூரியில் தனது சேவைக்காலத்தில் கல்லூரியினை மிக உயர்ந்த நிலைக்கு வளர்த்துச் சென்றுள்ளார். பாடசாலையின் கவின்நிலையானது இப்பிரதேச மாணவர்களை மனவிருப்புடன் பாடசாலைக்கு செல்வதற்கு தூண்டுவதை அவதானிக்க முடிகின்றது. தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த சாதரண தரப்பரீட்சை பெறுபேறுகள் கணிப்பிடத்தக்க அளவுக்கு உயர்வாக உள்ளமை வித்தியாலயத்துக்கு பெருமை சேர்க்கின்றது.

மிக நெருக்கமான இடவசதியற்ற இப்பாடசாலையை அபிவிருத்தி செய்வதற்கு மேலும் நில வசதி ஏற்படுத்திக் கொடுப்பதில் பாடசாலைச் சமூகம் ஈடுபட்டுள்ளது. மாணவர்களின் வசதிகளை மேம்படுத்துவதற்கான செயற்திட்டங்கள் கல்லூரிச் சமூகத்தினால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பெற்றோர்கள் பொருளாதார வசதிகளை கல்லூரிக்கு ஏற்படுத்தி கொடுக்கின்ற அதே வேளை தமது பிள்ளைகளை இப்பாடசாலையில் தரம் 5ற்கு அப்பாலும் கற்பதற்கு முன்வருமிடத்து இப்பாடசாலையானது தென்மராட்சியில் தரம் 2 பாடசாலைகளில் உன்னத நிலையடைய முடியும்.

இக் கல்லூரியின் அதிபர் ஆசிரியர்கள் மாணவர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் விழாச் சிறக்க இறைவன் பாதங்களைப் பணிகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழ்த்துச்செய்தி

திரு.க.அருந்தவபாலன்
ஒய்வு நிலை அதிபர்
யா/ சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி

யா/கைதடி நுணாவில் அ.த.க பாடசாலையினால் வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். தென்மாரட்சிக் கல்வி வலயத்திலுள்ள வகை இரண்டு பாடசாலைகளுள் முன்னணி வகிக்கும் ஒரு பாடசாலையாக இப்பாடசாலை விளங்கி வருகின்றது. ஒரு அதிபராக பணிபுரிந்தவன் என்ற வகையில் இப்பாடசாலை எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சனைகளின் மத்தியிலும் இது படைக்கும் சாதனைகளை எண்ணி வியந்ததுண்டு. கல்வி அடைவில் மட்டுமன்றி ஏனைய இணைத்துணை கலைத்திட்ட செயற்பாடுகள் யாவற்றிலும் இப்பாடசாலை தனது முத்திரைகளை பதித்து வருகிறது. சிறிய பாடசாலை ஒன்று மாவட்ட மாகாண மட்டங்களில் சாதனைகள் படைப்பதென்பது இலகுவானது ஒன்றல்ல. ஆனால் அதை இலகுவாகவே அடைந்து கொள்கின்றது என்றால் அப்பாடசாலையின் ஆசிரியர்கள், அதிபர் மற்றும் பாடசாலை சமூகத்தின் அர்ப்பணிப்பான பணியே காரணமாகும். இவற்றுக்கு மேலாக இம்மாணவர்கள் ஒழுக்க விழுமியப்பண்புகள் உயர்வானவை என்பதை உயர்தரம் படிப்பதற்காக எனது கல்லூரில் சேர்ந்த மாணவர்களின் நடத்தைகளில் இருந்து அறிந்து கொண்டேன்.

நீண்ட வரலாறு உடைய இப்பாடசாலை வளர்ச்சியில் பல அதிபர்களின் உழைப்பும், வியர்வையும் கலந்துள்ளது. இவர்களுக்கு எல்லாம் மகுடம் வைத்தது போன்று தற்போதைய அதிபர் திரு.ஆ.தங்கவேலு அவர்களின் பணி அமைந்துள்ளது. இவர் இப்பாடசாலையின் தலைமைப்பொறுப்பை ஏற்ற பின் மிக வேகமான வளர்ச்சியை நாம் காணுகிறோம்.

ஆளுமையும் அர்ப்பணிப்பும் மிக்க அதிபர் அவர்கள் பாடசாலை சமூகத்தை மிக நல்ல முறையில் ஒன்றிணைத்து பலவழிகளிலும் மேம்படுத்தி வருகிறார். இக்காலத்தில் பெறப்பட்ட காணி மற்றும் விளையாட்டுக்களம், அரங்கம், நன்னீர் வசதிகள் போன்றன பாடசாலைக்கும் வளம் சேர்த்துள்ளன. தனது தனித்துவமான பணியின் மூலம் எமது பிரதேச அதிபர்களுள் முதன்மையானவர் என நிரூபித்துள்ளார்.

கைதடி நுணாவில் பிரதேச மக்களின் அறிவு நிலையமான இப்பாடசாலை இன்னும் வளர்ச்சி பெற்று அம்மக்களின் வாழ்வில் ஒளியேற்ற வேண்டும். அதற்கு எல்லாம் வல்ல இறைவன் அருள வேண்டும் அதிபர் ஆசிரியர்களின் பணி சிறக்க வாழ்த்துக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழ்த்துச்செய்தி

திரு.யோ.ஜெயக்குமார்
செயலாளர்
தென்மராட்சி அபிவிருத்திக்கழகம்

யா/கைதடி நுணாவில் அ.த.க பாடசாலையின் 2017 பரிசில் நாள் அன்று வெளியிடப்படவிருக்கும் "நுணசை ஆரம்" எனும் நூலுக்கு வாழத்துச்செய்தி வழங்குவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

இப்பாடசாலையில் நான் 1960 - 1964 வரை ஆரம்ப வகுப்பு 5வரை கல்வி கற்றேன். இப்பாடசாலையில் கல்வி கற்றகாலம் இன்னும் என்நினைவில் பதிந்துள்ளது. செல்லையா வாத்தியார், கந்தவனம் வாத்தியார் இவர்களை என்னால் மறக்கவே முடியாது. இவர்களிடம் கல்வி கற்றமையினால்தான் நாம் இன்றும் நல்ல நிலையில் வாழ்கின்றோம்.


பாடசாலையின் வளர்ச்சியறிந்து அண்மையில் நான் இப்பாடசாலைக்கு விஜயம் செய்திருந்தேன். புண்பான அதிபர், கல்வி ஆசிரியர் குழாம், சிறப்பான பாடசாலைக்கல்வி நிலை அழகான விளையாட்டு மைதானம் இவை மிக அண்மைக்காலத்தில் இங்கு ஏற்படுத்தப்பட்டவையாகும். கால்கோள் விழா, இல்ல விளையாட்டுப் போட்டி, மாணவர் பராளுமன்றம் போன்ற விழாக்களுக்கு என்னையும் விருந்தினராக அழைத்திருந்தார்கள் எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

இப்பாடசாலை கடந்த ஆண்டில் விளையாட்டுப் போட்டியில் மாகாணமட்டத்தில் சாதனை படைத்து தேசிய மட்டம்வரை சென்றதை நான் அறிந்து பாராட்டினேன. அதே போல இவ்வாண்டு விளையாட்டுப் போட்டியில் ர.மகிந்தன் நீளம் பாய்தல், உயரம் பாய்தல் போட்டிகளில் முதலிடம் பெற்று தங்கப்பதக்கம் வென்றுள்ளார். சிறந்த வீரருக்கான விருதையும் பெற்றமையையிட்டு நான் எனது நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆதிபரின் வழிநடத்தலில் இப் பாடசாலை சிறப்பாக வெற்றி நடை போடுவதையிட்டு நாம் மகிழ்கின்றோம்.

புலம்பெயர் தேசத்தில் நான் இருந்தாலும் இப்பாடசாலையின் செயற்பாடுகளுக்கு என்னாலான உதவி ஒத்தாசைகளை என்றென்றும் வழங்குவேன் என்பதுடன் பரிசில் நாளில் பரிசு பெறும் மாணவவருக்கு வெளியிடப்படவிருக்கும் மலருக்கு எனது நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Prof. Kopalapillai Mahadeva
MSc, PhD (Birm), Hon DLitt, FRAS, FEng, FRSPH, FIET, FCMI
35, Brandreth Court, Harrow, HA1 2JU, UK
TEL: 0208-424 0545; E-mail: prof.kopanmahadeva@yahoo.co.uk

Dr. Seethadevi Mahadeva
MB, BS (Cey), DCH (Lond), DTM&H (Liv), DPH (Lond)



வாழ்த்துச்செய்தி

அன்று சித்திவிநாயகர் இந்து தமிழ் கலவன் பாடசாலை எனும் பெயருடன் என் மாமனார் வைத்தியர் இராமநாதர் அப்பா வெற்றிவேலுவால் கட்டுவித்து நடாத்தப்பட்டு வந்தது என நான் அறிந்த இப் பாடசாலையில் நான் படித்த காலம் 01-02-1937தொடக்கம் 19-01-1942 வரை. அது எனது மூன்று வயதில் இருந்து எட்டு வயது வரை ஐந்து ஆண்டுகள் ஆகம்.

பின் ஓராண்டு சாவகச்சேரி டிறிபேக் கலாசாலையிலும் ஐந்து ஆண்டுகள் சங்கத்தானை இந்து கல்லூரியிலும் அதன்பின் மூன்றாண்டு யாழ் மத்திய கல்லூரியிலும் கற்று பொறியியலில் பட்டம் பெற கொழும்பின் அன்றைய ஒரே ஒரு சர்வகலாசாலையில் உயர் கல்விக்கு தெரிவு செய்யப்பட்டு நான்கு ஆண்டுகளின் பின் அங்கு 1955இல் குடிசார் பொறியியலில் விசேட பட்டம் பெற்று அரசாங்கத்தில் வேலை செய்ய தொடங்கினேன்

.

என் நான்கு வயதில் தாயாரை இழந்த பின் நானும் என் மூத்த இளைய சகோதரர்களும் தந்தையும் எம் மட்டுவில் தெற்கு வீட்டை கைவிட்டு கைத டிநுணாவில் கண்டிறோட்டு அருகில் வெற்றிவேலு மாமா வீட்டுக்கு நிரந்தரமான அதிதிகளாக குடியேறினோம்.

அங்கிருந்து தான் இப் பாடசாலைக்கு நானும் அண்ணர் தில்லைநாயகமும் பின்னர் தம்பி விநாயகமூர்த்தியும் கதிர்காமர் மாமா வளவின் பின்வழியால் புகுந்து செல்வது வழக்கம். அன்று என் வகுப்புகளில் கூடிக் கற்றோரில் கந்தையா, கனகரத்தினம், அப்புக்குட்டி, தம்பு, பொன்னையா, நல்லசேகரம்பிள்ளை, கந்தையா, பேரம்பலம், அப்பையா, சரசுவதி, கார்த்திகேசு, கனகசிங்கம், சதாசிவம், சிவகுரு, மயில்வாகனம், பரிமளம், கந்தையா, பத்மநாதன், பொன்னையா, பிறைசூடி, அப்பாக்குட்டி, செல்லத்துரை, மதவீரசிங்கம், கதிரிதம்பி, வேலுப்பிள்ளை, சரசுவதி முதலிய பெயர்கள் என் மனதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் பசுமையாக உள்ளன. இவரில் ஆசிரியத் தொழிலில் மூவரும் அரசாங்க நிர்வாக சேவையில் ஒருவரும் பிற்காலத்தில் வேலை செய்து இளைப்பாறினர்.மேலும் அரைவாசிப் பேருக்கு மேல் இன்று எம்முடன் இவ்வுலகில் இல்லையே எனவும் விசனப்படுகின்றேன்.

எங்கள் காலத்தில் தலைமை ஆசிரியராக இருந்தவர் நுணாவில் மேற்கைச் சேர்ந்த துரையப்பா இளையதம்பி என்பவர்.துணை ஆசிரியர்களாக செல்லையா வாத்தியார் கந்தவனம் வாத்தியார் முதலியோர் மட்டுவில் தெற்கில் இருந்தும் திருமதி (வறுத்தலைவிளான்) வேலுப்பிள்ளை (வைத்தியர் வெற்றிவேலு மாமாவின் அடுத்த வீட்டாவர்) கைதடி நுணாவிலில் இருந்தும் வந்து எம்மை கற்பித்தனர்.

ரீங்கார உயர்ந்த குரல் கொண்ட பெரியதம்பியாரிடம் இருந்து நான் தேவரங்கள் பாடக்கற்றுக் கொண்டேன்.பங்குநேர கந்தவனம் அண்ணரின் அடிச்சுவரி வகுப்பில் நான் நொந்து அழுதது இன்றும் என் மனதை விட்டு அகலவில்லை. எனினும் பிற்காலத்தில் அவர் நான் மேற்படிப்பில் இருக்கும்போது தன்னுடைய கடிகாரத்தையே (தன் தம்பி போன்ற) எனக்கு பரிசு அளித்ததையும் மறக்க மாட்டேன். ஏனெனில் அக் காலத்தில் என் மச்சாள் ஆசிரியை வெற்றிவேலு இரத்தினத்தை மணந்து ஆண்டுகளின் பின்னர் இருவரும் சேர்ந்து இங்கு கற்பித்தனர்.

பெரிய உருவமுடைய செல்லையா வாத்தியார் மாணவருக்கு தடியால் அடித்து மிகக் கடுமையானவர் என ஊரிலேயே பெயர் பெற்றவர்) அவருக்கும் பெரியையா முறையான வைத்தியர் வெற்றிவேலு மாமா மரணித்த தினத்தன்று 1960இல் அவரின் பூதவுடலை மயானத்துக்கு தூக்கி செல்லும் நேரத்தில் நான் 20 வயது எய்தவராகியும் அடக்க முடியாது தேம்பி தேம்பி அழுத போது சொல்லி வைத்தாற் போல் செல்லையரும் தேம்பியது என்னால் மறக்க முடியாதவை.

சிறு காலத்தில் நான் நேரத்துடன் பள்ளிக்கு வந்து விடுவேன். அதே போல் எனக்கு இனமான கார்த்திகேசு லோகசுந்தரமும், கந்தையா பேரம்பலத்துடன் வந்து, ஒரு தினம் ஒருவரை இருவர் தூக்கிச் சென்று விளையாடும் போது, பேரம்பலத்தின் தலை தவறி விழுந்து, தலைமை ஆசிரியரின் கதிரையும் மேசையும் இருக்கும் கொங்கிறீற் குந்தில் அடிபட்டு, இரத்தம் வழிந்து, அதன் துரதிர்ஷ்ட பலனால், அன்று வீடு சென்றவுடன், அவ் விபத்தைக் கேள்விப் பட்ட வெற்றியர் மாமாவிடம், லோகசுந்தரத்தின் குற்றத்துக்கு நான் அடி பட்டதும் எனக்கு இன்றும் ஞாபகமாக, வலிக்கவும் செய்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு இன்று கற்கும் மாணவர்கள் கொடுத்து வைத்த அதிர்ஷ்டர்கள். அன்று ஒரு விளையாட்டுத் திடல் இன்றி நாம் உள்ளேயே விளையாடி, விபத்துப் பட்டு, வீட்டில் அடி வாங்கினோம். ஆனால் இன்றுள்ள பிரயாசியான உங்கள் பிறின்சிப்பல் திரு ஆறுமுகம் தங்கவேலு பழைய மாணவராகிய எமது பணவுதவியுடன் பெரிய விளையாட்டு மைதானத்தை உங்களுக்குச் சொந்தமாக்கி ஒரு மேடையையும் கட்டித் தந்துள்ளார். வேறு பல சங்கீத உபகரணங்கள், வாசிகசாலை போன்றவற்றை அமைத்துத் தந்து இவ் வித்தியாசாலையின் தராதரத்தையே உயர்த்தி, இங்கிருந்து நேரே தெரிவு செய்யப்பட்டு உயர் கல்விக்கு மாணவர்கள் செல்ல வழி வகுத்துள்ளார். அவர் இங்கிருந்து இளைப்பாறும் வேளை அவரின் நினைவில், இன்றிருக்கும் மூன்றான வெற்றிவேலு இல்லம், செல்லையா இல்லம், கதிர்காமு இல்லம் போன்று, தங்கவேலு இல்லம் என்று ஒரு நான்காவது இல்லத்தை நிறுவுதல், அவர் சேவைகளுக்கு ஒரு நன்றிக்கடன் தீர்ப்பாக இருக்கும் என இத்தால் முன்-மொழிகின்றேன்.

என்னுடைய இந்த ஆரம்ப பள்ளியை நான் அறவே மறந்திருந்த வேளை, பிறின்சிப்பல் தங்கவேலுவில் அழைப்பின் மூலம் நானும் என்னுடைய மனைவியார் வைத்தியை சீதாதேவி (முத்துக்குமாரசாமி) மகாதேவா அவர்களும் இரண்டு இலட்சம் ரூபா நன்கொடை செய்து அதற்கென ஒரு வங்கிக் கணக்குத் திறந்து அதில் வரும் வருடாந்த வட்டியிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் இரு மாணவ-மாணவிகளுக்கு தலா வருடம் 5000 ரூபா புலமைப் பரிசில் எங்கள் பெயரில் அளித்து ஒருவர் பொறியியலும், இணைடாமவர் வைத்தியமும் படிக்க உதவி செய்து உள்ளோம்.

மேலும் இரு தடவையாக முதலில் ஒரு இலட்சமும் பின்னர் இரண்டு இலட்சமுமாக மொத்தம் மூன்று இலட்சம் ரூபா விளையாட்டு மைதானக் காணி வாங்கிய கூட்டுநிதிக்கும் நன்கொடை அளித்துள்ளோம் எனவும் மனம் மகிழ்கிறேன். வணக்கத்துக்குரிய போப் எனும் மேல்நாட்டுப் பாதிரியார் தமிழ்நாட்டிலுள்ள சங்ககாலத் திருக்குறளை ஆங்கிலத்தில் ஆக்கி உலகப் பிரசித்தி அடைய உதவியதைப் போல், மீசாலையிலிருந்து ஓடி ஓடி வந்து எமது வித்தியாலயத்தை அபிவிருத்தி செய்து, வட மாகாணத்தில் ஒரு உதாரணமான கல்லூரியாக்கியுள்ள திரு தங்கவேலு, தான் பிரியுமுன்னர் எம் இக் கலாசாலையை அனைத்திலங்கை விளையாட்டுத் துறையிலும் கல்வித் துறையிலும் பிரகாசிக்கச் செய்ய வேண்டும் எனவும் அன்புடனும் தயவாகவும் வேண்டிக் கொள்கிறேன்.

மேலும் ஒரு முக்கியமான கோரிக்கை. ஆங்கிலம் எம்மை அடக்கி ஆண்ட பிரித்தானியர் மொழி எனினும், இன்று அது முதன்மையான உலக மொழி. அதற்கு எம் இலங்கை அரசாங்கமும் மதிப்புக் கொடுத்து, அதை எம் நாட்டின் மொழிகளில் ஒன்றாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றுக் கொண்டு, அதைக் கற்பதற்கு ஊக்கமும் அளித்துள்ளது. தவிர, ஆங்கிலம் கற்றால் எம் மாணவர்கள் வருங்காலத்தில் உலகம் முழுவற்றுடனும் தொடர்பு கொள்ளவும், வெளிநாட்டில் வேலை செய்து எம் நாட்டுக்கும் இனத்தவருக்கும் முதியோருக்கும் பணம் அனுப்பி உதவவும் முடியும். எனவே எம் கல்லூரியில் ஆங்கிலம் ஒரு முக்கிய பாடமாகக் கற்றுக்கொடுக்கும் ஏற்பாடுகளைத் துரிதப்படுத்த வேண்டும் என ஊக்க விரும்புகிறேன்.

முடிவில், ஒரேஒரு நற்சிந்தனை:- எம் தமிழினம் சகோதர மொழியினரின் ஆதிக்கத்தால் எவ்வளவு பாதிக்கப் பட்டுள்ளது என்பதை நானும் நன்கறிவேன். ஏனெனில் தமிழின உரிமை முதலியவற்றிற்கு நானும் பல வழிகளில் சென்ற பலதசாப்தங்களாகப் போராடி வந்துள்ளேன். எனினும், இன்றைய சமாதானப் போக்கில், இக் கல்லூரியிலும், சிங்களமும் ஒரு பாடமாகக் கற்பித்தால் எம் மாணவரும் தமிழீழமும் இலங்கைநாடும் சீக்கிரம் முன்னேற முடியும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துச்செய்தி

திரு.வல்லிபுரம் பேரின்பநாயகம்,
ஓய்வு பெற்ற ஆசிரியர்,
மட்டுவில் தெற்கு (மண்டகள்)

யாழ் கைதடி நுணாவில் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையினால் வெளியிட இருக்கும் வரலாற்று மலருக்கு இந்த வாழ்த்துச் செய்தியை அனுப்புவதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

எனது ஆரம்பக் கல்வியை இப் பாடசாலையில் தான் நான் தொடங்கினேன். அதே போல் அங்கு கற்ற மாணவர்கள் பலர் ஐரோப்பிய நாடுகளில் உயர் பதவிகள் பெற்று இன்று நல்ல நிலையில் இருக்கிறார்கள். பாடசாலைத் தேவைகளை நிறைவு செய்வதற்கு எம் பாடசாலைச் சமூகம் பல முயற்சிகளை எடுக்கும். அதே வேளை பழைய மாணவர்கள், நலன் விரும்பிகளின் உதவிகளையும் எதிர்பார்த்து நிற்கின்றது. தேவைகள் என்றோ நிறைவுபெறும் என்ற நம்பிக்கை கொண்டே பாடசாலைச் சமூகம் செயற்பட்டு வருவதை நானும் அனுபவத்தில் நன்கு அறிவேன்.

அன்று அர்ப்பணிப்போடு பாடசாலையின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டு உழைத்து, இன்று வெளிநாட்டில் வாழ்ந்தாலும், எமது பாடசாலையின் பழைய மாணவர்கள் இணைந்து செயலாற்றும் என் பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கு உரிய ஆசான்களை நான் போற்றுகின்றேன்.

உம் பணி தொடரவும் சிறக்கவும் என் நல்லாசிகள். வாழ்க, யாழ் - கைதடி நுணாவில் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை வாழ்க! எம் பழைய மாணவர் ஒன்றியம், ம.நு.அ.ச..!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழ்த்துச்செய்தி

திரு.நா.அருட்சோதி
ஓய்வுநிலை அதிபர்
யா/கைதடி நுணாவில் அ.த.க பாடசாலை

யா/கைதடி நுணாவில் அ.த.க பாடசாலையினால் முதல் முறையாக வெளியிடும் பாடசாலை மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

தென்மராட்சியில் பல பாடசாலைகளில் போர்ச்சூழலால் வரலாற்றுக்குறிப்புக்கள் அழிந்து விட்டது. இப்பாடசாலையும் அதற்கு விதிவிலக்கல்ல. இப்பாடசாலையின் வரலாற்றை தேடி ஆவணப்படுத்தினால் எதிர்காலத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு பேருதவியாக இருக்கும். அந்த வகையில் அதிபர் அவர்களின் முயற்சியை பாராட்டுகின்றேன்.

இப்பாடசாலை பற்றி பழைய மாணவர்களுடன் பேசும் போது எல்லோருமே செல்லையா உபாத்தியார் பற்றி குறிப்பிடுவார்கள். அவர்களிடம் கல்வி பயின்றவர்கள் நல்ல அரசப்பணிகளில் சிறப்பு தேர்ச்சி பெற்றவர்களாக இருப்பதை காணக்கூடியதாக உள்ளது.

இப்பாடசாலையில் திரு.க.இளையதம்பி அவர்கள் அதிபராக கடமை புரிந்து கொண்டிருந்த காலத்தில் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் முன்னனி வகித்த பாடசாலைகளில் இதுவும் ஒன்று.

இப்பாடசாலை இன்று இந்த அளவிற்கு உயர்ந்திருப்பதற்கு இன்றைய அதிபர் ஆ.தங்கவேலு அவர்கள் காரணமாவார். கல்வி, பௌதீகவளம், இணைப்பாடவிதானம் என பன்முக அபிவிருத்தியை ஒரே நேரத்தில் ஏற்படுத்தி சாதனைகள் படைத்தமை மூலம் அவரை ஒரு செயல்வீரனாகவே பார்க்கின்றேன்.

முன்பு கடமை புரிந்த அதிபர்கள் ஆசிரியர்களின் உழைப்பும், செயல் திறன்களையும் பாராட்டி வாழ்த்துகின்றேன். அதன் தொடர்ந் தேர்ச்சியாக செயற்பட்டு வரும் இன்றை அதிபர் ஆசிரியர்களையும் மாணவர்களையும் வாழ்த்துவதில் பேரூவகையடைகின்றேன்.

இந்த மலரை நல்ல தருணத்தில் வெளியிடுவது பாடசாலை ஆவணமாக இருப்பதுடன் இக் கிராமத்தின் இருப்பையும் ஓரளவு வெளிப்படுத்தும் விதமாக அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழ்த்துச்செய்தி

Dr.ப.நித்தியானந்தன்
செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்

மேற்படி சிறப்பு மலர் வெளியீட்டிற்கு பழைய மாணவர் சங்க செயலாளர் என்ற ரீதியில் எனது செய்தியை பதிவு செய்வதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். மேற்படி பாடசாலையின் ஸ்தாபகர் வைத்தியர் அப்பா வெற்றிவேலு அவர்கள் எமது பிரதேசத்தில் வைத்தியராக சேவை செய்து புகழ் பெற்றவர் அத்துடன் அவரின் தூரநோக்கான சிந்தனையில் தோன்றியதே இன்றைய கைதடி நுணாவில் அ.த.க பாடசாலை என்றால் மிகையாகாது. அதாவது ஆயிரத்து தொளாயிரமாம் (1900) ஆண்டின் முற்பகுதியில் இப் பாடசாலை ஒரு திண்ணைப் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டு பின்னர் படிப்படியாக வளர்ந்து இன்றைய நிலைக்கு வந்தது என அறிய முடிகின்றது.

மேலும் ஸ்தாபகர் வைத்தியர் வெற்றிவேலு அவர்கள் வைத்திய தொழிலுடன் பாடசாலையின் நிர்வாக கட்டமைப்பையும் தனது தலைமைத்துவத்துடன் சேர்த்து நடாத்தியதாகவே அறிய முடிகின்றது.

அதாவது ஸ்தாபகர் வைத்தியர் அப்பா வெற்றிவேலுவின் இரு பெரிய சேவைகளும் கடவுள் தன்மை சேவைகள் ஆகும்.

1. கல்விச் சேவை (வித்தியா சேவை)
2 வைத்திய சேவை

service to man kind is service to god

எழுத்து அறிவித்தவன் இறைவன் ஆவான் என்பது போல வைத்தியர் வெற்றிவேலு அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட எமது பாடசாலை எமது மக்களின் அகக் கண்களைத் திறந்து அகவெளியைக் கொடுத்து இருக்கின்றது என்றால் அது மிகையாகாது. ஊரில் பாடசாலை இல்லை எனின் ஒரு சிலரைத்தவிர ஏனையோர் நகர்ப்புற பாடசாலைகளுக்கு அன்றைய கால கட்டத்தில் சென்றிருக்க மாட்டார்கள் ஆகவே சாமானிய மக்களின் அறிவுக்கண்களை வைத்தியர் வெற்றிவேலு திறந்தார் என்பதோடு அவர்களின் சுகாதார சேவைகளையும் வழங்கிய ஒரு பெரியாராக உத்தம புருசராக பாரக்கப்படுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் எமது பாடசாலையில் ஆரம்ப இடைநிலை கல்வி கற்றவர்கள் இன்று எமது நாட்டிலும், புலம்பெயர் நாடுகளிலும் எமது பாடசாலையின் மகுடத்தை நிலை நாட்டியவாறு வாழ்கின்றனர். என பதிவு செய்வதில் மிக்க மகிழ்ச்சியே நானும் இப் பாடசாலையில் ஆரம்ப நிலை கல்வி பயின்றேன் என்பதனை மகிழ்ச்சியுடன் பதிவு செய்கின்றேன்.

இன்று இப் பாடசாலையின் பழைய மாணவர்கள் பேராசிரியர்களாக, நல்லாசிரியர்களாக வைத்தியர்களாக பொறியியலாளர்களாக சங்கீத வித்துவான்களாக விரிவுரையாளர்களாக சிறந்த தொழிலதிபர்களாக, சிறந்த விவசாயிகளாக பல்வேறு விற்பனையாளர்களாக எமது சமூகத்தில் தோற்றம் பெற்று ஏற்றமிகு வாழ்வு வாழ்கின்றார்கள். என்பதை மிக்க மகிழ்ச்சியோடு பதிவு செய்து கொள்கின்றேன்.

மேலும் இன்றைய பரிசில் நாள் நிகழ்வில் பரிசுகளைப்பெற்று மகிழ்கின்ற மாணவச் செல்வங்களையும் அவர்களை அந் நிலைக்கு வழிநடத்திய அதிபர் ஆசிரியர்களையும் வாழ்த்தி எனது நன்றியறிதலையும் பாராட்டுக்களையும் தெரிவிப்பதில் பெரு மகிழ்வடைகின்றேன்.

wish this Schools Staffs and Students all Success in Future Endevour
Thanks a lot

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழ்த்துச்செய்தி

திரு.வி.சு.துரைராசா,
கைதடி நுணாவில், கிராம நலன்விரும்பி,
கனடா.

கைதடி நுணாவில் கிராமத்தில் பிறந்த நான் இன்றுவரை எனது கிராமம் கைதடி நுணாவில் என்று கூறுவதை மிகவும் பெருமையாக கருதுபவன். கைதடி நுணாவில் கிராமத்தில் பல அறிஞர்களை, பல சேவையாளர்களை உருவாக்கிய பாடசாலை கைதடி நுணாவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையென்றால் அது மிகையாகாது. 1954 தொடக்கம் 1961 ஆம் ஆண்டு வரை இப்பாடசாலையின் மாணவனாக இருந்ததை இன்றுவரை நினைவு கூறுகின்றேன். எனக்கு அ.....ஆ..... சொல்லித் தந்த ஆசிரிய தெய்வங்களான பொன்னையா - கந்தவனம், கந்தவனம் - இரத்தினம் இருவரும் எனது ஆரம்பகால ஆசிரியர்கள். இன்றும் என் நினைவில் இருக்கின்றார்கள். தொடர்ந்து நான் எட்டாம் வகுப்பு வரை கல்வி கற்றேன். எட்டாம் வகுப்பு N.P.T.A பரீட்சையில் கைதடி நுணாவில் அ. த. க. பாடசாலையில் "A" பிரிவில் சித்தியடைந்து அப்போதைய எமது வகுப்பு ஆசிரியர் வேலாயுதர் - நாகமுத்து அவர்கள் அடுத்த வகுப்பிற்கான முழு புத்தகங்களையும், பாடசாலைக் கொப்பிகளையும் எனக்கு இலவசமாக வாங்கித் தந்து என்னை உற்சாகப்படுத்தியது எனக்கு இன்றும் நினைவில் இருக்கின்றது.

இப்பாடசாலையின் ஆரம்பகர்த்தா, ஸ்தாபகர் திரு. அப்பா - வெற்றிவேலு அவர்கள் என எனது தந்தையார் அடிக்கடி கூறியது எனக்கு நல்ல நினைவில் இருக்கின்றது. இப்பாடசாலையின் அதிபராக இருந்த கந்தையா - இளையதம்பி அவர்களோடு சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினர் திரு. வ. ந. நவரத்தினம் அவர்களோடு பேசி இரண்டு மாடி கட்டிடம் ஒன்றை எமது பாடசாலைக்கு பெற்றது இன்றும் என் நினைவில் இருக்கின்றது. இப்பாடசாலையின் நீண்டகால பிரச்சினையாக இருந்த விளையாட்டு மைதானம் அதிபர் தங்கவேலு அவர்களின் காலத்திலேயே நிறைவு செய்யப்பட்டதை இங்கு பதிவு செய்வதில் மிகவும் பெருமை கொள்கின்றேன். எவராலுமே நிறைவு செய்ய முடியாது என கைவிடப்பட்ட விடயம் எமது பாடசாலையின் அயலில் இருந்தவர்கள் எவரும் இவ்விடயத்தில் கைகொடுக்காதது மிகுந்த கவலையான விடயமாக இருந்தாலும் அதிபர். ஆ. தங்கவேலு அவர்களின் இடைவிடாத அக்கறையுடன் செயல்பட்ட விதமும் இப்பகுதி மக்களுடன் அவர் கொண்ட உறவு அவருடைய விசுவாசம் நிறைந்த கடினமான உழைப்பு இன்று எமது பாடசாலைக்கு ஒரு விளையாட்டு மைதானம், ஒரு அரங்கம் என பல அபிவிருத்தி வேலைகள் நடைபெற காரணமாக இருந்தவர் அதிபர் ஆ. தங்கவேலு அவர்கள் தான். அவருடைய முயற்சி, அவருடைய கடினமான உழைப்பு அவருடைய இடைவிடாத அக்கறை இன்று யாழ்ப்பாண மாவட்டத்தில் பெயர் குறிப்பிடக்கூடிய ஒரு பாடசாலையாக உயர்ந்து நிற்கின்றதென்றால் எங்கள் அதிபர் ஆ. தங்கவேலு அவர்கள்தான் காரணம் என்பதை நான் மகிழ்ச்சியுடன், இச்செய்தியில் பதிவு செய்து கொள்வதில் மீண்டும் பெருமை கொள்கின்றேன்.

அதிபர் ஆ. தங்கவேலு அவர்களின் காலம் எமது கிராமத்தின் பொற்காலம். அவருடைய பணி மேலும் எமது கிராமத்திற்கும், எமது கிராமத்தின் மாணவ செல்வங்களுக்கும் தொடர்ந்து கிடைக்க இறைவனை வேண்டி விடை பெறுகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழ்த்துச்செய்தி

திரு.செ.தவரத்தினம்
பழைய மாணவன்
லண்டன்

இதே பாடசாலையில் தான் நானும் என்னுடைய தமக்மையார் திருமதி சிவனேஸ்வரி குகநாதனும் எம் தம்பி செல்வராசாவும் எங்கள் ஆரம்ப கல்வியை 1940களில் சேர்ந்து பெற்றோம். அதன் பின் நான் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரிக்கு ஆங்கிலக் கல்வி பெறச் சென்றேன். ஏனெனில் இங்கு அன்று மூன்றாம் வகுப்புக்கு மேல் இல்லை. மேலும் ஆங்கிலம் ஒரு பாடமாக ஏனும் கற்பிக்கப் படவில்லை. ஆங்கிலம் கற்றால் ஒரு சிறிய அரசாங்க உத்தியோகம் எனினும் பெறலாம் என்ற நிலையே அன்று. எனினும் தமிழை இங்கு ஓரளவு கசடறக் கற்ற பின்னரே வெளியேறினோம் என்பதில் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன். மேலும், அன்று மிகச் சிரமப்பட்டே நாம் கல்வி கற்றோம். ஏனெனில், எமக்குப் பெரும்பாலும் மட்டுவில் தெற்கிலும் கைதடி நுணாவிலிலும் அன்றைய வாழ்க்கை, வறுமைக் கோட்டைப் பணிந்தே நடந்தது. எனவே, கனிஷ்ட பொதுத் தராரதப் பரீட்சைக்குப் பின்னர் நாம் சாதாரணமாக ஏதாவது ஒரு சிறிய வேலையைத் தேடி உழைக்கத் தொடங்கி விடுவோம். நானும் அவ்வாறே இலங்கைப் போக்கு வரத்துச் சபையில் பேருந்து நடத்துனராகச் சேர்ந்து, பின்னர் ஓட்டுனராகப் பயிற்சி பெற்று இரவு பகலாக வேலை செய்து உழைத்துச் சேமித்து மணம் புரிந்து நான்கு பிள்ளைகளைப் பெற்று இங்கிலாந்துக்கு அவர்களைக் கூட்டிச்சென்று அவர்கள் நால்வருக்கும் உயர்கல்வி ஊட்டிப் பட்டதாரிகள் ஆக்கி இன்று மனைவியுடன் அங்கு இளைப்பாறி வாழ்கிறேன்.

இரு வருடங்களுக்கு முன்னர் உங்கள் அதிபர் திரு ஆ.தங்கவேலு, விளையாட்டு அரங்குக்கு நிதி திரட்ட என்னுடன் தொலை பேசித் தொடர்பு கொண்ட போது அதற்காக நான் இலண்டனில் உள்ள மட்டுவில் தெற்கு கைதடிநுணாவில் வாசிகளை அழைத்து எமது பேராசிரியர் கோபன் மகாதேவாவின் தலைமையில் ஒரு சங்கத்தைக் கூட்டி நான் தனாதிகாரி ஆகவும், எந்திரிகர் இராசரத்தினம் தேவபாலன் பின்-தலைவராகவும் சிவகுரு தனபாலசிங்கம் செயலாளராகவும் இயங்கி ஆறு இலட்சம் ரூபா பணம் அனுப்பி, நான் ஒரு புது நிழற் படக் கருவியும் பரிசளித்து, பிள்ளைகளின் புலமைப் பரிசுக்கும் ஆண்டாண்டு இருபத்தையாயிரம் ரூபா கொடுக்க ஒழுங்கு செய்துள்ளேன். எம் பல் நோக்குச் சங்கம் ஆங்கிலத்திலே 'Madduvil Nunavil Welfare International (MNWI)" எனவும், தமிழில் 'மட்டுவில் நுணாவில் அனைத்துலகர் சங்கம் என்றும் பெயர் கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்துடன் பேராசிரியர் மகாதேவாவின் சார்பிலும் என் சார்பிலும் மூன்று வருடாந்த விளையாட்டுப் போட்டிகளில் நான் இங்கு பறந்து வந்து பங்கு கொண்டேன், பேசினேன், மாணவர்களுக்கு எனது அனுபவத்தில் சில ஆலோசனைகளும் கூறினேன். இவற்றை என் முழு மனத்தினுடனும் மகிழ்வுடனும் எம் அடுத்த சந்ததியின் நன்மைக்காகச் செய்தேன்.

பாடசாலையின் இன்றைய அதிபர் திருவாளர் ஆறுமுகம் தங்கவேலு அவர்கள் இவ் வித்தியாசாலையை இன்றுள்ள நிலைக்கு உயர்த்த எவ்வளவோ செய்துள்ளார் என்பதை நாம் எல்லோரும் அறிவோம். எனவே அவர் இங்கிருந்து விலகும்போது அவரின் பெயருடன் இக் கலாசாலையில் உள்ள விளையாட்டு இல்லங்களில் ஒன்றைப் புதிதாக நிறுவுவதைப் பற்றி பேராசிரியர் கோபன் மகாதேவாவின் பிரேரணையை நான் வழி-மொழிகிறேன். மேலும் திரு தங்கவேலுவின் உத்தியோக மேலுயர்வுக்கு எங்கள் எல்லாருடைய வாழ்த்துக்களும் உரித்தாகுக.

மற்றும் உங்குள்ள ஆசிரியர்களுக்கும், மாணவ மாணவிகளுக்கும், உம் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினருக்கும், எனது வாழ்த்துக்களையும் நல்லெண்ணத்தையும் தெரிவித்துப் பணிவுடன் என் செய்தியை முடிக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்துச்செய்தி

சித்த ஆயுள்வேத மருத்துவர்
திருவாளர் அப்பா வெற்றிவேலு அவர்களின்
பேரக்குழந்தைகள்

விதையொன்று விருட்சமாகியது

ஒரு கிராமம் வளர்ச்சிப்பாதையில் செல்ல வேண்டுமாயின் அக்கிராமத்து மக்கள் மத்தியில் புதிய உத்வேகம், புதிய மாற்றம், புதிய வளர்ச்சி, புதிய புதிய செயல் திட்டங்கள் புதிய சமுதாய மாற்றத்திற்கான அடித்தளம் என்பது தேவையாகின்றது. அக்கிராமத்திற்கு முதலில் அமையும் கல்விக்கூடம் தான் மிகவும் முக்கியமான அத்திவாரம்.

அந்த அத்திவாரம் மிகவும் சிறப்பாக அமைய வேண்டுமென்பதில் கைதடி நுணாவில் கிராமத்தின் பிரபல சித்த ஆயுள்வேத மருத்துவர் திருவாளர் அப்பா வெற்றிவேலு அவர்களின் அயராத முயற்சியின் செயல் திட்டம் தான் கைதடி நுணாவில் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை. அக்கல்விக்கூடம் இன்று கைதடி நுணாவில் கிராமத்தின் முக்கிய கல்விக் கூடமாக மட்டுமல்ல தென்மராட்சி பிரிவில் இயங்கும் பாடசாலைகளில் ஒரு முன்னோடிப் பாடசாலையாக திகழ்கின்றது. நல்லவர்கள் தொடங்கும் எந்தப் பணியும் நீண்டகாலம் சிறப்பாக இயங்கும். அது மட்டுமன்றி பலரின் பாராட்டுக்கும் எல்லோரின் வாழ்த்துக்கும் உரியதாகும்.

சந்ததி சந்ததியாக கைதடி நுணாவில் மட்டுவில் தெற்கு கிராமத்துக் குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்கும் உயர்வுக்கும் இந்தப் பாடசாலை உயிர் நாடியாக அமைந்துள்ளதென்பதை எல்லோரும் நம்புவோம்.

இப் பாடசாலையை உருவாக்குவதில் மருத்துவர் அப்பா வெற்றிவேலு அவர்கள் ஆரம்ப காலத்தில் பட்ட துன்பங்கள், சவால்கள் ஏராளம். ஆனால் அவர் எந்தத் துன்பத்தையும் பொருட்படுத்தாமல் அனைத்துச் சவால்களுக்கும் முகம் கொடுத்தார். கைதடி நுணாவில் கிராமத்தில் பாடசாலை ஒன்று அமைப்பதே அவரின் முக்கிய குறிக்கோளாகவிருந்தது. அவருடைய அந்த நினைப்பு, அவருடைய எண்ணம் நிறைவேறியது. அன்று சித்த ஆயள்வேத மருத்துவர் திருவாளர் அப்பா வெற்றிவேலு போட்ட விதை இன்று விருட்சமாகியது எமக்கெல்லாம் பெருமகிழ்ச்சியளிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Wishing Message

Dr.Sellaih Selvanayakarajh

Dear Sir

Thank you for asking me to write a few words about my old school. I studied at this school from 1951 to 1956, until grade 05 I enjoyed attending this school, and was liked by all the students and teachers. I continued my studies at jaffna central college, and the went to the university of colombo to become a doctor.

This school gave me the basic education to achieve my ambitions and has also helped other students to do the same. I am grateful to the teachers and students who guided and helped me to achieve who I am today. I am happy that the school is continuing to do the same still today.

My father also had been working as a teacher here for 30 years. I am so happy and proud to share 'this message with you'. I congratulate all the students and teachers on their achievement, and wish you all good luck for your future endeavours.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழ்த்துச்செய்தி

திருமதி.அரியோம்பூபதி கமலநாதன்
ஓய்வு பெற்ற ஆசிரியர்

அறிவூட்டும் ஆலயமாகத் திகழும் யா/கைதடி நுணாவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிறந்து 20ம் நூற்றாண்டில் எம்மை வளர்த்தெடுத்து 21ம் நூற்றாண்டில் புதுமணம் பரப்புவதனையிட்டு நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். எனக்கு கல்வியறிவூட்டிய தாயானவள் இன்று புதுமலரை முதல் முறையாகப் பிரசவிக்கப் போகின்றாள் என்பதனால் உளம் பூரிப்படைகின்றது.

கல்வியில் சிறந்து கருத்தினில் உயர்ந்து பார்போற்றும் நல் ஆசானாக உருவாக்கி வைத்த என் கல்வித் தாய் நீடுழி வாழ்க.

பாடசாலையின் வளர்ச்சியிலே அதிபர், ஆசிரியர்கள், சமூகம் அனைவரது ஒத்துழைப்புமே மிக முக்கிய பங்கை வகிக்கின்றது. இந்த வகையில் அனைவரது ஒற்றுமையும் ஒத்துழைப்பும் மேன்மேலும் சிறக்க வேண்டும் எனவும் அதற்கு இறையருள் கிடைக்க எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

பாடசாலையின் கல்விப்பணி சிறக்கவும் இம் மலர் தொடர்ந்து வரும் காலத்திலும் நல்லிதழாக வெளி வரவேண்டும். அதற்கு பாடசாலைச் சமூகம் ஒத்துழைக்க வேண்டும் எனவும் இவை யாவற்றிற்கும் இறைவனை வேண்டி மேன்மேலும் சிறப்புக்கள் பெற திக்கெட்டும் புகழ் மணம் பரப்ப இறைவனைப் பிரார்த்தித்து மனமார வாழ்த்துகின்றேன்.

வாழ்க ! வாழ்க ! வாழ்க !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழ்த்துச்செய்தி

கலாநிதி வைத்திலிங்கம் சிவராசா
மனித உரிமைகள் அமைப்பு
வடமாகாண ஆளுநர் **STC, கொழும்பு, யாழ்ப்பாணம்**

சிவபூமி எனத் திருமூலரால் சிறப்பித்து அழைக்கப் பெற்றது இலங்கை. மணித்திருநாடு அகில உலகிலும் சைவமும் தமிழும் இரு கண்களெனப் பொற்றியவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமகநாவலர். கந்தபுராண கலாசாரம் நிறைந்த பதி வடமாகாணம் இவ்வகைச் சிறப்புக்களுடன் முக்கனிகளுக்கு பெயர் பெற்ற இடம் தென்மராட்சியாகும். தென்மராட்சிக் கல்வி வலயத்திற்குள் அமைந்த யா/கைதடி நுணாவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை நுணசை ஆரம் என்னும் வரலாற்றுப் பொக்கிஷம் அடங்கிய நூல் வெளியீடு செய்வது அறிந்து மட்டற்ற அகமகிழ்வு அடைகின்றேன். மாணவர்களின் ஆக்கங்கள், இணைபாடவிதானச் செயற்பாட்டின் சாதனைகள், பாடசாலை வரலாறு எனப் பல அறிவுப் பொக்கிஷமான செய்திகள் வருங்காலத்துக்கு அத்தியாவசியமானது என்பது உணர்ந்த பாடசாலையின் முதன்மை நெறிப்படுத்துனர், துணை நெறிப்படுத்துனர்கள் பாடசாலைச் சமூகத்தினர் நலன் விரும்பிகள் அனைவரும் ஒன்றிணைந்து இவ்வரிய கைகங்கரியத்தில் தம்மை அர்ப்பணிப்புடன் ஈடுபடுவது பாராட்டப்பட வேண்டிய விடயமாகும்.

"மாணவர்கள் கல்வி கற்கும் காலம் தான் வாழ்க்கையின் பொற்காலமாகும்" இக் காலத்தை புனிதமாகப் பயன்படுத்த மாணவர்களை வழிப்படுத்த வேண்டியது அனைவரின் கடமையாக இன்றுள்ளது. பொழுது போக்கு சாதனங்களின் வளர்ச்சி, பொருளாதாரம், தொடர்பாடல் சாதனங்கள், பாவனைகள் என்பவை இன்று நிறையப் பெருகி கொண்டே செல்கிறது. நவீன உலகுக்கு ஏற்ப மாணவ சமுதாயத்தை நாட்டின் நற்பிரஜையாக வளர்க்க அனைவரும் முன் வர வேண்டும் என்பதுடன் இம் மலர் சிறப்புற மலர வேண்டும். அதற்கு வாரிவனம் அன்னை முத்துமாரி அம்பிகையின் திருவருள் சுரக்க வேண்டும் எனப் பிரார்த்தித்து நல் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்து அமைகின்றேன்.

"ஓதலுடைமை வேத வித்தை"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழ்த்துச்செய்தி

திரு.பொன் கந்தையா
பழைய மாணவர்
மட்டுவில் தெற்கு (கனடா)

யா/கைதடி நுணாவில் அ.த.க பாடசாலையின் 2017 பரிசில் நாள் அன்று வெளியிடப்படவிருக்கும் "நுணசை ஆரம்" எனும் நூலுக்கு வாழத்துச்செய்தி வழங்குவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

இப்பாடசாலையில் நான் 1960 – 1964 வரை ஆரம்ப வகுப்பு 5வரை கல்வி கற்றேன். இப்பாடசாலையில் கல்வி கற்றகாலம் இன்னும் என்நினைவில் பதிந்துள்ளது. சேல்லையா வாத்தியார், கந்தவனம் வாத்தியார் இவர்களை என்னால் மறக்கவே முடியாது. இவர்களிடம் கல்வி கற்றமையினால்தான் நாம் இன்றும் நல்ல நிலையில் வாழ்கின்றோம்.

பாடசாலையின் வளர்ச்சியறிந்து அண்மையில் நான் இப்பாடசாலைக்கு விஸயம் செய்திருந்தேன். புண்பான அதிபர், கல்வி ஆசிரியர் குழாம், சிறப்பான பாடசாலைக்கல்வி நிலை அழகான விளையாட்டு மைதானம் இவை மிக அண்மைக்காலத்தில் இங்கு ஏற்படுத்தப்பட்டவையாகும். குால்கோள் விழா, இல்ல விளையாட்டுப் போட்டி, மாணவர் பராளுமன்றம் போன்ற விழாக்களுக்கு என்னையும் விருந்தினராக அழைத்திருந்தார்கள் எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

இப்பாடசாலை கடந்த ஆண்டில் விளையாட்டுப் போட்டியில் மாகாணமட்டத்தில் சாதனை படைத்து தேசிய மட்டம்வரை சென்றதை நான் அறிந்து பாராட்டினேன. அதே போல இவ்வாண்டு விளையாட்டுப் போட்டியில் ர.மகிந்தன் நீளம் பாய்தல், உயரம் பாய்தல் போட்டிகளில் முதலிடம் பெற்று தங்கப்பதக்கம் வென்றுள்ளார். சிறந்த வீரருக்கான விருதையும் பெற்றமையையிட்டு நான் எனது நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஆதிபரின் வழிநடத்தலில் இப் பாடசாலை சிறப்பாக வெற்றி நடை போடுவதையிட்டு நாம் மகிழ்கின்றோம்.

புலம்பெயர் சேத்தில் நான் இருந்தாலும் இப்பாடசாலையின் செயற்பாடுகளுக்கு என்னாலான உதவி ஒத்தாசைகளை என்றென்றும் வழங்குவேன் என்பதுடன் பரிசில் நாளில் பரிசு பெறும் மாணவவருக்கு வெளியிடப்படவிருக்கும் மலருக்கு எனது நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழ்த்துச்செய்தி

லயன். வ. ஸ்ரீபிரகாஷ் *உப தலைவர்*
கைத்தொழில் வணிகர் மன்றம்
சாவகச்சேரி.

கடந்த பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலை இன்று 21ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் புதிய தடத்தில் கால் பதித்து நிற்கின்றது. எங்கோ ஓர் கிராமத்தின் மூலையில் அமைதியாக இருந்த இப் பாடசாலை பல வரலாற்றுச் சாதனைகளை விளையாட்டுத் துறையில் நிகழ்த்தி பாடசாலைக்கு உரித்தான பல பௌதீக வளங்களை உருவாக்கி இன்று எல்லோரையும் புருவமுயர்திப் பார்க்க வைத்திருக்கின்றது.

ஓர் கிராமப்புற பாடசாலை கூட அர்ப்பணிப்பான சேவை மனப்பான்மை நிறைந்த அதிபரின் கைகளில் கிடைக்கின்ற போது அப் பாடசாலை வரலாற்று சாதனைகளை உருவாக்கும் என்பதற்கு இப் பாடசாலையும் அதன் அதிபரும் கண்கண்ட காட்சி பாடசாலைக்கான பௌதீக வளங்களை உருவாக்குவதற்கு அரசின் ஒதுக்கீடுகளை மட்டும் நம்பியிராது பாடசாலைச் சமூகத்தின் பங்களிப்புடன் அப் பௌதீக வளங்களை நிறைவேற்றியிருப்பது அதிபரின் தன்னிகரில்லா சேவையை எடுத்துக் காட்டுகின்றது.

அதிபர் விசுவாசம் மிக்கவராக தன்னை அர்ப்பணித்து சேவையாற்றுகின்ற போது அப் பாடசாலையின் ஆசிரியர் குழாமும் அர்ப்பணிப்பான சேவையை வழங்குகின்றது. ஆக மொத்தத்தில் அதிபரின் கைகளிலேயே ஓர் பாடசாலையின் வளர்ச்சி, சாதனை தங்கியுள்ளது என்றால் அது மிகையாகாது. அந்த வகையில் இப் பாடசாலையின் அதிபர் திரு. ஆ. தங்கவேலு அவர்கள் 2009ம் ஆண்டு தொடக்கம் இப் பாடசாலையை பொறுப்பேற்று நிறைவான சேவையை வழங்கி இப்போதைய பாடசாலையின் சாதனைக்கு உரியவராகின்றார். அதிபரினதும் ஆசிரியர் குழாமினதும் அயராத சளைக்காத உழைப்பே இன்று இப் பாடசாலை எல்லோருக்கும் தெரியும் வகையில் பெயர் பெற்று நிற்கின்றது.

அதனால் தான் ஆண்டு தோறும் தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையிலும் க. பொ. த சாதாரண தரப் பரீட்சையிலும் கணிசமான மாணவர்களை சித்தியடைய வைத்து தன்னுடைய கடமைகளை சரிவர நிறைவேற்றி நிற்கின்றது. இவ்வகையில் இன்று மேன்மை பெற்று நிற்கின்ற இப் பாடசாலை தொடர்ந்தும் மேன் மேலும் முன்னேற வேண்டும் என வாழ்த்துவதுடன் இன்றைய நாளில் மேலும் ஒரு சிறப்பாக பாடசாலையில் முதன் முதலாக வெளியிடப்படவிருக்கும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

விழாச் சிறக்க எனது நல்வாழ்த்துக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழ்த்துச்செய்தி

திரு.த.சிவானந்தன்
முன்னாள் ஒய்வு நிலை ஆசிரியர்

யா/ கைதடி நுணாவில் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் வரலாற்றுத் தடங்களை பதிவு செய்து மலரவுள்ள சிறப்பு மலருக்கு மனம் நிறைந்த நல் வாழ்த்துக்களை தெரிவிப்பதில் உவகை அடைகின்றேன்.

1992ம் ஆண்டின் முற்பகுதியிலிருந்து 2000ம் ஆண்டின் இறுதிவரை இப் பாடசாலையில் கணித பாட ஆசிரியராக கடமை புரிந்தவன்.அக்கால பகுதியில் கற்பித்தல் பணியுடன் பல நிர்வாகம் சார் கடமைகளிலும் இணைப்பாட விதான ஒழுங்கமைப்பு நடைமுறைப்படுத்தலிலும் எனது பங்களிப்பை நல்கியுள்ளேன். இணைப்பாட விதான செயற்பாடுகளில் மாணவர்களை மாவட்ட நிலை வரை இட்டுச் சென்றுள்ளோம்.

அக்காலத்தில் அதிபராக இருந்த அமரர் இளையதம்பி அவர்களின் நெறிப்படுத்தலில் உதைபந்தாட்ட அணியொன்று உருவாக்கப்பட்டது. விக்டோரியா கல்லூரி போன்ற புகழ்பூத்த பாடசாலைகளுடன் இணைந்து விளையாடக்கூடிய அணியாக இதனை நாம் மிளிர வைத்தோம். எமது பாடசாலைக்கென ஒரு மைதானம் இல்லாத நிலையிலும் நாம் மாணவர்களுக்கான பயிற்சிகளை A9 வீதிக்கு மறுபுறம் அமைந்துள்ள மைதானத்தில் வழங்கினோம் இப்பாடசாலையின் வரலாற்று மலரில் இச் செய்திகளை பகிர்ந்து கொள்வதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

அண்மைக் காலங்களில் விடுமுறை நாளொன்றில் இப் பாடசாலையைத் தரிசிக்க சென்றிருந்தேன்.அதிபர் சில ஆசிரியர்கள் பல மாணவர்கள் அங்கிருந்தனர்.அதிபர் அவர்கள் என்னை இன்முகத்துடன் வரவேற்றார்.பாடசாலையின் சூழலை சுற்றிப் பார்வையிட்டேன்.அயலில் புதிதாக உருவாக்கப்பட்ட செல்வநாயக தேவி அரங்குடன் கூடிய மைதான்தையும் பார்க்க முடிந்தது. பாடசாலை புதுப்பொலிவுடனும் அழகிய சூழலமைவுடனும் சிறப்பான கவின் நிலையில் மெருகூட்டப்பட்டு மிளிர்கின்றது.தேவைகள் நிறைவு செய்யப்பட்டு ஒரு மாதிரிப் பாடசாலையாக திகழ்வது எமக்கு பெருமை தருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழ்த்துச்செய்தி



திரு. விநாயகமூர்த்தி சுகுமாரன்
முகாமைத்துவப் பணிப்பாளர்
மேக்கன்ரைல் பாதுகாப்புச் சேவை தனியார் நிறுவனம்

தென்னையும் பனையும் முக்கனி வளமும் சிறந்து ஒருமித்து விளங்கும் தென்மராட்சி பகுதியிலே தலைசிறந்ததோர் கிராமமாக விளங்கும் கைதடி நுணாவில் பதியிலே புகழைத் தன்னகத்தே கொண்டு தலைநிமிர்ந்து நிற்பது கைதடி நுணாவில் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையாகும். என்றென்றும் அழியாத இப் பாடசாலையின் பெயரினை அச்சினில் பதிவதற்கு அயராது உழைக்கும் அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை சமூகத்தினர் அனைவருக்கும் எமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்து, இப்பாடசாலையில் ஆரம்பக் கல்வியைக் கற்று சிறந்த தொரு விளையாட்டு வீரனாகத் திகழ்ந்த உலகம் போற்றும் உன்னத வீரனான அமரர் கந்தையா அம்பலவாணர் அவர்களின் வாழ்க்கைத் தடங்களைப் பகிர்ந்து கொள்வதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம்.

1932 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14 அம் திகதி அவ்வூரிலே பிறந்து ஆரம்பக் கல்வியைக் கைதடி நுணாவில் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலே கற்று, வளரும் பயிரை முளையிலே தெரியும் என்பதற்கமைவாகச் சிறந்த ஒரு விளையாட்டு வீரனாகத் திகழ்ந்து பல விருதுகள் பெற்றுத் தனது 19 ஆவது வயதினிலே இலங்கை இராணுவத்தில் இணைந்து Sri Lankan Army Ordnance Corp இல் கடமையாற்றி சிறந்த புகழ்பெற்ற குத்துச் சண்டை வீரராகவும் திகழ்ந்து, Staff Sergeant ஆகப் பதவி உயர்வு பெற்றதுடன் 1958 ஆம் ஆண்டு இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட இங்கிலாந்து எலிசபேத் மகாராணியின் சிறப்புப் பவனியில் அவரது சாரதியாகவும் திகழ்ந்து சிறப்பு விருதுகள் பெற்று 1970 அம் ஆண்டு இராணுவத்தில் இருந்து ஓய்வுபெற்று, அதே வருடம் மேக்கன்ரைல் பாதுகாப்புச் சேவை தனியார் நிறுவனத்தினை ஆரம்பித்து பல தொழிலாளர்களின் வாழ்விற்கு வித்திட்ட அமரர் கந்தையா அம்பலவாணர் 2013 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 14 ஆம் திகதி இவ் மண்ணுலகை விட்டு விண்ணுலகை எய்தினார்.

சிறந்த ஒரு இராணுவ வீரன் ஆரம்ப கல்வி கற்ற இப்பாடசாலை வரலாற்று சிறப்புமிக்க பாடசாலை ஆகும். அத்துடன் அமரர் கந்தையா அம்பலவாணர் அவர்களின் நினைவாக 2016 ஆம் ஆண்டு இப்பாடசாலையில் புலமைப்பரிசில் நிதியம் ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ் வராலாறு காலத்தால் அழியாதது. இவ்வாறான வரலாறு காலாகாலமாக நிலைத்து இருக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடும் உயர்ந்த சிந்தனையோடும் வெளியிடப்படும். இம் மலரானது ஒரு வரலாற்று புகழ் மிக்க மலராகும். இம்மலரினை வெளியிட்டு வைக்கும் அதிபர், ஆசிரியப் பெருந்தகைகள் அனைவருக்கும் வெள்ளத்தால் அழியாததும் வெந்தணலில் வேகாததும் தீர்க்க தரிசனமுமான இக்கல்வியின் கால விருட்சமான இந்த மலர் வெளியீட்டிற்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களும் நன்றிகளும் உரித்தாகட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழ்த்துச்செய்தி

செல்வி.ஆ.செல்வநாயகி
முன்பள்ளி ஆசிரியை கைதடி, நுணாவில்

பாடசாலையில் 1959 ஆம் ஆண்டு முதல் முறை காலடி வைத்த நாள் அந்த நாட்களில் முதலில் அரி வரிகளை மண்ணில் எழுதி ஒரு ஆண்டின் பின் ஆண்டு ஒன்று படிக்க ஆரம்பித்து 1969 ஆம் ஆண்டில் க.பொ.த சாதரண பரீட்சையை ஒரே பாடசாலையில் கற்றுத் தேறினேன். அந்தக் காலத்தில் இப் பாடசாலை கிடுகினால் வேயப்பட்ட "L" வடிவிலான ஒரு கட்டடமும் பின் பகுதியில் பால் காய்ச்சுவதற்கு ஒரு கொட்டிலும் இருந்தது. தலைமை ஆசிரியராக கந்தையா சிவம் ஆசிரியர் கடமை புரிந்தார். அப்பொழுது கைதடி நுணாவில் மட்டுவில் தெற்கு ஆகிய இரண்டு கிராமத்து முழுப்பிள்ளைகளும் கல்வி பயின்று வந்தனர். அக்காலத்தில் மாணவர்களுக்கு பாலும், பணிசும் உணவாகப் பரிமாறப்பட்டது. அக்காலத்தில் ஆசிரியர்கள் பெற்றோர்களின் பங்களிப்புடன் பாடசாலை செயற்பாடுகள் நடைபெற்றன. பாடசாலைக்கு அன்று மைதானம் இல்லாத காரணத்தால் இல்ல விளையாட்டுக்கள் நடைபெறுவதில்லை. வலய மட்ட விளையாட்டில் பங்குபற்றும் மாணவர்களின் பாடசாலையைச் சுற்றி ஓடியும் கிராம வீதிகளில் ஓடியும்தான் பயிற்சி பெற்று போட்டிகளுக்கு சென்றார்கள். வலய மட்ட பேச்சுப் போட்டிகளிற்கும் மாணவர்கள் சென்று பரிசில்களும் பெற்றுள்ளார்கள்.

மாணவர் மன்றத்தினால் மாதத்தில் இரு தடவைகள் கலை நிகழ்வுகள் நடத்தப்படும். அக் காலத்தில் ஆண்டு 5ல் புலமைப்பரிசில் பரீட்சை நடைபெறுவதில்லை. ஆண்டு 8ல் J.S.C என்ற பரீட்சை நடத்தப்பட்டு அதன் பெறுபேற்றின் அடிப்படையில்தான் கா.பொ.த சாதாரண தரம் படிக்க அனுமதி கிடைக்கும்.

மாணவர்கள் விருப்பத்திற்கு உரிய பாடங்களை கற்பிப்பதற்கு அதற்கு உரிய ஆசிரியர்கள் இருக்கவில்லை. இருந்த ஆசிரியர்கள்தான் எல்லாப்பாடங்களையும் கற்பித்தார்கள். இதில் எமது கிராமத்து ஆசிரியர் ஒருவரால் மட்டும்தான் பாடசாலை முடிந்த பின்பும் மாலை வரை மாணவர்களுக்கு பாடம் கற்பித்து மாணவர்கள் சிறந்த தேர்ச்சி பெற்றார்கள்.

இக்கால கட்டத்தில் பாடசாலையில் பாரிய தீ விபத்து ஏற்பட்டு முழுமையாக சேதமடைந்தது.அதன் பின் குறுகிய காலத்தில் பெரிய கொட்டகை ஒன்றை அமைத்து கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெற்றது. மாணவர்கள் தொகை கூடுதலாக இருந்த காரணத்தினால் இடவசதிகள் இன்றி எவ்வளவோ கஷ்டத்தின் மத்தியில் மாணவர்கள் கல்வி பயின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1964 ஆம் ஆண்டிலிருந்து 1969ஆம் ஆண்டு வரை க.பொ.த சாதாரண பரீட்சைக்கு இப்பாடசாலையில் இருந்து தோற்றினார்கள். இதில் பின்னர் இருவர் பல்கலைக்கழகம் சென்றுள்ளார்கள். இன்றும் பலர் ஆசிரியர்களாகவும் வேறு பல துறைகளிலும் அரசாங்க உத்தியோகத்தர்களாகவும் பணி புரிந்து ஓய்வு பெற்றுள்ளார்கள்.

தற்பொழுது படிப்படியாக பாடசாலை வளர்ச்சியடைந்து இன்று திருவாளர் ஆ.தங்கவேலு அதிபர் அவர்களின் விடாமுயற்சியின் காரணத்தினால் இப்பாடசாலைக்கு அருகில் உள்ள தனலட்சுமியின் காணியை நன்கொடையாகப் பெற்றும் வெளிநாட்டு பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், பெற்றார்கள், கிராம மக்கள் வேறு பலரின் நிதி உதவியுடன் விளையாட்டு மைதானக் காணியும் பெறப்பட்டது. அத்துடன் மைதானத்தில் கலை அரங்கு மண்டபமும், பாடசாலை நுழைவாயில் வளைவு, நூல் நிலையம், பாடசாலைக்குத் தேவையான உபகரணங்கள் யாவும் பெற்று பாடசாலையை நன்னிலையில் பேணிப்பாதுகாப்பதுடன் கற்பித்தல் செயற்பாடுகளிலும் ஆக்கமும் ஊக்கமும் அளித்து தேர்ச்சிகளில் நல்ல பெறுபேறுகளை மாணவர்கள் அடைகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழ்த்துச்செய்தி



திரு.திருமதி.சுபாஸ்கரன் அனுசியா
பழைய மாணவர்கள்

பேருவகையோடு வாழ்த்துகின்றோம்

வீடு தோறும் கலையின் விளக்கம் வீதி தோறும்
இரண்டொருபள்ளி நாடு முற்றிலும் உள்ள
ஊர்கள் நகரங்கள் எங்கும் பல பள்ளி (பாரதியார்)

சைவக் கலாசாரத்தையும் தமிழர் பண்பையும் உயிர் நாடியாகக் கொண்ட வரலாற்றுப் பாரம்பரியம் மிக்க தென்மராட்சி மண்ணிலே கைதடி நுணாவில் பதியிலே வீற்றிருக்கும் எம் அன்னை போன்று விளங்கும் வித்தியாலயத்தின் வரலாற்றினைச் சித்தரிக்கும் "நுணசை ஆரம்" மலருக்கு வாழ்த்துத் தெரிவிப்பதில் நாம் மட்டற்ற மகிழ்ச்சியடைவதுடன் இச் சந்தர்ப்பத்தினை பெரும் பாக்கியமாகவும் கருதுகின்றோம்.

பல புகழ்பூத்த மாணவர்களை உருவாக்கிய யா/கைதடி நுணாவில் வித்தியாசாலை மேன்மேலும் வளர்ந்து நீண்ட கல்விப் பாரம் பரியத்தினை காத்து நிற்க அதன் பழைய மாணவர் என்ற வகையில் பெருமை கொள்கின்றோம். எமது பாடசாலை சிறியதாக இருந்தாலும் குறைவான மாணவர்களை கொண்டிருந்தாலும் கூட பல சாதனைகளை புரிந்து வருவது எமக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகிறது. இங்கு கல்வி கற்பிக்கும் அதிபர் ஆசிரியர்களும் கல்வி கலை மற்றும் விளையாட்டுத் துறையிலும் எம் மாணவருக்குச் செய்யும் சேவையே மாகாணத்தில் மட்டுமல்லாது தேசியத்திலும் பெருமை பேச வைக்கின்றது என்பதில் மிகையில்லை.

மாணவர்களே பாடசாலை நாட்களில் பாட விதானத்தை விட நீங்கள் கற்க வேண்டியவை ஏராளம் நீங்கள் கழிக்கும் ஒவ்வொரு நொடியும் அனுபவ ஏணியின் அடையாளப் படிகள் என்பதனை கருத்திற் கொண்டு இப்பாடசாலைக்கு பெருமை சேர்க்க வேண்டும்.

அண்மைய ஆண்டுகளில் இப்பாடசாலை பௌதீக வளங்களை அதிகம் ஈர்த்துக் கொண்டமையே பல சாதனைகளைப் புரிய வழிசமைத்தது. அதிபர் ஆசிரியர்களது தன்னலம் கருதாத சேவை பழைய மாணவர் பெற்றோர்களது ஒத்துழைப்பு அதிபர் அவர்கள் சமூகத்தோடு பழகும் பண்பு இவையே இப் பாடசாலையை இன்று எல்லோரும் பேசக்கூடிய வகையில் ஆக்கி வைத்திருக்கிறது. இதற்காக அல்லும் பகலும் அயராது உழைத்த அதிபரை நாம் மனதாரப் பாராட்டுகின்றோம். இவரது பணி இப்பாடசாலையில் தொடர வாழ்த்துகின்றோம். எமது குடும்பத்தவர் இப்பாடசாலையின் புதல்வர்கள் நாம் ஒரு தாய் வயிற்றுப் பிள்ளை போல் இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு அயராது உழைப்போம் என்று கூறி இன்று பரிசில் பெறும் மாணவருக்கும் வெளியிடப்படவிருக்கும் "நுணசை ஆரம்" நூலுக்கும் எமது மனம் நிறைந்த நல் வாழ்த்துக்கள் உரித்தாகுக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழ்த்துச்செய்தி

திரு.மு.அகிலகுமாரன்
பழைய மாணவர்கள் நிர்வாக இயக்குனர்
தமிழ் C.N.N *இணையத்தளம்*

மன நிறைந்த வாழ்த்துக்கள்

கைதடி நுணாவில், மட்டுவில் தெற்கு கிராமங்களின் தல விருட்சமாய் தரணியில் தலை நிமிர்ந்து நிற்கும் எம் பள்ளியின் பரிசில் நாள் நிகழ்வில் வெளியிடப்படவிருக்கும் "நுணசை ஆரம்" எனும் நூலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

நான், இப் பாடசாலையின் புகழ்பூத்த அதிபராக விளங்கிய அமரர் இளையதம்பி அவர்களின் காலத்தில் கல்வி கற்றவன். நான் அறிந்த வகையில் அவரது சேவை இப்பாடசாலையில் போற்றப்பட வேண்டியதாகும். ஒரு அதிபர் பாடசாலைக்கு வராத மாணவர்களை வீடு தேடிச்சென்று அழைத்து வந்து கல்வி கற்பித்து உயர்வான சேவை செய்த காலம் அது. (தற்போதைய அதிபரும் அவ்வாறே செய்கின்றார் என்பதைக் கண்டு நான் மட்டற்ற மகிழச்சியடைகின்றேன்). அமரர் இளையதம்பி அவர்கள் எமது வீட்டில் மாலைவேளையில் மாணவர்களை அழைத்து தமிழ்,கணிதம் ஆகிய பாடங்களை கற்பித்து எம்மை ஆளாக்கிய பெருமை அவருக்கே உரியதாகும். அவ்வாறே எமது பாடசாலையில் கற்பிக்காவிட்டாலும் இப்பிரதேசத்தில் ஆசிரியராக விளங்கிய அமரர் அருணாசலம் ஒரு ஆங்கில ஆசிரியர். இவர் வன்னிப்பகுதியில் கல்வி கற்பித்தவர். ஆங்கில பாடத்தை சிறப்பாகக் கற்பிப்பார். இவரது வீட்டுக்கு அருகில் எமது வீடும் இருந்தமையினால் மாலை வேளையில் எம்மை அழைத்து ஆங்கிலம் சொல்லித் தருவார். அவரிடம் நான் கற்றதன் வெளிப்பாடே புலம்பெயர் தேசத்தில் நான் வாழக் காரணமாகியது என்றால் அது மிகையில்லை.

நான் இக் கிராமத்தில் கற்றவை தற்போதைய சந்ததிக்கும் போய்ச் சேர வேண்டும் என்பதை நினைத்து இப்பாடசாலையில் (HOME WORK CLUB) எனும் செயற்திட்டத்தை ஆரம்பித்து அதனூடாக இன்றைய இளைய தலைமுறைக்கும் கல்வி வழங்க யான் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றேன்.

சிறந்த அதிபர் அர்ப்பணிப்பான, ஆசிரியர்கள் இவர்களின் வழிகாட்டலில் பழைய மாணவர்கள், பெற்றோர்கள் கரம் கோர்த்து அண்மைக் காலத்தில் இப்பாடசாலை வியத்தக்க வளர்ச்சியைக் கண்டு நிற்கிறது. கல்வி மற்றும் இணைபாடவிதானச் செயற்பாடுகளில் பல சாதனைகளைப் பதித்துள்ளது. எமக்கு மேன்மேலும் மகிழ்ச்சியைத் தருகின்றது. அந்த வகையில் இனி வரும் காலங்களிலும் இப் பாடசாலையின் வளர்ச்சிக்காக அயராது உழைப்போம் என்பதுடன் இன்றைய தினம் வெளியிடப்படும்மலருக்கு எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதுடன் பரிசில் பெறும் மாணவருக்கும் எமது வாழ்த்துக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழ்த்துச்செய்தி

திரு.க.வாமதேவன்
ஒய்வு நிலை கிராம அலுவலர், மட்டுவில்

பரிணாமம் பரிணமிக்கிறது


யா/கைதடி நுணாவில் அ.த.க பாடசாலையின் வரலாற்றினையும் வளர்ச்சிப்போக்கினையும் நோக்கும் போது, பரிணாம அடிப்படையில் பரிணமித்துச் செல்வதை காணமுடிகின்றது. கல்விக் கூடங்கள் இன்று கட்டாய போட்டி அடிப்படையில் கணக்கிடப்படுகின்றன. அந்த வகையில் இப் பாடசாலையும் விதிவிலக்கல்ல.

நகர்ப்புறங்களை நாடிய நகர்வுகள் உயர்நிலைப்பாடசாலைகளில் கல்வி கற்க வேண்டும் என்ற கௌரவ பிரச்சினைகள் என போலியான சிந்தனைக்குள் சிறைப்பட்டிருக்கும் இக்கால சமூக அமைப்பில் ஆளணிப்பற்றாக்குறை, அடிப்படை வசதிகளின்மை, பௌதீக வளப்பற்றாக்குறை எனப்பாரிய நெருக்கடிக்குள் சிக்கித்தவிக்கும் கிராம்புற பாடசாலைகள் ஒருபுறம். அளவுக்கு அதிகமான ஆளணிகள், தகவல் தொழிநுட்ப வாய்ப்புக்கள், முன்னைய முகவரிகளை முதலீடகாக் கொண்ட உயர்நிலைப் பாடசாலைகள் ஒருபுறம், கல்விக்கூடங் களுக்கிடையே சமத்துவமான கற்கை வசதிகள் இன்மை.

ஆனாலும் இரு நிலை மாணவர்களும் ஒரே நிலையான சமத்துவமான பரீட்சைகளுக்கும், இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கும் முகங்கொடுக்க வேண்டிய துர்பாக்கியமான நிலையை கல்விப்புலத்தில் அவதானிக்க முடிகின்றது. தகவல் தொழிநுட்ப வசதி, ஆங்கிலக் கல்வியின் அவசியம் என்பது இன்றும் கிராமப்புற பாடசாலைகளுக்கு எட்டாக்கனியாகவே உள்ளன.

இந்நிலையில் கிராமிய மணமும், அமைதியான சூழலும் அமைந்த இப்பாடசாலையின் அண்மைக்காலச் செயற்பாடுகள் தடைகளைத்தகர்த்தெறிந்து நகர்ப்புற பாடசாலைகளுக்கு நிகரான வளர்ச்சிப் போக்கில் தம்மை இணைத்துக் கொள்வது எமக்கு வியப்பை அளிக்கிறது. இப்பாடசாலை மாணவன் தங்கப்பதக்கத்திற்காய் முட்டி மோதி அதனை தனதாக்கிக் கொண்டான் என்ற செய்தி இப்பாடசாலைக்கு முத்தாய்ப்பாக அமைகிறது மட்டுமன்றி கல்விப் பெறுபேறுகளிலும் காத்திரமான பங்களிப்பை ஆற்றி வருகின்றது. இவ் வெற்றிக்கு துணை நின்ற அதிபர், ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் அனைவரினதும் பாதம் தொட்டு வாழ்த்துக்களையும் வணக்கங்களையும் தெரிவித்து நிறைவு செய்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழ்த்துச்செய்தி

பழைய மாணவன்
குணசிங்கம் கங்கேஸ்வரன்

சைவமும் தமிழும் பாரம்பரியப் பண்பாடும் செழித்தோங்கும் பழம்பெருமை வாய்ந்த யாழ் மாவட்டத்தின் தென்மராட்சிப் பிரதேசத்தில் கல்விச் செல்வத்தை வாரி வழங்குகின்ற எம் அன்னை கைதடி.நுணாவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அமைந்துள்ளது. பெற்ற தாய் பிறந்த பொன் நாடு, கற்ற கல்லூரி, கலை தரு ஆசான்கள் நெஞ்சத்தில் என்றும் நிலைத்து நிற்கும் நினைவுப் பொக்கிஷங்கள். உண்மைக்கும், பொய்மைக்கும் இடையிலான மயக்கம் நிறைந்த வாழ்வியலில் உண்மையைத் தேடிப் பிடிக்க உதவுவது கல்விப்பேறே ஆகும். இப்பேற்றினை ஒரு நூற்றாண்டைக்கடந்து எம் அன்னை பாரி என வாரி வழங்கி வருகின்றாள்.

கிராமப்புற குழந்தைகள் நகர்ப்புற பாடசாலைகளை நோக்கிச் செல்லாது எம் பாடசாலையை நாடி வரச் செய்த பெருமை எம் பாடசாலை அதிபர்களையும், ஆசிரியர்களையுமே சாரும்.

எம் அன்னையானவள் எங்கள் குடும்பத்தினர் யாவருக்கும் கல்வி ஊட்டி அன்னையாகத் திகழ்ந்தாள். ஆரம்பக்கல்வி முதல் இடைநிலை கல்வி வரை கற்ற எம்மை உயர்கல்வி கற்க கல்லூரி செல்ல வைத்த பெருமையும் எம் பாடசாலையே சாரும். நான் இப்பாடசாலையில் பயின்ற காலத்தை நினைத்துப் பார்க்கின்றேன். அன்று எம் அதிபராக திரு.இளையதம்பி அவர்கள் கடமையாற்றினார். இவர் தலைசிறந்த தலைவராகவும், கனிவும் கண்டிப்பும் மிக்கவராக திகழ்ந்ததுடன் மாணவர்களை நல்வழிப்படுத்திய நல் ஆசானாகவும் விளங்கினார். அன்று 1993 எமது 15வயது ஆண்கள் உதைப்பந்தாட்ட அணி தென்மராட்சி கோட்டமட்ட சம்பியனாக வெற்றி வாகை சூடியதனை நினைக்கையில் என் மனம் பூரிப்பும், பெருமையும் அடைகின்றது. அன்று நாம் விளையாடு களத்தில் களமிறங்கும் போது இவ் வெற்றியினை எம் பாடசாலை தாய்க்கு சமர்ப்பிக்க வேண்டும் என்ற ஒரே நோக்கிலே களம் இறங்கி அதில் வெற்றியும் கண்டோம். மேலும் இத்தருணத்தில் நான் பள்ளிப்பருவத்தில் கல்வி அறிவூட்டிய என் ஆசான்களை நினைவு கூற வேண்டும். நான் அவர்களுக்கு என்றுமே நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

என் பாடசாலை ஆசிரியர்களின் அன்பும், கடமையுணர்ச்சியும், கண்டிப்புமே இன்று என்னை நெறி பிறளாத வாழ்க்கைக்கு இட்டுச் செல்கின்றது. மேலும் இன்றுவரை எம் பாடசாலை தனது பாரம்பரியத்தையும், பண்பாட்டையும் பேணி வருவதுடன் மாணவர்களை புத்தகப் பூச்சிகளாக மட்டுமில்லாமல் பல்துறைகளில் முன்னேற்றமடைய செய்து பண்பும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயனுள்ளவர்களாக்கி சமூக நல்வாழ்விற்கும், மேம்பாட்டிற்குமாக மிகவும் அடக்கமான சூழ்நிலையில் இடையீடற்ற பணியை ஆற்றி வருகின்றது.

சிவனைக்கூட சனிஸ்வரபகவான் பிடித்து அல்லற் படுத்தியதாக புராணம் ஒன்று கூறுகின்றது. அவ்வரிசையில் நீயும் தவறியதாக தெரியவில்லை. கடந்த சில வருடங்களாக அல்லற்பட்டு இருந்த பொழுது கார்முகிலைக் கலைத்து உன்னை கலைக்கூடமாக்கவே உனை வந்தடைந்தான். திரு.ஆதங்கவேலு தூரநோக்குப் பார்வை கொண்ட சீராளன் உன் மண்ணில் உலா வந்த அதிபர்கள் வரிசையில் அஞ்சா நெஞ்சங்கொண்டோனாய் சாதனை படைத்திடவே உன்னை புது மெருகேற்றி அழகு படைத்திட்டான்.

இனிவரும் சமுதாயத்திற்கும் காலத்திற்கும் ஏற்றாற்போல் கலைவளம் கொண்டே உனை அழகுபடுத்திக்கொண்டாய். கல்வி மேம்பாட்டிலும், பல்துறை விளையாட்டிலும் உன்னை தலைநிமிரச் செய்துள்ளாய். இன்னும் பல் ஆண்டுகள் இப்பாரினில் உன் பணி பரவிட என்றும் உள் அன்புடன் வாழ்த்துகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழ்த்துச்செய்தி

திருமதி.பகீஷன் ஷார்த்திகா
பாடசாலை அபிவிருத்திச்சங்க செயளாளர்

நாளை என்னும் நல்லுலகம் காணப்போகின்ற நம்பிக்கை நட்சத்திரங்களை தரம்மிக்க கல்வியையும் நற்பண்புகளையும் சிறார்கள் மத்தியில் புகுத்தி நல் எதிர்காலப்பிரஜைகளை உருவாக்கும் யாழ் கைதடி நுணாவில் அ.த.க பாடசாலை தனது வராலற்றினையும் சாதனைகளையும் ஆசிரியர், மாணவர்களின் ஆக்கங்களையும் உள்ளடக்கி நூல் ஒன்றை வெளியிடுவது நமக்கு மட்டற்ற மகிழ்ச்சியினை கொடுக்கின்றது.

இப்பாடசாலையானது 19ம்நூற்றாண்டில் ஆரம்பிக்கப்பட்டு இற்றை வரையும் தனது சேவையை புரிந்து வருகின்றது. இங்கிருந்து கல்வி கற்றவர்கள் உயர்பதவிகளிலும் இருக்கிறார்கள். ஆனாலும் இப்பாடசாலையின் வரலாற்றினை வெளியிட எவரும் முன்வரவில்லை. தற்போது இதனை உலகிற்குக் காட்ட எமது அதிபர் முன்வந்துள்ளார். அவர் இப்பாடசாலையினை எல்லா வளத்திலும் செம்மைப்படுத்தி இப்பிரதேசத்திலே தன்கென ஒரு முத்திரை பதித்து முன்னிலையில் நிற்பதற்கு அரும்பாடுபட்டுக்கொண்டிருக்கும் தற்போதைய பாடசாலை அதிபாரன ஆ.தங்கவேலு அவர்களையே சார்ந்தது. அவரை இவ் வேளையில் போற்றப்பட வேண்டும்.

இப்பாடசாலைக்கு மைதானம் இவ்வளவு காலம் இல்லாது இருந்தது. தற்போது மைதானம் அதிலொரு அரங்கு பாடசாலைக்கான பல வசதிகளை உருவாக்கி முன்னேற்றம் அடைந்து வருவது போல் மாணவர்களின் கல்விச்சிறப்பு புலமைப்பரிசில் க.பொ.த சாதாரண தரம் பல போட்டிகளிலும் தென்மராட்சிப் பாடசாலைகளுடன் போட்டி போட்டு நிற்கின்றது. அது மட்டுமின்றி விளையாட்டிலும் என்றுமில்லாத சாதனைகளை படைத்து வருகிறது. இப்பாடசாலையின் ஆசிரியர்களும் தமது பாடப்போதனைகளை நல்ல அர்ப்பணிப்புடன் கல்விபுகட்டுகிறார்கள் என்பது இன்னும் போற்றத்தக்கது.

தற்போதைய பெற்றோர்கள் தமது பிள்ளைகளை நகரத்தை அண்டிய பாடசாலைக்கு கொண்டு செல்வதில் ஆர்வம் காட்டி வருகிறார்கள். ஆனாலும் இப்பாடசாலையின் முன்னேற்றத்தையும் அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை மாணவர்களில் காட்டும் அக்கறையினைப் பார்த்து இப்பாடசாலையை நோக்கிச் செல்ல தூண்டுகிறது எனலாம்.

ஆகவே இப்பரிசளிப்பு விழாவில் நூல் வெளியிடுவதில் நாம் பெருமகிழ்ச்சி அடைவதுடன் இவ் வெற்றியோடு வீறு நடைபோடும் இப்பாடசாலை எதிர்காலத்தில் உரிய வகையில் அரும்பணி புரிந்து சாதனைகள் பல சாதிக்கும் என்பதில் இருவேறு கருத்துக்கள் இருந்து விட முடியாது. இப்பாடசாலையில் சாதனைகள் மேலோங்கி உயர்ந்திட எல்லாம் வல்ல இறைவனை வேண்டி இந்நூலுக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிகவும் பெருமையடைகிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நான் கண்ட நல்ல மனிதன்

2010ம் ஆண்டு திரு. நா. அருட்சோதி அதிபர் அவர்கள் பாடசாலையில் நுழைவாயில் திறப்பு விழாவை ஏற்பாடு செய்திருந்தார். அன்றைய தினம் தான் நான் முதன் முதலில் விக்கினங்கள் தீர்க்க வல்ல விக்கினேஸ்வரன் அவர்களை கண்டேன். அடிக்கடி இறைவனின் நாமத்தை உச்சரிப்பார். தெயவீக சக்தி ஒன்று அவரிடம் காணப்படும். ஆலயத்தொண்டும், இறைவழிபாடும், பொதுச் சேவைகளும் இவரது பிரதான பணிகளாகக் காணப்பட்டன. தனக்கென வாழாது பிறருக்காக வாழும் ஒரு உத்தமர்.

இவரை ஒரு "பேசும் தெய்வம்" என்றே நான் நினைப்பதுண்டு. அதில் பிழையில்லை என்று தான் கூறலாம். அன்றைய தினம் எனக்குக் கூறினார் தனது மாமனார் செல்லையாவாத்தியார் ஞாபகர்த்தமாக நூலகம் ஒன்று அமைத்துத் தருவதற்கு தனது மைத்துனர் Dr. Selvanayakarajah விடம் கதைத்து தான் அதைச் செய்து தருவதாகச் சொன்னார். 2011ம் ஆண்டு மண்டபத்தின் ஒரு பகுதியில் 20" x 20" நீள அகலத்தில் ஒரு அறை நூலகத்திற்கு ஏற்ற வகையில் திருத்தியமைக்கப்பட்டு 2011 செப்ரெம்பர் மாதத்தில் அதன் திறப்பு விழாவும் அவராலேயே நிகழ்த்தப்பெற்று நூலகம் பயன்பாட்டுக்கு வந்தது.

2012 ல் பழைய மாணவர் சங்க கூட்டத்திற்கு இவரையும் அழைத்திருந்தோம். தெய்வீக நம்பிக்கை அதிகம் உடையவராதலினால் இவரது கருத்துக்களை மற்றையவர்கள் ஆமோதிப்பார்கள். அவ்வாறே கூட்டத்தில் தெரியப்பட்ட புதிய நிருவாகத்தில் இவரைப் போஷகராகத் தெரிவு செய்தார்கள். அன்றைய கூட்டத்தில் முதல் ஆளாக 50 000/= வை மைதானக் கொள்வனவுக்கு வழங்கி தனது பெயரை முதலில் பதிவு செய்யத் தவறவில்லை. இவர் முதலில் பணத்தொகையை எழுதியது ராசியோ என்னவோ தெரியாது புலம்பெயர் உறவுகள், பெற்றோர், நலன்விரும்பிகள் ஆகியோரிடமிருந்து 3 மாதம் முடிவதற்குள் 23 00 000/= சேகரித்து மைதானக் காணியின் ஒரு பகுதி கொள்வனவு செய்தாயிற்று. இவரோடு எமது முன்னை நாள் அதிபர் திரு. நா. அருட்சோதி அவர்களும் இணைந்துதான் இப்பணத்தைச் சேர்த்தார்கள். இருவரும் ஓய்வு பெற்றவர்கள் தான் ஆனாலும் இவர்களுக்கு இருந்த அசாத்திய துணிவு இவ்வாறு வேகமாகச் செயற்பட வைத்தது. தொடர்ந்து மிகுதிக்காணி வேண்டுவதற்கு பணத்தைச் சேகரிப்பதற்கு முன்னின்று ஊழைத்தவர் இவரின் ஊக்கத்தால் தான் பல வேலைகள் நிறைவேறின என்றால் அது மிகையாகாது. கள்ளம் கபடமற்ற வெள்ளை உள்ளம் கொண்டவர் சொல்வதைச் செயலில் காட்டுபவர். இவர்களின் ஆசி எமக்குக் கிடைப்பதால் தான் நாம் நல்ல காரியங்களைச் செய்யக் கூடியதாகவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2015ம் ஆண்டு தமது துணைவியைப் பிரிந்த இவர் அத்துயரிலிருந்து மீள முடியாமல் நிரந்தர நோயாளியாகிவிட்டார். இருந்தும் 2016ம் ஆண்டு தனது துணைவியாரின் ஞாபகார்த்தமாக நிறுவப்பட்ட கலையரங்கிற்கு இவரே அத்திவாரக் கல்லை நட்டார். அதுவும் விரைவாக 3 மாதத்திற்குள் கட்டி முடிக்கப்பட்டு 2016 ஒக்டோபர் 01ம் திகதி இவராலேயே திறந்து வைக்கப்பட்டது.

இத்தனைக்கும் இவரைப் பற்றிய பெரிய இரகசியம் என்னவெனில் இவர் இவ்வூரில் பிறகவுமில்லை. இங்கு கல்வி கற்கவுமில்லை. இங்கு திருமணம் செய்ததும், தமது பிள்ளைகள் இங்கு கல்வி கற்றதற்குமாகவுமே இவையனைத்தையும் செய்து தந்தார். இவரது ஆயுட்காலம் வரை நோய்நொடியின்றி ஆரோக்கியமாக வாழ இறைவனைப் பிரார்த்திக்கினறேன்.

அதிபர்.ஆ.தங்கவேலு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் பதிவுகள்


2009


2010


2011


2012


2013


2014


2015


2016


2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவப் பகிர்வு

திருமதி.மலர்மணி செல்லையா
ஓய்வு பெற்ற ஆசிரியர்

என் நினைவுப் பதிவுகளில் இருந்து

கைதடி நுணாவிலில் முதன் முதலில் அமெரிக்கன் மிசனரிகளால் ஆராம்பிக்கப்பட்ட பாடசாலையில் என் பேரன் பேர்த்தி திரு வேலுப்பிள்ளை திருமதி தங்கமுத்து ஆசிரியர்களாய் இருந்தனர் என்பதையிட்டு பெருமையடைகின்றேன். அந்த வேளையில் நடந்த ஓர் சுவார்ஸ்யாமான சம்பவத்தையும் அவர்கள் சொல்லக் கேள்விபட்டிருக்கின்றேன் அத்த நேரத்தில் நிறைமாத கர்ப்பிணியாக இருந்த தங்கமுத்து ஆசிரியையின் மேல் அவர் இருந்த தற்காலிக குடில் விழுந்து விட்டதாம் மற்ற ஆசிரியர்கள் பதறியடித்து ஓடிப்போய் குடிலைத் தூக்கினால் அவர் எந்த வித பாதிப்பும் இல்லாமல் இருந்தாராம் அந்தப்பிள்ளை தான் Driberg Collgeல் உப அதிபாராக இருந்த திரு V.N ஐயாத்துரை அவர்கள்

1940 --- 1945 ஆண்டு வரை நான் என் ஆரம்பக் கல்வியை இங்கு கற்றுள்றேன் அப்பொழுது எங்கள் வீட்டில் இருந்து சிறிது தூரம் மட்டும் தான் கல் றோட்டு மிகுதி எல்லாம் மணல் ஒழுங்கை ஒரு சிறிய கம்பிக் Gate அதைத் திறந்தால் இரண்டு பக்கமும் பூந்தோட்டம் பல வகையான பூங்கன்றுகள் வெள்ளையும் சிவப்புமான பட்டிப்பூக்கள் எப்பவும் பூத்துக் குலுங்கும் காட்சியே அழகுதான் நேரே போனால் அரைச் சுவர் வைக்கப்பட்ட பிரதான மண்டபம் எந்தவித மறைப்பும் இல்லாத வகுப்பறைகள், ஆசிரியர் கதிரை மேசை அதைச் சுற்றி 5 , 6 வாங்குகள் இவைதான் வகுப்பறைகள் மண்படத்தின் இறுதியில் ஒரு மேடை அதில் தான் தலைமை ஆசிரியரின் கதிரை மேசை இருக்கும். அந்த மேடையில் இருந்து தான் பன்ன வேலை செய்வோம் பன்ன வேலை ஆசிரியர் இல்லாமலே எங்கள் செல்லையா உபாத்தியாயர் விதம் விதமான பன்ன வேலைப்பொருட்கள் எல்லாம் இழைக்கச் சொல்லி தருவார். அதிபராக இருந்தாலும் பாடசாலை முழுப்பொறுப்பும் செல்லையா உபாத்தியாயராகவே இருந்தார். தினமும் முதலில் பாடசாலைக்கு வந்து கடைசியாக வீட்டிற்கு செல்பவர் அவர் தான். பாடசாலை மண்டபத்தின் பின் பகுதி 'L' வடிவில் கட்டப்பட்டு அதன் முடிவில் ஒரு அறையும் இருந்தது அந்தப்பகுதி நிலம், மணல் பரவி இருந்தது அங்கே தான் பாலர் வகுப்புக்கள் நடைபெறும்.

விழாக்கள்

சரஸ்வதிப்பூசை என்றால் பாடசாலை விழாக்கோலம் பூண்டு விடும் தளபாடங்கள் எல்லாம் கழுவி ஒரு பக்கம் அடுக்கி மண்டபம் முழுதும் கழுவி தென்னோலை, மாவிலை தோரணங்கள் எல்லாம் கட்டி கோலாகலமாக கொண்டாட்டம் நடக்கும். மாலையில் தான் பூசை நடக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோரும் வரிசையில் இருந்து அவல் சுண்டல், மோதகம், வடை, வாழைப்பழம், பொங்கல் எல்லாம் சாப்பிடுவோம். பெற்றோரும் சிலர் வருவார்கள் எல்லாம் முடிய இரவாகி விடும். ஒரு சிலர் பெற்றோர் லாந்தர் விளக்குகளுடன் கூட்டிக்கொண்டு போக வருவார்கள் வந்தவர்களுடன் எல்லோரும் கூடிக்கொண்டு கூட்டமாக வீடுகளுக்கு போய்விடுவோம்.

அடுத்தது சித்திரை வருடப்பிறப்பு அன்று போர்த்தேங்காய் அடிக்கிற போட்டி சிறப்பாக நடைபெறும் வகுப்பு வகுப்பாக ஆண்கள் வேறு பெண்கள் வேறாக போட்டி நடைபெறும். இருவர் எதிரும் புதிருமாக நின்று ஒருவர் தன் தேங்காயை உருட்டி விட மற்றவர் தன் கைத்தேங்காயால் ஓங்கி அடித்து அதை உடைக்க வேண்டும் எல்லாரும் சுற்றி வர நின்று ஆரவாரம் போட்டு ரசிப்போம்.

5ம் வகுப்பில் நடைபெறும் N.P.T.A பரீட்சை தான் எங்கள் பொதுப்பரீட்சை அதற்கென்று விசேட ஆயத்தங்கள் இன்றியே பரீட்சை எழுதுவோம் அதுவே பாடசாலை இறுதிப்பரீட்சை ஆகும்.

ஆசிரியராக

20 ஆண்டுகளின் பின் 1965 ல் மீண்டும் வந்தேன் ஆசிரியராக. நான் ஆரம்பக்கல்வி கற்றுறது. கைதடி நூணாவில் சித்தி விநாயகர் வித்தியாசாலையில் இப்போது ஆசிரியராக நியமனம் பெற்றுத கைதடி நூணாவில் அ.த.க. பாடசாலையில இப்பொழுது G.C.E.O/L வரை வளர்ந்து விட்டது. ஆசிரியர்களும் அதற்கேற்றபடி இருந்தனர் இடவசதி பற்றாக்குறை தான் ஆனாலும் சமாளித்தோம் இந்த ஆண்டு கைதடி நுணாவில் பாடசாலை வரலாற்றில் முக்கியமான ஆண்டு 1965 டிசம்பரில் தான் முதல் முதலாக O/L பரீட்சைக்கு மாணவர்கள் தோன்றி குறிப்பிடப்பட் வீகிதமான மாணவர்கள் A/L படிக்க தகுதியும் பெற்றனர் நான் வந்தவுடன் O/L வகுப்பிற்கு புவியியல் பாடம் எனக்கு தரப்பட்டது. அதில் இரண்டு திறமைசித்திகளும் சில சாதாரண சித்திகளும் கிடைத்தன ஆதலால் எனக்கு பெரும் உற்சாகமாக இருந்தது.

என் பாடசாலை வரலாற்றில் மிகக் கவலையான சம்பவம் பாடசாலை எரிக்கப்பட்டது தான் ஆனால் நடப்பதெல்லாம் நன்மைக்கே என்றபடி சில காலம் கஷ்டப்பட்டாலும் புதிய அடிக்கல் கட்டிடம் எழும்ப அது வழிவகுத்தது. தொடர்ந்து சில ஆண்டுகளின் பின் இரண்டு மாடிக்கட்டிடம் கட்டப்பட்டு மாணவர்களுக்கு வசதியான வகுப்பறைகளும் கிடைத்தன மாணர்வர் தொகை கூடியது தழிழ் தினப்போட்டி, ஆங்கில தினப்போட்டி, உடற்பயிற்சிப்போட்டி என்பவற்றில் மாணவர்கள் பங்கேற்று பரிசில்களும் பெற்றனர்.

விளையாட்டு மைதானம் இல்லாதது பெரும் குறையாக இருந்தது. ஆனாலும் அதிபர் ஆசிரியர் நலன்விரும்பிகளின் உதவியோடு சிறிது தூரத்தில் உள்ள ஒரு காணியில் மிகுந்த சிரமத்தின் பேரில் விளையாட்டுப்போட்டிகள் சிறப்பாக நடைபெற்றன இந்தக் குறை தற்பொழுது நீக்கப்பட்டுள்ளது அறிந்து மகிழ்ச்சி அடைகின்றேன் மேலும் தற்போதுள்ள அதிபரின் நிர்வாகத்தில் பல முன்னேற்றங்கள் நடைபெறுவதும் பெருமகிழ்ச்சிக்குரியது

எதிர் காலத்தில் எமது பாடசாலை பல துறைகளிலும் முன்னேறி தென்மராட்சியில் ஒரு முன்னணி பாடசாலையாக விளங்க வேண்டும்மென வாழ்த்துகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவப் பகிர்வு

திரு.கு.சிவகுமார்
தொழிநுட்பவியலாளர்
வணிகத்தொழில் அமைச்சு
ஆணையிறவு . யாழ்ப்பாணம்.

மனதில் மலரும் மத்தாப்பு

வானிலிருந்து ஆயிரம் ஆயிரம் மழைத்துளிகள்
நிலத்தினுள் வீழ்ந்திடினும் அவையாவும்
ஒன்றாய் கலப்பது ஆற்றிலேயேயாம்

அது போல் எமது மனித வாழ்விலும் எத்தனை எத்தனையோ அனுபவங்கள், சம்பவங்கள்,நிகழ்வுகள் இடம்பெற்றிருந்தாலும் எம்மனதில் பசுமரத்தாணிபோல் என்றும் நிழலாடிக் கொண்டிருப்பது இளமைக்கால பாடசாலை வாழ்வேயாம்.

பயமின்றி பணமின்றிப் பயணித்த பயணம் பாடசாலை பயணம் என்றால் அது மிகையாகாது.இன்று நான் ஓர் பொறுப்புமிக்க குடும்பத்தலைவனாக வாழ்ந்து கொண்டிருந்தாலும் அன்று நான் துடிப்புமிக்க வாலிபனாக, மாணவனாக வாழ்ந்த காலங்களே இன்றும் என் மணக்கண்முன் நிழலாடிக் கொண்டிருக்கின்றது. அந்த இதமான இனிய நினைவுகளை ஒருகணம் மீட்டிப் பார்க்கின்றேன்.

வெள்ளையுடை தேவதைகள் பவனி வர
உள்ளமது உச்சமதில் குடியிருக்க
தெள்ளமுதத் தேனமுது வாயினிக்க
நெஞ்சமது பாடமதில் மனமினிக்க
சொர்க்கமது பாடசாலை பக்கம்வர
துக்கமது ஏதெனக் கேட்டு நிற்க
தூக்கமது கலைந்து நின்றேன்
பள்ளி நாட்களில் நான்.

இவ்வாறாக நான் பயின்ற காலங்களில் பாடசாலையின் அதிபராக இருந்த திரு.க.இளையதம்பி அவர்களை ஒருகணம் நினைத்துப் பார்க்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சில நாற்காலிகளால் சிலருக்குப் பெருமை இவர் பதவியால் நாற்காலிக்குப் பெருமை" என்றே கூறல் தகும். அவர்

'கையிலிருக்கும் பிரம்பு கூடவரம்பு மீறவில்லை.
'கண்ணகி கால்ச் சிலம்பு கூட நீதி பிழை கூறவில்லை'

அவரது தலைமைத்துவம் நல்லொழுக்கம் சமய விழுமியங்கள் இவை யாவற்றையும் இன்றும் நான் எண்ணி வியந்ததுண்டு.

அதிபர் அவர்களைத் தொடர்ந்து எமது கணித ஆசியர் திரு.சிவானந்தன் அவர்களைக் குறிப்பிட்டே ஆக வேண்டும். அவர் கணித ஆசிரியராக மட்டுமனறி உடற்கல்வி ஆசிரியராகவும் உதைப்பந்தாட்ட பயிற்றுவிப்பாளராகவும் சேவையாற்றியுள்ளார். இவர் பற்றிக் கூறவேண்டுமெனில்

எங்கள் மேல்பட்டது அவர்கரம்
நாங்கள் தொட்டோம் சிகரம்
உதைபந்துப் போட்டியில் நாம் இடத்தை பிடிக்க
அவரே காரணம் ஆவார்
கணிதம் என்றால் பைதகரஸ் தேற்றம் என்பார்
உடற்கல்வி என்றால் உடம்பிற்கோர் ஏற்றம் என்பார்
இவர் பற்றி நாம் கண்ட உண்மை என்னவெனில்

கணக்கிலோ அவர் காட்டுவார் நிதானம்
கண்ணிலோ அவருக்குப்படுவது மைதானம்
அவரால் நாம் அடைந்தோம் வெகுமானம்
அவர் மீது நாம் கொண்டோம் அபிமானம்

இப்படிப்பட்ட பன்முக ஆளுமை கொண்ட ஆசான்களிடம் நாம் பயின்றது நாம் பெரும் பயனும் பாக்கியமுமாகும். பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப்போட்டிகளில் நாம் பெற்றுக்கொண்ட பயிற்சிகளும் திறன்களும் ஏராளம்.

அணிகளாய் களம் பல ஆடினோம்
வெற்றி வாகை சூடி வலம் வந்தோம்
கல்விப் புலத்தின் வாழ்த்துக்கள் தேடி வர
பாங்குடன் பள்ளியும் உயர்ந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/கைதடி நுணாவில் அ.த.க பாடசாலை அபிவிருத்திக் குழு 2016- 2017



இடமிருந்து வலம் அமர்ந்திருப்போர் - திருமதி.சி.நாகலிங்கம், திருமதி.அ.திருக்குமாரன் *(PSI)*, திரு.ஆ.தங்கவேலு (தலைவர்) திருமதி.சா.பகீசன் (செயலாளர்), திருமதி.சி.செல்வரத்தினம் (பொருளாளர்)

இடமிருந்து வலம் நிற்போர் - திருமதி.அ.முரளீதரன், திருமதி.வி.ஜெயந்தி, திருமதி.க. செல்வரத்தினம், செல்வி.கு துசிகா, திருமதி.பி.சர்வா, திருமதி.க.உதயசந்கர், திரு.க.சுதாகரன், (சமூகமளிக்கவில்லை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதிபரின் அகத்திலிருந்து

ஆ.தங்கவேலு
அதிபர்

2009.01.01 அன்று இப் பாடசாலையில் ஆசிரியராக கடமையை பொறுப்பேற்ற யான், 2009.07.09 இல் அப்போதைய அதிபர் திரு.த.அம்பலவாணர் இடமாற்றம் பெற்றுச் செல்ல பதில் அதிபராக கடமையேற்றேன். என்னுடைய இலக்கு இப் பாடசாலைக்கு இருக்கும் காணிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய வேண்டும், அத்துடன் பாடசாலையை கவின்நிலை உடையதாக மாற்ற வேண்டும் என்பதாக இருந்தது. கவின் நிலை ஆக்குவது என்பது எனக்கு கைவந்த கலை. நான் ஏற்கெனவே கடமையாற்றிய பாடசாலையையும் அழகாக வைத்திருந்தேன். இதன் மூலம் பெற்றோரின் கவனத்தை ஈர்த்து அவர்களின் பங்கு பற்றலை அதிகரித்து ஆசிரியரின் விருப்பத்தை கூட்டி அதன் மூலம் மாணவரின் கல்வித்தரத்தை உயர்த்தலாம் என்பது திண்ணம்.

அந்த வகையில் 2010 ஜனவரியில் அமரர் திருமதி அன்னலட்சுமி கதிரவேலு அவர்கள் பாடசாலைக்கு அருகில் ஒரு பரப்பு காணியை எமக்கு இலவசமாக எழுதித் தந்தார். இப்பாடசாலையின் இடப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய மேலும் காணிகளை அயலவர்களிடமிருந்து பெற்று பௌதிக வளரீதயான வசதிவாய்ப்புக்களை அதிகரிக்கலாம் என்று அவ் வேளையில் எனக்கு ஒர் நம்பிக்கை ஏற்பட்டது 2010.06.15 இல் அதிபர். திரு.நா.அருட்சோதி அவர்கள் அதிபர் பதவியில் பதவி உயர்வுடன் கூடிய இடமாற்றம் பெற்று வந்தார். 30.11.2010 இல் இவர் ஓய்வு பெறும் வரை பாடசாலையில் சிறப்பான பணியை ஆற்றினார். பெற்றோர், பழைய மாணவர்களை அணுகி பாடசாலைக்கு உதவி தேடிய வேளை அமைக்கப்பட்டதுதான் நுழைவாயிலுடன் கூடிய வளைவு,கதவு என்பனவாகும். அவரின் வழிகாட்டலின் கீழ் நான் தொடர்ந்தும் செயற்படலானேன்.

நான் ஒவ்வொரு ஆண்டும் இல்ல விளையாட்டுப் போட்டி நடாத்த பின்னிற்பதில்லை.2009 இல் வளர்மதி விளையாட்டு மைதானத்திலும், 2010,2011,2012 ஆகிய ஆண்டுகளில் ,, வீதிக்கு அப்பால் உள்ள (படை வளவு) மைதானத்திலும் இல்ல விளையாட்டுப் போட்டிகள் நடாத்தப்பட்டன. இந்நிலையில் இக்காலப்பகுதியில் A9 வீதி செப்பனிடப்பட்டு வீதி போக்குவரத்து அதிகமானது. இதனால் வீதிக்கு அப்பால் சென்று இல்ல விளையாட்டுப் போட்டி நடாத்துவது என்பது உசிதமானதல்ல என நான் எண்ணத் தலைப்பட்டேன். அவ் வேளை ஒரு நாள் பழைய மாணவன் திரு.க.சுதாகரன் என்னிடம் வந்து பாடசாலை மைதானக் காணியைக் கொள்வனவு செய்ய முயல்வோம், நீங்கள் பழைய மாணவர்களை அழைத்து கதையுங்கள் என்றார்.

ஏற்கெனவே நான் ஒரு பரப்புக் காணி பாடசாலைக்கு சொந்தமாக்கியதும் 2011,2012 இல் ஆகிய ஆண்டுகளில் பாடசாலையில் பரிசில் நாள் நிகழ்வை ஒழுங்கு செய்து மாணவர்கள் அனைவருக்கும் பரிசில்கள் வழங்க ஆவன செய்தேன். இச் செயற்பாடு பெற்றோர், பழைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்க்கு என் மீதான ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தி விட்டது. இதனால் அழைக்கப்பட்ட பழைய மாணவர் சங்க கூட்டத்திற்கு 30 மேற்பட்ட பழைய மாணவர்கள் வருகை தந்தனர். அதில் பாடசாலைக்கு உதவக் சுடிய பலரை அடையாளம் கண்டேன். அதில் அமைக்கப்பட்ட நிர்வாகக் குழு மிகத் துரிதமாக செயற்பட்டது. மூன்று மாதத்தினுள் காணியைக் கொள்வனவு செய்தது. அதே ஆண்டில் மைதான முன்பக்க மதிலும் அமைக்கப்பட்டது. பாடசாலையின் வளர்ச்சிக்காக என்னோடு பழைய மாணவர்கள் கை கோர்த்து நின்றார்கள். அதிலும் குறிப்பாக திரு.வே.சுபாஸ்கரன் அவர்கள் உதவி கேட்காமலேயே தாமாக உணர்ந்து உதவிக் கரம் நீட்டுவார். இக் கிராமத்தில் உள்ளோர். நிறைய படித்தவர்கள், பண்பானவர்கள், மரியாதையாக பழகுவார்கள் நானும் இக்கிராமத்தில் நடைபெறும் இன்ப துன்பநிகழ்வுகளில் பங்கு கொள்ள தவறுவதில்லை. எனது மூத்த தொழிற் குரு திரு.அ.கையிலாயபிள்ளை அதிபர் எனக்கு இந்த இரகசியத்தை சொல்லித் தந்தார். நான் இவ்வாறு பழகுவது இப்பாடசாலைக்கு பல நன்மைகளை பெற்றுத் தந்தது எனலாம். பாடசாலையில் நடைபெறும் எந்த விழாவாயினும் சிறப்பாக நடாத்துவதற்கு நான் பின் நிற்பதில்லை. இதற்கு எப்போதும் பெற்றோர் பழைய மாணவர்கள் என்னுடன் துணையாக இருப்பார்கள்.

கல்வித் திணைக்களத்துடன் எனக்கு இருந்த அந்நியோன்னியமான தொடர்பும் பாடசாலையை வளர்ப்பதில் கை கொடுத்தது. எல்லாவற்றிற்கும் மேலாக எமது பாடாசாலையில் இருந்த, இருக்கின்ற ஆசிரியர்கள் நல்ல செயற்திறன்மிக்கவர்கள். நான் எடுத்த முயற்சிக்கு அவர்கள் கொடுத்த ஆதரவுதான் கல்வி பெறுபேற்றில் மாற்றங்களை ஏற்படுத்தியது என்றால் அது மிகையில்லை. அந்த வகையில் Home Work Club செயற்திட்டமும் எனக்கு வெற்றியளித்தது.

அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு வறிய மாணவர்களுக்கு உதவி வழங்கும் பல்வேறு செயற்றிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்ற வகையில் சாவகச்சேரி கைத்தொழில் வணிக மன்றம் வருடாந்தம் 4 பிள்ளைகளுக்கும் கனடா வாழ் மட்டும் நலன்புரிச்சங்கம் 4 பிள்ளைகளுக்கும் ஆலமரம் (சுவிஸ் கொடையாளர்கள்) நிறுவனம் இருவருக்கும், சிறுவர் அபிவிருத்தி நிதியம் 1 மாணவர்களுக்கும் மற்றும் P.Rujanth மட்டுவில் தெற்கு - இவரூடாக 4 மாணவர்களுக்கும் இதனைவிட இவ்வப்போது தேவைப்படும் மாணவருக்கு உதவிகள் பெற்றுக்கொடுக்கப்படுகின்றன. வசதி குறைந்த மாணவர்கள் அனைவருக்கும் திரு.வே.சுபாஸ்கரன் அவர்களால் அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்படுகின்றன. இச்செயற்பாடுகள் அனைத்தும் எமது மாணவர்களின் கல்வியில் மாற்றத்தை ஏற்படுத்தியது என்றால் அது மிகையாகாது. இணை பாடவிதான செயற்பாடுகளில் மாணவர்கள் சாதனை நிலை நாட்ட பாடுபட்டேன். தேசிய மட்டம் வரை சாதனை படைத்தார்கள். அவர்கள் விளையாட்டில் வெற்றி பெற கடும் முயற்சி செய்தேன்.சென்ற ஆண்டு மாகாண மட்டத்தில் தங்க பதக்கம் கிடைத்து தேசிய மட்டத்தில் பங்கு பற்றியமை இப் பாடசாலைக்கு கிடைத்த பெரு வெற்றியாகும். இப் பாடசாலை வரலாற்றில் முதன் முறையாக தேசிய மட்ட போட்டியில் பங்கு பற்றிய முதல் மாணவன் செல்வன் ர.மகிந்தன் ஆவான். இது இப் பாடசாலைக்கு கிடைத்த பெரு வெற்றியாகும். இதற்கு உதவி செய்த திரு வே.சுபாஸ்கரன் திரு.V.S. துரைராஜா ஆகியோர் என்றும் நன்றிக்குரியவர்கள்.

இந்த வகையில் இவ்வாண்டு நடைபெற்ற வலய மட்ட போட்டிகளில் அனேக மாணவர்கள் பங்கு பற்றி 03 முதலாம் இடமும்.03 இரண்டாம் இடமும்.03 மூன்றாம் இடமும் கிடைத்தது. வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட முதல் 10 பாடசாலைகளில் எமது பாடசாலையும் உள்ளடங்கப் பெற்றது பெருமைக்குரியது. ஆக மொத்தம் 125 மாணவர்கள் அதிலும் 60 மாணவர்கள் 6-11 வரை கற்கிறார்கள். அவர்களை பழக்கி இவ் வெற்றியை பெறுவது என்பது இலேசான காரியமல்ல. நான்கு நாள் வரணி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற போட்டிகளிற்கு அழைத்து செல்வதற்காக திரு.வ.கஜேந்திரன் அவர்கள் குறைந்த கட்டணத்தில் பஸ்சைவழங்கி இருந்தார் திரு.வே.சுபாஸ்கரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் சாப்பாடு, போக்குவரத்துக்கு உரிய கட்டணம் என்பவற்றை தந்துதவினார். இவற்றுடன் வளர்மதி விளையாட்டுக் கழகம் தமது மைதானத்தினையும் தளபாடங்களையும் தந்ததுடன் பயிற்றுவிப்பாளர் திரு.இ.சுகதாஸ் அவர்கள் எமது மாணவர்களிற்கு சிறந்த பயிற்சியை வழங்கினார். அத்துடன் எமது உடற்கல்வி ஆசிரியர் திருமதி நி.யோகசீலன் அவரிகளின் வழிகாட்டல் இவை அனைத்தினதும் ஒட்டுமொத்த செயற்பாட்டின் விளைவே இந்த வெற்றி. இதன் பின்னர் யூலை மாதம் நடைபெற்ற மாகாண மட்ட போட்டியில் மாணவன் செல்வன்.ர.மகிந்தன் உயரம் பாய்தல்,நீளம் பாய்தலில் தங்கப்பதக்கத்தை வென்றார். அத்துடன் 16 வயது பிரிவில் சிறந்த வீரர்க்கான வெற்றிக் கிண்ணத்தையும் பெற்று இப்பாடசாலைக்கு பெருமை சேர்த்தார். சாதாரணமாக இருந்த இப் பாடசாலையை எல்லோரும் பெயர் சொல்லும் அளவிற்கு இச் செயற்பாடுகள் கட்டியம் கூறி நின்றன என்றால் மிகையாகாது.

அவ்வாறே இவ்வாண்டில் நடைபெற்ற தமிழ் தினப் போட்டியில் மாகாண மட்டத்தில் செல்வி அபிஸ்நயா சர்மிலன் இரண்டாம் ஆம் இடத்தை பெற்று சாதனை படைத்ததுடன் ஆங்கில தினப் போட்டியில் வலய மட்டத்தில் முதலாம் இடம் பெற்று மாகாண மட்ட போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார். அதே போல் வலய மட்ட செயற்பாட்டு மகிழ்வோம் போட்டியில் தரம் 3 மாணவர்கள் இரண்டாம் இடத்தை பெற்றுள்ளனர். மிகக் குறைந்த மாணவர் எண்ணிக்கை உள்ள இப்பாடசாலையில் இருக்கும் மாணவர்கள் அத்தனை பேரையும் பழக்கி வெற்றி பெறுவது என்பது ஆசிரியர்களது கடின முயற்சியின் விளைவே என்றால் அது மிகையாகாது.

சிறந்த கட்டுக்கோப்பான ஆற்றல் உள்ள ஆசிரியர் குழாம் ஒன்று இப் பாடசாலையில் உள்ளது. எனவே அவ்வகையில் இப்பாடசாலை மேன்மேலும் சாதனை படைக்கும் என்பது எனது அசையாத நம்பிக்கை. அன்பான பெற்றோர்கள், பழைய மாணவர்களிற்கு இவ் நூல் ஊடாக நான் சொல்லும் செய்தி

- "நுணசை ஆரம்"தொடர்ந்தும் ஒவ்வொரு ஆண்டும் வெளிவர வேண்டும் அதன் மூலம் மாணவர்கள், ஆசிரியர்களது தேடல் திறன்,எழுத்தாற்றல் என்பன விருத்தியடையும். இவ் வெளியீட்டுக்கு நீங்கள் ஆதரவு வழங்க வேண்டும்.வழங்குவீர்கள் என்பது எனது உறுதியான நம்பிக்கை
- முற்றுப் பெறாமல் இருக்கும் மைதானக் கொள்வனவிற்குரிய மிகுதிக் காணியை கொள்வனவு செய்து அச் செயற்பாட்டிற்கு முற்றுப் புள்ளி வைத்து மைதானம் சிறந்த முறையில் முற்றாக ஒழுங்குபடுத்தப்பட வேண்டும்.
- பாடசாலையில் பிள்ளைகளை சேர்க்கும் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும். இதன் மூலம் பாடசாலை மேன்மேலும் வளர்ச்சி அடைவதுடன் உங்கள் பிள்ளைகளும் நகர் புறத்திலுள்ள பாடசாலைகளில் பெற்றுக் கொள்ளாத வசதிகளையும், பெறுபேறுகளையும் இங்கு பெறுவார்கள்.அதற்கான அடிப்படை கட்டுமானங்கள் இங்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இப்பாடசாலைக்கு என ஒரு வரலாறு இல்லை என்ற பேச்சு இனிமேல் எழக் கூடாது. இந் நூலில் எழுதியவற்றை விட மேலதிகமான விபரங்கள் தெரிந்தவர்கள் சரியான ஆதாரத்துடன் நிரூபித்தால் அடுத்து வரும் இதழில் மாற்றத்துடன் அவை பிரசுரிக்கப்படும். எனவே ஒட்டு மொத்தத்தில் அனைவரினதும் கூட்டு முயற்சியே இந்நூல் உருவாக்கம். அதற்கு ஒத்துழைத்த அனைவருக்கு அதிபர் என்ற வகையில் எனது மனம் நிறைந்த நன்றிகள். எதிர்காலத்திலும் எமது பாடசாலையின் வளர்ச்சிப் பணிகளுக்கு அனைவரது பூரண ஒத்துழைப்பையும் அர்ப்பணிப்பையும் வேண்டி நிற்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இதழாசிரியர் உள்ளத்திலிருந்து

இம்மலர் பாடசாலை வரலாற்றை தாங்கி புதுமலராக வெளிவருகின்றது. இப் பாடசாலையின் ஒரு நூற்றாண்டிற்கு மேற்பட்ட கால வரலாற்றை தன்னுள் பதித்துள்ளது. நுணாவில் எம் பதியில் அமைந்துள்ள அறிவாலயத்தின் வரலாற்றுச்சான்றாக அமைந்து பல்வேறு மணிகளினாலும், அழகூட்டப்பட்டு நுணசை ஆரம் நூல் மலருகின்றது. இவை யாவற்றிற்கும் மேலாக நுணாவிற்குளும், கண்ணகி அம்மன் ஆலயம் அருகே அமைந்து அருள்பாலித்துக்கொண்டிருக்கின்றது எனலாம்.

மலரின் முற்பகுதியில் பாடசாலைச்சின்னம், மகுட வாசகம் நோக்குக்கூற்று, பணிக்கூற்று, பாடசாலைக்கீதம் என்ப இடம்பெறுகின்றன. இவை யாவும் மாணவர் மனதில் பதிந்திருத்தல் அவசியமானதாகும் என்பதனாலும் பாடசாலையின் தனித்துவத்தை குறிப்பிடுவதனாலும் இவற்றை நூலின் முற்பகுதியில் சேர்த்துள்ளோம்.

இந்நூலின் நோக்கமே பாடசாலை வராலற்றை ஆவணப்படுத்துவது என்பதாகும். அந்த வகையில் நூலின் கருவூலமாக கருதப்படும் பாடசாலை வரலாறு முக்கியத்துவம் பெறுகின்றது.

வரலாறு என்பது காலத்தின் தேவை அந்த வகையில் யா/.கைதடி நுணாவில் அ.த.க பாடசாலையின் வரலாறும் காலத்தின் தேவையாகும். வரலாறு ஆசிரியர் என்ற வகையில் ஈராண்டுகளுக்கு முன்பே அதிபரிடம் பாடசாலையின் வரலாறு பற்றிக் கேட்டிருந்தேன். அப்பொழுது எமது பாடசாலையின் வரலாறு என்பது தேடி அறிய வேண்டியது ஒன்று எனக்கூறியிருந்தார். எனினும் அதனை வீணே விட்டுவிடவில்லை. தன்னால் முடிந்த வரை முன்னாள் அதிபர் பட்டியலை எடுத்துத்தந்திருந்தார். அத்துடன் அவர்களது புகைப்படங்களையும் காரியாலயத்தில் காட்சிப்படுத்த தவறவில்லை. இது பாடசாலை வரலாற்றை தேடி அறிவதில் நாம் வைத்த முதற் படியாகும்.

அடுத்தக்கட்டமாக இவ்வருட ஆரம்பத்தில் பழைய ஆவணங்களை தேடிப் பெற்றிருந்தார். அதனை ஆராய்ந்து முடிந்த வரை 1930களிற்கு பிந்திய வரலாற்றை அறிய முடிந்தது. ஆனாலும் எமது பயணம் ஓயவில்லை. ஒரு நூற்றாண்டைக்கடந்து நிற்கும் ஒரு பாடசாலையின் வரலாற்றை அறிவது என்பது சாதாரண விடயமல்ல என்பது யாவரும் அறிந்ததே எனினும் எமது பாடசாலைக்கு என்றொரு வரலாறு தேவை. அதை அறிவதற்கான காலம் கனிந்துள்ளது அதனை எப்படியாவது தேடித்தொகுத்திட வேண்டும் என்பதில் அதிபர்.திரு. ஆ.தங்கவேலு உறுதியாக நின்றார். பாடசாலை சார்ந்த தகவல்களை பெறக்கூடிய இடங்களிளெல்லாம் தேடிப்பெற்று முடிந்தவரை அதனை உறுதிப்படுத்தி ஒரு ஆவணமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றுவதில் இன்று நாம் வெற்றி கண்டோம். பாடசாலையானது அமெரிக்கன் மிசரினரியால் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து தனியாரால் நடாத்தப்பட்டு இறுதியில் அரசினால் பொறுப்பேற்ற நடாத்தப்பட்டு வந்துள்ளது.

இப்பாடசாலைச் சார்ந்த தகவல்களை ஆவணங்கள், ஊர்ப்பெரியோர்கள் Hindu Board நிறுவனம் என்பவற்றின் மூலம் பெற்றோம். கிடைக்கப்பெற்ற தகவல்களை ஆராய்ந்து நூலுருவாக்கம் செய்வதில் மிகுந்த சிரமத்தை எதிர்நோக்கினோம்.

சிறப்புப்பகுதி எடுத்தும் நோக்கும் போது ஆசிரியர்களின் ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. மாணவர்க்கு வழிகாட்டியாக விளங்கும் ஆசிரியர்களின் ஆக்கங்கள் இங்கு வழிகாட்டுதலாக அமைந்துள்ளது. அதில் பல்வேறு விடயங்கள் பற்றிய ஆக்கங்கள் அமைந்துள்ளன.

மாணவர்ப்பகுதியை எடுத்து நோக்குமிடத்து மாணவர்க்கு ஒரு களமாக எழுத்தாற்றலை ஊக்குவிக்கும் இடமாக அமைந்து காணப்படுகின்றது. மாணவர்கள் தம்முடைய ஆக்கங்களையும் படங்களையும் நூலில் கண்டு அகமகிழ்வதுடன் மென்மேலும் இது போன்ற ஆக்கங்களை உருவாக்க தூண்டுதலாக அமைய வேண்டும் என்பதனால் மாணவர்ப்பகுதி தமிழில் மட்டுமன்றி ஆங்கிலத்திலும் அமைந்து காணப்படுகின்றது.

மாணவர்கள் சாதனை ஈட்டிய வெற்றிகள் என்பன கற்றலில் மட்டுமன்றி இணைப்பாடவிதான செயற்பாட்டிலும் ஊக்குவிக்கப்படவேண்டியதொன்றாகும். இம்மலர் மூலம் வெற்றி பெற்ற மாணவர்கள் இனங்காட்டப்பட்டு பாராட்டப்படுவதன் மூலம் அவர்கள் ஊக்குவிப்பதுடன் ஏனைய மாணவர்களுக்கும் அவாவை ஏற்படுத்துவதாக அமையும் என்பதால் அவற்றை இந்நூலில் சேர்த்துள்ளோம். அதேவேளை இப்பாடசாலையில் முதன் முறையாக இந்நூல் வெளிவருவதனால் நீண்ட காலத்தில் மாணவர்கள் பெற்ற சாதனைகளில் தெரிந்தவற்றை பதிவு செய்துள்ளோம். இப்பகுதி மாணவர் அனைவரது உள்ளத்திலும் எதிர்காலத்தில் நாமும் சாதனை படைக்க வேண்டும் என்ற தூண்டுதலை ஏற்படுத்த வேண்டுமென்பதே எமது குறிக்கோளாகும்.

இப்பாடசாலையை வழிநடத்திச்செல்வதில் அதிபர் ஆசிரியர்க்கு அடுத்தபடி மாணவர் தலைவர்கள் முக்கிய இடம்பெறுகின்றனர். அந்த வகையில் அம் மாணவர்த்தலைவர்களை தெரியப்படுத்துவதும் சிறப்பானதாகும்.

நீண்ட காலமாக இப்பாடசாலையில் நடந்து வந்த வரலாற்றுச் சான்றாக சான்றாதாரங்கள் மெய்வன்மைப் போட்டி, கண்காட்சி, திறப்பு விழா, மாணவர் தலைவர் சின்னம் சூட்டுதல், களப்பயணம், பான்ட் வாத்தியக்குழு போன்ற பல்வேறுபட்ட விடயங்களின் ஞாபகச்சின்னங்களாக விளங்கும் புகைப்படங்களினையும் இந்நூலின்கண் இணைத்துக் கொள்ளுதல் சாலவும் பொருந்தும். இப்பாடசாலை வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றுவதில் சமூகம் முக்கிய இடம்பெறுகின்றது. அந்த வகையில் மாணவர் வளர்ச்சிக்கான புலமைப்பரிசில் விபரமும் குறிப்பிடப்பட வேண்டியதும் ஒன்றாகும். இவ்விபரங்கள் இந்நூலில் இணைக்கப்பட்டுள்ளன.

இந்நூலிற்கு வரலாறு தொகுக்கும் போது எதிர்நோக்கிய இடர்பாடுகளை நிவர்த்தி செய்யும் வகையில் தாம் அறிந்த தெரிந்த விடயங்களை ஆதாரமாக எமக்கு வழங்கி உதவியவர்களது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதாரங்களை ஆதாரப்படுத்துவது அவசியமானதாகும் என்ற வகையில் ஆதாரப்ப டுத்தியுள்ளோம். இந்நூல் பலருடைய முயற்சியால் உருவாக்கப்பட்டதொன்றாகும். தொடர்ந்து வரும் காலங்களிலும் இம்மலர் மென்மேலும் மெருகூட்டப்பட்டு புதுப்பொலிவுடன் திகழ சகலரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்றும் அதற்கு எல்லாம்வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

"முயற்சி திருவினையாக்கும்" என்பர் அதற்கமைய 'நுணசை ஆரம்" எனும் யாழ்.கைதடி நுணாவில் அ.த.க பாடசாலை அன்னையின் வரலாறு இன்று எம் நெஞ்சம் நெகிழ எம் கரம்பற்றி உலா வருகின்றது. இம்மலரில் பாடசாலை வரலாறு பழைய மாணவர்களின் அனுபவப்பகிர்வு வாழ்த்துச் செய்தி ஆசியுரை, ஆசிரியர்களின் கருத்தாக்கம். மாணவர்களின் ஆக்கங்கள், வரலாற்றுச் சான்றாதராங்கள் எனப் பல்வேறுபட்ட விடயங்களைத் தாங்கி இதழ்விரித்து மணம் பரப்பி நிற்கின்றது. வாழ்க எங்கள் பாடசாலை வளர்க நுணசை ஆரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுணசை ஆரம்

பாடசாலைத்தகவல்கள்



யா/ கைதடி நுணாவில் அ.த.க பாடசாலை

J/Kaithady Nunavil GTMS

2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலச்சினை



பாடசாலைக் கொடி



பாடசாலைக் கழுத்துப்பட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைக் கீதம்

உணர்த்தும் கருப்பொருள்

கல்விச் செல்வத்தினை வாரி வழங்கும் கைதடி நுணாவில் அ.த.க பாடசாலை சிறப்புற்று வாழ்க. கைதடி நுணாவில் வாழ் மக்களின் அறிவு ஒளியை ஏற்றும் விளக்காக மிளிரும் இப்பாடசாலை வாழ்க.

இப்பாடசாலை 19ம் நூற்றாண்டிலே தோற்றம் பெற்று கல்வியிலும், கலைநிகழ்ச்சிகளிலும், விளையாட்டுக்களிலும் அனைவரும் போற்றும் படியாக சிறப்புற்று விளங்கி கல்வி, கலை, விளையாட்டு ஆகியவற்றை ஒன்றிணைத்து வழங்கும் அழகான ஆலயமாக விளங்குகிறது. அனைத்துப் பாடங்களிலும் விளையாட்டிலும் மேலோங்கி நிற்கிறது. நல்ல பழக்கவழக்கங்களான அன்பு, ஒழுக்கம், அனைத்தையும் கற்பித்து மக்கள் மத்தியில் மதிப்புடனும் சிறப்புடனும் இப்பாடசாலை விளங்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலச்சினை



கருப்பொருள்

ஒளி விளக்குப் புத்தகம்

நாற்றிசையும் அறிவொளி பரப்பி யாவற்றையும் தன்னகத்தே பெற்று கல்வியுலகில் சிறந்தோங்கும் என்பதனை ஒளிவிளக்கும் விரிந்த நூலும் வெளிப்படுத்துகின்றது.

மலரிதழ்

அப்பொழுது மாணவர்களின் பசுமையான உள்ளங்களில் கல்வி ஒளி வீசும் என்பதனை அழகிய மலரிதழ் புலப்படுத்துகின்றது.


நெற்கதிர்

அவ்வாறு கல்விச்செல்வம் சிறந்தோங்க பொருட் செல்வம் நின்று உதவும் என்பதனை நெற்கதிர் வளர்ந்துநிற்கும் காட்சி தெளிவுபடுத்துகின்றது.

ஓதுவது ஒழியேல்

இதற்கும் மேலாக சின்னத்தில் ஓதுவது ஒழியேல் எனும் மகுடவாசகம் பொறிக்கப்பட்டுள்ளது.இது பாடசாலையின் உயர்ந்த இலட்சியத்தை வெளிப்படுத்துவதாப அமைந்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாடசாலைக் கொடி

கொடி விளக்கம்

பச்சைநிறம் பசுமையான நினைவுகள் கொண்டது.பாடசாலை என்றும் பசுமையாக காட்சி தருகின்றது.இது குளிர்ச்சி பொருந்தியது. குளிர்ச்சி இரக்கம் கருணையைக் குறிக்கும்.

அதே வேளை மஞ்சள் நிறம் மங்கலகரமானது.நன்மைகள் நிறைந்து சிறப்புக்கள் மிகுந்தது. அழகுடன் திகழ்வது.

இப் பாடசாலையின் கொடியானது பச்சை மஞ்சள் இரு நிறங்களும் சரியாதியாக அமைந்து காணப்படுவதுடன் யா/கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை அதில் துல்லியமாக மிளிர்வதனை காணக் கூடியதாக அமைந்துள்ளது.இப் பாடசாலை கருணை மங்கலம் நிறைந்து பொலிவுடன் விளங்கும் இடமாக அமைந்திருப்பது திண்ணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை தொடர்பான தகவல்கள்

1.	பாடசாலையின் பெயர்	: யா/கைதடி நுணாவில் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை
2.	பாடசாலை முகவரி	: கைதடி நுணாவில், சாவகச்சேரி.
3.	கிராமசேவையாளர் பிரிவின் பெயரும் இலக்கமும்	: கைதடி நுணாவில் J/309
4.	தொலைபேசி இலக்கம்	: 0212057515
5.	மின்னஞ்சல் முகவரி	: School1003016@gmail.com
6.	இணையத்தள முகவரி	: www.jkngtms.sch.lk
7.	பாடசாலையின் வகை	: வகை **II**, கலவன் பாடசாலை
8.	கற்கும் தரங்கள்	: தரம் 1-11
9.	அதிபரின் பெயர்	: திரு.ஆறுமுகம் தங்கவேலு, T.P0776544366, E.mail athankavelu @ gmail.com
10.	ஆசிரியர் எண்ணிக்கை	: 20
11.	கோட்டம்	: சாவகச்சேரி
12.	வலயம்	: தென்மராட்சி
13.	மாவட்டம்	: யாழ்ப்பாணம்
14.	மாகாணம்	: வடமாகாணம்
15.	ஸ்தாபிக்கப்பட்ட வருடம்	: 1898 என அறியப்பட்டது
16.	பாடசாலை எண்	: 1003016
17.	தொகை மதிப்பெண்	: 09367
18.	பரீட்சை எண்	: 11116
19.	பாடசாலையில் இயங்கும் மன்றங்கள்	: 1. தமிழ் மன்றம் 2. இந்து மா மன்றம் 3. சமூக விஞ்ஞான மன்றம் 4. சுற்றாடல் கழகம் 5. விஞ்ஞான மன்றம் 6. சக்திவள கழகம் 7. கணித மன்றம் 8. சுகாதார மன்றம் 9. ஆரம்பபிரிவு மாணவ மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/கைதடி நுணாவில் அ.த.க பாடசாலை சேவையணி - 2017



இடமிருந்து வலம் அமர்ந்திருப்போர் - திருமதி செ.தனபாலசிங்கம், திருமதி சி.நாகலிங்கம், திருமதி யோ.சிவானந்தன்
திரு.சி.சிவகரன், திரு.ஆ.தங்கவேலு (அதிபர்), திரு.தா.தேவேஸ்வரன்
திருமதி ஜெ.பரம்சோதி, திருமதி ப.விக்கினேஸ்வரன், திருமதி கு.சிவநாதன்

இடமிருந்து வலம் நிற்போர் - திரு.க.சுதாகரன் (கல்வி சாரா ஊழியர்), திருமதி ஜெ.விநாயகமூர்த்தி,
திருமதி க.சியாம்சுந்தர், திருமதி.ச.நிமலரங்கன், திருமதி க.உதயசந்தர்
திருமதி சி.செல்வரத்தினம், திருமதி ந.தவராசா, திருமதி நி.யோகசீலன்,
திருமதி த.பஞ்சலிங்கம், திருமதி ந.சர்மிலன், திருமதி அ.முரளீதரன்,
செல்வி வை.ஞானகௌரி, திருமதி ம.சுகந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த கால அதிபர்கள் விபரம்



திரு.சரவணமுத்து பொன்னையா (அமரர்)
01.01.1930 - 31.12.1936



திரு.துரையப்பா கந்தையா (அமரர்)
01.01.1937 - 31.12.1950




திரு.சின்னத்தம்பி கந்தையா (அமரர்)
01.01.1957 - 31.07.1962



திரு.பொன்னையா கந்தவனம் (பதில் அதிபர், அமரர்)
01.08.1962 - 31.01.1963



திரு.தம்பையா குமாரசாமி (அமரர்)
01.02.1963 - 14.06.1966



திரு.சின்னத்தம்பி வீரகத்தி
15.06.1966 - 31.12.1967



திரு.பொன்னையா கந்தவனம் (பதில் அதிபர், அமரர்)
01.01.1968 - 30.06.1968

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த கால அதிபர்கள் விபரம்



திரு.ஆறுமுகம் அருணாசலம் (அமரர்)
01.07.1968 - 31.12.1976




திரு.அருணாசலம் குமாரவேலு (அமரர்)
01.01.1977 - 27.06.1987



திரு.சந்திரசேகரம் நடேசபின்னை (பதில் அதிபர், அமரர்)
28.06.1987 - 31.08.1987



திரு.கந்தையா இளையதம்பி (அமரர்)
01.09.1987 - 02.01.1995



திரு.மாணிக்கம் சாம்பசிவம் (அமரர்)
02.02.1995 - 18.07.1995



திரு.முருகேசர் துரைசிங்கம்
19.07.1995 - 23.08.1999

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த கால அதிபர்கள் விபரம்



திரு.விநாயகமூர்த்தி தெய்வேந்திரமூர்த்தி (அமரர்)
01.10.1999 - 24.08.2008



திருமதி.கமலாதேவி கணேசன் (பதில் அதிபர்)
25.08.2008 - 28.01.2009



திரு.தம்பிராசா அம்பலவாணர்
29.01.2009 - 09.07.2009



திரு.ஆறுமுகம் தங்கவேலு (பதில் அதிபர்)
10.07.2009 - 14.06.2010



திரு.நாகலிங்கம் அருட்சோதி
15.06.2010 - 30.11.2010



திரு.ஆறுமுகம் தங்கவேலு
01.12.2010 - இன்று வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை ஆளணி விபரம்

இல	ஆசிரியர் பெயர்	கல்வித் தகைமை தொழிற்தகைமை
1	திரு.ஆறுமுகம் தங்கவேலு	கல்விமாணி SLPS2.II
	திருமதி.சிவமலர்.நாகலிங்கம்	கலைமாணி பட்டப்பின் கல்வி டிப்ளோமா SLTS I
3	திருமதி.சிவகுமாரி செல்வரத்தினம்	க.பொ.த உயர் தரம் விசேட பயிற்சி வர்த்தகம் SLTS 2 I
4	திருமதி.ஜெயந்தி பரம்சோதி	கல்விமாணி விசேட பயிற்சி ஆரம்பக் கல்வி SLTS I
5	திருமதி.பவநீதராணி.விக்னேஸ்வரன்	க.பொ.த உயர் தரம் விசேட பயிற்சி ஆரம்பக் கல்வி SLTS 2 II
6	திருமதி.குணமதி.சிவநாதன்	விசேட பயிற்சி தமிழ் கலைப்பட்டதாரி பட்டப்பின் கல்வி டிப்ளோமா SLTS I
7	திருமதி.யோகேஸ்வரிசிவனாந்தன்	நுண்கலைப்பட்டதாரி பட்டப்பின் கல்வி டிப்ளோமா SLTS I
8	திருமதி.நளினிகலா தவராசா	க.பொ.த உயர்தரம் விசேட பயிற்சி மனையியல் SLTS I
9	திருமதி.மகிந்தினி.சுகந்தன்	கற்பித்தலில் தேசிய டிப்ளோமா கலைப்பட்டதாரி பட்டப்பின் கல்வி டிப்ளோமா SLTS 2 I
10	திருமதி.சந்திரலதா நிமலரங்கன்	க.பொ.த உயர் தரம் தேசிய கல்வி கணித டிப்ளோமா SLTS 2 I
11	திருமதி.நந்தினி.சர்மிலன்.	கற்பித்தலில் தேசிய டிப்ளோமா, கலைப்பட்டதாரி SLTS 2 II
12	திருமதி.ஜெயந்தினி விநாயகமூர்த்தி	கலைப்பட்டதாரி பட்டப்பின் கல்வி டிப்ளோமா SLTS 2 I
13	திரு.தாமோதரம்பிள்ளை.தேவேஸ்வரன்	க.பொ.த உயர்தரம் விசேட பயிற்சி விவசாயம் SLTS I
14	செல்வி.வைரமுத்து.ஞானகௌரி	க.பொ.த உயர்தரம் விசேட பயிற்சி ஆரம்பக்கல்வி SLTS 2 II
15	திருமதி.அனோசியா.முரளீதரன்	கலைப்பட்டதாரி பட்டப்பின் கல்வி டிப்ளோமா SLTS 3 I
16	திருமதி.தவமலர்.பஞ்சலிங்கம்	கலைப்பட்டதாரி விசேட பயிற்சி ஆங்கிலம் SLTS 2 I
17	திருமதி.கயல்விழி.உதயசந்தர்	சிறப்பு கலைமாணி பட்டப்பின் கல்வி டிப்ளோமா, முதுகல்வியியல்மாணி SLTS I
18	திரு.சிவபுண்ணியம் சிவகரன்	க.பொ.த உயர்தரம் தேசிய ஆரம்பக்கல்வி டிப்ளோமா SLTS 2 II
19.	திருமதி.செல்வநிதி.தனபாலசிங்கம்	க.பொ.த உயர் தரம் விசேட பயிற்சி ஆரம்பக் கல்வி SLTS 2 I
20.	திருமதி.கலைமகள்.சியாம்சுந்தர்	கலைப்பட்டதாரி விசேட பயிற்சி வர்த்தகம் SLTS 2 I

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை வரலாறு



இலங்கையின் வடபால் காணப்படுகின்ற தென்மராட்சி பிரதேசத்தில் கைதடி நுணாவில்,மட்டுவில் தெற்கு கிராமங்களின் அறிவாலயமாகத் திகழ்வது யா/கைதடி நுணாவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையாகும். 19ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் வடபகுதியில் அமெரிக்கன் மிஷனரிமாரின் செல்வாக்கு காணப்பட்டது. அவர்கள் கிராமப்பகுதிகளில் கல்வி நடவடிக்கைகளுக்காக பாடசாலைகளை அமைத்தனர். அவர்களால் இப் பாடசாலை 1898 ஆம் ஆண்டளவில் 'யா/கைதடி நுணாவில் அமெரிக்க மிஷன் தமிழ்க்கலவன்" பாடசாலை என வகுப்பு 1-5 வரை செயற்படுத்தப்பட்டுள்ளது என முன்னோர்களின் வாய் மொழித் தகவல்கள் மூலம் அறியக் கிடைத்தது. கல்விச் செயற்பாடுகள் மூலம் கிறிஸ்தவ மதம் பரப்பபடுவதை உணர்ந்த எமக்கள் நாளடைவில் பாடசாலைக்கு பிள்ளைகளை அனுப்புவதை குறைத்துக் கொண்டனர். இதனால் ஆரம்ப காலத்தில் மாணவர் தொகை அதிகரித்து வந்த போதிலும் 1920 களின் பின்னர் மத வேறுபாடு காரணமாக மாணவர் வரவு குறைவடைந்து சென்றுள்ளது.

20ஆம் நூற்றாண்டின் முதற் காலாண்டின் இறுதிப் பகுதியில் கிறிஸ்தவ மதக் கல்விச் செயற்பாட்டிற்கு எதிராக கிராமத் தலைவர்களிற்கும் மிஷனரிமாருக்கும் இடையே கருத்து முரண்பாடுகள் தோன்ற ஆரம்பித்தது. 1930 காலப்பகுதியில் வட பகுதியில் மிஷனரிமாரின் செயற்பாடு காரணமாக சைவ சமயம் மிகுந்த அச்சுறுத்தலுக்கு உள்ளாகி இருந்தத. பாடசாலைகளில் கிறிஸ்தவ மதமே மாணவர் மதமாக காணப்பட்டது. இந்நிலையில் மதம் மாற விரும்பாத பெற்றோர் பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்புவதனை குறைத்துக் கொண்டனர். இதனால் பாடசாலைகயில் மாணவர் எண்ணிக்கை மிக வீழ்ச்சியடைந்து சென்றுள்ளது. இந்நிலையில் சைவசமயத்தை வளர்க்க வேண்டும் என்ற எண்ணம் கொண்ட பெருமைக்குரியவரான அமரர் இராமநாதர் அப்பா வெற்றிவேலு அவர்களின் தூர நோக்கான செயற்பாடே இன்று பெரு விருட்சமாக கிளைகள் பரப்பி நிற்கும் எமது கல்விக்கூடமாகும். மிகவும் இக்கட்டான வேளையில் மிகக் கஸ்ரப்பட்டு இப்பாடசாலையை 11 மாணவர்களுடன் பொறுப்பெடுத்தமைக்கான ஆதாரங்கள் உண்டு.ஆயுள் வேத பரியாரியார் அமரர் இராமநாதர் அப்பா வெற்றிவேலு அவர்களால் இப் பாடசாலை பொறுப்பேற்கப்பட்ட பின் 'யா/கைதடி நுணாவில் தனியார் தமிழ்க்கலவன் பாடசாலை" என செயற்படத் தொடங்கியது.

வகுப்பு 1-5 வரை இடம்பெற்று வந்ததது என இவ்வூரின் பல்வேறு மூத்தவர்களும் சொல்லக் கேட்கின்றோம். எனினும் இவை யாவும் ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்தப்படாத போதிலும் பாடசாலை சார்ந்த பற்றுள்ளம் கொண்டவர்கள் தொலைநகல், இன்ரநெற், தொலைபேசி என்பவற்றினூடாகவும் நேரிலும் கூட எமக்கு வழங்கப்பட்ட தகவல்களை ஆதாரமாகக் கொண்டு இவ்வரலாறு எழுதப்பட்டுள்ளது.1930 ஆண்டுகளுக்கு பிற்பட்ட கால வரலாறு ஆவணங்கள் மூலம் ஓரளவு உறுதிப்படுத்தக் கூடியதாக உள்ளது. இயன்றவரை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை வரலாறு திருத்தமாக அமைய வேண்டும் என்பதனை கருத்திற் கொண்டு எழுதப்பட்டுள்ளது. எனினும் இதில் சில பிழைகள் தவறுகள் இடம்பெறலாம் அதனை பாடசாலை தகவல்கள் தெரிந்தவர்கள் அறிந்தவர்கள் தந்துதவுவதன் மூலம் அடுத்துவரும இதழ் சிறப்பாக அமைய வழியேற்படுத்தப்படும். ஆரமப் கால கட்டத்தில் 4 பரப்பு காணியில் ஓலையினால் வேயப்பட்ட கட்டிடத்துடன் ஆரம்பித்து கல்வி செயற்பாடுகளை மேற்கொண்டது.மேலும் தனியார் பாடசாலையாக செயற்பட்டதன் காரணமாக 1940ம் ஆண்டு வரையான காலப்பகுதியில் முகாமையாளரான இராமநாதர் அப்பா வெற்றிவேலு அவர்களால் முகாமை செய்யப்பட்டும் அதன் கீழ் அதிபர் பாடசாலை நிர்வாகியாகவும் செயற்பட்டுள்ளனர்.

1930-1940 காலகட்டம்

மேற்படி பாடசாலை கி.பி 1930 ஆம் ஆண்டு காலப்பகுதியில் யா/கைதடி நுணாவில் தனியார் தமிழ்க் கலவன் பாடசாலை (J/Kaithady Nunavil Private Tamil Mixed School) என வகுப்பு 1-5 வரை செயற்பட்டு வந்துள்ளது.அப்போது இருந்த மாணவர் எண்ணிக்கை 11 ஆகம். அவ்வருட இறுதியில் 37 பிள்ளைகளும் அடுத்த வருடத்தில் 45 பிள்ளைகளுடனும் இயங்கி வந்துள்ளது. அன்று இதன் முகாமையாளராக அமரர் இராமநாதர் அப்பா வெற்றிவேலு அவர்களும் அதிபராக அமரர் சரவணமுத்து பொன்னையா அவர்களும் செயற்பட்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் இப்பாடசாலை 1936 ஆம் ஆண்டு காலப்பகுதியில் Bilingual Class (தமிழ்,ஆங்கிலம் இருமொழிக் கல்வி) உள்ள பாடசாலையாக செயற்பட்டுள்ளதாகவும் அதற்காக ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. 1936 ஆம் ஆண்டு (யா/கைதடி நுணாவில் சித்தி விநாயகர் வித்தியாசாலை) என்ற பெயருடன் இயங்கி வந்ததற்கான ஆதாரங்கள் உண்டு.1939 செப்டெம்பர் வரை அமரர் அப்பா வெற்றிவேலு அவர்களே முகாமையாளராக இருந்துள்ளார். எனினும் 1937 நடுப்பகுதியில் இருந்து துரையப்பா கந்தையா அவர்கள் அதிபராக பொறுப்பேற்றுள்ளார்.



1940-1960 கால கட்டம்



1940 ஆண்டுகளில் யாழ்ப்பாணத்தில் செயற்பட்ட சைவவித்தியா விருத்திச் சங்கம் (Hindu Board) எமது பிரதேசத்தில் பல கிராமப் பாடசாலைகளை பொறுப்பேற்று செயற்படுத்தி சைவமும் தமிழும் நிலைக்க வழிவகுத்தது.அந்த பெருமைக்குரியவராக அதன் ஸ்தாபகர் அமரர் சு.இராசரத்தினம் காணப்படுகின்றார். அந்த வரிசையில் 1940 களில் இப் பாடசாலையும் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினால் பொறுப்பேற்கப்பட்டு J/Kaithady Nunavil Hindu Board Education Tamil Mixed School யா/கைதடி நுணாவில் H.B.E.T.M பாடசாலை என செயற்பட்டு வந்துள்ளது. 1930ஆம் ஆண்டுகளில் ஆரம்ப பிரிவுகளுடன் தொடரப்பட்ட இப் பாடசாலை

1940-1956	வகுப்பு	1-5
1957	வகுப்பு	1-6
1958	வகுப்பு	1-7
1959-1960	வகுப்பு	1-8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனச் செயற்பட்டு வந்துள்ளது. இக்காலகட்டத்தில் அதிபர்களாக திரு.துரையப்பா கந்தையா,திரு.சின்னத்தம்பி கந்தையா ஆகியோர் கடமையாற்றியுள்ளனர்.

1961-1980 கால கட்டம்

1960ஆம் ஆண்டில் அரசினால் பொறுப்பேற்கப்பட்டு யா/கைதடி நுணாவில் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை என இயங்கி வந்துள்ளது. இப்பாடசாலை 1960 களில் வளர்ச்சி போக்கில் கால்பதித்துள்ளது.

1961-1963 வகுப்பு 8
1964 வகுப்பு 9
1965 - 1969 வகுப்பு 10 S.S.C

என வளர்ச்சியடைந்துள்ளது. 1966,1967 காலப்பகுதியில் (S.S.C Seanior School Certificate) சிரேஸ்ட பாடசாலை தராதரப் பத்திரப் பரீட்சைக்கு மாணவர்களைத் தயார்படுத்தி வெற்றியும் கண்டுள்ளது. S.S.C பரீட்சையில் 1966 ஆம் ஆண்டில் இருவரும் 1967 இல் மூவரும் சித்தியெய்தி உயர்தரம் கற்று பல்கலைக் கழகம் சென்று பின்னர் அரச உயர் பதவிகளில் பணியாற்றி ஓய்வு பெற்றதாக அறியக்கிடக்கின்றது. 1960 களில் 'யா/கைதடி நுணாவில் சைவத் தமிழ்கலவன் பாடசாலை என்ற பெயரிலும் செயற்பட்டதற்கான ஆதாரங்கள் உண்டு. 1967 காலப்பகுதியில் சாவகச்சேரி வட்டாரப் பாடசாலை விளையாட்டுப் போட்டியில் பங்கு பற்றி 6 ஆவது இடத்தை பெற்று வெற்றிக் கிண்ணம் பெற்றுள்ளது.

1930 - 1970 இற்குள் கைதடி நுணாவில் சித்திவிநாயகர் வித்தியாசாலை சைவப்பிரகாச வித்தியாசாலை, கைதடி நுணாவில் சைவத்தமிழ் கலவன் பாடசாலை என மூன்று சைவ சமயம் சாந்த பெயர்களில் அமைக்கப்பட்டமையால் மிசனரிமாரிடமிரந்து தம்மை விடுவித்துக் கொள்வதற்காகவே இவ்வாறு பெயர்கள் வைத்திருக்கலாம் என எண்ணத்தோன்றுகின்றது. மீண்டும் இப்பாடசாலை வகுப்புக்கள் குறைவடைந்து சென்றுள்ளது.

1970 வகுப்பு 1-7
1971 வகுப்பு 1-7
1972 வகுப்பு 1-8
1973 வகுப்பு 1-8
1974 வகுப்பு 1-9
1975 வகுப்ப 1-10 S.S.C
1976 வகுப்பு 1-9 } N.C.G E
1977 வகுப்பு 1-9 }

தேசிய கல்விப் பொதுத் தராதரப் பரீட்சைக்கு மாணவர்கள் 1976-1977 காலப்பகுதியில் தோற்றியுள்ளனர் தேசிய கல்விப் பொதுத் தராதரப் பரீட்சைக்கு (National Crtificate General Education) 1976,1977 காலப்பகுதியில் அரசால் அறிமுகப்படுத்தப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. தோடர்ந்து 1980 களில் கல்விப் பொதுத் தராதர சாதாரண பரீட்சைக்கு மீண்டும் மாணவர்கள் தோற்றியுள்ளனர். அதனைத் தொடர்ந்து கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம் வரை செயற்படடு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இக் காலப்பகுதியில் திரு.த.குமாரசாமி, திரு.சி.வீரகத்தி, திரு.ஆ.அருணசலம், திரு.அ.குமாரவேலு ஆகியோர் அதிபர்களாகவும் திரு.ஆ.கந்தவனம் உப திபராகவும் இவரின் துணைவியும் அப்பா வெற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலுவின் மகளுமாகிய திருமதி.க. இரத்திரனம் அவர்கள் ஆரம்பப்பிரிவு ஆசிரியராகவும் இருந்துள்ளனர்.

1981-2000 காலகட்டம்

1980ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் பாடசாலையில் கண்காட்சி நிகழ்ச்சி இடம்பெற்றுள்ளது. மாணவர் எண்ணிக்கை அதிகரித்து காணப்பட்டுள்ளது. வகுப்பு 1-10 வரை இடம்பெற்றுள்ளது. இல்லமெய்வன்மைப் போட்டி கோட்ட மட்டப்போட்டிகளில் மாணவர்கள் ஈடுபட்டு வந்துள்ளனர். மாணவர் எண்ணிக்கைக்கு ஏற்ப கட்டிட வசதி போதாமல் காணப்பட்டுள்ளது. இக்காலப்பகுதியிலேயே இங்கு காட்சி தரும் இரு மாடிக் கட்டிடம் அமைக்கபட்டுள்ளது. 1982 இன் நடுப்பகுதியில் கட்டிடம் பற்றி வியாபிக்கப்பட்டிருந்தாலும் கூட 1985இலேயே முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் வ.ந.நவரத்தினம் அவர்களின் நிதி ஒதுக்கீட்ன் கீழ் 50X25 அளவுத்திட்ட்த்தில் இவ் இரு மாடிக் கட்டிடம் அமைக்கப்பட்டுள்ளது. 08.11.1985 இல் யாழ் கல்வித்திணைக்கள கல்வி அதிகாரி கு.சோமசுந்தரம், சாவகச்சேரி வட்டாரக் கல்வி அதிகாரி அ.தங்கராஜா ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

1987-1991காலம் வரை மாணவர் எண்ணிக்கை சடுதியான அதிகரிப்பை காட்டியுள்ளது. அதற்கு குடாநாட்டின் வெவ்வேறு பிரதேங்களில் இடம்பெற்ற அசாதாரண சூழ்நிலையும் மக்கள் இடம்பெயர்வுமே காரணம் எனலாம். மீண்டும் அவர்கள் சொந்த இடத்திற்கு செல்லும் போது வீழ்ச்சி நிலையை காட்டியுள்ளது.25.10.1991 இல் விஞ்ஞான பொருட்காட்சி இடம்பெற்றுள்ளது.அதில் டைனமோவில் இயங்கும் வானொலிப் பெட்டியை தயாரித்த மாணவன் பாராட்டப்பட்டுள்ளான்.1980-2000 ஆம் ஆண்டு காலப்பகுதியிலும் மாணவர்கள் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் தோற்றி உயர்தரம் கற்க சென்றுள்ளனர் என அறியக்கிடக்கின்றது. எனினும் அது பற்றி உறுதிப்படுத்தக் கூடிய ஆதாரங்கள் பாடசாலையில் இல்லை.

இக் காலப்பகுதியில் திரு.அ.குமாரவேலு, திரு.க.இளையதம்பி, திரு.ம.சாம்பசிவம், திரு.மு.துரைசிங்கம் ஆகியோர் அதிபர்களாக கடமையாற்றி வந்துள்ளனர். அத்துடன் திரு.ச.நடேசபிள்ளை பதில்அதிபராகவும் கடமையாற்றியுள்ளார். இதில் திரு.க.இளையதம்பியின் காலத்தில் மாணவர்கள் கல்வி இணைபாடவிதானத்தில் பல முன்னேற்றங்களைப் பதிவு செய்துள்ளனர். அத்தோடு வேலை நாளன்றே அவர் இறந்துமுள்ளார்.

2000-2008 காலகட்டம் இடப்பெயர்வு

2000ஆம் ஆண்டு இப்பிரதேச மக்கள் அனைவரும் வலிகாமப் பிரதேசத்திற்கு இடம்பெயர்ந்து சென்றுள்ளனர். இக் காலப்பகுதியில் 13.10.2000 லிருந்து 28.04.2002 வரை வலிகாமம் யா/மயிலணி சைவ மகா வித்தியாலயத்தில் தற்காலிகமாக இயங்கியுள்ளது. மீளவும் 29.04.2002 இல் தனது சொந்த இடத்தில் செயற்பாட்டை ஆரம்பித்தது எனினும் இக் காலத்தில் மாணவர்கள் பல்வேறு இடங்களிலும் சிதறிக் காணப்பட்டதாலும் அவர்களது அடிப்படைத் தேவையை பூர்த்தியடையாத நிலை இருந்ததனாலும் கல்விச் செயற்பாட்டில் அதீத அக்கறை காட்டவில்லை என்றே கூறவேண்டும். 29.04.2002 இலிருந்து தனது சொந்த இடத்தில் செயற்பாட்டைத் தொடங்கியது.

இடப்பெயர்வு என்பது பாடசாலையின் அமைவிடத்தில் மட்டுமல்ல மாணவர் உள்ளத்திலும் ஏன் பெற்றோர் உள்ளத்திலும் கூட ஒரு மாற்றத்தை ஏற்படுத்தத்தான் செய்யும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நிலையிலிருந்து உடனடியாக மாறுபட்டு மீளவும் பாடசாலையை ஆரம்பித்தாலும் கூட மாணவர் மனதில் மாற்றத்தை ஏற்படுத்துவது கடினம். பாடசாலையின் கல்விச் செயற்பாட்டில் படிப்படியாகவே உயர்வை ஏற்படுத்தி செல்லலாம் என்பது வெளிப்படையான உண்மை. இந்நிலையில் கல்விச் செயற்பாடு 2008 வரை க.பொ.த சாதாரணதரம் வரை இடம்பெற்று வந்துள்ளது. இக்கால கட்டத்தில் திரு.வி.தெய்வேந்திரமூர்த்தி அவர்கள் அதிபராக கடமையாற்றி வந்துள்ளார். இவரும் சேவைக்காலத்தில் இயற்கையை எய்தியுள்ளார்.

2009 -இன்று வரையான காலகட்டம்

29.01.2009 இல் அதிபராக திரு.த.அம்பலவாணர் கடமையேற்றார். இவர் 09.07.2009 இல் இடமாற்றம் பெற்று செல்ல 10.07.2009 இல் திரு.ஆ.தங்கவேலு அவர்கள் இப் பாடசாலையின் பதில் அதிபராக தமது கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டார். இவ்வாண்டு (2009) நடைபெற்ற தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சையில் 5 மாணவர்கள் சித்தியடைந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இக் காலப்பகுதியில் பாடசாலையின் பௌதீக வளங்களை விருத்தி செய்ய வேண்டிய தேவை உணரப்பட்டமையினால் 2010 ஆம் ஆண்டு பங்குனியில் பாடசாலையின் அருகிலுள்ள ஒரு பரப்புக் காணி அமரர் திருமதி தனலட்சுமி கதிரவேலு அவர்களால் பாடசாலைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.இதனைத் தொடர்ந்து பாடசாலை படிப்படியாக பல்வேறு செயற்பாடுகள் மூலம் மெருகூட்டப்பட்டு கவின் நிலையுடையதாக மாற்றம் பெறத் தொடங்கியது.

15.06.2010 ஆம் ஆண்டு புதிய அதிபராக இவ்வூரைச் சேர்ந்த நா.அருட்சோதி அவர்கள் தனது கடமையை இப்பாடசாலையில் பொறுப்பேற்றார். இவருடைய காலப்பகுதியில் பெற்றோரின் உதவியுடன் பாடசாலை நுழைவாயில், முகப்பு வளைவு என்பவற்றை ஒய்வு பெற்ற ஆசிரியர் அமரர் கனகசபை ஞாபகார்த்தமாக அவரின் பிள்ளைகள் அமைத்துத் தந்தனர். இக் காலத்தில் பெற்றோரைப் பாடசாலையுடன் இணைப்பதில் முனைப்புக்காட்டிய பெருமை அதிபர் அவர்களையே சாரும்.

2010.11.30 இல் திரு.நா.அருட்சோதி அவர்கள் ஓய்வு பெற்றுச் செல்ல மீண்டும் திரு.ஆ.தங்கவேலு அவர்கள் பதில் அதிபராக கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். ஓய்வு பெற்ற அதிபரின் சேவை நயப்பு விழாவும் பாடசாலை சமூகத்தால் சிறப்பாக செய்யப்பட்டது. 2011 ஆம் ஆண்டில் பாடசாலைக்கான சமையல் கூடமொன்று அமைக்கப்பட்டது. இக்காலப்பகுதியிலேயே திரு.வே.சுபாஸ்கரன் அவர்களின் உதவியோடு ஆசிரியர் மாணவர்களிற்கான துவிச்சக்கர வண்டித் தரிப்பிடம் அமைக்கப்பட்டது.மாணவர்களின் கணனி அறிவை மேம்படுத்துவதற்காக புதிதாக 5 கணினிகள் அரசினால் எமக்கு வழங்கப்பட்டது. கணனிச் செயற்பாடுகளை ஒழுங்கமைப்பதற்காக பாதுகாப்பான கணினி அறையொன்று அமைக்கப்பட்டது. அத்துடன் மண்டபத்தின் ஒரு பகுதியில் 20'X20' அளவுள்ள அறையொன்று செப்பனிடப்பட்டு நூலக வசதி வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டது.

இச் செயற்பாடுகளை இப் பாடசாலையின் புகழ்பூத்த ஆசிரியராக விளங்கிய அமரர் செல்லையா வாத்தியார் அவர்களின் ஞாபகர்த்தமாக அவரது மகன் Dr.செ.செல்வநாயகராஜா அவர்களின் நிதிப்பங்களிப்புடன் செல்லையா வாத்தியாரின் மருமகன் திரு.க.விக்கினேஸ்வரன் அமைத்துத் தந்தார். நூலகத்திற்கான ஒரு தொகுதி தளபாடங்களும் இவர்களால் அன்பளிப்புச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்டது. சிறப்பாக மாணவர்களுக்குப் பயனுறுதி மிக்கதாகச் செயற்படும் இந் நூலகம் நூலக பொறுப்பாசிரியராக இருந்த திருமதி.சி.நாகலிங்கம் அவர்களின் அயராத உழைப்பினால் வலயமட்ட சிறந்த நூலகத்திற்கான போட்டியில் 2014,2015 இல் 3ஆம் இடத்தையும் 2016 இல் 2 ஆம் இடத்தையும் பெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

2011 ஐப்பசி மாதத்தில் (24.10.2011) முதன் முதலாக இப் பாடசாலையின் பரிசளிப்பு விழா நடத்தப்பட்டது. பெற்றோர்,பழைய மாணவர்,நலன் விரும்பிகள்,ஆசிரியர் ஆகியோரின் துணையோடு தொடர்ந்து வரும் ஒவ்வொரு ஆண்டிலும் பரிசளிப்பு விழா நடாத்தப்படுவது கண்கூடு. ஒவ்வொரு ஆண்டும் பரிசில் நாளுக்கான பரிசுப் பொருட்கள் அனைத்தையும் வழங்க திரு.திருமதி சுபாஸ்கரன் அனுசியா (பழைய மாணவர்கள்) தம்பதியினர் அனுசரணை வழங்குகின்றனர்.

2012 ஜனவரி 26 முதல் அதிபர் திரு.ஆ.தங்கவேலு அவர்களின் முன்னோக்கிய செயற்பாட்டிற்கு வலுச் சேர்க்கும் வகையில் நிரந்தர அதிபராக கடமையைப் பொறுப்பேற்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. 2012 நவம்பர் 04 ஆம் திகதி பாடசாலையில் அதிபர் தலைமையில் பழைய மாணவர்களிற்கான கூட்டம் ஒன்று நடாத்தப்பட்டது. அதில் எல்லோரும் ஒன்றிணைத்து பாடசாலைக்கான மைதானக்காணி ஒன்றை வாங்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. மிகத்துரிதமாக செயற்பட்ட பழைய மாணவர் சங்க செயற்குழு தாயகம் மற்றும் புலம் பெயர் தேசங்களில் வாழும் பழைய மாணவர்களை ஒன்றிணைத்தும் பாடசாலைக்கான மைதானத்துக்கு 6¾ பரப்புக் காணியினை 20,00 000/= செலவில் கொள்வனவு செய்து 13.03.2013 அன்று பாடசாலைக்குக் கையளித்தது. தற்காலிகமான இணக்கத்தினடிப்படையில் அருகிலுள்ள மேலும் 4 பரப்புக் காணி துப்பரவு செய்யப்பட்டது.

16.03.2013 அன்று இல்ல விளையாட்டுப் போட்டியின் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அன்றைய பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு.ஆ.சிறிஸ்கந்தமூர்த்தி மற்றும் பழைய மாணவர் சங்க பிரதி நிதிகள் இணைந்து மைதானமானது உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

முதன் முதலாக சொந்த மைதானத்தில் சிறப்பான ஒரு இல்ல விளையாட்டுப் போட்டி நடைபெற்றது. அவ்வாண்டு மே மாதத்தில் லண்டன் பழைய மாணவர் சங்கத்தின் ஒரு தொகை நிதிப் பங்களிப்புடன் மீதி 3 பரப்புக் காணி கொள்வனவு செய்யப்பட்டு பாடசாலைக்குச் சொந்தமாக்கப்பட்டது.

அவ்வாண்டில் மேலும் ஒரு துவிச்சக்கரவண்டித் தரிப்பிடம் திரு.வே.சுபாஸ்கரன் அவர்களால் அமைத்துத் தரப்பட்டது. 2013 பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் மூலம் கிடைத்த 200,000/= நிதியுடன் பழைய மாணவர் சங்க நிதியும சேர்த்து மைதான முன்பக்கம் 90 அடி நீளத்திற்கு மதில் அமைக்கப்பட்டது.

இவ்வாண்டில் திரு.திருமதி.சாந்தகுமார் தீபா அவர்களின் உதவியோடு பாடசாலை மைதானத்தில் குழாய்க்கிணறு அமைத்து நீர்க்குழாய்கள் பொருத்தப்பட்டு நீர்த் தாங்கி செப்பனிடப்பட்டு நீர் வழங்கலில் சீரான தன்மை பேணப்படுகின்றது.

2013 ஆம் ஆண்டு 3ஆம் தவணையில் மாணவர்களின் அடைவு மட்டத்தை விருத்தி செய்ய வேண்டும் என்ற நோக்கில்பாடசாலையின் பழைய மாணவர் திரு.மு.அகிலகுமாரன் அவர்களினால் Home Work Clup எனும் அமைப்பு பாடசாலையில் ஸ்தாபிக்கப்பட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களுக்கு மேலதிக கல்வி வழங்கப்படுகிறது. இதற்குரிய நிதி திரு.மு.அகிலகுமாரன் அவர்களால் வழங்கப்படுகிறது. இவ்வமைப்பு தொடர்ந்தும் செயற்படுகிறது. இதன் மூலம் எமது பாடசாலையின் பரீட்சை பெறுபேறுகளில் வரவேற்கத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றது.

2014 ஆம் ஆண்டு தரம் 5 ஆசிரியை திருமதி சியாமளா குகதாஸ் அவர்கள் பிரதீபா பிரபா விருதைப் பெற்றுக் கொண்டமை பாடசாலை வரலாற்றின் மைற்கல்லாகும். இக் கால கட்டத்தில் இலங்கையின் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணை வழங்கும் நிதி நிறுவனமாகிய உலக வங்கிக் குழு எமது பாடசாலையை மதிப்பீடு செய்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் பாடசாலை மட்டத்தில் மாணவர்களின் ஆக்கங்களை வெளிக்கொணரும் ஆக்கப் பொருட் கண்காட்சி ஒன்று நடத்தப்பட்டது. இது மாணவர்களுக்கு பயனுறுதி மிக்கதாக அமைந்தது. 2015இல் பாடசாலையில் விஞ்ஞான பாடத்திற்குரிய செயன்முறைப் பயிற்சிகளிற்கான தனியான இடம் பழைய மாணவர்கள் உதவியோடு அமைக்கப்பட்டு விஞ்ஞான பாடம் தனியான வகுப்பறையில் செயன்முறையோடு இணைந்த வகையில் கற்பிக்கப்படுகிறது.

2016 ஆம் ஆண்டு எமது பாடசாலை அதிபர் திரு. ஆறுமுகம் தங்கவேலு அவர்கள் சிறந்த அதிபருக்கான பிரதீபா பிரபா விருதைப் பெற்றுள்ளார். கல்வியுலகில் இவரது பணி போற்றுதற்குரியது. அதிபர் அவர்களின் அயராத முயற்சியும் தளராத நெஞ்சுறுதியுமே இப் பாடசாலையின் வளர்ச்சி என்றால் மிகையாகாது . 2016ஆம் ஆண்டில் முதலாம் தவணை இறுதியில் புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட மைதானக் காணியில் காலம் சென்ற செல்லையா வாத்தியாரின் மகள் செல்வநாயக தேவியின் ஞாபகார்த்தமாக அரங்கம் ஒன்று அமைத்துத் தருவதற்கு அவரின் பிள்ளைகள் மருமக்கள் முன் வந்தார்கள். ஆவ் வேளை காணி பற்றாக்குறை காரணமாக மைதானத்தின் மேற்குப் புறத்தில் ¾ பரப்புக் காணி பழைய மாணவர் சங்க நிதியில் 211 000/= வுக்கு நிதியில் (மைதானத்திற்கான காணிக் கொள்வனவில் இது 3 ஆவது கட்டம்) கொள்வனவு செய்யப்பட்டு அமரர் செல்வநாயகதேவியின் கணவர் திரு.கதிரேசு விக்னேஸ்வரன் அவர்களினால் அரங்கத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. மிகத்துரித கதியில் 10 000 000. /= செலவில் அமைக்கப்பட்ட இவ்வரங்கை 01.10.2016 அன்று பரிசில் நாள் முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.சு.கிருஸ்ணகுமார் அவர்களும் திரு.க.விக்னேஸ்வரன் அவர்களும் இணைந்து திறந்து வைத்தனர்.

இவ்வாண்டில் 2 ஆம் தவணையில் மாணவர் பாராளுமன்றத்திற்கான தேர்தல்கள் நடாத்தப்பெற்று உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். இம் மாணவர் பாராளுமன்றத்தின் முதல் அமர்வு கடந்த மார்கழி மாதம் வெகு சிறப்பாக நடைபெற்றது .எமது பாடசாலையின் மாணவர் பாராளுமன்றம் ஒன்று செயற்பட்டு வருகின்றது.

எமது பாடசாலை மாணவர்கள் பருகக் கூடிய நல்ல குடிநீரை பெறுவதில் பல சிரமங்களை எதிர்கொண்டு வந்துள்ளது. பாடசாலை கிணற்று நீர் குடிப்பதற்கு உகந்ததாக இல்லாத நிலையில் மிக நீண்ட காலமாக குடிநீரை 2 KM தூரம் சென்று கலன்களில் எடுத்து வந்து மாணவர்களிற்கு வழங்கி வந்தோம்.

இதனைக் கருத்திற் கொண்ட எமது பாடசாலையின் மாணவ பாராளுமன்றத்தின் பௌதீக வள அபிவிருத்தி மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு தனது செயற்திட்டத்தின் கீழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பாடசாலைக் கிணற்று நீரை நன்னீராக மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டது. 2017 ஜனவரி மாதத்தில் பாடசாலை மாணவர்களிற்கான சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டத்தை பழைய மாணவன் திரு.கு.கங்கேஸ்வரன் அவர்கள் தமது தாயாரின் ஞாபகார்த்தமாக 100 000/= செலவில் நீரைச் சுத்திகரிக்கும் உபகரணத் தொகுதி ஒன்றை கொள்வனவு செய்து பொருத்தித்தந்துள்ளார். இத் திட்டத்தின் வாயிலாக மாணவர்கள், ஆசிரியர்கள் சுத்தமான குடிநீரை பருகுவதற்கு வழியேற்படுத்தப்பட்டுள்ளது.

கணித,விஞ்ஞான பாடங்களின் மின்னியல் கற்கை முறையை பயன்படுத்தி கற்றல் கற்பித்தலை வலுவூட்டும் செயற்பாடுகள் எமது பாடசாலையில் மேற்கொள்ளப்பட்டு வந்தது. இருந்த போதிலும் ஒரு கணினி அறை மாத்திரமே பயன்படுத்தக் கூடிய நிலை காணப்பட்டமையினால் வினைத்திறன் மிக்க கற்பித்தலை மேற்கொள்வதில சில இடர்பாடுகள் காணப்பட்டது. இதனைக் கருத்திற் கொண்டு பழைய மாணவர்களிடம் நாம் மடிக்கணினிகள் பெற்றுக் கொள்வது தொடர்பாக கலந்துரையாடினோம். இதன் பயனாக 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் பழைய மாணவர் திரு. கே.விதர்ராஜ் அவர்களினால் 03 மடிக்கணனிகள் அன்பளிப்பு செய்யப்பட்டன. இவை வகுப்பறையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளிற்காக பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாண்டு இடம்பெற்ற கணித உபகரணப் போட்டியில் அ.அபினா (தரம் 8)வலயமட்டத்தில் 1ம் இடத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

எமது பாடசாலையில் பிரிக்கப்படாத நெருக்கமான வகுப்பறைகள் காணப்படுவதும் வெப்பநிலை அதிகரிக்கும் காலங்களில் மாணவர்கள், ஆசிரியர்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்குவதும் வகுப்பறை கவின் நிலையில் தாக்கம் செலுத்துவதும் உணரப்பட்டது. எனவே சிறந்த வகுப்பறைச் சூழலை உருவாக்கும் நோக்கில் முதற் கட்டமாக 2017 இல் ஏப்பிரல் மாதத்தில் அனைத்து வகுப்புக்கறிற்கும் மின்விசிறிகள் பொருத்தப்பட்டு பயன்படுத்தப் படுகின்றது. இதற்கான செலவின் ஒரு பகுதியை எமது பாடசாலையின் முன்னாள் ஆசிரியர் திரு.க.க.ஆனந்தமணி அவர்களும் எமது மாணவர்களின் பெற்றோர் இருவரும் ஏற்றுக் கொண்டுள்ளனர். மிகுதி செலவை எமது பாடசாலை அபிவிருத்திச் சங்கம் பொறுப்பேற்றுக் கொண்டது.

படிப்படியாக பாடசாலையில் மாற்றங்களை ஏற்படுத்தி எதிர் காலத்தில் வினைத்திறனான கற்றல் கற்பித்தல் செயற்பாட்டின் மூலம் மாணவர் அடைவு மட்டத்தை மேலும் உயர்த்தி கல்வியிலும், விளையாட்டிலும், பல்துறைக் கலைகளிலும் சிறந்து விளங்கும் ஒரு பாடசாலையாக மிளிரச் செய்வதே இப் பாடசாலை சமூகத்தின் அவாவும், இலக்குமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இசையின் வரலாறும் மகத்துவமும்

சங்கீத வித்துவான்
பொன்சிறி வாமதேவன்

இசை ஒரு சர்வதேச மொழியாகும். எனினும் இசை எழுத்துக்களின்றி ஒலிகள் மூலமாக உணர்வுகளை ஏற்படுத்தக்கூடிய ஒரு மொழியாகும். ஒரு மனிதனுக்கு ஏற்படக்கூடிய 9 விதமான உணர்ச்சிகளை இசைமூலமாக உருவாக்கி அவ்வுணர்ச்சிகளை தூண்டமுடியும். இசையை நாம் கேட்கும் போது அவை எம் செவித்துவாரங்கள் மூலமாக மூளையைச் சென்று மூளையில் இருந்து நரம்பு மண்டலங்களை பாதிக்கின்றன. அவ்வாறு நரம்பு மண்டலங்கள் பாதிக்கப்படும் போது நரம்புகள் புத்துணர்ச்சி பெறுவதோடு அதன் காரணமாக சீரான இயக்கங்கள் ஏற்படுகின்றன.

ஆரம்பகால மனிதன் தன் உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கு கத்தியும் கைகளைத் தட்டியும் வெளிப்படுத்தினான். இதனுடைய பரிணாம வளர்ச்சி பாடலாகவும் தாளமாகவும் உருவாகியதென்பது வரலாறு. ஆரம்ப காலத்திலே மொழி வளம் ஏற்பட்டதன் பின்னர் மனிதன் தனது வேலை பழுக்களை மறப்பதற்காக வேலை செய்யும் நேரத்தில் பாட்டுக்களைப் பாடி வேலைப் செய்திருக் கின்றான். இது கிராமியப் பாடல் எனவும் நாட்டுப்பாடல்கள் எனவும் அழைக்கப்படும். எழுதா இலக்கியமான இந்த நாட்டுப் பாடல்கள் செவி வழி மூலமாக பரவி நிலைத்திருந்தன. ஏற்றப்பாடல், உழவுப்பாடல் நாற்றுப் பாடல், அரிவி வெட்டுப் பாடல், ஓடப் பாடல், மீனவப் பாடல், நலுங்குப் பாடல்,விளையாட்டுப்பாடல், ஒப்பாரிப்பாடல், ஊஞ்சற் பாடல் போன்ற இன்னோரன்ன பலவகையான பாடல்களை நாம் காணக் கூடியதாக இருக்கிறது. இவ் நாட்டுப் பாடல்கள் யாவும் இலகுவான வர்ண மெட்டுக்களையும் இலகுவான தாள நடை களையும் சாதாரணமாக மனிதன் மத்தியில் பழக்கத்தில் உள்ள சொற் பிரயோகங்களில் உருவாக்கப்பட்டவையாகும். இதன் பின்னர் சமயகுரவரது தேவாரகாலத்திலே தேவாரங்கள் இசையுடன் பாடப்பட்டன. அவை தமிழிசை அல்லது பண்ணிசை என அழைக்கப்பட்டன. இவற்றில் 101 பண்கள் இருந்ததாகவும் பின்னர் 24, 21 பண்கள் இருப்பதாகவும் கூறப்படுகிறது. எது எவ்வாறாயினும் இப் பண்கள் கர்நாடக இசையை ஆதாரமாக கொண்டவையாக உள்ளன. நால்வகை வேதங்களாகயிருக்கு, யசூர், சாமம், அதர்வனம் என்பவற்றில் சாமவேதம் இசை ரூபமாக பாடப்பட்டு வந்தது. சாமவேதம் பாடுவதற்கு ஸட்ஜம், ரிஷபம், நிஷாதமாகிய மூன்று ஸ்வரங்களை கையாண்டதாக வரலாறு கூறுகிறது. அவற்றினுடைய பரிணாம வளர்ச்சியின் காரணமாக ஸரிகமபதநிஎன்ற ஏழு ஸ்வரங்கள் ஏற்பட்டு அது கர்நாடக சங்கிதமாக மாற்றம் பெற்றது. இது கர்நாடக சங்கீதத்தில் 72 தாய் ராகங்களும் லட்சக் கணக்கான ஜன்ய ராகங்களும் இன்று காணப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசை என்பது மனிதனை அல்லது உயிரினங்களை தன்வசம் இசைய வைக்க கூடியதாகும். இதற்கு சிரவண கலை எனவும், சங்கீதம் எனவும், காந்தர்வ வேதம் எனவும் வேறு பெயர்கள் உள்ளன. இசை 2 வகைப்படும்.

1) வாய்ப்பாட்டிசை
2) வாத்திய இசை

வாய்ப்பாட்டிசையின் போது இவ்இசை வழங்கும் கருத்துக்களையும் செவிமடுத்து ரசிக்கக்கூடிய சந்தர்ப்பம் கிடைக்கிறது.வாத்திய இசை எனும் போது கருத்துக்கள் இல்லாத வெறுமனே சுத்த சங்கீதத்தை நாம் ரசிக்கக் கூடியதாக உள்ளது. சங்கிதம் 2 வகைப்படும்.

1) அப்பியாச கானம்
2) சபா கானம்

அப்பியாச கானம் எனும் போது நாம் இசை பயில்வதற்கு ஆதாரமாய் முதலில் கற்றுக் கொள்ளும் பாடங்கள் அதாவது ஸ்வரவரிசைகள், ஜண்டை வரிசைகள், மேல் ஸ்தாயி வரிசைகள், தாட்டு வரிசைகள், தக்கு வரிசைகள், அலங்காரங்கள், கீதங்கள் போன்ற யாவும் அப்பியாச கானத்தைச் சேர்ந்தவை. மேலும் ஜதீஸ்வரம், ஸ்வர ஜதியும் இதில் உள்ளடங்கும் வர்ணம் அப்பியாசகானம், சபாகானம் இரண்டிற்கும் பொதுவானது. சபாகானம் என்பது சபையிலே பாடக்கூடிய சங்கீதமாகும். வர்ணம், பதவர்ணம், கீர்த்தனை, கிருதி, ராகமாலிகை இராகம், தானம் பல்லவி, ஜாவளி, பதம், தில்லானா, தேவாரம், திருப்புகழ், விருத்தம், பஞ்சபுராணம் என்பன இதில் அடங்கும்.

மேலும் சபாகானம் இருவகைப்படும். கல்பித சங்கீதம், மனோதர்ம சங்கீதம் என வகைப்படும். இந்த இரண்டு சங்கீதங்களும் சேர்ந்ததே சபாகானமாகும். ஒரு கலைஞன் அதாவது ஒரு சங்கீத வித்வான் தனது திறமைகளை மனோதர்மம் மூலமே காட்டுவான். அவனது திறமையைக் கணிப்பதும் அவனது மனோதர்மத்தின் அளவைக் கொண்டே ஆகும். உருப்படிகள் மட்டும் பாடுபவர் ஒரு சிறந்த கலைஞனாக முடியாது. அவர் மேடையிலோ, வானொலி தொலைக்காட்சியிலோ தனது இறுவட்டுக் களிலோ தனது மனோதர்மத்தை எவ்வளவு திறமையாகவும் அழகாகவும் கவர்ச்சி கரமாகவும் செய்கிறாரோ அவரது புகழ் மேலோங்கும். மனோதர்ம சங்கிதத்திலே இராக ஆலாபனை ஒரு கீர்த்தனையின் நிரவல் பகுதி கற்பனா ஸ்வரம் போன்ற மூன்றும் பிரதானமானவையாகும். இவை யாவற்றையும் வளர்த்துக் கொள்வதற்கு இளமையில் இருந்தே இசையைப் பயின்று நன்கு சாதகம் செய்து நல்ல ஒரு குரு நாதரிடம் இசையை தொடர்ந்து பயில்வதோடு நிறைய கச்சேரிகளை தொடர்ந்து செவி மெடுப்பதன் மூலமும் இந்த நிலையை ஒரு கலைஞன் அடையமுடியும். சாதார ணமான மக்களுக்கு கர்நாடக சங்கீதத்தை முழுமை யாக ரசிக்கும் ஆற்றல் பெரிதாக இருக்கும் என்பதற்கில்லை எனவே ஓரளவு சிறிது சங்கீதத்தை பயின்று கொண்டால் மாத்திரமே அதை முழுமையாக ரசிக்கும் ஆற்றல் அவருக்கு ஏற்படும்.அது மாத்திரமன்றி கர்நாடக சங்கீதத்தில் ஈடுபாடு கொண்ட வருக்கே அதை ரசிக்கும் ஆற்றல் ஏற்படும். எது எவ்வாறெனினும் பொதுவாக இசை என்பது மனிதனை ஆற்றுப்படுத்தக் கூடிய எளிமையான சாதகமாகும். இன்றைய நவீன உலகிலே மனிதன் ஆசுவாசமாக ஆறி இருப்பதற்கு நேரமின்றி தமது பணிகளையும் வேலைகளையும் மிக மிக அவசரமாக செய்ய வேண்டிய சூழ் நிலையில் இருக்கின்றான். அவ்வாறு தன் பணிகளையும் வேலைகளையும் மிக மிக அவசரமாக செய்யும் காரணத்தினால் எவ்வித பதற்றத் திற்குள் ஆளாகும் சூழ்நிலையில் உள்ளான். இப் பதற்றம் தணிவதற்கு அவனுக்கு இந்த இசை பெரிதும் வாய்ப்பளிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய கால கடகங்களில் பொதுவாக காரியாலங்களிலே வங்கிகளிலே மிக சிறிய அளவு ஒலியுடன் இசை ஒலி பரப்பப் படுவதை நாம் காணக் கூடியதாக உள்ளது. உண்மையில் அங்கு பணிபுரிபவரது மனங்கள அல்லது அவர்களுடைய சிந்தனைகள் ஆற்றுப்படுவதற்கு இந்த இசை பெரிதும் வலிகோருகின்றது.

ஒரு மனிதனுடைய பிறப்பிலிருந்து இறக்கும் வரை அவனோடு இசை கலந்தி ருப்பது காணக்கூடியதாக இருக்கின்றது. உதாரணமாக முதலாவதாக தாலாட்டை எடுத்துக்கொள்ளலாம். ஒரு தாலாட்டை தாய் பாடும்போது குழந்தை அமைதியாக உறங்க முற்படுவதை உணரலாம். மது மாத்திரமின்றி விஞ்ஞானத்தின் மூலமாக கருப்பையிலேயே இசையை குழந்தை உணர்கின்றது என்பதை கூறியிருக்கின்றார்கள்.

ஆதனால் பிறந்தவுடனேயே அந்த இசை மூலமாக நிம்மதியாக குழந்தை உறங்க முற்படுகின்றது.அதே போன்று பாலகர் வகுப் புக்களிலே இசை மூலமாக சகலவிதமான பாடங்களின் எண்ணக கருக்களையும் இசை மூலமாக ஊட்ட முடிகின்றது. அதே போன்று ஆரம்ப பிரிவு மாணவருக்கு இசை மூலமாக மிக இலகுவாக கணிதம் விஞ்ஞானம் சமயம் போன்ற பாடங்களின் எண்ணக் கருக்களை ஊட்டமுடியும் அதே போன்று ஆரம்பப் பிரிவு மாணவருக்கும் இசை மூலமாக மிக இலகுவாக கணிதம், விஞ்ஞானம், சமயம் போன்ற பாடங்களின் எண்ணக் கருக்களை ஊட்ட முடியும்.

பக்தியில் இசை

அடுத்ததாக இறைவணக்கத்தை எடுத்துக் கொண்டால் எந்தச் சமயமாக இருந்தாலும் அந்த சமயத்திலே இறை வணக்கத்திற்கு ஊடகமாக இசையை கையாள்கிறார்கள். சைவ சமயத்திலே இறைவன் இசை வடிவமானவன் என்றும் இறைவன் இசையை மிகவும் விரும்பி ரசிக்கக் கூடியவன் என்றும் கூறப்படுகிறது. கயிலை மலையை இறைவன் அமர்த்தும் பொழுது இராவணன் அதிலிருந்து தப்புவதற்கு இறைவனை மகிழ்விக்க இசையை கையாண்டான். தனது நரம்புகளை எடுத்து வீணையாக மீட்டி இறைவனை மகிழ்வித்து அந்த கண்டத்திலிருந்து தப்பினான் என சரித்திரம் கூறுகிறது.

வைபவங்களில் இசை

அடுத்து பூப்புனித நீராட்டு விழா, புதுமனைப் புகுவிழா, திருமணி விழா போன்றவற்றில் இசையை ஒரு அங்கமாக நாம் கைக்கொள்கிறோம்.அது நாதஸ்வரத்தின் மூலமாகவோ, இறுவட்டுக்கள் மூலமாகவோ அந்தத்தேவைகளை நாம் நிறைவேற்றுகிறோம். ஆனால் உண்மையிலேயே அந்த நிகழ்வு களின் போது எம்மவர் அந்த இசையை கையாளும் முறை மிகத் தவறாக இருப்பதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது. 2 வகையில் தவறு ஏற்படுகிறது. ஒன்று நிகழ்விற்கு ஏற்ற பாடல்களைத் தெரிவு செய்யாமை, அந்த நிகழ்வில் உள்ள மக்களுக்குப்பொருத்தமான பாடல்கள் இல்லை. ஒலியின் அளவும் மிகவும் உச்சத்தில் வைத்தும் ஒலிபரப்பல் போன்ற தவறுகளை செய்கிறார்கள். அந்த நிகழ்விற்கேற்ற பாடல்களை தெரிவு செய்து விரசமில்லாத, பலரும் கேட்கக்கூடிய பாடல்களை தெரிவு செய்து மிக மென்மையான ஒலி அமைப்பில் ஒலி பரப்புவதன் உடாக அந்த நிகழ்வின் மகிழ்ச்சியை நாம் அந்த இசைமூலம் அனுபவிக்க முடியும்.

பயணங்களில் இசை

தூரப்பயணங்கள் செல்லும்போதெல்லாம் அந்தப் பயணத்தில் பங்கு பற்றும் பயணிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்சாகமாகவும் சோர்வின்றி, களைப்பின்றி இருப்பதற்கு இந்த இசையைகையாள்கின்றனர். இங்கும் எம்மவர் மிக அதிக ஒலியுடன் அந்த இசையை ஒலிபரப்புவதினால் பயணி களின் மிகழ்ச்சிக்குப் பதிலாக அவர்களுக்கு தலைவலியும் வெறுப்பும் ஏற்படக்கூடிய வகையில் அந்த ஒலிபரப்பு அமைகிறது. உண்மையில் மிக மென்மையான குறைந்தளவு ஒலியில் ஒலிபரப்பும் போது அங்கு உள்ள பயணிகள் மகிழ்ச்சியதக அதை ரசிக்க மடியும் என்பதில் ஐயமில்லை.

ஆலயங்களில் இசை

முன்பு நாங்கள் கூறியது போல இறைவன் இசைவடிவானவன் என்பதற் கிணங்க ஆலயங்களிலே இசை முக்கிய பங்கைப் பெறுகின்றது. அங்கேயும் பஞ்ச புராணங்கள், பக்தி பாடல்களை ஒலி பரப்புவதன் மூலமாக அங்கிருக்கும் பக்தர்க ளின் மனங்கள் சாந்தமடையவும் இறை வனைப் பற்றி சிந்திப்பதற்கும் சந்தர்ப்பங்கள் இசை மூலமாக வழங்கப்படுகிறது. மேலும் வயோதிப காலங்களில் புராணபடலம் போன்ற நூல்களை இசை மூலம் பாடி அதன் மூலமாக நிம்மதியையும் மகிழ்ச்சியையும் பெறக்கூடியதாக இருக்கிறது.

விளம்பரங்களில் இசை

ஒரு பொருளை நாம் உற்பத்தி செய்து அவற்றை விளம்பரம் செய்யும்போது இசை மூலமாக விளம்பரம் காட்சி 5லமாகவம் விளம்பரம் என இரண்டு வகைப்படுத்தலாம். காட்சி மூலமாகவும் இசை மூலமாகவும் விளம்பரம் செய்"தல் தொலைக்காட்சிகளிலும் இசை மூலமாக விளம்பரம் செய்தல் வானொலியிலும் இடம் பெறுவதை நாம் காணலாம். இசை மூலமாக விளம்பரம் செய்யும்போது அது மக்களுடைய மனதிலே பொருட்களின் பெயர்கள், பொருட்களின் தன்மை பதிந்து விடுகிறது. பொருட்களின் விற்பனைக்கு இசை ஒரு அனுகூலமாக இருக்கின்றது.

இறப்பில் இசை

இறுதியாக ஒருவர் மரணப்படுக்கையில் இருக்கும் போது ஆன்மா பிரியப் போகின்றது எனும் சந்தர்ப்பத்தில் பஞ்ச பராணங்கள், சிவபுராணம், கிறிஸ்தவ கீதங்கள் அவரவர் சமயப் பாடல்களை பாடுவதன் மூலம் அவருடைய ஆன்மா நிம்மதியாகவும் அமைதியாகவும் பிரிய இசை உறுதுணையாக இருக்கின்றது. இது மாத்திரமன்றி மரணக் கிரியைகளில் ஒப்பா ரியாக இந்த இசை கையாளப்படுகிறது.

மனிதனின் ஆரம்பம் தொடக்கம் மனிதனது இறுதிக்காலம் வரை மனிதனோடு பின்னிப்பிணைந்திருக்கும் இசையை நாம் நிச்சயமாக கற்க வேண்டியது அல்லது நாம் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும்.

உண்மையிலேயே நுண்கலைகள் எனப்படும் நடனம், சங்கீதம், நாடகம், சித்திரம், சிற்பம் போன்றவற்றில் இசை யானது மிகவும் இலகுவானதும் செலவு குறைந்ததுமான நுண்கலையாகும். ஏனைய வற்றை நாம் கையாளும் போது அவற்றிற்கு செலவுகள் ஏற்படும் சந்தர்ப்பத்தை நாம் காணக்கூடியதாக உள்ளது. சித்திரம், நடனம், சிற்பம் பல பொருட்கள் பெற்றுக் கொள்ள வேண்டிய தேவை உள்ளது. இசையைப் பொறுத்த மட்டில் அவ்வாறில்லை. பாடகருக்கு ஒரு தம்புரா மட்டும் போதுமானது. பாடகர் அவர் ஜீவியகாலம் முழுக்க பாடிக் கொண்டே போகலாம். அது தவிர வேறொரு செலவும் அவர் பாடுவதற்காக ஏற்படப் போவதில்லை. அவர் எங்கு செல்லும் போதும் சரி பாடலாம். உந்துருளியில் பயணம் செய்யும் போது பயணங்களில் தமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடமைகளை செய்யும் போது அவர் பாடிக் கொண்டே இருக்கலாம். இவ்வாறான ஒரு இலகுவான நுண்கலை இசையாகும். இவ்வாறான இசையை நாம் கற்பதன் மூலமாக எங்களுடைய மனங்கள் அமைதி ப்பட்டு சாந்தமடைந்து எங்களுக்கு எற்படும் மன அழுத்தங்களில் இருந்து விடுபட்டு மன அழுத்தங்களால் வரும் நோய்களில் இருந்து விடுதலை பெற முடியும் என்பது நிச்சயமான உண்மையாகும். ஒரு இசைக் கலைஞன் உருவாவது இறைவனுடைய வரத்தின் மூலமாகவே. ஒரு மருத்துவர் உருவாகமடியும் ஒரு பொறியியலாளர் உருவாக முடியும். ஆனால் ஒரு மருத்துவர், பொறியியலாளர், இசையாளனாக உருவாக முடியும் என்பது நிச்சயமில்லை. எனவே அந்தவகையிலே இசையாளர்களாக உருவாகா விட்டாலும் இசையை ரசிக்க கூடியவர்களாக ஒவ்வொரு வரும் தன்னை ஆக்கி கொள்ள வேண்டியது இந்த உலகத்தில் வாழுவது ஒரு பொருத்த முள்ளதாக இருக்கும்.

அந்த வகையில் தான் இன்று பாட சாலைகளிலே தரம் 6 - 11 வரை இசையை நுண்கலைகளை பாடமாக பயிற்று விக்கிறார்கள். நடனம், இசை, நாடகம், சித்திரம் இலக்கியம் என்ற 5 பாடங்கள் இவற்றில் ஏதாவதொரு கலையை பயின்று அதிலே தொடர்ந்து ஈடுபடக்கூடியவராக தன்னை வளர்த்துக்கொண்டு அந்தக்கலையை ரசிப்பவர்களாக ரசிக்கக் கூடியவர்களாக தன்னை ஆக்கிக் கொண்டு வாழ்வதன் மூலமாக இவ்வுலகில் மகிழ்ச்சியுள்ளவர்களா கவும் மன அழுத்தங்களுக்கு அப்பாற்பட்ட வராகவும் வாழ முடியும் என்பது துணிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழ் எங்கள் உயிருக்கு நேர்

திருமதி.சிவமலர் நாகலிங்கம்
ஆசிரியர்

"கல்தோன்றி மண் தோன்றாக் காலத்து
முன் தோன்றி மூத்த தமிழ்"

என்ற தமிழ் மொழியிற் காலப் பழமை போற்றுதற்குரியதாகும். இன்தமிழ், செந்தமிழ், தீந்தமிழ், பழந்தமிழ் எங்கள் தமிழ். அதன் பழமையும் இனிமையும் எளிமையும் பேணி எழுந்த இலக்கியங்கள் ஏராளம். காலத்தை விஞ்சி நிற்கும் இலக்கியங்கள் ஞாலத்தில் ஞானத்தை அள்ளிவழங்கும் பொற்கலசங்கள். தமிழ் வளர்த்த புலவர்கள், பெரியார்கள், கவிஞர்கள் ஏராளம் ஏராளம். இதனாலன்றோ இன்று சிறப்புக்கள் நிறைந்த தமிழ்மொழி ஆல விருட்சமாக விழுது விட்டு கிளைகள் பரப்பி வேரூன்றி நிற்கின்றது.

தமிழின் இனிமையை என்னென்று கூறுவது. குரலினிது, யாழினிது, தமிழ் எல்லாவற்றிலும் இனிதே. இன்பத் தமிழை அருந்தினாலன்றோ அதனினிமை தெரியும். பாரதியும், ஔவையும் இளங்கோவும் பாரதி தாசனும் என இன்பத் தமிழின் சுவை அறிந்து உணர்ந்தோர் ஏராளம், அதை நாம் அறிய வேண்டாமா?

கனியிடை ஏறிய சுளையும் - முற்றல்
கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறிய தேனும் - காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்
நனிபசு பொழியும் பாலும் - தென்னை
நல்கிய குளிரிள நீரும்
இனியன என்பேன் எனினும் - தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்

எனப் பாரதிதாசன் தமிழின் இனிமையை மிக அழகாகச் சுவையாக எடுத்துக் கூறுகின்றார். இயற்கையை இனிமையாகப் படைத்தான் இறைவன். அந்த இனிமையின் உயர் வாகவல்லவா? தமிழைப் படைத்தான். அதன் இனிமையை உணர்ந்தவர்கள் படைத்திட்ட கனிகள் எத்தனை! எத்தனை! அத்தனை கனிகளும் உண்டால்..... ஆகா நெஞ்சம் நெகிழுதையா. அதை நினைத்திடின் அருந்தத் துடிக்குதே உள்ளம்

ஐம்பொறிகளாலும் பருகிடும் தேன் அல்லவா? இன்பத் தமிழ் கண்ணாலே பார்த்து நாம் எத்தனையை அழகென்றோம். பார்க்காத அழகுதான் எத்தனை? அத்தனை அழகின் மொத்த அழகு தமிழ் தானே. காதினால் கேட்டு இனிமை இனிமை என்று நாவினிக்கக் கூறினோமே.அதுதானே எங்கள் தமிழ். மூக்கினால் மணந்திட்ட நறுமணம் அது தமிழின் உறைவிடம். நாம் சுவாசிக்கும் காற்று தமிழின் உயிர் மூச்சு. தமிழின் உணர்வை மெய்யினால் உணர்ந்திட நாம் யார்? நாவினிக்கப் பாடுகின்ற பாட்டும் பேசுகின்ற பேச்சும் இன்பத்தமிழ் அல்லவா. அத்தகைய தமிழை உணர்த்தி எத்தனை கோடி புண்ணியம் செய்திருக்க வேண்டும்.

தமிழுக்கும் அமுதென்று பேர் - அந்தத்
தமிழ் இன்பத்தமிழ் எங்கள் உயிருக்கு நேர்
தமிழுக்கு நிலவென்று பேர் - இன்பத்
தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழக்கு மணமென்று பேர் -
இன்பத்தமிழ் எங்கள் வாழ்வுக்கக நிருமித்த ஊர்
தமிழுக்கு மதுவென்று பேர் - இன்பத்
தமிழ் எங்கள் உரிமைச் செம் பயிருக்கு வேர்
தமிழ் எங்கள் இளமைக்குப் பால் - இன்பத்
தமிழ் நல்ல புகழ்மிக்க புலவர்க்கு வேல்'

என்று தமிழின் உயர்வைச், சிறப்பை, அழகாக இனிமையாக உரைத்திட்ட பாரதிதாசன் நாம் போற்றுதற்குரியவரன்றோ

'செந்தமிழ் நாடெனும் போதினிலே
இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே....."

எனப் பாடுகின்றார் பாரதி. தமிழின் இனிமை வேறெந்த மொழிக்கும் கிடையாது. செந்தமிழை இன்பத் தேனாக நுகர்ந்து பாடுமளவிற்கு இனிமை எம் தமிழுக்கு உண்டு.

உலகிலே செம்மொழி எனும் தகுதி பெற்றவை எட்டு மொழிகளாம். அதில் தமிழ்மொழியும் ஒன்று 2004ம் ஆண்டு இந்திய மத்திய அரசினால் பிறப்பிக்கப்பட்ட அனுசரணை மூலம் தமிழ் "செம்மொழி" எனும் உயர் தகுதியைப் பெற்றது. உலகு தழுவிய மிகச் சிறந்த இலக்கியங்களை தன்னகத்தே கொண்டு விளங்குவதும் செம்மொழிக்குரிய சிறப்பம்சமாகும். அவ்வகையில் சங்க இலக்கியங்கள் ,ஐம்பெருங்காப்பியங்கள், ஐஞ்சிறு காபபியங்கள், திருக்குறள் என வரிசை நீண்டு செல்வதனைக் காணக் கூடியதாக அமைந்துள்ளது. ஐம்பெருங் காப்பியங்களைப் படைத்திட்ட கவிஞர்கள் பெண்களின் அழகை மெருகூட்ட அணிந்திடும் அணிகளன்களோடு சேர்த்து யாத்திட்ட அழகை நாம் என்னவென்று கூறுவது சிலப்பதிகாரத்தில் காலில் அணிந் திடும் சிலம்பும் மணிமேகலையில் இடையில் அணிந்திடும் மேகலையும் சீவக சிந்தா மணியில் கழுத்தில் அணிந்திடும் மாலையும் வளையாபதியில் கையில் அணிந்திடும் வளையலும் குண்டலகேசியில் காதினில் அணிந்திடும் குண்டலமும் மெருகூட் டுவதனை நாம் காணக்கூடியதாக வுள்ளது. இத்தனை அழகின் உறைவிடமாகத் தமிழ் உண்டென்பதை நாம் உணர்ந்திட வேண்டும்.

'தெள்ளுற்ற தமிழமுதின் சுவை கண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்

என்று பாரதி கூறுவதனை நாமும் எண்ணிப் பார்க்க வேண்டும். தமிழ் இந்தப் பூமியின் அமிர்தம். அமிரதத்தை உண்ட வர்க்கு பிணி, மூப்பு, சாக்காடு மூன்றும் வாரா எனப் புராணங்கள் கூறுகின்றன. அத்தகைய சிறப்பு மிகுந்த "தமிழ் எங்கள் உயிருக்கு நேர்" எனக் கூறுதல் சாலப் பொருந்தும்.

தமிழ் தனித்தியங்கும் ஆற்றலுடைய தனி மொழி காலத்தால் முந்திய தனிமொழி தமிழ். உலகில் பல மொழிகளும் உருக் கொள்ளும் முன்பே செந்தமிழ் மொழியும் நாடும் உருப்பெற்றது. செந்தமிழ் மண்ணில் முதல் மாந்தன் தமிழன். தமிழ்மொழி உலக மொழிகளுக்கு வேர் போன்றது. உலக மொழிகள் பலவற்றிற்கு மூலமொழி தமிழ். மரத்தைப் போன்றது தமிழ் மொழி. கிளைகளைப் போன்றது உலக மொழிகள் என நூல்கள் உணர்த்துகின்றன. அத்தகைய தமிழின் பழமையை "தொல்காப்பியம்" எனும் இலக்கண நூல் உணர்த்தி நிற்கின்றது. மேலை உலகின் மொழியிற் பேரறிஞர்கள் எல்லாம் வியந்து போற்றும் நூல் தொல்காப் பியம். அவ்வாறாயின் அவ்விலக்கணத்தைத் தோற்றுவித்த தமிழ் இலக்கியம் எத்துணை சிறப்பு மிகுந்ததாக இருந்திருக்க வேண்டும். இத்தகைய சிறப்புக்கள் மிகுந்த தமிழின் மணம் தான் எத்தகையது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை நான்கும்
கலந்துனக்கு நான் தருவேன்.... நீ எனக்குச்

சங்கத் தமிழ் மூன்றுந் தா" என்று வேண்டுகின்றார். பிள்ளையாருக்கு வழங்கும் பண்டங்களின் சுவை எங்கே? பிள்ளையாரிடம் கேட்கும் இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் இவற்றின் சுவை, அழகு, இனிமை, எம்மாத்திரம் அத்தகய இனிய தமிழ் எங்கள் உயிருக்கு நேர்.

"தமிழ்" என்ற சொல்லை எடுத்து நோக்குவோமேயானால் அதில் வல்லினம், வெல்லினம், இடையினம் யாவும் கலந்து வழங்கப்பட்ட தமிழ் அல்லவா? அது. "த" - வல்லினம். "மி " - மெல்லினம். "ழ்" - இடையினம். தமிழ் மொழியிலே இருக்கின்ற வல்லினம், மெல்லினம், இடையினம் ஆகிய மூன்று வகை எழுத்துக்களினையும் ஒருங்கினைத்துப் பார்க்கக் கூடியதாக அமைந்துள்ளது.

உலகில் முதல் தோன்றிய இசை தமிழ் இசை. தமிழ்இசையே தாயிசை. தமிழர் தம் வாழ்வில் பிறப்பு முதல் இறப்பு வரை இசை இரண்டற கலந்து விளற்குகின்றது. இசையுடன் இரண்டறக் கலந்த மொழி தமிழ் மொழி என்றால் மிகையாகாது. இயற்கையின் இனிமையில் அழகில் இயல்பாகத் தோன்றியது தமிழ். இயல்பாகத் தோன்றிய இயன்மொழிக்குப் பதினாறு பண்புகள் இருக்க வேண்டும். அப்பதினாறும் அமைந்த மொழி தமிழ் ஒன்று மட்டுமே.

" தொன்மை இயன்மை தூய்மை தாய்மை
முன்மை வியன்மை வளமை மறைமை
எண்மை இளமை இனிமை தனிமை
ஒண்மை இறைமை அம்மை செம்மை"

எனும் பதினாறும் இன்றமிழ் இயல்பெனப் பன்னுவர்" இத்தகைய சிறப்புக்கள் மிகுந்த மொழி யாமறிந்த தமிழே.

" யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவ தெங்கும் காணோம்"

உயிரினும் மேலான தமிழின் சிறப்புக்கள் எம் மாத்திரம்! அவற்றை நாவினின்னப் பாடி தமிழிற்கும் வாழ்விற்கும் வளம் சேர்ப்போம்.

உதவியவை:-

தமிழரர் வரலாறு.
பாரதிதாசன் கவிதைகள்
பாரதியார் கவிதைகள் .
தமிழரின் வல்லமை சொல்லும் இலக்கிய வளங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிரேஸ்ட இடைநிலை வகுப்பு மாணவர்களின் கற்றலில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள்

திருமதி. கயல்விழி உதயசந்தர்
ஆசிரியர்

கல்வி என்றால் என்ன? என்பது பற்றிய பல்வேறு பார்வைகள் வரைவிலக் கணங்கள் பல்வேறுபட்ட அறிஞர்களால் முன்வைக்கப்பட்ட போதிலும் கல்வியின் விளைபயன் ஒரு பூரணமான மனிதனை உருவாக்குவதே (எஸ் . பாலசூரியா 1995) என்னும் எண்ணக்கருவினை யாவரும் ஏற்று கொண்டிருக்கிறார்கள். எனவே பாடசாலைக் கல்வியும் அது ஆரம்ப கல்வியாக இருந்தா லென்ன இடைநிலைக் கல்வியாக இருந்தா லென்ன பூரண மனிதனை உருவாக்கு வதற்கான ஏது நிலையை வழங்க வேண்டும். இதனைக் கருத்திற்கொண்டே மாணவர்களின் பாடவிதான வடிவமைப்பில் மாணவர்களின் வயது. மற்றும் விருத்தி நிலைகளைக் கருத்திற் கொண்டே பல்வேறு பாடப் பரப்புக்கள் உள்ளடக்கப்படுவதுடன் வகுப் பறைச் செயற்பாடுகளும் வகுப்பறைக்குப் புறம்பான செயற்பாடுகளும் வடிவமைக் கப்படுகின்றன.

எனினும் எமது கல்விப்புலமானது ஆழப்படுத்தப்பட்டதாகவும் அகட்சிப்படுத்த ப்பட்டதாகவும் உருமாற்றம் பெற்று வருகின்ற போதிலும் கல்வியை வெறுமனே கல்விசார் வினையாற்றல்களின் தொடுப்பாக அல்லது கற்றல் அடைவுகளின் அடிப்படையில் நோக்குவதும் மரபாகி விட்டது. பொதுப் பரீட்சைப் பெறுபேறுகள். தவணைப்புள்ளிகள் என்பனவற்றை ஒப்பிட்டு அதன் மூலம் மேற்கொள்ளப்படும் தரப்படுத்தல் நிலைகள், சித்தியடைந்தோர் சித்தியடை யாதோர் சதவீதம் போன்ற வீதங்களும் இலக்கங்களும் மட்டுமே கற்கும் மாணவர் களையும் கற்பிக்கும் ஆசிரியர்களையும் பாடசாலை களையும் மதிப்பீடு செய்கின்ற அளவு கோல்களாக அமைந்துள்ளன. இந்த வகையில் கல்வி சார் வினையாற்றல்களில் குறிப்பாக பரீட்சைப் புள்ளிகளில் தாக்கத்தை ஏற்படுத்துவனவாக பல்வேறு காரணிகள் அமைந்துள்ளன. இவற்றுள்

1. தனியார் சார்ந்த காரணிகள்
2. பாடசாலை சார்ந்த காரணிகள்
3. பெற்றோர் சார்ந்த காரணிகள்
4. சமூகம் சார்ந்த காரணிகள

முக்கியமானவையாக கொள்ளப்படலாம். இவ்வாறான பரந்து. விரிந்த பன்முகத் தன்மை கொண்ட காரணிகளின் தாக்க விசைகளுக்கு உட்பட்டு அவற்றின் கூட்டு விளைவாகவே கற்றல் அடைவுகள் பெறப் படுகின்றன.

கற்றலில் செல்வாக்குச் செலுத்தும் தனியாள் சார்ந்த காரணிகள் " ஒவ்வொரு மாணவனும் தனித்துவம் வாய்ந்தவனே "

மாணவர்களிடம் தனியாள் வேறுபாடுகள் காணப்படுவது இயல்பானதே. இந்த வகையில் மாணவர்கள் தத்தம் வயதுக்கும் விருத்தி நிலைக்கும் ஏற்ற சில பொதுவான இயல்புகளைக் கொண்டிருப்பது ஒவ்வொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவனும் தனக்கே உரித்தான விசேட பண்புகளையும், திறன்களையும் நடத்தைக் கோலங்களையும் கொண்டிருப்பர். இவை கற்றல் வினையாற்றலிலும் அடை வுகளிலும் செல்வாக்கு செலுத்தும் பிரதான காரணியாக அமைகின்றது. இவற்றை இனம்கண்டு வழிப்படுத்தி நெறிப்படுத்துவது ஒரு ஆசிரிய ரின் கட்டாயமான பெறுப்பாகின்றது.

1.1 மாணவர் இலக்குகள்

மாணவர்கள் தாம் எதனை அடைய வேண்டும் என்பதை தெளிவாக உணர்ந்து அந்த அடைவு இலக்கை நடைமுறைக்குச் சாத்தியமான வகையில் தெரிவு செய்து அதற்கேற்ப கற்றல் செயற்பாடுகளைத் திட்டமிட்டு கற்பவர்கள் பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப் பெறுகின்றனர். அத்துடன் மாணவர்களின் புத்திக் கூர்மையும் நுண்மதியின் ஈவும் கற்றல் வினையாற் றல்களிலும் அடைவு மட்டங்களிலும் ஆதிக்கம் செலுத்தும். புத்திக் கூர்மையை பரம்பரை அலகுகளும் அவன் வாழும் சூழலும் தீர்மானிக்கின்றன.

1.2 மொழி சார்ந்த சிக்கல்கள்.

தரம் 9-11 வரையிலான இடைநிலைப் பிரிவு மாணவர்களில் கணிசமான மாணவர் களிடையே மொழி சார்ந்த பிரச்சினைகள் அவதானிக்கப்பட்டுள்ளன. தமது தாய் மொழியிலும் பின்னடைவான நிலை காணப் படுவதை தமது தாய்மொழியிலும் விசேடமாக இரண்டாம் மொழியான ஆங்கிலத்திலும் பின்னடைவான நிலை காணப்படுவதை கல்விப்புல அடைவு மட்ட ஆய்வுகள் உணர்த்தி நிற்கின்றன. மாணவர்களின் ஈடுபாடான கற்றலுக்கு மொழி சார்பான தடைகளும் காரணமாய் அமைந்துள்ளன. சிலருக்கு வாசிப்பதில் பிரச்சினைகள் இருக்கும். சரியாகவும் விரைவாகவும் புரிந்து கொண்டு வாசிப்பதில் பல சிரமங்களை எதிர் கொள்வார்.இந்நிலைமைகள் பரீட்சை அடைவு மட்டத்தில் பாதிப்புக்களை ஏற்படுத்தி விடும். (மா.சின்னத்தம்பி 2004) மாணவர்களின் கற்றல் அடைவுகளில் செல்வாக்குச் செலுத்தும் மற்றொரு காரணியாக செவிமடுத்தலில் காணப்படும் குறைபாடுகளைக் கூறலாம். இவை மொழிப் பாடங்களினூடாக செழுமை ப்படுத்தக் கூடிய திறன்களாகும். மேலும் மொழியைக் கற்பித்து அதனைச் செழுமைப் படுத்தும் பணி முன்னைய காலங்களுடன் ஒப்பிடும் போது தற்போது குறைவாகவே மேற்கொள்ளப் படுகின்றன. என்ற குற்றச் சாட்டுக்களும் கல்விப்புலத்தில் பரவலாக காணப்படுகின்றது. இந்தவகையில் மொழிப் பாடம் தொடர்பான தேர்ச்சிகளில் காணப்படும். குறைநிலைகள் அல்லது பின்னடைவுகள் ஏனைய பாடப்புலங்களையும் பாதிப்புக் குள்ளாக்குகின்றது.

1.3 கட்டிளமைப்பருவம்

இடைநிலைப்பிரிவு மாணவர்கள் மிகவும் சிக்கல் தன்மையுடைய புயலும் நெருக்கீடும் அலைப்புறலும் நிறைந்த கட்டிளமைப் பருவத்தினூடாக பயணிக்கின்றனர். இப்பரு வமானது பல்வேறு விதமான உணர்ச்சிக் கோலங்களுக்கும்,சிக்கல்களுக்கும் வழிவகுக்கும் துணைப்பாலியல் இயல்புகளில் ஏற்படும் மாற்றங்கள், ஹோர்மோன்களின் சுரப்புகளால் ஏற்படும் உடல் உளம்சார் மாற்றங்கள் இவர்களின் கற்றல் செயற்பாடுகளைப் பெரிதும் பாதிக்கின்றன. பாலியல் தொடர்பான நெறி பிறழ்வுகளும், மது போதைவஸ்து போன்றவற்றிற்கு அடிமை யாதலும் சக பாடிகளின் வழிகாட்டுதல்களும் பொதுவாக இப்பருவத்திலேயே செல்வாக்குச் செலுத்து கின்றன. இப்பரு வத்தில் எழும் உணர்ச்சிகள் அறிக்கைப் புலத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் இவ்வாறான நிலை காணப்படும் மாணவரிடையே புலக்காட்சி, அவதானித்தல், கருத்தூன்றல், நினைவில் நிறுத்துதல், காரணகாரியத் தொடர்புகளை விளங்கிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளல், விளங்கியதை வெளிப்படுத்துதல், ஆக்கத்திறன், கற்பனை மிகுதி போன்ற செயற்பாடுகளில் பாதிப்புகள் காணப்படும். இவை தவிர நீண்டகால உள்நாட்டு யுத்தமும் அதற்குப் பின்னரான சடுதியான அமை தியான வாழ்வும், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட பாரிய வளர்ச்சி நிலை இலத்திரனியல் உபகரண கையாள்கை பூகோளமயமாக்கலில் ஏற்பட்ட அவதானிப்பு செயற்பாடுகள் எனவும் மாணவர்களின் கற்றல் அடைவுகளில் தாக்கத்தை ஏற்படுத் துவது அனுபவபூர்வமானது. இன்று கண்டு உணர்ந்து கொண்டிருக்கின்ற உண்மை என்றால் மிகையில்லை.

1.4 பாடசாலை வரவு

மாணவர்களின் அடைவுப் புள்ளிகளை அவர் தம் பாடசாலை வரவுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் பாடசாலையில் ஒழுங்கான வரவுகளைப் பதிவு செய்த மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்வதும் குறைவான ஒழுங்கீனமான வரவையுடைய மாணவர்கள் குறைவான கற்றல் பெறுபேறு களைப் பெற்றுக் கொள்வதும் அவதானிக்கப் பட்டுள்ளது.

1.5 கற்றல் முறைமை

மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளை ஒழுங்காகத் திட்டமிடாமையும் பரீட்சைக் காலங்களில் படிக்கலாம் எனும் மனப் பாங்கைக் கொண்டிருப்பதும், கற்றலில் நுனிப்புல் மேய்பவர்கள் அதாவது ஆழமாகக் கருத்தூன்றிக் கற்காதவர்களின் கற்றல் அடைவுகளும் குறைவானதாகவே காணப் படுகின்றது. அதுமட்டுமன்றி கல்வி என்பது பயிற்சி அது தினந்தோறும் கற்றுப் படிவதால் மேம்படும். இதை ஒரு வாழ்க்கைப்பழக்கமாக மாணவர்கள் கைக்கொள்ளாமல் குறுகிய கால கற்றல் செயற்பாடுகளாலும் தேவையான அடைவை மாணவர்கள் பெற இயலாது போகின்றது.

1.6 ஆரம்பக் கல்வி

கற்றல் அடைவுகளில் செல்வாக்குச் செலுத்தும் மிக முக்கிய காரணியாக ஆரம்பக் கல்விக் காலம் அமைகின்றது. ஆரம்பக்கல்வியானது சிறப்பான உறுதியான அடித்தளத்தை மாணவர்களுக்கு வழங்க வேண்டும். இது துறைசார்ந்த வல்லுனர்களால் உறுதியாகப் பயிற்சி பெற்றவர்களால் வழங்கப்படும் போது அதன் வழி வந்த மாணவர்கள் இடைநிலைக் கல்வியில் சிறந்து விளங்குவார். அவ்வாறான சூழல் கிடைக்கப் பெறாத மாணவர்கள் தொடர் கல்விச் செயற்பாடுகளில் இடர்படுவதுடன் அவர்களின் பெறுபேறுகளையும் அடைவுகளையும் பாதிக்கச் செய்கின்றன.

02 பாடசாலை சார்ந்த காரணிகள்

மாணவர்களின் கற்றற் செயற்பாடு களையும் கல்வி சார் அடைவுகளையும் ஒழுங்கமைப்பதில் பாடசாலைகளின் பங்கு காத்திரமானது. பாடசாலை சார்பான காரணிகளில் ஆசிரியர் சார்பான காரணிகள், பாடசாலை நிர்வாகம் சார்ந்த காரணிகள், பாடசாலையின் பௌதிகச் சூழல் சார்ந்த காரணிகள் என மூன்றாக வகுத்து நோக்க முடியும்.

ஆசிரியர் பாடசாலையின் மிக முக்கிய வளம், மாணவரின் கற்றலின் மீதான ஆர்வ நிலையைத் தீர்மானிப்பதில் இவர்கள் பெரும் பங்கு வகிக்கின்றனர். ஆசிரியர் தொழில் வாண்மையும் அவர் தம் தொழிலின் மீது கொண்டுள்ள பற்றுறுதியும், அர்ப்பணிப்பும், துறைசார் புலமையும் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் திறனை உடையன. ஆசிரியர்களே கல்விச் சக்கரத்தின் அச்சாணிகள். பாடசாலைச் செயற்பாடுகளின் வழிகாட்டிகள் எனவே நாட்டின் கல்வித் தரத்தை பேணுவதிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்த்துவதிலும் ஆசிரியரின் பணி இன்றியமையாதது. ஒரு ஆசிரியர் தனது கற்பித்தல் செயன்முறை முறையாகத் தயார் செய்து அளிக்கை செய்யும் போது அது சிறந்த முறையில் மாணவர்களைச் சென்றடையும். எனவே ஒரு ஆசிரியர் தான் கற்பிக்கும் பாடம் தொடர்பில் தெளிவான பார்வை, நிறைவான புலமை, தேர்ந்தெடுத்து குவியப்படுத்தும் ஆற்றல், கைவரப் பெற்றவராகத் தன்னை வளர்த்துக் கொள்ள வேண்டும். தனியாளைக் குவியப்படுத்தி கற்பித்தலை முன்னெடுக்கும் போது சுயாதீன கற்றலையும் வளர்த்தெடுக்க வேண்டும். சுயநெறிப்பட்ட கற்போனின் உருவாக்கம் எவ்வாறு கற்க வேண்டும் என்பதைக் கற்று கொண்டவர்களின் உருவாக்கமாகும். மற்றும் உசாவலில் விருப்பம் கொண்ட மாணவர் களின் உருவாக்கம், இது பாட அடைவுகளை அதிகரிக்கச் செய்யும். (சபா ஜெயராசா 2004) இவை மாத்திரமன்றி ஆசிரியர் கற்பிக்கும் திறன்களும் கையாளும் நுட்பங்களும் மாணவர்களை கற்றலின் பால் இயல்பாக ஈர்க்க வேண்டும்.

ஓர் ஆசிரியர் தான் கற்பிக்கும் மாணவரது வயது, தரம், ஆற்றல், திறமைகளைக் கருத்திற் கொண்டு தனது கறிப்பித்தல் நுட்பங்களை திறம்பட வடி வமைக்கக் கூடியவராக விளங்க வேண்டும். தெளிவான மொழிவளம், சிறப்பான தொடர்பாடல் திறன்கள், மாண வர்களின் கவனத்தையும் ஈடுபாட்டையும் அதிகரிக்கச் செய்யும். அதேசமயம் மாணவர் களின் குண இயல்பு, பலம், பலவீனங்களை யும் அறிந்து அதற்கு உகந்த வகையிலே தனது கற்பித்தலை மேற்கொள்ள வேண்டும்.

பத்தாயிரமாம் ஆண்டின் ஆசிரியர் தமது மாணவரிடையே காணப்படும் அடிப்படை நிபுணத்துவங்கள், மனப்பாங்கு, படைப்பாற்றல் திறன் வளர்ச்சி, புத்தாக்கத் திறன் பலதுறைப் புலமை, மாறும் சூழ்நிலை மைகளுக்கு ஏற்ப மாறும் திறன், தமது இயலுமைகளை அறிந்து கொள்ளல், பிரச்சினைகளை இனம் காணும் திறன், விமர்சனத் திறன், தீர்மானம் மேற்கொள்ளும் திறன் என்பனவற்றை மாணவரிடையே உருவாக்கி வளர்க்கக் கூடியவராக இருத்தல் வேண்டும். (யுனஸ்கோ 1990) இவ்வாறான கற்பித்தல் நுட்பங்கள் இடைநிலை வகுப்பு மாணவர்களில் கற்றலில் சிறப்பான செல்வாக்கைச் செலுத்தும்.

மேலும் மாணவர்களின் கல்விசார் அடைவுகளிலும், தனித்துவமான ஆளுமை விருத்தியிலும் பிரதான பங்காற்றுகின்ற முக்கிய காரணியாக அமைந்திரப்பது ஆசிரியர் மாணவர் உறவுநிலையாகும். ஆசிரியர் சொற்கேட்டு மாணவர் நடப்ப வர்களாகவும் அதே சமயம் தமது சிக்கல்கள் இடர்பாடுகள் தெளிவின்மைகள் தொடர்பில் ஆசிரியருடன் நம்பிக்கையுடன் தொடர்பு களைப் பேணி அவற்றிலிருந்து மீள்பவர் களாகவும் விளங்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். இவ்வாறான உறவுநிலை பேணப்படுவது கற்றல் விளைவுகளில் நேரான பாங்கினைத் தோற்றுவிக்கும்.

மாறாக ஆசிரியர்கள் தமது மாணவர்கள் மீது அதிகாரத்துடன் கூடிய அனுகு முறையைக் கையாள்வார்களாயின் அது மாணவர்களை மோசமான நிலைக்கு இட்டுச் செல்லும்.மேலும் மாணவர்களின் தனித்துவமான இயல்புகளை மதிக்காமை, தன்னம்பிக் கையைச் சிதைக்கக் கூடிய மோசமான வார்த்தைப் பிரயோகங்கள் உடல் உள ரீதியான தண்ட னைகளை வழங்கல் போன்ற அணுகு முறைகளைக் கைக்கொள்வார்களாயின் அது ஆசிரியர் மீதும் குறித்த பாடத்தின் மீதும், கல்வியிலும் எதிர்ப்புணர்வையும் மன உளைச்சலையும் மாணவர் களுக்கு ஏற்படுத் துவதால் அவர்கள் தம்மால் அடையக்கூடிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைவுகளைக் கூட அடைய முடியாமல் போகின்ற நிலை ஏற்படும்.

பாடசாலையின் பௌதிக வளம்

கல்வி கற்கின்ற இடம், அதன் பௌதிக ரீதியான சூழல் கற்றலை இலகுபடுத்துவதாக அமைந்திருப்பது அவசியம். போதிய இடவசதி, தளபாடவசதி, போதியளவு வெளிச்சம், காற்றோட்டம், அமைதியான சூழல் போன்றவையும் தேவையான கற்றல் உபகரணங்கள் செயற்பாட்டறைகள் என்பனவும் சிறப்பான கற்றலுக்குத் தளமிடுகின்றன. இதைப்போலவே கவனக் கலைப்பான்கள் பொருத்தமற்ற ஒலிகள் போன்றனவும் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். சுத்தமான குடிநீர், சுகாதாரமான மலசலகூடம் என்பவை தொடர்பில் பாடசாலை கவனம் செலுத்த வேண்டும். கற்றல் கற்பித்தல் நிகழும் சந்தர்ப்பங்களில் மட்டுமல்லாது பரீட்சை நேரங்களிலும் இவை கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

இந்த வகையில் பிள்ளைகளுக்கு முறையான கல்வியை வழங்கி அவர்கள் உயர்வான அடைவுகளைப் பெற செயற் றிறனுடன் செயற்பட வேண்டிய பொறுப்பு பாடசாலைகளுக்கு உரியது. பாடசாலைகளில் அமுலாக்கப்படும் கவர்ச்சியற்ற பாடத் திட்டம், திட்டமிடப்படாத மேற்பார்வை பெற்றோர் பாடசாலை இடைத்தொடர்பில் காணப்படும் பலவீனம், திறனற்ற முகாமைத்துவம், அதிபர் ஆசிரியர் உறவுகளில் காணப்படும் விரிசல் நிலை, பரீட்சை முறைமைகளில் காணப்படும் குறைபாடுகள், பாடசாலைகளில் நிலவும் மகிழ்ச்சியற்ற சூழல், திறமையற்ற பாடப் போதனைகள், ஆசிரியர் கற்பித்தலுக்கான போதிய வசதி இன்மை, புதிய திறன்களையும் உத்திகளையும் கற்பித்தலில் பயன்படுத்த ஆசிரியர் காட்டும் தயக்கம், மரபு ரீதியான கற்பித்தலை முறைமைகளில் தங்கியிருத்தல் மற்றும் ஆசிரியர் மையக் கல்வி மாற்றங்களை உள்வாங்கப்பின்னிற்கும் ஆசிரியர் மனப்பாங்குகள் என்பனவும் மாணவர்களில் கற்றல் செயற்பாடுகளிலும் எதிரான விளைவுகளை ஏற்படுத்தலாம்.

1.3 பெற்றோர் சார்ந்த காரணிகள

மாணவர்களின் கல்விசார் அடைவுகளில் முக்கிய செல்வாக்குச் செலுத்தும் காரணியாக பெற்றோரின் கல்வியறிவு மட்டம் காணப் படுகிறது. கல்வியறிவுடைய பெற்றோரின் பிள்ளைகள் கல்வியறிவு குறைந்தபெற்றோரின் பிள்ளைகளை விட குறிப்பிடத்தக்களவு கூடிய வினையாற்றலைக் காட்டுவது,அவதானங்களின் ஊடாகப் பெறப்பட்டுள்ளது. எனினும் இப் பொதுவான அவதானிப்புக்கு விதிவிலக்குகள் இருக்கின்றன என்பதும் மறுப்பதற்கில்லை.

அடுத்து பெற்றோரின் மனப்பாங்குகளும் பிள்ளைகளின் கற்றல் நிலைமைகளை தீர்மானிக்கின்றன. பிள்ளைகளின் சிறந்த அடைவுகளை மையமாகக் கொண்ட பெற்றோர் தமது பிள்ளைகளின் சிறப்பான அடைவுகளை தமது திட்டமிட்ட செயற் பாடுகளால் உறுதி செய்து கொள்கின்றனர். அத்துடன் தமது பிள்ளைகளின் விருப்பு வெறுப்புகளுக்கு மதிப்பளித்து அவர்களின் பலம், பலவீனங்களைப் புரிந்து கொண்டு தம் பிள்ளைகளின் திறனுக்கேற்ற துறைகளைத் தெரிந்து வழிகாட்டி அவர்களின் வினையாற் றல்களைக் காத்திரமானவையாக மாற்றி அமைக்கின்றனர்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்விப் பாதையை வழிப்படுத்தி நெறிப் படுத்தி செப்பனிடுபவர்களாக மட்டும் நின்று கொண்டு அவர்களின் செயற்பாடுகளை அவர்களிடமே விட்டு விடுவது சிறந்தது. பெற்றோரின் அளவுக்கதி கமான தலையிடும், அக்கறையினமான போக்கும் பிள்ளைகளின் கல்வியை மேம்படுத்த உதவுவதில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்ட உண்மையாகும். எல்லா வேளைகளிலும் பிள்ளைகளின் சுயாதீனத்தை உறுதி செய்ய வேண்டும். பெற்றோர் தாம் விரும்பி அடைய முடியாமல் போன இலக்குகளைத் தமது பிள்ளைகள் மீது வலிந்து திணிப்பதனைத் தவிர்த்து கொள்ள வேண்டும்.

மேலும் கல்விப் புலத்தில் மாணவர் அடைவு மட்டத்தை திர்மானிப்பதில் குடும்பங்களில் காணப்படும் வறுமை கிராம நகர வேறுபாடுகளைக் கடந்து மேலோங்கி நிற்கின்றது. இவ் வறுமை நிலைகள் ஒழிக்கப்படும் சந்தரப்பங்களில் அடை வுகளில் மேம்பாடு ஏற்படலாம். இதனால் விட்டில் மாணவர் கற்காமை பிள்ளைகளைக் கற்றலில் பெற்றோர் ஊக்கப்படுத்தாமை, மாணவர்கள் தொழிலுக்கு செல்லுதல் போன்றனவும் அடைவு மட்டத்தைப் பீதிக்கச் செய்யும்.

1.4 சூழல் சார்ந்த காரணிகள்

சூழல் சார்ந்த காரணிகளில் மாணவ ருடைய வீட்டுச் சூழல் என்பது மிக முக்கியமானதாகும். வீட்டின் பௌதீகச் சூழலும், உணர்ச்சிச் சூழலும் மாணவர்களது கற்றல் செயற்பாடுகளுக்கு உதவியாக உள்ள பொழுது அவை மாணவரின் செயலாற்றல் திறன் களையும், அடைவு களையும் அதிகரிக்க உதவி செய்யும். கற்பதற்கு உகந்த அமைதியான சூழல் மாணவருக்கு மிகவும் அவசியமானதொன் றாகும். தற் போது வானொலி, தொலைக்காட்சி, அயலிலுள்ள கோவில் ஒலிபெருக்கிகள் மற்றும் கணினி தொடர்பான உபகரணங்கள் மாணவரின் கற்றலுக்கு இடையூறு விளைவிப்பவையாக உள்ளதுடன் வீடுகளில் ஏற்படும் தகராறுகள், வீட்டு வன்முறைகள், வாய்த்தர்க்கங்கள், மதுபாவனை போன்றனவும் கற்றல் அடைவுகளை பாதிக்கச் செய்கின்றன.

இவ்வாறான சூழலில் வாழ்கின்ற மாணவர்கள் படிப்பதற்கோ, உறங்குவதற்கோ, சுய கௌரவத்தோடு நடமாடவோ முடியாமல் போகின்ற நிலையே காணப்படுகின்றது. மேலும் கல்வி கற்கின்ற பிள்ளைகள் இருக்கின் வீட்டுச் சூழலானது கருத்தூன்றிக் கற்றலுக்கு உதவுவதாக கற்பதை குழப்பாத ஒன்றாக இருப்பது அவசியமாகும்.

வீட்டிற்குப் புறம்பாக சமூகத்தில் காணப் படும் அல்லது சமூகத்தால் உருவாக்கப்படும் காரணிகளும் கல்வியில் செல்வாக்குச் செலுத்துகின்றன. மாணவர்கள் வாழ்கின்ற சமூகம் உறுதியற்றதாக, வன்முறைகள் மலிந்ததாக, மனித விழுமியங்கள், உரிமை களுக்கு மதிப்பளிக்காததாக மாறுகின்ற பொழுது அச் சூழலானது மாணவர்களின் பார்வைகள், மனப்பாங்குகளில் மாற்றங்களை உட்புகுத்தி கற்றல் சூழலிலிருந்து அவர்களைப் புறந்தள்ளி விடுகின்றது.

இந்த வகையில் வீட்டில் நிலவும் நிலமைகள், பாடசாலையில் நிலவும் நிலமைகள், சமூகத்தில் காணப்படும் நிகழ்வுகளும் மாணவர்களின் கற்றலில் பாதிப்புக்களையும் மன அழுத்தங்களையும் உருவாக்கி விடுகின்றன. இதனால் ஏமாற்றம், அவநம்பிக்கை, விரக்தி என்பன நிரம்பிய மாணவர் களைக் கொண் டவனாக பாடசாலைகள் மாறிவிட்டன. (பொதுக் கல்வி மறு சீரமைப்பு 1997:27) யுத்தம், வறுமை, இடப்பெயர்வு, இராணுவ மயப்படுத்தல் போன்ற பிரச்சினைகள் மாணவர்களின் கற்றல் பெறுபேறுகளில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. அவை மட்டுமன்றி அடிப்படை வசதிகள் கிடைக்காமை, ஆதரவு இல்லாத நிலைமை போன்றனவும் கல்வி யைப் பாதிக்கக் கூடியன. சில சமயங்களில் மாணவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பல நெருக்கீட்டு நிலைமைகளுக்கு முகம் கொடுக்கும் பொழுது அது அவர்களின் எதிர்கொள்ளும் திறனைப் பாதிப்பதால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியிலும் கற்றல் அடைவுகளிலும் பாரிய பின்னடைவுகளை ஏற்படுத்தும்.

ஒவ்வோர் காலப்பகுதியிலும் மாணவர்களை சூழ பல்வேறு விதமான கவனக் கலைப்பான்கள் காணப்படும். தற்போதைய காலப் பகுதிகளை எடுத்துக் கொண்டால் சினிமா, கணினி விளையாட்டுக்கள், கையடக்கத் தொலைபேசிகள், இணையத் தளப் பாவனை போன்றன காணப் படுகின்றன. இவ்வாறான அம்சங்கள் கட்டிளப் பருவத்தில் இருக்கும் இடைநிலைக் கல்விப் பராயத்தினரை தம்பால் ஈர்த்து இவர்கள் இலக்குத் தவறி, திசைமாறி, தாம் அடைய விரும்புகின்ற கல்விசார் இலக்குகளை, பெறுபேறுகளை அடைய முடியாமல் செய்து விடுகின்றன.

இதைப் போன்ற இடைநிலைப் பாடசாலை மாணவர்களின் கவனத்தை ஈர்க்கும் காரணிகளாக மது, புகையிலை, கஞ்சா, லேகியம், பீடா போன்ற போதை தரும் பதார்த்தங்கள் காணப்படுகின்றன. கட்டிளமைப் பருவத்தினர் இவ்வாறான பல்வேறு இடர்தகவு வாழ்க்கை அனுபவங்களை பரீட்சித்துப் பார்க்கும் ஆவலுடையவர்களாக இருந்தாலும் போதை தரும் பதார்த்தங்களின் அறிமுகம் நாளடைவில் பழக்கமாகிவிடும். இவை மாணவர்களின் கற்றல் வினை யாற்றலில் மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்தி விடுகின்றன.

இடைநிலைக்கல்வி பயிலும் கட்டிளமைப் பருவத்தினர் எதிர்கொள்கின்ற பெரிய சவால் பாலியல்சார் விடயங்களாகும். துணைப் பாலியல்புகளின் விருத்தி, பாலியல் தொடர்பான உடல், உளச் செயற்பாடுகள் மற்றும் காதல் என்கின்ற மென்மையான உணர்வு போன்றன இப்பராயத்தினர் எதிர்கொள்ளும் முக்கிய விடயங்களாக அமைந்திருக்கின்றன. பல மாணவர்கள் இவற்றை ஏதோவொரு வழியில் வெற்றி கரமாக தங்களது பாதையைத் தொடருகின்ற போதிலும் கணிசமானளவு மாணவர்கள் இவை மூலம் வருகின்ற சவால்களுக்கும், குழப்ப நிலைமைகளுக்கும் ஆளாகி, தமது கல்வி தொடர்பான கவனஞ் சிதைந்து வாழ்க்கையில் நிறைமாறிப் போகின்றனர்.

துரதிஷ்டவசமாக இடைநிலை மாணவர்கள் தங்களுக்கு ஏற்படகின்ற பாலியல்சார் உடல், உள மாற்றங்கள் பற்றி அறிந்து கொள்ளும், சரியான தகவல்களைத் தெரிந்து கொள்ளும் வாய்ப்புக்களும், வசதிகளும் குறைவானதொரு நிலை யிலேயே இருக்கின்றனர். பெற்றோர், ஆசிரியர் போன்றோர் பொதுவாக இவை பற்றிய போதிய விளக்கங்களை அளிக்காத வேளையில், பிள்ளைகள் அவை பற்றிய விடயங்களைக் கட்டுக் கதைகள் மூலமும் தரமற்ற சினிமாக்கள் மற்றும் கதைகள் மூலமும் தவறாகப் பெற்றுக் கொள்கின் றார்கள். அதனால் இடர் படுகின்றார்கள். இத்தகைய காரணிகளும் கற்றலிலும் அடைவுகளிலும் பாரிய செல்வாக்குச் செலுத்துகின்றன.

1.5 முடிவுரை

மாணவர்களின் கல்விசார் வினை யாற்றல்கள் குறிப்பாக அவர்கள் போட்டிப் பரீட்சைகளில் எடுக்கின்ற பெறுபேறுகள் பன்மகத் தன்மையுடைய ஒன்றுடன் ஒன்று நெருங்கிப் பிணைந்த பல்வேறுபட்ட காரணிகளினது கூட்டு விளைவாகவே அமைகின்றன. மாணவர்களுக்கு கல்வி புகட்டும்போது அல்லது அவர்களிடம் நல்ல கற்றல் அடைவுகளை எதிர்பார்க்கும்போது நாம் அவற்றின் மீது செல்வாக்குச் செலுத்தும் எல்லாக் காரணிகள் பற்றியும் தெளிவாக ஆராய்ந்து தெரிந்து வைப்பதோடு அவை சாதகமாக இல்லாதவிடத்து அவற்றிற்கான மாற்று ஏற்பாடுகளையும் செய்தல் வேண்டும். மாணவர்களின் வினையாற்றல்களை பாதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க்கும் காரணிகளை எவ்வாறு கையாளலாம்? அல்லது அவற்றை எவ்வாறு சாதகமானதாக மாற்றலாம்? என்பதை கல்விப் புலத்திலுள்ள ஒவ்வொருவரும் கவனத்தில் எடுக்க வேண்டியது அவசியமாகும்.

உசாத்துணை நூல்கள்

ஆறுமுகம்.வ (1989) வகுப்பறைக் கற்பித்தல் - செட்டியால் அச்சகம் யாழ்ப்பாணம்

கருணாநிதி.மா (2012) கற்றல் கற்பித்தல் மேம்பாட்டுக்கான வழி முறைகள் - சேமமடு புத்தகசாலை. கொழும்பு 11

சந்திரசேகரன்.சோ (2008) சமகாலக் கல்வி முறைகளில் சில பரிமாணங்கள் - சேமமடு பதிப்பகம். கொழும்பு

சின்னத்தம்பி.மா (2004) ஆசிரியமுகாமைத்துவம் - விஸ்டன் பப்ளிக் கேசன் கொழும்பு

சின்னத்தம்பி . மா (2009) பாடசாலையும் ஆசிரியரும் சுரபி பதிப்பகம். யாழ்ப்பாணம்.

சின்னத்தம்பி . மா (2015)பாடசாலைக் கல்வி ஆற்றலும் சமூக நீதியும் - குமரன் பதிப்பகம் கொழும்பு

பேரின்பநாதன்.ஆ (2009) பிள்ளைகளின் கல்வியில் பெற்றோரின் பங்கு - கலைமகள் கொம் பியூட்டர் பிறிண்டேர்ஸ்

சேர்.பொன் இராமநாதன்வீதி திருநெல்வேலியாழ்ப்பாணம்

தேவநாத் .சி. எஸ் (2003)நம் குழந்தைகளின் கற்கும் திறனை மேம்படுத்தும் பயிற்சிகள் நர்மதா பதிப்பகம். சென்னை

றொறின் என் அடேசன் (2001)ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை விளையாட்டு இல்லங்கள்



வெற்றிவேலு இல்லம்



கதிர்காமர் இல்லம்



செல்லையா இல்லம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சைவ உணவை உண்போம்

திருமதி.ஜெ.பரம்சோதி
ஆசிரியர்

சைவவிழுமியப் பண்புகளில் உயிர்களில் கருணை காட்டுவோம். ஜீவ காருண்யம் என்பன எல்லாம் கூறப்படுகிறது. இவற்றை நாம் கடைப்பிடிக்க வேண்டும் என்றால் சைவ உணவே உண்ண வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கும்.

மேலும் சைவசமயம் பஞ்சமா பாதகங் களைத் தவிர்க்க வேண்டும் என்று கூறுகிறது. இந்தப் பஞ்சமா பாதகங்களில் ஒன்றான "புலால் உண்ணாதே" என்ற அறிவுரை தரப்பட்டதற்குப் பல காரணங்கள் உள்ளன.

ஆன்மீக நோக்கத்திலிருந்து பார்க்கும் போது இந்தப் பூமியில் வாழுகின்ற அனைத்து உயிரினங்களிலும் உயிர்த் துடிப்பாக உறைந் திருப்பது ஒரே ஆன்மா தான். இந்த உயிரினங்கள் அனைத்தும் பூமியில் மகிழ்ச்சியாகத்தான் உயிர்வாழ விரும்பு கின்றன. ஆகையால் எந்த உயிரையும் பறிப்பதற்கோ அல்லது துன்பப்படுத்து வதற்கோ ஆறறிவு படைத்த மனிதராகிய எமக்கு எந்த உரிமையும் கிடையாது. இது ஒரு சனாதன தர்மம். கடவுள் உலக உயிர்களிடத்தில் நிறைந்திருப் பவராதலால் நாம் எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்த வேண்மே தவிர அவற்றை வருத்துவதோ துன்பப்படுத்துவதோ கூடாது. மாறாக நாம் எல்லா உயிர்களிடத்தும் அன்புடையவராக இருத்தல் வேண்டும். இதனையே சைவ விழுமியப் பண்புகளில் ஒன்றான "ஜீவ காரண்யம்" எடுத்துக் காட்டுகிறது. நாம் உயிர்களிடத்தில் காட்டும் கருணை இறைவ னிடத்தில் காட்டும் பற்றாகும். மனிதர்கள் உட்பட ஜிவராசிகள் அனைத்தும் அன்பினை அடிப்படையாக கொண்டுள்ளன. இதனை வள்ளுவர்"அன்பின் வழியது உயிர்நிலை" என்கிறார். தாயுமான சுவாமிகளும்

"எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும் நின் தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே" என்கிறார்.

எனவே எந்த உயிரையும் எனது உயிர் போலக் கருதி அன்பு செய்ய வேண்டுமே தவிர அவற்றை நாம் வருத்துவதோ உணவாக உண்பதோ கூடாது. பிறருக்காக தம் உயிரைத் தியாகம் செய்யக்கூடிய திறமையும் பண்பும் மனிதர்களுக்குத்தான் அளிக்கப் பட்டுள்ளது. இதுதான் மனிதர்களின் மேன்மையும், கௌரவமும் சிறப்பும் ஆகும். எவ்னொருவன் மற்றவர்களைக் காப்பதற்காக அவர்களுக்கு உதவி செய்து ஆதரவாக இருப்பதற்காக தம் சுகம், பொருள், மகிழ்ச்சி அல்லது தம் உயிரையே கூட தியாகம் செய்கிறானோ அவன் உயர்ந்த மனிதனாகக் கருதப்படுகிறான். ஆகவே நம்முடைய சொந்த நலனுக்காக விருப்பத்திற்காக மற்ற உயிர்களை அழிப்போமானால் அது மனித வாழ்க்கையின் மேன்மையின் ஆணி வேரையே வெட்டுவதற்குச் சமனாகும். இங்ஙனம் செய்வதன் மூலம் நாம் நம்மையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழ்த்திக் கொள்கிறோம்.

கௌதம புத்தரும் வேள்விக்கு வெட்டு வதற்காக கொண்டு சென்ற ஆட்டுக் குட்டியைக்காப்பாற்றியதும் தனது நண்பனால் அம்பெய்யப்பட்டு துடித்து வீழ்ந்த அன்னப் பட்சியைக் காப்பாற்றியதும் இங்கு மனிதப் பண்பின் மேன்மையைக் குறிக்கின்றது. அதுபோல ஞானப் பிரகாச சுவாமிகளும் பசு வதைக்கு அஞ்சி யாழ்ப்பாணத்தை விட்டு இந்தியா சென்றதும் குறிப்பிடத்தக்கது.

புலால் உண்பவர்களில் சிலர் பின்வரும் பல கேள்விகளை எழுப்பி தாம் புலால உண்பது சரி என வாதாட முற்படுகின்றனர். உயிர் உள்ளவற்றை உண்ணக் கூடாது என்றால் தாவரங்களும் உயிர் உள்ளவை தானே? அவற்றை சைவ உணவுப் பழக்கம் உள்ளவர்கள் உண்ணும் போது நாங்கள் விலங்குகளை உண்பதில் என்ன தவறு? மேலும் கண்ணப்ப நாயனார் இறைவனுக்கு இறைச்சி படைத்தார். நாம் ஏன் உண்ணக் கூடாது எனப் பலவிதமாகத் தம் வாதங்களை முன்வைக்கின்றனர். இது ஒரு தவறான ஏமாற்றுகின்ற வாதம். ஏனெனில் இந்த வாதத்தைச் சற்று நீடித்தோமானால் மனிதர் களையும் நாம் ஏன் உண்ணக் கூடாது என்பது தான் அடுத்த கேள்வியாக இருக்கும். நமக்கு உணவு வேண்டுமானால் உயிர்வதை செய்து தான் ஆக வேண்டும். நாம் உண்பது எத்தகைய உணவு என்பதைப் பற்றி கவலைப்பட அவசியம் இல்லையென்றால், நம்மிடையே வாழும் வயது முதிந்த வர்களையும் நாம் உண்ணலாமே? ஆனால் இதைக் கேட்கும் ஒவ்வொருவரும் "ஓ! என்ன கொடுமை இது! நீங்கள் இவ்வாறு வாதம் செய்வது முறையா?" என்று கூறுவார்கள். ஆகவே இந்த விவாதத்தை அந்த அளவு நீடிப்பதை எவரும் விரும்ப மாட்டார்கள். ஒப்புக் கொள்ள மாட்டார்கள்.

மேலும் தாவரங்களை உண்டு தமது உணவுத் தேவையை நிறைவேற்றும் விலங்கினங்களை உணவாக உட்கொள்ளும் நாம் ஏன் அந்தத் தாவரங்களையே உணவாக உட்கொள்ளக்கூடாது. ஆடுபோன்ற விலங்கி னங்கள் நல்ல மூலிகைகளையே தமது உணவாக உட்கொள்கின்றன. அந்த ஆட்டின் இறைச்சி எமக்குப் பலத்தை தருகிறது என்றால் ஆடு தின்னும் மூலிகைகளையே நாம் எமது உணவாக உட்கொண்டால் எமக்கு பலம் கிடைத்து விடாதா? ஆட்டுப் பால் எவ்வளவு மூலிகை மருந்தாகும். ஆட்டுப் பாலைக் குடிப்போம் ஆட்டிறைச்சியை தவிர்ப்போம்.

உடலமைப்பை எடுத்துக் கொள்வோ மானால் இறைச்சியை உண்ணும் விலங்கின் உடலமைப்பு அதற்கு ஏற்றவாறு உள்ளதைக் காணலாம். ஆனால் மனித உடலானது இறைச்சியை உண்பதற்கு ஏற்றவாறு அமைந் ததல்ல. மருத்துவ ரீதியாக நோக்கினாலும் மருத்துவர்கள் பொதுவாக அனைவருமே கொழுப்புச் சத்துள்ள பண்டங்களை அதிகமாக உட்கொள்ளக்கூடாது என்றே அறிவுரை செய்கின்றனர். அத்துடன் தானியவகை மற்றும் கீரைவகை உணவை நாளாந்த உணவில் சேர்த்துக் கொள்ளும் படியும் அறிவுரை கூறகின்றனர்.

விலங்குகளும் தாவரங்களும் உயிரு ள்ளவை என்றாலும் அவற்றின் பரிணாம வளர்ச்சியிலும் அறிவு மற்றும் உணர்ச் சிகளின் வெளிப்பாட்டிலும் வேறுபாடுகள் உள்ளன. உடல் துன்பத்தையும் மனத் துயரையும் விலங்கினங்கள் உணரும் அளவிற்கு அவற்றைப் புரிந்து கொள்ளும் அளவிற்குத் தாவர இனங்கள் பரிணாம வளர்ச்சியடையவில்லை. நம்முடைய தர்ம சாஸ்திரங்களின் கூற்றுப்படி பேருண்மையை அறிவது தான் மனிதப் பிறவியின் தலையாய நோக்கமாகும். அவ்வுண்மையை அறிந்து கொள்ளும் பொருட்டு நாம் உயிர்வாழ வேண்டும். ஆயினும் உயிர்வாழ்வதற்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் மேற்கொள்ளும் செயல்களைப் பகுத்தறிந்து செய்ய வேண்டும்.

நோயாளி ஒருவர் மருத்துவரிடம் சென்றால் மருத்துவர் அவரது நோயைத் தீர்க்க முதலில் குறைந்தளவு மருந்துகளையே கொடுப்பார். அறுவைச் சிகிச்சையைத் தவிர்க்க முயல்வார். ஆனாலும் அறுவைச் சிகிச்சைக்கு அவசியம் ஏற்பட்டால் நோயாளியின் உடல் வலியைக் குறைப்பதற் காகவும் வேறு எந்தத் தீங்கும் வராமல் இருப்பதற்கும் மயக்க மருந்தையோ குறிப் பிட்ட பகுதிக்கான விறைப்பு மருந்தையோ கொடுத்த பின்பே தமது சிகிச்சையை மேற்கொள்வார். ஏனெனில் எந்த வகையில் உடல் துன்பத்தைக் குறைத்து சிகிச்சை செய்ய முடியுமோ அந்த வகையில் சிகிச்சையை மேற்கொள்வார்.

இவ்வாறு நாம் உயிர்வாழ மற்ற உயிரை மாய்ப்பது அவசியம் என்றாலும் அந்த உயிர்வதையைச் செய்யும் பொழுது எந்த வகையில் உடல் துன்பத்தைக் குறைக்க மடியுமோ அந்த வகையில் செய்ய வேண்டும். ஒரு விலங்கானது தன்னைக் கொல்லப் போகிறார்கள் என்பதை அறிந்தால் அது தன்னாலான மட்டும் தனது உயிரைக் காப்பாற்றவே முயலும். அவ்வாறு தனது உயிரைக் காப்பாற்ற முடியாமல் போய் விட்டால் சில பிராணிகள் தமது உடலில் இயல்பாகவே உள்ளவிடத்தை உடல் முழுவதும் பாய்ச்சி விடுகிறது. இதனால் அந்தப் பிராணிகளை உணவாக உட் கொள்கின்ற மனிதர்களுக்கும் அவரகளது உடல்களில் விடம் ஏற்றப்படுகிறது.

அத்துடன் விலங்கு உணவுகளை உட்கொள்ளும் மனிதர்களுக்கும் தாவர உணவுகளை உணவாக உட்கொள்ளும் மனிதர்களுக்கும் இடையேயுள்ள ஓமோன் சுரப்புகளைப் பார்ப்போமானால் விலங்கு ணவை உட்கொள்பவர்களுக்கு அதிகமா கவும் தாவர உணவுகளை உட்கொள் பவர்களுக்கு ஓமோன் சுரப்பு குறைவாகக் காணப்படுகிறது. இதனால் விலங்குணவை உணவாக உட்கொள்பவர்களுக்கு கோபம் மற்றும் பாலியல் உணர்ச்சிகள் அதிகமாகக் காணப்படும். இவ்வாறானவர்கள் தம்மை நிதானப்படுத்தி சாந்தமாக ஆக்கிக் கொள் வதற்கு சிரமப்படுவார்கள். இவர்க ளால் தான் சமுதாயத்தில் வீண் சண்டை சச்சரவுகளும் கொலை, கொள்ளை போன்ற பஞ்சமா பாதகங்களும் அதிகரிக்கின்றன.

மேற்சொன்ன அறிவுரைகளைப் பார்க்கும் போது வேத காலத்தில் புலால் உண்ணும் பழக்கம் இருந்து வந்ததா? என்ற கேள்வி எழும் ஆனால் தற்போது உள்ளது போல இனி வருங்காலத்தில் இருக்கப் போவது போல் வேத காலங்களிலும் மக்கள் இறைச்சியை உண்டார்கள்.சில சந்தரப்பங்களில் வேதங்களும் தர்ம சாஸ்திரங்களும் கூட இதை அனுமதித்தன. ஆனால் புலால் உண்ணக் கூடாது என்பது தான் எமக்கு இடப்பட்டிருக்கும் கட்டளை. அதுதான் நம்முடைய தர்மமும் கூட. சில சந்தர்ப்பங்களில் புலால் உண்ண அனுமதி கொடுக்கப் பட்டதும் ஒரு சலுகை தான் ஏனெனில் மனிதர்கள் சஞ்சலங்கள் உள்ளவர்கள். இதனால் உயர்ந்த கொள்கைகளை நம்மால் கடைப்பிடிக்க முடிவதில்லை.

சாஸ்திர நூல்கள் இத்தகைய சலுகை களைக் கொடுத்ததற்குக் காரணம் உண்டு. அதனைப் பின்வரும் உதாரணத்தினால் விளக்கலாம். கடுமையான சர்க்கரை வியாதி உடைய ஒருவருக்கு இனிப்புப் பண்டம் அறவே கூடாது என்பது தான் தர்மம். எனினும் அவர் இனிப்புப் பண்டத்தில் தீராத ஆசையடையவராக வைத்தியர் அறிந்தால் அவரை சர்க்கரையைத் தவிர்க்கச் சொன்னால் இவர் திருட்டுத் தனமாக உண்டார். அதனால் மாதத்தில் ஒரு தடவை சாப்பிடலாம் என்று கூறுவார். இங்கு அறிவா ளியான மருத்துவர் அவருக்கு வழங்கியது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலுகையேயன்றி அனுமதியில்லை.

இவ்வாறே உலகில் சில மனிதர்கள் சில பொருட்களிடத்தில் தீராத ஆசை கொண் டிருப்பார்கள். அறவே தவிர்க்கவேண்டும் என்று அறிவுரை கூறினால் அவர்கள் அதற்கு எதிராகவே செயற்படத் தொடங்குவார். அவ்வாறானவர்களுக்கு சாஸ்திர நூல்கள் சில சலுகைகளை அளிக்கின்றன. ஆயினும் ஒரு செயலைச்செய்வதில் பலவித கட்டுப்பாடுகளை, விதிகளைச் சாஸ்திரங்கள் விதிக்கின்றன.

உதாரணமாக புலால் உண்பவர்கள் எவ்வகை விலங்குகளை உண்ணலாம். எந்த நாட்களில் முற்றாகத் தவிர்க்க வேண்டும். புலால் உண்பதற்கு முன் எவ்வகைச் சடங்குகள் செய்யப்பட வேண்டும். என்பதையெல்லாம் சாஸ்திரங்கள் தெளிவாக விளக்கியுள்ளன. இத்தனை கட்டுப்பாடுகளும் விதிகளும் விதிக்கப்பட்டதிலிருந்தே மனிதர்கள் புலால் உண்பதில் உள்ள ஆசையைவென்று ஓங்கி உயர்ந்த நிலைக்கு வர வேண்டும் என்பது தான் சரித்திரத்தின் முக்கிய இலட்சியம் ஆகும்.

புலால் உணவு ஒரு குறிப்பிட்ட வகுப் பினருக்கு மட்டுமே அனுமதிக்கப்பட்டது. நாட்டை ஆளும் சத்திரியர்களுக்கு மற்ற வகுப்பினர் உதாரணமாக வியாபாரிகள் மற்றும் தத்துவ மேதைகள் ஆசிரியர்கள் பிராமணர்கள் வேட்டையாடக் கூடாது மற்றும் புலால் உண்ணக் கூடாது என்று விதிக்கப்பட்டிருந்தது. இத்தகைய பாகுபாட்டின் காரணம் என்ன? ஷத்திரியர்கள் தம்முடைய கடமைகளை ஆற்ற வேண்டுமானால் நாட்டைக் காப்பாற்ற வேண்டு மானால் அவர்களுக்கு மிகுந்த தைரியம் அவசியம். வேட்டையாடுதல், ஆயுதப் பயிற்சி ஆகியவற்றில் அவர்கள் ஈடுபட வேண்டி யிருந்தது. இத்தகைய வேலை களுக்கு அவர்கள் மிகுந்த உடல் வலிமை மிக்க வர்களாக இருத்தல் வேண்டும். இதனால் அவர்கள் புரதச்சத்து நிறைந்த புலால் உணவை உட்கொண்டார்கள்.

இக்காலத்தில் ஒருவர் செய்யும் தொழில் அல்லது அவருக்கு உள்ள நோய், சத்துக் குறைவின் தன்மை ஆகியவற்றிற்குத் தக்க வாறுதான் மருத்துவர்கள் அவரைக் குறிப்பிட்ட உணவை உட்கொள்ளச் சொல்லு கின்றனர். குறிப்பிட்ட உடற்பயிற்சிகளையும் செய்யச் சொல்லுகின்றனர். ஆன்மீக நாட்டமுள்ள வர்களும் கல்வியில் நல்ல தெர்ச்சி பெற விரும்புபவர்களும் புலால், உண்ணக் கூடாது என்று விதிக்கப்பட் டுள்ளது. ஏனெனில் இவற்றில் ஈடுபடுப வர்களுக்கு மனம் அமைதியாகவும் மிகவும் கூர்மையாகவும் இருப்பது அவசியம். ஆனால் நைத்திரி யர்களுக்கே "ரஜோ குணம்" அதாவது தீவிரத்துடன் செயல்களில் ஈடுபடும் குணம் அதிகம் வேண்டும். அத்தகைய குணம் இருந்தால் தான் அவர்களுக்குப் போரில் வெற்றி பெற வேண்டும், சாதனைகள் புரிய வேண்டும் என்ற தீவிர உந்துதல் மனதில் எழும். ஆனால் ஒரு குறிப்பிட்ட வயதை எட்டிய பிறகு ஷத்திரியரும் புலால் உணவைத் தவிர்த்தல் வேண்டும்.

எனவே புலால் உண்ணக்கூடாது என்பது தான் சாஸ்திரங்களின் கட்டளை, புலால் உண்ணலாம் என்று விஷேட அனுமதி கொடுக்கப்படும் பொழுது அது ஒரு சலுகையாகத்தான் கொடுக்கப்படுகிறது. அதே சலுகையைப் பெறுபவரின் இயல்பு, தொழில், வாழ்க்கை முறை, வாழும் இடம், காலம் இவற்றைக் கருத்திற் கொண்டுதான் அச்சலுகை அளிக்கப்படுகிறது. எனவே அச் சலுகை களைச் சரியான முறையில் பயன்படுத்துவோம்.

மேற்கூறிய அறிவுரைகளின் படி புலால் உணவைத் திவிர்த்து ஆன்மீக நாட்டத்தில் ஈடுபடுவோம். நாட்டையும் நம்மையும் குழப்பத்தில் இருந்து பாதுகாப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தனிநபர் சுகாதாரம்

திருமதி.நளினிகலா தவராசா
ஆசிரியர்

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் எனும் முதுமொழிக்கிணங்க மானிடராய் பிறந்த ஒவ்வொருவரும் தனிநபர் சுகாதாரத்தை பின்பற்றி வாழ்வதன் மூலம் ஆரோக்கியமான வாழ்வை வாழலாம். நாம் உட்கொள்ளும் உணவு நாம் நம் உடலை சுத்தமாக வைத்துக் கொள்ளும் முறை உடற்பயிற்சி போன்ற அனைத்தும் நம் உடலை ஆரோக்கியமாக பேணிக் காப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றது. பெரும்பாலான நோய்கள் உடலை சுத்தமாக வைத்துக் கொள்ளாததினால் ஏற்படுகின்றது. ஒட்டுண்ணிகள் (பாராசைட்ஸ்) புழுக்கள் (வார்ம்ஸ்)சொரிசிரங்கு (ஸ்காபில்)புண்கள் (சோர்ஸ்)பற்சிதைவு (டீத்டிகே) வயிற்றுப் போக்கு (டையேரியா) மற்றும் இரத்த பேதி (டிசென்டரி) போன்றவை தனிப்பட்ட நபரின் உடல் சுகாதாரம் சரியில்லாததினால் ஏற்படுகின்றது. இவ் வகை நோய்கள் அனைத்தையும் உடலை சுத்தமாகவும் சுகாதாரமாகவும் வைத்துக் கொள்ள பழகுவதன் மூலம் தடுக்க முடிகிறது.

தலையை (சிரசு)சுத்தம் செய்தல். வாரமொரு முறை அல்லது இரண்டு முறை ஷாம்பு அல்லது சீகைக்காய் உபயோகபடுத்தி தலைக்கு குளிக்கலாம். கண் காது மற்றும் மூக்கை சுத்தம் செய்தல் வேண்டும்.காதுகளில் குடும்பி வாக்ஸ்) எனப்படும் பொருள் உருவாகி காற்று செல்லும் வழியினை அறைக்கிறது. இது வலியை ஏற்படுத்தும் எனவே காதுகளை பஞ்சு கொண்டு வாரம் ஒருமுறை சுத்தம் செய்ய வேண்டும். சுத்தமான தண்ணீரைக் கொண்டு தினமும் கண்களை சுத்த செய்தல் வேண்டும்

மூக்கில் காணப்படும் சளி போன்ற திரவம் காய்வதினால் ஏற்படும் பொருள் மூக்கு துவாரத்தை அடைத்து கொள்ளும். எனவே தேவை ஏற்படும் போதெல்லாம் மூக்கினை சுத்தம் செய்ய வேண்டும். சிறுபிள்ளைகளுக்கு சளி மற்றும் ஜலதோஷம் ஏற்படும் போது மென்மையான துணியினை பயன்படுத்தி மூக்கினை சுத்தம் செய்ய வேண்டும்.

வாய் சுத்தம் செய்தல்

வாயினை சுத்தம் செய்ய மென்மையான பல் பொடி மற்றும் பேஸ்ட் போன்றவை பற்களை சுத்தம் செய்வதற்கு உகந்தவை. தினமும் காலை எழுந்தவுடன் மற்றும் இரவு உறங்க செல்லுமுன் என இரண்டு வேளை பற்களை சுத்தம் செய்ய வேண்டும். கரித்தூள் உப்பு கரட்டு தன்மை கொண்ட பல் பொடிகள் கொண்டு பற்களை சுத்தம் செய்யும் போது பற்களின் வெளிப் படலத்தில் கீறல்கள் ஏற்படுத்தும்.எந்தவொரு உணவு பொருட்களையும் உட்கொண்ட பின்னர் சுத்தமான தண்ணீரை கொண்டு வாயினை கழுவ வேண்டும். இவ்வாறு செய்வது உணவு பொருள்கள் பற்களின் இடையில் படிந்து துர்நாற்றத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்துவது பல் ஈறுகளை கெடுப்பது மற்றும் பற் அல்லது சூத்தை, பற்சிதைவு ஏற்படுவது போன்றவற்றை தடுக்க முடிகின்றது.

சுத்தமான உணவு பொருட்களை உட் கொள்ள வேண்டும். இனிப்பு பொருட்கள் சாக்லேட் ஐஸ்கிரிம் மற்றும் கேக் போன்ற உணவுகளை குறைந்தளவிலே உட்கொள்ள வேண்டும்.பற்சிதைவுக்கான அறிகுறிகள் தென்படும் போது பல் மருத்துவரை உடனடியாக சந்தித்து மருத்துவ ஆலோச னைகளை பெற வேண்டும். முறையாக மற்றும் சரியாக பல் துலக்கும் முறைகள் பற்களில் கறை படிவதை தடுக்க உதவு கின்றது. சூடான அல்லது குளிர்ந்த பொருட்களின் உண்பதை தவிர்க்கவேண்டும்

தோலினைச் சுத்தமாக பராமரித்தல்

தோல் உடலை முழுவதும் மூடியுள்ளது. இது உடல் உறுப்புக்களை பாதுகாக்கின்றது. உடல் வெப்பநிலையை சீராக வைத்துக் கொள்ள உதவுகின்றது. தோல் உடலில் உள்ள கழிவு பொருட்களை வியர்வையாக வெளியேற்ற உதவுகிறது.தோலில் குறைபாடு இருப்பின் வியர்வை சுரப்பிகள் அடை படுகிறது. இதன் விளைவாக புண்கள் (சோர்ஸ் பருக்கள் அக்கி) போன்றவை ஏற்படுகின்றன.இதனை தடுக்க இரசாயனம் கலவாத சோப்புக்களை பயன்படுத்துவதுடன் மருத்துவ சிகிச்சை எடுத்து கொள்ளவேண்டும்.

தோலைச் சுத்தமாக வைத்துகொள்ள தினமும் சுத்தமான தண்ணீர் மற்றும் சோப்பினை கொண்டு காலை மாலை இருவேளைகளும் குளிப்பது நல்லது.மனித உடலின் தோல் பகுதி ஆரோக்கியத்தின் கண்ணாடி. தவறான உணவுப் பழக்கம் அவ்ஜி சுகாதாரத்தில் கவனம் இல்லாமை சத்துக் குறைபாடு போன்ற காரணங்களால் தோல் நோய்கள் ஏற்படுகின்றது. தோல் நோய்களை கண்டுகொள்ளாமல் விடுவதால் பல்வேறு மன உளைச்சல்களை ஏற்படுத் துகின்றது. எனவே தோல் நோய்களை ஆரம்பத்திலேயே குணப்படுத்த வேண்டும்.

தோலினை பாதுகாக்க புற ஊதாக் கதிர்களின் தாக்கம் இல்லாமல் காப்பதன் மூலம் தோல் நோய் மற்றும் புற்றுநோயை தவிர்க்கமுடியும். வெளியில் சென்று வந்ததும் இளம் சூட்டு நீரால் முகத்தை கழுவி பஞ்சு அல்லது துண்டால் முகத்தை அழுத்தி துடைத்து இறந்த செல்களை நீக்கலாம். காய்ந்த மற்றும் வறண்ட சருமத்திற்கு கொழுப்புள்ள சோப்புக்களை பயன்படுத்தலாம். எண்ணெய் பசை சருமத்தை தினமும் மூன்று முறை சுத்தம் செய்ய வேண்டும். முகத்தில் உள்ள சுரப்பிகள் அடைத்து கொள்வது மற்றும் பக்டீரியா தொற்றின் காரணமாக முகத்தில் பருக்கள் தோன்றுகின்றது. இது தவிர தைரொயிட் சுரப்பியின் மாறுபட்டாலும் பருக்கள் முடிவளர்வது போன்ற தொல்லைகள் ஏற்படுகின்றது. இது போன்ற பிரச்சினைகளுக்கு மருத்துவ ஆலோசனை பெற்று ஆரோக்கியமாக வாழலாம். கைகளை சுத்தமாகப் பேணுதல் உணவு உட் கொள்வதற்கு முன்னும் பின்னும் மல வாயினை சுத்தம் செய்வது மூக்கினை சுத்தம் செய்வது மாட்டு சாணம் அள்ளுவது போன்ற செயல்களை கைகளை கொண்டு செய்கின்றோம். இது பல நோய்களை ஏற்படுத்தும். அதனால் செயல்களை செய்து முடித்த பின் சோப்பினை கொண்டு சுத்தமாக கழுவிக் கொள்ள வேண்டும். நகங்களின் கீழ் மற்றும் தோலின் மேற் பரப்பில் நுண்ணங்கிகள் தங்கியிருக்கும். அதனால் செய்யும் செயல்களின் பின் மிக முக்கியமாக சமைப்பதற்கு முன் கைகளை (மணிகட்டிற்கு மேல் விரல் இருக்குகள் மற்றும் நகச் சந்துக்கள்) சோப்பு கொண்டு கழுவுவது பல நோய்கள் ஏற்படுவதை தடுத்து நிறுத்த உதவுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகங்களை வெட்டாமல் இருப்பதால் காயம் ஏற்படுகின்றது. மூக்கை நோண்டுவதால் காயம் ஏற்படுகின்றது.

இரத்தம் மலம் சிறுநீர் வாந்தி போன்றவற்றை தொடுவதையும் தவிர்த்து கொள்ள வேண்டும் மலம் மற்றும் சிறுநீர் கழிக்கும் போது சுத்தம் பேணப்பட வேண்டும். மலம் மற்றும் சிறுநீர் கழித்த பின் உறுப்புக்களை சுத்தமான நீரைக்கொண்டு முன்னிருந்து பின்னாக சுத்தம் செய்தல் வேண்டும். கைகளை சோப் கொண்டு கழுவ வேண்டும். கழிவறை குழியலறை மற்றும் சுற்றுபுறத்தை சுத்தமாக வைத்துகொள்ள வேண்டும். திறந்த வெளியில் மலம் கழிப்பதை தவிர்க்க வேண்டும்.

இனப் பெருக்க சுகாதாரம்

இனப் பெருக்க உறுப்புக்களை சுத்தமாக வைத்துகொள்ள வேண்டும். பெண்கள் மாதவிடாய் நேரங்களில் அவசியம் தூய்மையான துணியினை பயன்படுத்த வேண்டும். துணியினை (நாப்கின்ஸ்) ஒருநாளில் குறைந்தது இரண்டு முறை மாற்ற வேண்டும். இனப் பெருக்க உறுப்பபுக்களில் நோய் தொற்றினை காணும் உடனடியாக மருத்துவ சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும்.

உணவு மற்றும் சமையலின் போது சுகாதாரம் பேணுதல்

சமைக்கும் போது சுகாதாரமான முறையில் சமைப்பதினால் உணவு மாசுபடுதல் உணவு நஞ்சாகுதல் மற்றும் நோய் பரவுதல் போன்றவற்றை தவிர்த்து கொள்ளலாம். சமைக்கும் பகுதி சமையல் பொருட்கள் சுத்தம் பேணுதல் அழுகிய கெட்டுபோன உணவுகளை தவிர்த்தல் சமைப்பதற்கு முன்னும் பரிமாறும் முன்பும் கைகளை சுத்தமாக கழுவுதல் வேண்டும். காய்கறிகள் மற்றும் உணவுபொருட்கள் சமைப்பதற்கு முன் நன்கு கழுவ வேண்டும். பாதுகாப்பான முறையில் உணவுப் பொருட்களை சேமித்து வைத்தல். உணவு பொருட்கள் வாங்குமுன் எந்த நாள் வரை அப்பொருள் பயன் படுத்தலாம் என்ற விபரத்தை பார்த்து வாங்க வேண்டும். (Expire date) என்று அட்டையில் குறிப்பிடப்படும் திகதி காலாவ தியான பொருட்களை வாங்கி பயன்படுத்த கூடாது. சமையலறை கழிவுகளை சரியான முறையில் வெளியேற்ற வேண்டும்.

மருத்துவ சுகாதாரம் காயம் ஏற்பட்டால் சரியான சுத்தமான பேன்டேஸ் அல்லது துணியினை உபயோகித்து பராமரிக்க வேண்டும். மருந்துகளை வாங்கும் போது அம்மருந்து பயன்படுத்த வேண்டிய நாள் திகதி என்ன என்பதை பார்த்து வாங்க வேண்டும். தேவையற்ற மருந்துகளை பாதுகாப்பான முறையில் அப்புறபடுத்த வேண்டும். மருத்துவரின் ஆலோசனையின்றி மருந்துகளை வாங்குவதோ பயன்படுத்துவதோ கூடாது. எனவே தனிப்பட்ட நபர்கள் ஒவ்வொருவரும் சுகாதார முறைகளை கடைப்படித்து நோயின்றிய ஆரோக்கியமான வாழ்வை வாழ்வோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி.ம.சுகந்தன்
ஆசிரியர்

21ம் நூற்றாண்டில் ஆசிரியரின் வகி பங்கு

ஒருவர் தனது தொழிலை சிறப்பிக்கவும் மேம்பாட்டை அடையவும் சேவையாளரின், பயனாளிகளின் ஆர்வத்தை அதிகரிக்கவும் தான் ஏற்றுக்கொள்ளும் நடிபங்கே வகிபங்கு / வகிபாகம் எனப்படும்.

ஆசிரியர் எனப்படுபவர் தான் வாழும் சமூகம், சூழல் என்பவற்றுக்கேற்ப தன்னைப் பொருத்தி தான் வாழும் சமூகம் எதனை எதிர்பார்க்கின்றதோ அதனை ஈடு செய்து கொள்பவர் ஆவார். ஆசிரியர் வயது அந்தஸ்து கௌரவம் என்பவற்றை கருத்தில் கொள்ளாது மாணவரின் தேவை விருப்பத்திற்கேற்ப தன்னை உருமாற்றிக் கொள்ள வேண்டும்.

பாரம்பரிய கண்ணோட்டத்திலே ஆசிரியர் நல்லவராக அறிவு மிக்கவராக ஆன்மீக ஒழுக்கம் நிறைந்தவராக மனித நேயம் கொண்டவராக எதிர்பார்க்கப்பட்டார் 20ம் நூற்றாண்டிலே ஆசிரியர் தான் கற்பிக்கும் பாடத்தில் தேர்ச்சி தொழில் அர்ப்பணிப்பு மாணவனை அறிந்து செயற்படுத்தும் தன்மை பலதரப்பட்ட கற்பித்தல் முறை பற்றிய அறிவு அவற்றினைகையாழும் திறன் கொண்டவராக எதிர்பார்க்கப்பட்டார்.

21ம் நூற்றாண்டிலும் ஆசிரயரிடம் 20ம் நூற்றாண்டை ஒத்ததாகவே அறிவு, திறன், உற்பத்தி மொழி, ஆற்றல், கற்பித்தல், திறன்கள், முகாமைத்துவ திறன்கள், பொறுப்புக் கூறும் தன்மை கவரும் தன்மை உளவியல் அறிவு என்பன எதிர்பார்க்கப் படுகின்ற போதிலும் 21ம் நூற்றாண்டில் திறன்களிற்கேற்ப விசேட வகி பாகங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

21ம் நூற்றாண்டின் திறன்களாக

1. இலத்திரனியல் எழுத்தறிவு
   Digital age literacy
2. புத்தாக்க ஞானம் கண்டறியும் ஞானம்
   Inovetive Thinking
3. பயனுறுதி மிக்க தொடர்பாடல்
   Effective communicative
4. உயர் விளைபாக்கம்
   High Productivity

இவ்வாறாக 21 ம் நூற்றாண்டின் திறன்களை முகாமைத்துவம் செய்வதாக புதியதோர் உலகில் விரைவாக மாறிவரும் விஞ்ஞான தகவல் தொழில்நுப்பம் கோளமயமாதல் போன்ற காரணிகளினால் புதிய எதிர்பார்ப்பும் பிரச்சினைகளும் தோன்றிக் கொண்டே இருக்கின்றது இப் புதிய அறை கூவல்களுக்கு முகங்கொடுக்க கூடியவாறு மாணவர் சமூகத்தை உருமாற்றம் செய்யக் கூடிய மாற்ற முகவர் எனும் வகிபாகத்தை 21 ம் நூற்றாண்டின் ஆசிரியர் ஏற்க வேண்டி உள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுனஸ்கோவின் அறிக்கையிலே 21ம் நூற்றாண்டின் ஆசிரியரின் வகிபாகம் பற்றிய பின்வருமாறு கூறப்படுகின்றது அவர் பாடப்புலமை நிறைந்தவராக உயர் தொழிற்ற கமை கொண்டவராக தொடர்பாடலில் பிரத் தியேக திறன் கொண்டவராக கற்பித்தலில் மாணவர்களை பங்காளிகளாக பயன்படுத்தும் ஆற்றல் மிக்கவராக படைப்பாற்றல் புத்தாக் கங்களை ஊக்குவிப்பவராக பிரச்சினையை இனங் காண்பதற்கும் தீர்த்தலுக்குமான ஆற்றல் கொண்டவாராக சமூக நீதிக்கும் முக்கியத்துவம் அளிப்பவராக தொழில் மகத்துவத்தை பேணுபவாராக இருத்தல் வேண்டும் எனக் கூறப்படுகின்றது.

எதிர் வரும் நூற்றாண்டில் பொருளா தாரத்தை ஈட்டித்தரும் பொருளாதாரத் துறைகளாக தகவல் தொழில் நுட்பம் Information Technology உயிரியல் தொழில்நுட்பம் Bio Technology நனோ தொழில் நுட்பம் Nano Technology கலாசார தொழில்நுட்பம் Cultural Technology விண்வெளி தொழில்நுட்பம் Space Technology சுற்றாடல் தொழில் நுட்பம் Environmental Technology என்பவற்றிற்கு மாணவர்களை தயார்படுத்த வேண்டிய பொறுப்பு 21ம் நூற்றாண்டின் ஆசிரியர்களுக்கே உரியது.

அத்துடன் தற்போது பாடசாலையில் நுழையும் மாணவர்கள் ஒவ்வொருவரும் மிகுந்த சந்தேகங்களுடனும் ஆராய்ச்சி மனப்பான்மையுடனும் புதியவற்றில் அதிக ஆர்வம் காட்டியும் கற்றலில் ஈடுபடுகின்றனர். இம் மாணவர்கள் தேடியறியக் கூடிய வர்களாக Explorer பகுப்பாய்வு செய்யக் கூடியவர்களாக Analyst புலனாய்வு செய்யக் கூடியவர்களாக Investigator ஆய்வாளர்களாக Researcher பிரச்சனை தீர்ப்பர்களாக Problem Solver காணப் படுகின்றானர். இவ்வாறான பண்புகளைக் கொண்ட மாணவர்களை வழிப்படுத்தும் ஆசிரியர்கள் (Cocher) பயிற்றுனராக பாட உள்ளடக்கத்தை ஆக்குபவராக (Content Creator) ஆலோசகர் (Mentor) முகாமை யாளராக (Manager) இணைந்து கற்பவராக (Follow Learner) காணப்படல் வேண்டும்.

மீளக்கற்றல், புதியனக்கற்றல், இற்றைப் படுத்தல் என்பன ஆசிரியர்களிடம் இருக்க வேண்டிய பண்புகளாகும். ஆசிரியர்கள் எப்போது கற்றலை நிறுத்துகின்றார்களோ அன்றே கற்பித்தலையும் நிறுத்தி விட வேண்டும். கற்க மறுப்பவன் வாழ மறுப்பவனாக கருதப்படுகின்றான் ஏனெனில் தொடர்ந்து வரும் விஞ்ஞான தொழில் நுட்பவியல் மாற்றங்கள் மாணவரிடையே அபார ஆற்றல்களை விருத்தி செய்துள்ளது.

இம் மாணவர்களிற்கு கற்பிக்கும் ஆசிரியர்கள் தொடர்ந்தும் அவர்களுடன் இணைந்து கற்றுக்கொள்ளல் அவசிய மாகின்றது இந்தியாவின் முன்னால் ஜனாதிபதியும் விஞ்ஞானியும் கல்வியாள ருமான டாக்டர் அப்துல் கலாம் 21ம் நூற்றாண்டிற்கான ஆசிரியர்கள் மாணவர் களின் ஆற்றல்களை கட்டியெழுப்பு வதற்கான கருவிகள் என வர்ணிக்கின்றார். எனவே ஆசிரியர்கள் மாணவர்களின் ஆற்றல்களை பின்வரும் புலன்களின் ஊடாக வளர்த்தல் வேண்டும். அவை ஆராய்ச்சி தேடல் புத்தாக்கம் உயர் தொழில்நுட்ப செயற்பாடு Entre Prenturial தலைமைத்துவம் ஒழுக்கம் சார் தலைமை த்துவம் என்பனவாகும்.

கலைத்திட்டத்திலே ஆரம்பக்கால கல்விமுறை ஆசிரியர் மையமாகவும் Teacher Based பின் இடைக் காலங்களிலே அது மாணவர் மையமாகவும் Student Based தற்போது தேர்ச்சி மையம் Competency Based ஆகவும் பிள்ளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேயமாகவும் Child Friendly காணப் படுகின்றது ஆரம்ப காலங்களில் ஒருவழித் தொடர்பில் கல்வி போதிக்கப் பட்டது பின் இரு வழித்தொடர்பாகவும் தற்போது செயற்பாட்டுடன் கூடிய சிநேகித பூர்வமாக கற்றல் முறை மேற்கொள்ளப் படுகின்றது.

சிரேஸ்ட ஆசிரியர்களும் புதிய ஆசிரி யர்களுக்குமிடையே தற்போதைய கற்பித்தல் முறையிலே முரண்பாடான கருத்துக்கள் நிலவி வருகின்ற போதிலும் தற்கால மாணவர் சமூகத்திற்கு ஏற்ற முறையாக செயற்பாடுகளில் மாணவர்களுடன் ஆசிரியரும் இணைந்து செயற்படுதல் அவசியமாகின்றது குறித்த திறனை மாணவர் அடையும் பொருட்டு அவசியமான தத்து வங்களையும் நுட்பங்களையும் செயல்முறை ரீதியில் பிரயோகிக்க கூடிய ஆற்றலை வழங்கக் கூடியவராக ஆசிரியர் காணப்படல் வேண்டும். மாணவர்கள் கலைத் திட்டங்களிலே வகுக்கப்பட்ட தேர்ச்சிகளை அடையக்கூடியவாறு ஆசிரியரின் வகி பாகம் மாற்றமடைய வேண்டும்.

ஆசிரியர் KASP மாதிரியை பயன்படுத்தி அறிவு திறன் மனப்பாங்கு பயிற்சி என்பவற்றை வாழ் நாள் முழுவதும் நீடிக்க கூடியதாக வழங்க வேண்டும் டாக்டர் அப்துல் கலாம் ஆசிரியர்களை மாணவச் சமூகத்தை நாட்டின் தலை விதியை வடிவமைக்கப் போகும் சிற்பிகள் எனக் கூறுகின்றார். இந்த வகையில் தானத்தில் சிறந்த தானம் வித்தியா தானம் என்ற கூற்றுக்கு இணங்க அர்ப்பணிப்புடனும் ஈடுபாடுடனும் எமது சேவையில் தர்ம வழியில் நடை பயில்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தனிப்பட்ட மற்றும் தொழில்சார் வாண்மைகளை விருத்தி செய்தல்

திருமதி.நந்தினி சர்மிலன்
ஆசிரியர்

தற்போதைய காலத்தில், சிறந்தபரீட்சைப் பெறுபெறுகளோ பெயருக்குப் பின்னால் சூட்டப்படும் கல்வித்தகமை பட்டங்களோ வாழ்வில் சிறந்த நிலையை ஒருவர் அடைய போதுமானதாக இல்லை காரணம் எத் துறையை எடுத்தாலும் போட்டிகள் அதிமாகி விட்டன இவ்வாறாக தற்போதைய கலியுகத்தில் மனிதன் ஒருவன் தொழில் ரீதியிலோ சமூகத்தில் தனிநபர் ரீதியாகவோ உயர்ந்த நிலையை அடைய வேண்டுமெனில் பல்வேறுபட்ட திறன்களையும் தகைமை களையும் அவர் கொண்டிருக்க வேண்டிய அவசியம் நிலவுகின்றது.

அவ்வாறு நாம் அத்திறன்களை நோக்குவோமாயின் தனிநபர் நடத்தைகளும் தொழில்சார் வல்லமைகளும் வெற்றிக்கு கால்கோல்களாக அமைகின்றன.

தனிநபர் ஒருவர் தனது தொழிலிலும் சரி வேறு தனிப்பட்ட வேலைகளிலும் சரி மிகவும் அவதானமாகவும் கவனமாகவும் இருத்தல் அவசியம். அவ்வாறு கவனம் பேணும் சந்தர்ப்பங்களில் அவரால் தேவை யற்ற நஸ்டங்களைக் குறைக்க முடிவதுடன் தமது தொழிலை தொடர்ந்தும் சிக்கலற்ற முறையில் நடத்திச்செல்ல முடிகின்றது.

அவ்வாறே மிகவும் முக்கியமான பண்பாக கூட்டுறவு பேணுதல் அமைகின்றது ஒற்றுமை என்பது அனைத்து சந்தர்ப்பங்க ளிலும் பேணப்பட வேண்டிய ஒன்று சமூகத்தில் சிறந்த மரியாதையுடனும் சிறப்புடனும் வாழ விரும்பும் ஒவ்வொரு மனிதனுக்கும் இருக்க வேண்டிய பண்பு மற்றவர்களை அனுசரித்து பேணி ஒத்து வாழ்வதாலும் தொழில்புரிவதாலும் சுயமரியாதை பேணப்படுகின்றது. அவ்வாறே பணிபுரியும் இடங்களில் முதலாளியின் நற்பெயரை சம்பாதிக்கவும் பகையின்றி தொழில் புரிவதற்கும் ஒற்றுமை அவசியம்.

புத்தாக்க திறன் தொழிலில் பதவியுயர்வு மற்றும் வேறு சலுகைகளைப் பெறுவதற்கு அவசியமானது அனைத்தையும் பிறிதொரு கண்ணோட்டத்தில் பார்த்தல் மற்றும் ஆராய்தலே புத்தாக்கத் திறன் ஆகும். பலகோடி சாதாரண மனிதர்களின் முடிவுகளையும் ஆலோசனை மற்றும் பரிந்துரைகளையும் விட சிறிய புதிய சிந்தனையே உயர்ந்த மனிதர்களை கவர்கின்றது.

செய்யும் தொழிலில் ஒழுக்கமும் கட்டுப்பாடும் பேணப்படுதல் வேண்டும் வேண்டா வெறுப்புடன் ஆற்றும் எந்தக் காரியமும் வெற்றியில் முடிந்ததாக இல்லை தொழில் மீது பற்று வைத்தல் அவசியம் பொறுப்பாக தரப்பட்ட பணிகளை ஆற்றும் போது சோம்பலாகவும் கவனம் சிதறிச் செயற்படுதலும் ஒழுக்கமற்ற செயல்களாகும். இவ்வாறு செய்யும் சந்தர்பங்களில் உங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீது மற்றவர்கள் கொண்ட நம்பிக்கையும் மரியாதையும் நலிவுறுகின்றன.

தொழில் மட்டுமின்றி வாழ்வின் அனைத்து இடங்களிலும் எம் நடத்தை எம்மைப் பற்றிய பார்வையில் மிகவும் உட்பொருந்தி உள்ளது நாம் அணியும் ஆடைகள் மற்றவர்களுடன் பேசும் வடிவம் அசைவுகள் அனைத்துமே மனித நடத்தையில் தங்கி உள்ளது. சில சமயங்களில் சில இடங்களில் வழமையக்கு மாறான நடத்தை களால் பல தீய விளைவுகள் உண்டாகும் வாய்ப்புக்கள் உள்ளன. சக தொழிலாளர்களுடன் பழகும் விதம் முதலாளி மேல் உள்ள விசுவாசம் வேலையில் உள்ள கருத்து போன்றன தொழில் புரியும் இடத்தில் எம் நிலையை உயர்த்துகின்றன.

வெற்றிக்கு அடிப்படையே தன்னம்பிக்கை ஆகும் எதையும் என்னால் செய்ய முடியும் அனைத்துக்கும் நான் தகுதியானவன் என்னால் முடியாதவை உலகில் எதுவும் இல்லை என்ற நம்பிக்கை எந்த கடினமான சந்தர்ப்பங்களிலும் மனம் தளராது போராட வழி வகுக்கும். தோல்விகளை எண்ணி வருந்துவதற்கு பதில் வெற்றியை நோக்கி நம்மை இழுத்துச் செல்லும் தொழில் ரீதியாகவும் சிறந்த நிலையை அடைய உதவியாக இருக்கும்.

இவ்வாறான தகமைகள் தனிநபர் வாண்மை விருத்தியை விருத்தி செய்ய உதவுகின்றன அவ்வாறே குறிப்பாக தொழில்புரியும் இடத்தில் சிறக்க சில தொழில்சார் வாண்மைகளை விருத்தி செய்தல் அவசியம்.

அனைத்துத் தொழிற்சாலைகளிலும் வேலை செய்வோர் பற்றிய பாதுகாப்பு பேணப்பட்டு வருகின்றன. தொழில்புரியும் போது மற்றவர்களுக்கு ஆபத்தாகும் எந்த செயலையும் நாம் ஆற்றல் கூடாது அதற்காக நாம் நமது சக தொழிலாளர்களின் நடத்தைகள் பற்றியும் எவ்வாறு அவர்களுடன் செயற்படுவது என்பதனையும் ஆராய்ந்து அறிய வேண்டும். பொறுமை மென்மைத் தன்மை சகிப்புத்தன்மை போன்ற ஆற்றல்கள் தொழில் புரியும் இடத்தில் மிகவும் உதவுகின்றன.

சமூகத்தை பேணுதல் தனிநபர் கடமைகளுள் ஒன்றாகும் நாம் கலந்துரையாடும் விதம் உதவி செய்யும் மனப்பாங்கு சமூகத்தில் நம்மை சிறந்தவர் என பெயர் சம்பாதித்து தருகின்றது நாம் வாயால் உரையாடும் போதும் எழுத்து மூலமாக தொடர்புகள் மேற்கொள்ளும் போதும் எம் எல்லைகளைக்காத்தல் வேண்டும் பெறுநரை புண்படுத்தும் படியாக வார்த்தைகளை விடுதல் கூடாது அவ்வாறே சமூக விழாக்களில் பங்கி பற்றி சில பல உதவிகளை செய்தல் மூலம் அனைவரிடமும் இருந்து மரியாதை கிடைக்கின்றது.

தொழில் ஒன்று இருந்தாலே பிரச்சனைகள் பல நேரிடுவது வழமையான ஒன்றே. அவ்வாறு தொழிலாளர்கள் மூலம் நேரிடும் பிரச்சினைகளும் நம் மனிதன் மூலம் நேரும் பிரச்சினைகளையும் முகம் கொடுத்து தீர்த்தல் ஆழுமை ஆகும். அவ்வறோ செய்தல் மூலம் தொழில் சிறந்த முறையில் வளர்ந்து செல்லும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாணவர் கல்வியில் கற்றல் வள நிலையம்

திருமதி. சிவகுமாரி செல்வரத்தினம்
கற்றல் வள நிலைய பொறுப்பாசிரியர்

மாணவர் கல்வியை விருத்தி செய்ய வழிவகுக்கும் இடமாக கற்றல் வள நிலையம் அமைந்துள்ளது. எந்த ஒரு மாணவன் தேடலில் கால் பதிக்கின்றானோ அவன் கல்வியில் உயர்ந்தவனாக மாறுகின்றான். நாளாந்தம் பெறும் கல்வியியை உயர்ந்த பட்சம் பயன் பெறும் இடமாக மாற்ற கற்றல் வள நிலையம் முக்கிய பங்கு வகிக்கின்றது. "நூல் பல கல்" இது ஒவ்வொரு மாணவன் மனதிலும் நிலைத்திருக்க வேண்டும். "வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்" வாசிப்பை நேசிப்பதன் மூலம் மக்கள் அனைவரும் உயர்நிலை அடைய முடியும்.

"நயன் மிகு நூல் பல கற்ற
நற் சமூகத்தை உருவாக்குவோம்" என்பதே எமது தூர நோக்கமாகும்.

மாணவர்கள் அனைவரும் "தரமான கல்வியை சுயமாகக் கற்க உயர்வான நூல்களைத் தினந்தோறும்நாடி" தம்மை வளர்த்தக் கொள்ள வேண்டும்.

அந்த வகையில் எமது பாடசாலையின் கற்றல் வள நிலையம் 2010 களிற்கு முன்பு வகுப்பறையின் ஓரத்தில் இரண்டு புத்தக அலுமாரிக்குள் அடங்கியிருந்தது. ஓய்வு பெற்ற வங்கி உத்தியோகத்தர் திரு. க. விக்கினேஸ்வரன் ஐயா அவர்களின் தூர நோக்கு சிந்தனையின் விளைவாக அவரது மாமனா ரான எமது பாடசாலை முன்னை நாள் ஆசிரியர் அமரர். திரு. வேலாயுதர் செல்லையா அவர்களின் ஞாபகார்த்தமாக 14.10.2011 ல் ஓரளவு வசதியுடன் ஒரு கற்றல் வள நிலையம் அமைக்கப்பட்டது. தொடர்ந்து ஆசிரியர் மாணவர் பிறந்தநாள் நூல் அன்பளிப்புக்கள், நூல் சேகரிப்புக்கள் மற்றும் நிறுவனங்கள் தனிப்பட்டவர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் கற்றல் வள நிலையத்துக்கான ஒதுக்கீடுகள் மூலம் நூல்களின் எண்ணிக்கை அதிகரித்தது. அதனூடாக கற்றல் வள நிலைய இதர உபகரணங்களும் அதிகரித்து இன்றுவரை எமது கற்றல் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து வருகின்றது. குறுகிய இடத்தில் நிறைந்த பயனளிக்கும் எமது கற்றல் வள நிலையம் வலய மட்டப் போட்டிகளில் பங்கு பற்றி வெற்றீயீட்டியமை சான்றாக அமைகின்றது.

வலய மட்டத்தில்

2014 ம் ஆண்டு முன்றாம் இடம்
2015 ம் ஆண்டு மூன்றாம் இடம்
2016 ம் ஆண்டு இரண்டாம் இடம்

பெற்றுக் கொண்டமை இதன் சிறப்பம்சம் ஆகும். இவ் வெற்றிக்குத் துணையாக இருந்து உழைத்தவர் அக் காலப்பகுதியில் கற்றல் வளநிலைய பொறுப்பாசிரியராக இருந்த திருமதி சிவமலர் நாகலிங்கம் என்பவராவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது கற்றல் வள நிலையத்தில் இன்று 1812 நூல்கள் உள்ளன. இந்நிலையில் ஒரு சமயத்தில் 20 மாணவரை உள்வாங்கி வாசிப்பு பகுதியை செயற்படுத்தவது கூடக் கடினம். இடவசதி என்பது மிக நெருக்கீடாக உள்ளது. அரம்பப்பிரிவு மாணவர்களுக்கான கற்றல் வள பாவனை மந்த கதியிலேயே அமைந்துள்ளது. மாணவர் கற்றல் நிலையை கருத்தில் கொண்டு நோக்குவோமானால் மேலும் அதிகரிக்க வேண்டிய அடிப்படைத் தேவைகள் பல உள. அந்த வகையில்

1) சகல வசதிகளுடனும் கூடிய நிரந்தர கட்டிடவசதி
2) கலைத்திட்ட மாற்றங்களுக்கு பொருத்தமான நூல்கள், பாரம்பரிய நூல்கள் மற்றும் சஞ்சிகைகள்
3) உட்கட்டமைப்பு வாசிப்பு பகுதி ஆரம்பப்பிரிவு இடை நிலைப்பிரிவு என பிரிக்கப்பட்டிருத்தல்.
4) நவீன தொழில் நுட்ப மாற்றங்களுடனான இலத்திரனியல் தகவல் தொடர்பு சாதனங்கள்.

இவ் வசதிகள் அனைத்தும் ஒருங்கே அமையப் பெற்ற அழகிய அமைதியான உள்ளங் கவரும் கற்றல் வள நிலையம் எமது பாடசாலையில் அமைக்கும் பட்சத்தில் கற்றலுக்கு அதுவே ஏணிப்படிகளாக அமைந்து கல்வியில் அதி உயர்வை பெற முடியும்.

கல்வி அனைவருக்கும் பாகுபாடின்றிக் கிடைக்கக்கூடிய வகையில் பாடசாலையையும் கற்றல் வள நிலையமும் இயங்க வேண்டும். மாணவப் பருவம் மகிழ்ச்சினான பருவம் பொறாமையற்ற உள்ளத்துடன் போட்டி போட்டு கற்க துண்டும் பருவம். இன்றைய மாணவர்கள் ஆற்றல் மிக்கவர்கள் தேடலில் ஆர்வம் உடைய வர்கள் அவர்கள் ஆற்றலுக்கும் தேடலுக்கும் வழிகாட்டுவது வளர்ச்சியடைந்து வரும் நவீன தகவல் தொடர்பு சாதனங்களாகும். எனவே அதற்கேற்ற வகையில் கற்றல் வள நிலையம் அமைக்கப்பட வேண்டும். நவீன இலத்திரனியல் தகவல் தொடர்பு சாதனங்களை தன்னகத்தே கொண்டு மாணவர் சுய கற்றலுக்கு வழிகாட்ட வேண்டும். வெறும் புத்தக கல்வியால் அறிவு ஜீவிகளாக முடியாது ஐம்புலன்களுடாகவும் வாழக் கற்க வேண்டும்.

மாணவர் கல்வியானது பாடசாலையுடன் முடிவடைவதில்லை அவர்கள் சந்ததி வரைக்கும் நீடிக்கும். இன்று நாட்டில் நிலவும் கொலை, கொள்ளை, காம வெறியாட்டங்ளுக்கு காரணமானவர்களை அன்று பாடசாலையும் கற்றல் வள நிலையமும் சரியாக வழிநடத்தவில்லையோ? என்பது என்னை கொஞ்சம் சிந்திக்க வைக்கிறது.

எமது இன்றைய மானவர்கள் தான் நாட்டை எதிர் காலத்தில் நல் வழிப்படுத் துபவர்கள் அஹிம்சை, ஒற்றமை வளர்ச்சிக்கு வித்திடுபவர்கள். அவர்கள் சுய கற்றலுக்கு ஏற்ற வகையில் நவீன இலத்திரனியல் தகவல் தொடர்பு சாதனங்கள் வயது பிரிவினர்க்கு ஏற்ற வகையில் வாசிப்பு பகுதிகள், பல்வேறுபட்ட நூல்கள் சஞ்சிகைகள், பத்திரிகைகள், கலைத்திட்டத்துக்கமைவான நூல்கள் கொண்ட நிரந்தரமான கற்றல் வள நிலையம், பாடசாலைகள் தோறும் அமைக்கப்படின் அதுவே பாடசாலைக்கும் அப் பிரதேசத்துக்கும் நாட்டுக்கும் பெருமை சேர்க்கும் என்பது உறுதியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இன்றை உலகில் வணிக நிறுவனங்கள் எதிர்கொள்ளும் வாய்ப்புக்களும் அச்சுறுத்தல்களும்

திருமதி.கலைமகள் சியாம் சுந்தர்
ஆசிரியர்

ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி நகர்ந்து செல்லும் இன்றைய வணிக நிறுவனங்கள் மீது தாக்கம் செலுத்த கூடிய காரணிகளின் தொகுதிகளை வணிக சூழல் எனக் கொள்ளலாம். இச் சூழலை ஆய்வு செய்வதன் மூலம் பலம், பலவீனம், வாய்ப்பு, அச்சுறுத்தல் என்பவற்றை இணங்கண்டு வணிகத்தின் அகச் சூழல் காரணிகளால் பலம், பலவீனமும் புறச்சூழல் காரணிகளால் வாய்ப்பு அச்சுறுத்தலும் இனங்காணப்படுகின்றன.

ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாக வணிகத்தின் அச்சுறுத்தல்களும் வாய்ப் புக்களும் அமைகின்றன. இங்கு அச்சுறுத தலானது வியாபாரத்தை முன் னோக்கி நகர்த்தும் ஒரு விடயம் ஆகும். அனேக நிறுவனங்களுக்கு அச்சுறுத்தல்கள் ஒரு எதிரான விளைவுகளை உருவாக்கும்அம்சமாக விளங்கினாலும் அவை மூலம் புதிய வாய்ப்புக்கள் உருவாக வழி வகுப் பதுடன் புதிய வாய்ப்புக்கள் உருவாகவும் போட்டி நிறுவனங்களை விட முன்னிலை வகிப் பதற்கும் தூண்டு கோலாகவும் அமைகின்றன.

கடந்த காலங்களில் ஏற்பட்ட உலக பொருளாதார நிலைமைகளைமாற்றியமைத்த காரணிகளாக உலக வங்கி நிதி நிலைமை களில் ஏற்பட்ட மாற்றங்கள் பயங்கரவாத தாக்குதல்கள் இவற்றுடன் அரசியல், பொருளாதார, சமூக சூழல் மாற்றங்கள், பாரிய பொருளாதார பாதிப்புக்களை ஏற்படுத் தினாலும் பல நிறுவனங்களுக்கு இவை பொருளாதார வாய்ப்புக்களை வழங்கி யுள்ளன. குறிப்பாக புதிய வியாபார சந்தைகள் வியாபார செயன்முறைகள் பயிற்சிகள் கருவிகள் உபகரணங்கள் புதிய சேவைகள் புதிய பொருட்கள் போன்றவை வாய்ப்புக் களுக்கான காரணிகளாக அமைந்தன.

வியாபாரத்தில் எழும் அச்சுறுத்தல்கள் தவிர்க்க முடியாதவை. இன்று பல நிறுவனங்கள் தமது அணுகுமுறையை மாற்றி இழந்த இலாபம் இழந்த வியாபார சந்தையை பெறுவதற்கு தமது கைவசமுள்ள சந்தையில் தங்கியிராது மாற்று வழிகளை கையாளு கின்றன. குறிப்பாக நாட்டின் பொருளாதார தளம்பல்களால் பாதிக்கப்பட்ட நிறுவனங்கள் பல தமது வினைத்திறன் மிக்க செயற் பாடுகளால் முன்னணிக்கு வந்துள்ளன.நிறுவன செலவுகளை கட்டுப்படுத்தல் உற்பத்தி செயற்பாட்டு திறனை அதிகரித்தல் வியாபார சந்தையிலிருந்து அதிக வருமானம் பெறுதல் போன்றவற்றினை குறிப்பிடலாம். மேலும் மந்தமான சந்தையை விட்டு விரைவாக வளரும் சந்தையை நோக்கி நகர்ந்து செல்வதையும் காணலாம். இன்று பல நிறுவனங்கள் எதிர்காலத்தில் எழும் அச்சுறுத்தல்களை சாதகமாக பயன்படுத்தி கொள்ள முயற்சிக்கின்றன.உருவாகும் அச்சுறு த்தல்கள் எவை? எவ்வாறு தீர்க்கலாம் என்பதை பொறுத்து அவற்றின் வெற்றி தங்கியுள்ளது. நிறுவனங்களால் வழங்கும் பொருட்கள் சேவைகளில் புதுமையை புகுத்துதல் என்பது பொருட்கள் உற்பத்தி செய்யபட்டதிலிருந்து நுகர்வோர் கைகளில் சேரும் வரைக்கும் அத்துடன் மாறும் காலம் நுகர்வோரின் மாறும் விருப்பம் என்பவற்றிற்கு ஏற்ப மாற்றியமைத்து விநியோகிக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கற்றலுக்கான பொறுப்பினை ஏற்றுக்கொள்

திருமதி.சந்திரலதா நிமலராங்கன்
ஆசிரியர்

ஒவ்வொரு வயதின் அடிப்படையில் அல்லது காலகட்டத்தின் அடிப்படையில் மனிதர்கள் பல்வேறுவகையான பொறுப்புக்க ளுக்கு உரித்துடையவராக காணப்படு கின்றனர். எமக்கு உள்ள பொறுப்பை எப்படியாவதுசெய்துமுடிக்க வேண்டும் என்பதை விட அதை சிறப்பாக செய்து முடிக்க வேண்டும் என்பதில் பொறுப்புக்கு ரியவர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

மாணவர்களை பொறுத்தவரையில் கற்றல் என்பது அவர்கள் நிறைவேற்ற வேண்டிய பாரிய பொறுப்பாக காணப்படு கின்றது. இந்தப் பொறுப்பை நிறைவேற்ற வேண்டும் எனபதை விட அப்பொறுப்பை எவ்வாறு சிறப்பாக நிறைவேற்ற முடியும் என்பது குறித்துதான் மாணவர்கள் கூடிய அக்கறை செலுத்த வேண்டும்.

பொதுவாக பொறுப்புக்கள் காணப்படும் போதே மனிதர்களிடத்தில் முயற்சி என்பது உருவாகின்றது.பொறுப்புக்கள் இல்லையேல் எமதுஅறிவும் மூளையும் வளர்ச்சியடை யாமல் இருக்கும் அத்துடன் எமது அறிவை அதிகரிக்க தேடல் என்பது மிகவும் அவசியம். தேடல், முயற்சி என்பனவற்றின் மூலமே எமது பொறுப்பை சிறப்பாக நிறை வேற்ற முடியும். ஆகவே கற்றலுக்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டு அதற்குரிய முயற்சிகளை சிறப்பாக மேற்கொள்ள வேண்டும்.

கற்றல் எனும் பொறுப்பை நிறைவேற்றும் போது அதன் வளர்ச்சிக்கும் வெற்றிக்கும் வாய்ப்பளிக்கும் வகையில் கற்றலுக்கான நுட்பங்கள் தொடர்புபடுத்தி கற்றல்பயிற்சிகள் என்பன இடம்பெற வேண்டும். இதில் அனுபவம் என்பது முக்கியத்துவம் பெறுகின்றது. அந்த அனுபவமானது பிழைகளை விடும்போது அதனை திருத்துவதற்கும் சரியானதை மேலும் விருத்தியடைய செய்வதற்கும் உதவும் ஒரு செயற்பாடாக உள்ளது. ஆகவே கடந்த கால கற்றலின் மூலம் ஏற்பட்ட அனுபவங்களை பயன்படுத்தி தற்காலத்தில் கற்றுக்கொள்வது பயனுடையதாகும்.அதேவேளை மாணவர்கள் கற்றலின் போது நேர முகாமைத்துவததை பேணுவதிலேயே பாரிய சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர்.கடந்த காலத்தில் திட்டமிட்ட நேரம் பாட ஒதுக்கீடு ஒவ்வொரு பாடத்திற்கும் செலவிட்ட கால அளவு கற்றல் பயிற்சி நேர ஒதுக்கீடுகள் வினாக்களை செய்வதற்கான முறைகள் மீள் கற்றல் கற்றிலில் பயன்படுத்திய நுட்பங்கள் சிறு குறிப்புக்கள் அவற்றை எழுதுவதில் உள்ள குறைபாடுகள் என்பவற்றை எடுத்துக் கொண்டால் அதில் ஒன்றிலாவது குறைகள் இருக்கலாம். அவற்றை ஆராய்ந்து உரிய தீர்வைக் காணவேண்டும்.

அத்தோடு கடந்த காலத்தில் எதர்நோக்கிய பரீட்சைகள் போட்டிகள் போன்றவற்றையும் ஆய்வு செய்ய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். கடந்த காலத்தில் பரீட்சை எழுதும் போது பொதுவாக பல பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கலாம் அவ்வாறான தவறு மற்றும் ஒரு பரீட்சையில் ஏற்படாத வண்ணம் தீர்வு காண வேண்டும்.இவ்வாறு கல்வி கற்கும் போது நாம் பெற்றுக்கொள்ளும் அனுபவங்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. அவற்றை மீளப்பயன்படுத்தும் போதும் பிரயோகிக்கும் போதும் அதன் பெறுமதி மேலும் அதிகரிக்கின்றது.

கற்றல் எனும் பொறுப்பானது மாணவர்களால் விரும்பி ஏற்க்கப்பட வேண்டும். கற்றல் சார்ந்த பொறுப்புக்களை நிறைவேற்றும் போது நேரமுகாமைத்துவம் என்பது முக்கியமானது. அந்த வகையில் பொறுப்புக்களை துஷ்பிரயோகம் செய்தலோ அல்லது நேரத்தை வீணடித்தலோ கூடாது. தமது பொறுப்பை மட்டும் கவனத்தில் கொண்டு கற்றலில் ஈடுபட வேண்டும். அப்போதுதான் கற்றல் சார்ந்த பொறுப் புக்களை சிறப்பாக நிறைவேற்ற முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எம்மூர் ஆசான் இசைத்தமிழ் வித்தகர்



திருமதி.யோகேஸ்வரி சிவானந்தம்
ஆசிரியர்

இம் எனுமுன் இருநூறு கவி
இசையோடியம்பும்
ஆற்றிலின் வடிவம்
கேட்டவர்க்கு கேட்ட இசைவரம்
அளிக்கும் ஒரு அற்புதப் படைப்பு
மட்டுவிலூர் மைந்தர் மதிப்பில் உயர்ந்தவர்
தென்மராட்சியைத் தேசியம் வரை கொண்டு சென்று
புகழ் வென்று வந்தவர்
21ம் நூற்றாண்டின் இனிய முத்துக்களை
ஞாலம் போற்றும் நற்சமூகமாய்
நாம் படைக்கும் பொறுப்பை
நம்மிடம் தந்தவர்
விதியை வென்று சரித்திர இசைபடைக்கும்
புதிய சக்தி.....
வித்தகரின் வரலாற்று துளியிலிருந்து .....

மறவர் ஆட்சி செய்த தென்மராட்சிப் பகுதியிலே முக்கனிகள் தரும் செழுமையான மரங்களும் நெடுதுயர்ந்த பனைகளும் தென்னைகளும் களனிகளும் கோயில்களும் நிறையப் பெற்ற கற்றோரும் மற்றோரும் செறிந்து வாழும் மட்டுவில் பதியினிலே 1885 வீரகத்தி பொன்னையாபிள்ளை என்பவர் பிறந்தார். யா/நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலய தலைமையாசி ரியராகிய இவர் வள்ளிப்பிள்ளை என்பவரை மணந்து இல்லறம் நடத்திவந்தார். தம்பதியருக்கு ஐந்து பிள்ளைகள் மூத்தவர் தருமலிங்கம் M.S.C பட்டம் கொழும்பு C. I. S. R ஆராட்சியாளர். இரண்டாவது கனகாம்பிகை ஆசிரியர். மூன்றாமவர் அருணாசலம் தலைமையாசிரியர். சரசாம்பிகை இராமநாதன் கல்லூரி ஆசிரியை, தில்லைநாதன் அப்போதிக்கரியாக பணியாற்றினர். சரசாம்பிகை என்பவர் ஏழாலை தெற்கைச் சேர்ந்த பண்டிதர் பொன்னுத்துரை என்பவரை 1947ம் ஆண்டு விவாகம் செய்தார். பண்டிதர் பொன்னுத்துரை அவர்கள் மல்லாகம் அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் ஆசிரியராக பணி புரிந்து வந்தார். இவ்வாசிரிய தம்பதியருக்கு மகத்தான இரு புதல்வர்கள் ஒரு புதல்வி ஸ்ரீவாமதேவன், குகதாஸ், கலாதேவி ஆவர். கலாதேவி ஒரு வயதிலேயே காலமாகி விட்டார். குகதாஸ் என்பவர் இலங்கையில் பல பாகங்களிலும் கடமையாற்றி தற்போது லண்டனில் பொறியியலாளராக பணிபுரிகிறார்.

ஸ்ரீவாமதேவன் பிறந்து ஒரு வயதில் குளுகோமா என்ற நோய் கண்களில் பீடித்தது. அக்காலத்தில் பிரபல கண் வைத்தியராக இருந்து Dr. விசுவலிங்கம், Dr. சிவசுப்பிரமணியம் என்பவர்களிடம் சிகிச்சை பெறப்பட்டது. 5 வயது வரும் வரை மொத்தமாக 10 சத்திரசி கிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன. இடக்கண் முழுமையாக பார்வை இழந்தது. வலது கண் ஓரளவு பார்வை மாத்திரம் இருந்தது. இதன் காரணமாக ஊரில் உள்ள அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் G. C. E (ச/த) வரையும் கல்வி பயின்றார். தாயார் கணிதம் ஆங்கிலம் ஆகிய பாடங்களில் விசேட பயிற்சி பெற்ற ஆசிரியராவார். நெஞ்சுநோ காரணமாக இராமநாதன் கல்லூரியிலிருந்து ஓய்வு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றார். குழந்தையின் கண்பார்வை குறைவின் காரணமாக பெற்றார் இவருக்கு இசை கற்பிக்கத் தீர்மானித்தனர். முதலில் நாச்சியார் கோயிலடியைச் சேர்ந்த நடன ஆசிரியை கீதாஞ்சலி நல்லையா என்பவரிடம் N. C. O. M. S முதலாம் தரத்தையும், இரண்டாம் மூன்றாம் தரங்களை துரைராஜா என்பவரிடமும் கற்றார். மூன்றாம் தரம் கற்று கொண்டிருக்கும் போது G. C. E. (O/L) பரீட்சையிலும் சித்தி பெற்றார். 1966ம் ஆண்டு அப்போது தாயார் காலமானார். இதன் காரணமாக தந்தை மல்லாகம் அமெரிக்கன் மிசன் பாடசாலையில் இருந்து கைதடி விக்கினேஸ்வராவுக்கு அதிபர் பதவியேற்றார். 4ம் 5ம் தரங்களை மானிப்பாயில் இருந்த ஐயாக்கண்ணு தேசிகர் என்பவரிடம் இசைக் கல்வியை பயின்றார்.

1970ம் ஆண்டளவில் அடையாரில் இருக்கும் கர்நாடக சங்கீத மத்திய கல்லூரியில் வாய்ப்பாட்டு சங்கீத வித்துவான் பட்டப்படிப்பை மேற்கொண்டு 1973ம் ஆண்டு இத்தேர்வில் இரண்டாம் தரத்தில் சித்தி பெற்றார். அதே ஆண்டில் அதே கல்லூரியில் வயலின் சங்கீத வித்வான் பட்டப் படிப்பை மேற்கொண்டு 1975ம் ஆண்டில் அதில் இரண்டாம் பிரிவில் சித்தியைப் பெற்றார்.

இலங்கை வந்து 1975ம் ஆண்டு யூலை மாதம் முதலாம் திகதி (1975.07.01) கல்முனை வெஸ்ரிக் கல்லூரியில் ஆசிரியராகப் பதவியேற்றார். தெரிவு செய்யப்பட்டு நிகழ்ச்சிகள் நடாத்தி வந்தார். 1976 கல்விப் பொது சh/த, உ/த போன்றவற்றிற்கு சங்கீத செயன்முறை உபபரிட்சகராகவும், பிரதான பரீட்சகராகவும் பணியாற்றி உள்ளார். 1978ம் ஆண்டு கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சங்கீதம் விசேட பயிற்சி ஆசிரியராக பயிற்றுவிக்கப்பட்டு 1980ம் ஆண்டு வவுனியா செட்டிகுளம் மகா வித்தியாலயத்தில் பணியேற்றார். அக் காலத்தில் இசை, நடன, நாடகப்போட்டிகளில் நடுவராக பணியாற்றினார். 1982ம் ஆண்டு வவுனியா சைவப்பிரகாசா வித்தியா சாலையில் ஆசிரியராகப் பணியாற்றினார். 1980ம் ஆண்டு தொடக்கம் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபன A பிரிவு கலைஞராக நிகழ்ச்சிகள் செய்து வந்தார். B பிரிவு மெல்லிசைகலைஞராகவும் நிகழ்ச்சிகள் ஆற்றினார். 1984ம் ஆண்டு தொடக்கம் இற்றை வரையும் சுமார் இருபதாண்டு ஆசிரிய சேவை முன் பயிற்சி நெறிகளில் விரிவுரையாளராக பணிபுரிந்துள்ளார். 1984ம் ஆண்டு "முத்து முத்தான சித்திரங்கள்" எனும் ஆசிரிய கீதத்தை இயற்றி இசையமைத்து ஆசிரிய உலகிற்கு அளித்தார். 1985 மார்ச் 16ம் திகதி சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் ஆசிரியரானார். 1985 யூலை முதல் 2001 வரை யாழ் பல்கலைக்கழக நுண்கலைப் பிரிவின் இசைக்கலைமானி இறுதியாண்டு பட்டப் படிப்பின் சங்கீத செயன்முறை வெளிவாரி பரீட்சகராக பணியாற்றினார். 1990ம் ஆண்டு திருகோணமலையில் 6 நாட்கள் விசேட பயிற்சி பெற்றதன் பின்னர் சேவைக்கால ஆசிரியர் சங்கீதம் (ஐ.ளு.யு) முதன்மை ஆசிரியராகப் பணியேற்றார். அதே வருடம் யாழ் பல்கலைக்கழகம் நுண்கலைப் பிரிவின் சங்கீத இடைவரவு போதானா சிரியராக 1990, 1991, 1992 ஆண்டுகளில் பணிபுரிந்தார்.

1991ம் ஆண்டு தொடக்கம் 1994ம் ஆண்டு வரை சாவகச்சேரியில் தொலைக் கல்வி ஆசிரியர் பயிற்சி நெறிகள் 2ல் விரிவுரையாளராக பணியாற்றினார். 1994ம் ஆண்டு 1997ம் ஆண்டு கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரண தர மாணவர் களுக்கான "சங்கீதம்" எனும் நூலை வெளி யிட்டார். 2000ம் ஆண்டு இடப்பெயர்வு காரணமாக தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் பணியாற்றினார். 2004ம் ஆண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடக்கம் யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி யிலும் சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் ஆசிரியராகப் பணியாற்றினார்.

இலங்கையின் புகழ்பூத்த சங்கீதக் கலை ஞரான திருசண்முகரத்தினம் அவர்களுக்கு 4 கச்சேரிகளுக்கு வயலின் பக்கவாத்தியம் இசைத்துள்ளார். திரு. திலகநாயகம் போல் அவர்களுக்கும் பக்கவாத்தியம் வயலின் வாசித்துள்ளார். வேறு சிலருக்கும் வயலின் பக்கவாத்தியம் வாசித்துள்ளார்.

இவரின் முதலாவது இசைக்கச்சேரி (வாய்ப்பாட்டு) கொழும்பில் உள்ள ஒரு பிள்ளையார் ஆலயத்தில் இடம் பெற்றது. பிள்ளையார் சுழிபோட்டு ஆரம்பித்த இவரது இசைக் கச்சேரிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. தஞ்சாவூர் ஆ. தியாகராஜாவிடம் 5 வருடம் சிஷ்யனாக இருந்தது இசை பயின்ற இவருக்கென ரசிகர் கூட்டம் உண்டு. மேலும் இசை நிகழ்ச்சிகள், இசை அரங்கேற்றங்கள் என்பவற்றிலும் பாடி வருகின்றபர். ஆசிரியர் பயிற்சி நெறிகளில் வளவாளராக பணியாற்றுகின்றார். மேலும் இசைக் காகவும் நடனத் திற் காகவும் தேவைப்படும் உருப்படிகளை இயற்றி மெட்டமைத்து வருகிறார்.

இவரிடம்" இசை கற்கும் மாணவர்கள் ஏராளம். இசை மாணவர் பரம்பரையை உருவாக்கி வருகிறார். அவ்வப்போது காடத்திட்டத்தில் சேர்க்கப்படும் புதிய உருப்படிகளை செயலமர்வுகளின் போது கற்பித்தும் மாணவருக்கும் ஆசிரியர் களுக்கும் தேவையான ஒலி நாடாக்களை வழங்கியும் இசை உலகிற்கு பெரும் தொண்டாற்றி வருகிறார்.

இவர் இயற்றிய இசை பயில்வோம் ஸ்ருதியுடனே எனும் சிறுவர் பாடலும் "ரேவதிராகம் ரத்னாங்கியின் சேயே" எனும் இலட்சண கீதமும் தரம் 6, தரம் 11 புதிய பாடத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ள ப்பட்டுள்ளது. ஏராளமான மெல்லிசை பாடல்கள், கீர்த்தனைகள், கண்ணன் பாடல்கள், விழுமியப் பாடல்கள் போன்றன இயற்றி இசையமைத்து வருகிறார்.

நேரத்தைப் பொன்னாகக் கருதும் இசை அறிஞர் பொன் ஸ்ரீ வாமதேவன் ஐயா அவர்களின் கலை பணி மேலும் சிறக்கவும் நீடுழி காலம் வாழவும் சிரம் தாழ்த்தி இறைவனை அனைவரும் வேண்டி நிற்கிறோம்.

இசை
அன்பைப் பெருக்கும்
ஆக்கத்திறன் வளர்க்கும்
இன்பம் தரும்
ஈன்றவர் தமை வாழ்த்தும்
உண்மை உணர்த்தும்
ஊருராய் உமை ஏத்தும்
எழுத்தாற்றல் ஏற்றுவிக்கும்
ஏற்றமளிக்கும்
ஐயம் அற்றுப் போகும்
ஒருமைப்படுததும்
ஓதுவார்க்கும் உணவாகும்
ஔடதமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



I am an English Activity Room

Mrs.Thavamalar Panchalingam
Teacher

I'm proud here
As I give you chance more
To learn English practically
So Important place for you

You have me beautifully
And make me attractivety
I'm so happy and joy
You're also happy and gay

There are four skills done
Listening and speaking
Reading and writing
You follow them actively and freely

Radio, Tape, Recorder for listening
Television, computer for speaking
Magazines books, novels, story books for Reading
Colourful pictures, Note, Notices for writing

You can do more skills
You can act out without shy
You can speak without fear
You can sing sweetly

You can do group activities
At that time I feel happy
Because
You stand up and walk around
Discuss and share ideas during the working time

In my place, during the lesson the lesson
Display the answers neatly
Present the answers confidently
Give the opinions clearly
Find the solutions correctly

When using me
No disturb for others
Others no disturb for you
When you making noise during your lesson.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

One of the corner stands with O.H.P
Other corner has Multi Media
Audio and video set is in the another corner
All places have the tools

E - learning system also
Spreads quickly
Reduces the teachers heavy work
If you have me you can follow the lesson well

Teaching learning method will be succeeded
Using me during the lesson time
Each one must be used me
Say "Good Bye" for failire

I'm so sad
Most of the schools haven't me
Poor children lose their fun experiences
And the interesting learning way

I'm a nice place
I help to do well
I feel important for all
Use me and win a goal

So I say you
Need an activity room separately
For improving your
Knowledge of English

Listen to me!
To improve influency of English
Keep a seperate room
In all the schools.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கற்றலும் ஞாபகத் திறனும்

திருமதி.ஜெயந்தினி விநாயகமூர்த்தி
ஆசிரியர்

புலன்கள் மூலம் பெறப்படும் தகவல்களை களஞ்சியப்படுத்த தேவை ஏற்படும் போது மீட்டறியும் அல்லத மீட்டுக்கொள்ளும் தகமையினை ஞாபகம் என வரையறுக்கலாம். இதனை நினை வாற்றல் எனவும் அழைப்பார். ஒரு எண்ணம், கருத்து அல்லத நிகழ்ச்சியை பற்றி அறிவுடன் அதை நாம் முன்பே அறிந்தோ அனுபவித்தோ இருக்கின்றோம் எனினும் வேறுறொரு உணர்சியும் நம் உள்ளத்தில் ஏற்படுதலே ஞாபகம் எனப்படும். என வில்லியம் ஜேம்ஸ் என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

கற்றலின் போது மாணவர்கள் பலர் ஞாபகப்படுத்தும் செயற்பாடுகளில் முயன்றும் மனம் சலிப்புறுவதைக் காணலாம். மாணவரைப் பொறுத்த மட்டில் பாட அமைவுக்கும் பல உளத் தொழிற்பாடுகளுக்கும் ஞாபகம் இன்றியாமையாதது இத் தொழிற்பாடானது நான்கு உட் பகுதிகளைக் கொண்டது.

1. கற்றல்
2. மனந்திறத்தல் அல்லது நிலை நிறுத்தல்
3. மீட்டுக்கொணர்தல்
4. மீட்டுணர்தல் என்பவையாகும்

ஞாபகம் எனும் போது படித்து மனனம் செய்தல் என்பது முக்கியமானது பெரும்பாலும் மனனம் செய்யும் திறன் நுன்மதியில் தங்கி உள்ளது எனலாம் நுன்மதி இன்றி விடையங்களை மனனம் செய்ய இயலாது மனனம் செய்ய முன் தான் கற்க இருக்கும் விடையத்தை கற்பதன் நோக்கத்தை உணர்ந்து பின் விடையத்தின் பெருளை அறிந்தால் மனனம் செய்தல் இலகுவாக இருக்கும்.

ஞாபக செயற்பாடுகளில் மனந் திறத்தல் அல்லது நிலை நிறுத்தல் என்பது ஒரு படியாகும். இதனை உடலியல் சார்ந்த நிகழ்ச்சி எனலாம் ஏனேனில் மனனம் செய்யும் போது மூளையின் கலன்கள் ஒழுங்கமைக்கப்பட்டு பின் குறிப்பிட்ட தூண்டி அளிக்கப்படும் போது அக் கலன்கள் மீண்டும் தொழிற்பட மனனம் செய்யப்பட்ட விடையங்கள் ஞாபகத்திற்கு வருகின்றன.

இந்த மனந்திறத்தலை பறிக்கும் நிகழ்ச்சிகளை அறிந்திருத்தல் பயனுள்ளது இவைபற்றிய பல ஆராய்ச்சிகள் நடை பெற்று கருத்துக்கள் வெளியானது ஒரு விடையத்தை கற்க முன்பு கற்றவைகளும் படித்த பின்பு கற்றவையும் அவ் விடை யத்தை மீட்டறிவதற்கு தடையாகின்றன அவையாவன

முன்நோக்கு அகத்தடை
பின்நோக்கு அகத்தடை

ஒரு மாணவன் தான் கற்ற விடையம் ஒன்றை மீட்டறிய முயலும் போது அவன் அதற்கு முன் கற்ற விடையங்கள் குறுக்கீடாக அமைவதுண்டு இதுவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னோக்கு அகத்தடை எனப்படும். அதேபோல் தான் கற்ற விடையமொன்றை ஞாபகப்படுத்த முயலும் போது அதன் பின்னர் கற்ற விடையங்கள் அதற்கு தடையாக அமையின் பின்நோக்கு அகத்தடை எனப்படும்.

மாணவர்கள் தமது கற்றலை சிறப்பாக மேற்கொள்ள ஞாபகப்படுத்த சில நுட்ப முறைகள் உள்ளன

* கற்க தொடங்குவதற்கு முன்னரும் பின்னரும் சிறிது நேரம் தியானத்தில் இருந்து மனதை தெளிவுபடுத்திக் கொள்ளல். மனம் தெளிவாகவும், தூய்மையாகவும் இருக்கும்போது கற்றவை ஊடுருவிய பதிவுகளாக அமையும்.
* மனத்துன்பங்களையும் சஞ்சலங்களையும் கற்றலோடு இணைத்துக் கொள்வதை தவிர்த்துக்கொள்ளல் வேண்டும்.
* கற்றலில் முன்னேற்றம் பெற வேண்டும் என்ற தன்னம்பிக்கையினை ஏற்படுத்திக் கொள்ளல்
* கற்றவை ஞாபகத்தில் நிற்கும் என்ற தற்றுணிவை ஏற்படுத்தி வலுப்படுத்தல்
* பெரிய பாடப்பரப்பை சிறு சிறு அலகுகளாக பிரித்தும் இணைத்தும் கற்றல்.
* கற்றலுக்கும் ஞாபகத்திற்கும் குறுக்கீடுகளாக அமைபவற்றை தவிர்த்து விடுதல்.
* ஊக்கத்துடனும் ஈடுபாட்டுடனும் உள நிறைவுடனும் கற்றல்
* கதை, கவிதை, பாடல், தழுவிய சங்கிலிப்படுத்தலாக கற்கும் விடையங்களை ஒன்றணைத்து ஞாபகத்தை வலுப்படுத்திக் கொள்ளல்.
* அடுத்த எழுத்து தந்திரோபாயத்தை வளர்த்தல் வேண்டும். பிரதான தலைப்புச் சொற்களை முறையாக ஞாபகத்தில் வரவழைத்தல் போன்றன சில நுட்ப முறைகள் ஆகும்.

மாணவர்களுக்கு கூடிய ஓய்வும் இடைவெளியும் கொண்டு ஞாபகத்திறனை வளர்க்க ஆசிரியர் வழி காட்ட வேண்டும். நாம் மறந்தவை என எண்ணும் செய்திகள் உண்மையாகவே மறைக்கப்படவில்லை இவை நனவில் மனதில் ஒடுங்கியுள்ளன என்பது உளவியலாளர்களின் கருத்து ஆகும். எனவே கற்றல் செயற்பாடுகளை மாணவர்கள் முறையாக ஞாபகப்படுத்திக்கொள்ள மேலே கூறிய நுட்ப முறைகளை பயன்படுத்தினால் நிச்சயம் கற்றலில் உயர்வுபெறலாம் என்பது உறுதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பழகிக் கொள்

திருமதி. பவநீதராணி விக்னேஸ்வரன்
ஆசிரியர்

விடியலில் எழ நீ பழகிக் கொள்
விளக்கமாய் பாடம் கற்றுக் கொள்
கடவுளை வணங்க எண்ணங் கொள்
கண்ணியமாய் வாழப் பழகி கொள்

படித்ததை நினைக்க கற்றுக் கொள்
பண்போடு பேச பழகிக் கொள்
கடிந்தெதையும் செய்யக் கருதாதே
துன்பமிழைக்க துணியாதே

பொய் சொல்ல நெஞ்சில் எண்ணாதே
பொறுமையை இழக்க விழையாதே
ஐயம் வருங்கால் தீர்க்க முனை
அதனை வளர்த்தல் தொல்லை வினை

அன்னை தந்தை பெரியோர்கள்
ஆனவர் சொற்கு கீழ்படிய
உன்னை பழகிக் கொண்டாலே
உன் போற் சிறுவர் உயர்வாரே

சினத்தை அடக்க பழகிக் கொள்
சிரிப்பதை என்றும் மறவாதே
பணத்தை பெரிதாய் எண்ணாமல்
பண்பினை எண்ணக் கற்றுக் கொள்

பழகிக் கொள் நீ பழகிக் கொள்
பாட்டும் கூத்தும் ஓவியமும்
பழகிக் கொள் நீ பழகிக் கொள்
படிக்கவும் நடிக்கவும் பழகிக் கொள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நெருக்கீடான கற்றல் நடவடிக்கைகளால் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

திரு.சிவபுண்ணியம் சிவகரன்
ஆசிரியர்

கற்றல் என்பது ஒருவரது நடத்தையில் ஏற்படும்மாற்றமாகும். இன்றைய கல்விச் சிந்தனையானது உயர் நிலை சிந்தனைத் திறன் சூழல்வழிக்கற்றல் ஆய்வு ஆக்கச் சிந்தனை மாணவர்மையக் கல்வி புத்தாக்கச் சிந்தனை தகவல் தொழிநுட்ப அறிவு போன்றவற்றை உள்ளடக்கியதாகும். எனவே இன்றைய கல்வி முறைக்கேற்ப மாணவர் களை உருவாக்குவதற்கு பல அணுகு முறைகளை மாணவர்களிடத்தே கையாளப் பட வேண்டும். மாணவர்களின் கற்றல் விருத்தியினை மேம்படுத்துவதற்கு மாணவர் மையக் கல்வியின் வழி மாணவர்கள் சுதந்திரமாகவும் ஆக்கப் பூர்வமாகவும் கற்றலை மேம்படுத்துவதற்கு ஆர்வத்தை தூண்டும் வகையில் கற்றல் செயற்பாடுள் இடம்பெற வேண்டும்.

மாணவர்கள் கறற்ல் செயற்பாடுகளில் சுறுசுறுப்பாகவும் சுதந்திரமாகவும் இயங்குதல் வேண்டும். புரூணர் என்ற கோட்பாட்டின் படி கற்றல் என்பது ஒரு சுறுசுறுப்பான நிகழ்வு ஆகும். ஆனால் இன்றைய மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளில் நெருக்கீடான நடவடிக்கைகளினாலும் கட்டாயத் திணிப்புக் களாலும் மனரீதியாகவும் உடல் ரீதியாகவும் சுறுசுறுப்பை இழந்து கல்வியினை கற்கின்ற நிலையினைக் காணமுடிகின்றது.மாணவர்கள் சுயமாகவும் சுதந்திரமாகவும் கற்பதற்குரிய சந்தர்ப்பங்கள் மாணவர்களிடத்தில் அருகி வருகின்ற நிலையினை காணமுடிகின்றது. ஒரு சராசர மனிதன் தன்னெழுச்சியான கற்றலின் மூலம் தனது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வான். மாறாக அவன் மீது கல்வியை திணிக்கும் போது கல்வி பாரிய சுமையாக்கப்படுகின்றது.மாணவர்கள் பரீட்சைகள் மதிப்பீடுகள் போன்றவற்றிகு முகம் கொடுத்து அடைவ மட்டங்களினை உயர்வாக காட்டவேண்டும்.என்ற நோக்கிலேயே இன்றைய கற்றல் மிகவும் நெருக்கீடாக காணப்படுகின்றது.இதனால் பாமர மக்கள் முதல் பல்வேறு பட்டங்கள் பெற்றவர்கள் வரை தமது பிள்ளைகளை மதிப்பெண்களை நோக்கி நகர்வதற்கான நெருக்கீடான நடவடிக்கைகளை திணித்துக் கொண்டிருக் கின்றனர். பாடசலையில் ஒமணித்தியாலங்கள் கற்றல் செயற்பாடுகளில் தொடர்ச்சியாக ஈடுபட்ட மாணவர்கள் மீண்டும் எந்த விதமான ஓய்வுமின்றிப் பல்வேறு திணிப்பு க்களின் மத்தியில் தனியார் கல்வி நிறுவனங் களுக்குள் தள்ளப்பார்க்கின்றனர். இவ்வாறான திணிப்புக்களால் மாணவர்கள் கற்றலில் சலிப்படைந்து போகின்ற நிலைகளையும் காணமுடிகின்றது.

இன்றைய காலகட்டதில் சமூப அந்தஸ்து என்ற போலி முகமூடியை அணிந்து கொண்டு பிள்ளைகளின் தன்னார்வ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுயற்சிகளை புறம் தள்ளிப் பிள்ளைகள் மீது தங்களுடைய விருப்பு வெறுப்புக்களை திணிக்கின்ற நிலை காணப்படுகின்றது.இது பிள்ளைகளிடத்தே உளவியல் ரீதியான தாக்கங்ளை உருவாக்கி அவர்களின் நீண்டகால கற்றல் திறன்களைப் பாதிக்கின்றது. இதற்கு உதாரணமாக தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையைக் குறிப்பிடலாம். இப் பரீட்சை யானது மாணவர்க ளிற்கான பரீட்சையாக அன்றி பெற்றோர்களின் சுய கௌரவத் திற்காகவும், பல்வேறுப்பட் டோரினது போட்டி தன் மையாகவுமே இன் று பார்க்கப்படுகின்றது. இதனால் மாணவர்கள் மீதான நெருக் கீடுகள் பலரிடத்தில் அதிகளவாகவே இருக் கின்ற நிலை காணப்படுகின்ற போதிலும் நீண்ட காலத்தில் அம் மாண வர் களின் கற் றல்.சிந் தனை ஆற்றல்களைப் பாதிக் கின்ற நிலை காணப்படுகின்றது.ஆனால் நெருக்கீடுகள் இன்றி வெட்டுப்புள்ளிக்கு குறைவாகப் பெற்ற மாணவர்கள் கூடப் பல்கலைக் கழகம் சென் று உயர் கல் வி கற் கும் தகுதியுடையவர்களாக உள்ளனர் என்பதை பல்வேறு ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன.

எனவே மாணவர் களிடையே நெருக்கீடுகளை குறைத்து அவர்களின் சிந்தனைகளை விரிவுப்படுத்தி சிறந்த நிலைக்கு இட்டுச்செல்லவேண்டியது எமது தலையாய கடமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பரநாட்டியத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

திருமதி.அனோசியா முரளிதரன்
ஆசிரியர்

பரதநாட்டியமானது தென்னிந்தியா விற்குரியதான ஒரு கலை வடிவமாகும். இது மிகத்தொன்மை வாய்ந்ததும் இந்தியாவிலும் ஏனைய நாடுகளிலும் பிரபல்யமானதுமான நடன வகை ஆகும்.

புராணவியல் ரீதியாக பரதமுனிவரால் உருவாக்கப் பட்டதாலேயே பரதம் என்ற பெயர் வந்ததாகக் கூறுவர். அதேவேளை பரதம் என்ற சொல் ப - என்றால் பாவம், ர - என்றால் ராகம், த - என்றால் தாளம் என்ற இம்மூன்று சொல்லிலிருந்தும் வந்ததாகக் கருதப்படுகின்றது. இதில் பாவம் உணர்ச்சியையும் ராகம் இசையையும் குறிக்கும். இவற்றுடன் தாளமும் சேர்ந்த நடனமே பரதநாட்டியமாகும்.

வரலாற்று நோக்கில் இந்தியாவின் செவ்வியல் ஆடல்வகைகள் ஒன்று பரத நாட்டியமாகும். இக்கலைவடிவம் இரண் டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தில் உருவாகியது. கூத்து, ஆடல், நாட்டியம், தாசிஆட்டம், சதிர் எனப் பலபெயர்களில் இக்கலைவடிவம் அழைக் கப்பட்டது. பிற்காலத்தில் இது பரதநாட்டியம் என்ற பெயரில் அழைக்கப்படுகின்றது.

பரதநாட்டியம் தமிழ்நாட்டுக் கோவில்களில் தேவதாசிப் பெண்கள் ஆடிய சதிராட்டத்தின் நெறிமுறைப்படுத்தப்பட்ட வடிவம் ஆகும். நன்கு தேர்ச்சிபெற்ற ஒரு நாட்டியக் கலைஞரின் முகபாவனையில் நவரஸங்களின் பாவனை களையும் வெளிக்கொணருதலைக் காணலாம்.

இந்நடனத்தை ஆடுபவர்களில் மிகப் பெரும்பான்மையானோர் பெண்கள் என்றாலும் ஆண்களும் இதனை ஆடுவதுண்டு. சைவ சமயத்தின் முழுமுதற் கடவுளான சிவன்கூட நடராஜர் வடிவில் இந்நடனத்தை ஆடியபடி சித்திரிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. சிவ பெருமான் ஆடும் நடனம் தாண்டவம் என்று சொல்லப்படுகின்றது. மகிழ்ச்சியின் உச்சத்தில் அவர் ஆடும் நடனம் ஆனந்த தாண்டவம் என்றும் அழிக்கும் கடவுளான அவர் ஆடும் நடனம் ருத்ர தாண்டவம் என்றும் அழைக்கப் படுகின்றது. மென்மையான அசைவுகளுடன் பார்வதி ஆடும் நடனம் லாஸ்யம் எனப்படுகின்றது.

இதில் உடல் அசைவுகளும் முத்தி ரைகளும் சேர்ந்தது அடவு எனப்படுகின்றது. இதில் சுமார் 120 வகையான அடவுகள் உள்ளன. இவற்றில் 80 வரையிலான அடவுகள் தற்போது பயன்பாட்டில் உள்ளன. இவை சிதம்பரம், மேலக்கடம்பூர் போன்ற ஆலய சிற்பங்களில் செதுக்கப்பட்டுள்ளன.

பரதநாட்டியத்திற்கு பாடல், நட்டுவாங்கம் மற்றும் இசைக்கருவிகளின் துணை மிகவும் அவசியமானதாகும். வீணை, புல்லாங்குழல், வயலின், மிருதங்கம் ஆகிய இசைக்கருவிகள் இவற்றில் சிலவாகும். இசைக் கலைஞர்கள் மேடையின் ஒருபுறமாக அமர்ந்து இசைக்க நடனம் ஆடுபவர் மேடையின் மையப்பகுதியில் ஆடுவார். நடனம் ஆடுபவர் நாட்டியத்திற்கென தைக்கப்பட்ட உடையை அணிந்திருப்பார். மேலும் பரதநாட்டியத்திற்கான அணிகலன்களை யும் காலில் சலங்கையையும் அணிந்திருப்பார்.

இவ்வாறான பரதநாட்டியம் பந்தனை நல்லூர் பாணி, வழுவூர் பாணி, தஞ்சாவூர் பாணி, காஞ்சிபுரம் பாணி போன்ற பாணிகளில் ஆடப்பட்டு வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறந்த மாணவர்களை உருவாக்குவதில் ஆசிரியரின் வகிபங்கு

திருமதி.சியாமளா குகதாஸ்
ஆசிரியர்

"அரிது அரிது மானிடராதல் அரிது" என்றார் ஔவையார். அந்தவகையில் பெறற்கரிய பேறாகிய மனித வடிவத்தைப் பெற்ற நாம் இவ்வுலகிற்கு எம்மால் விட்டுச் செல்ல வேண்டியவை மிகச் சிறந்தவை. அதற்கு கற்றல் என்பது மிகவும் அவசியம். கற்றலைப் பெற்றாலே பல சாதனைகளை எம்மால் நிலை நாட்ட முடியும். கற்றலை வழங்குபவர்கள் ஆசிரியர்கள். இவர்கள் ஒருவனது முன்னேற்றத்திற்கு ஏணியாக இருப்பவர்கள். தனியே ஒருவனிடம் கல்வி மட்டும் இருந்து விட்டால் போதாது அவனிடம் சிறந்த நற்பண்புகளும் இருப்பது அவசியம். இதனையே "அரம் போலும் கூர்மையரேனும் மரம் போல்வர் மக்கட் பண்பில்லாதவர்" என திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார். எனவே மாணவன் ஒருவனுக்கு கல்வியுடன் சிறந்த நல்லொழுக்கப் பண்புகள் இருத்தல் அவசியமானது. சிறந்த மாணவ சமுதாயத்தைச் செதுக்குகின்ற சிற்பிகளாக இருப்பது சிறந்த ஆசிரியத்துவத்தின் பண்பாகும்.

மாணவரது ஒழுக்கப் பண்பை வளர்த்தெடுப்பதில் வீட்டில் பெற்றோரும், பாடசாலையில் ஆசிரியரும் முன் மாதிரி களாக விளங்கவேண்டியது அவசியமாகும். மாணவர்களிடத்தே கீழ்ப்படிவு, நேர்மை, அடக்கம் ஏனையோரை மதித்தல் உயிர்களிடம் அன்பு செலுத்துதல், உண்மை பேசல் போன்ற உயர் பண்புகள் வளர்த்தல் ஆசிரியரின் சீரிய பணியாகும்.

பொதுவாக வீட்டுச் சூழலிருந்து பாடசாலைக்கு வரும் பிள்ளையை தனிமை உணர்வு தோன்றாதவாறு பாதுகாக்க வேண்டிய பொறுப்பு ஆசிரியர் உடையதே ஆகும். அவ்வாறு வரும் பிள்ளையை துர்நடத்தை, துஸ்பிரயோகம் இவற்றிலிருந்து பாதுகாப்பவராக ஆசிரியர் செயற்பட வேண்டும். பாதுகாப்பும், பாசமும் உள்ள நல் ஆசானிடம் மாணவர்கள் மனம் திறக்கிறார்கள். அதனால் பாதுகாக்கப் படுகிறோம் என்ற உணர்வு மாணவர்களிடம் மாணவர்கள் ஏற்படுகிறது.இங்கு ஆசிரியரின் முக்கிய நோக்காகப் பிள்ளைகளைப் பாதுகாப்பதாக இருக்க வேண்டுமே ஒழிய பிள்ளைகளை விமர்சனம் செய்வதாக அமையக் கூடாது. பிள்ளைகள் வீட்டில், வெளிச் சூழலில் பாதுகாப்பாக இருக்கின்றார்கள் என்பதை ஆசிரியர் உறுதி செய்வது அவசியம்.

அடுத்து மாணவர்களிடம் தனியாள் வேறுபாடுகள் காணப்படுவதோடு அவர்கள் ஒவ்வொருவரும் தனித்துவம் மிக்கவர்களாகத் திகழ்வர். இதனை ஆசிரியர் உணர்ந்து செயற்படவேண்டும். பிள்ளைகளில் மெல்லக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்போர், மீத்திறன் கூடியோர், மனவெழுச்சி கூடியோர், பிறழ்வான நடத்தை உடையோர், உளத்தாக்கங்களிற்கு உள்ளானோர், உடல் சார் குறைபாடுடையோர், இயல்பூக்கம் அதிகரித்தோர் எனப் பல்வேறு தன்மையுடையவர்கள் காணப்படுவதனால் இவற்றைக் கருத்தில் கொண்டு ஆசிரியர் செயற்படுவது அவசியமாகும். அத்துடன் அவரவர் திறமைகளை இனங்கண்டு அவற்றை வளர்த்தெடுப்பதற்கும் ஆசிரியர் உதவவேண்டும்.

ஆசிரியர்கள் மாணவர்களிற்கு ஏட்டுக் கல்வியை மட்டுமன்றி நல்வாழ்விற்கான கல்வியையும் புகட்ட வேண்டும்.மாணவர்கள் "எதிர்காலச் சொத்துக்கள்". அவர்கள் "வாழ்வாங்கு வாழ" ஒழுக்க விழுமியம் சார்ந்த கருத்துக்களையும் அவர்களிற்கு புகட்டுவது அவசியம்.

இவற்றிற்கு நற்செயல்கள் செய்த பெரியார்களின் வாழ்க்கை வரலாறுகளை மாணவர்களிடம் உதாரணம் காட்டுவதன் மூலம் மாணவர்களிடம் இத்தகைய பண்புகளை வளர்த்தெடுக்கலாம். இதனைப் புகுத்த முயலும் ஆசிரியரும் இத்தகைய விடயங்களைப் பின்பற்றுவராய் இருத்தல் வேண்டும்.

மேலும் வீட்டுச் சூழல் ஒரு பிள்ளைக்கு பிரச்சினை அதாவது வறுமை, தாய் தந்தை முரண்பாடு, அன்பு கிடைக்காமை போன்ற பின்னணியில் பாடசாலைக்கு வரும் பிள்ளைக்கு மகிழ்ச்சிகரமான சூழலை வகுப்பறையில் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்."கல்விக்கு அழகு கருணையே" என்றவாறு ஒரு நல்லாசிரியர் செயற்பட வேண்டும். பிள்ளை கல்வி கற்க இடருறும் வேளை நல்வழிகாட்டியாய் நின்று வழிகாட்ட வேண்டும்.

நேர்மை, பக்கச் சார்பின்மை, நீதியைப் பின்பற்றுபவராகவும் ஆசிரியர் இருத்தல் வேண்டும். மாணவர்களிடம் பாரபட்சம் பாராது நேர்மை நிறைந்தவராக ஆசிரியர் நடந்து கொள்வதோடு அனைத்து மாணவர்களையும் சமநிலையில் நோக்க வேண்டும். வறிய மாணவர்களிற்கு முன்னுரிமை அளித்து தாழ்வு மனப்பான்மை ஏற்படாதவாறு அவர்களின் ஆளுமை வளர்ச்சியை வளர்க்க கூடியவராகத் திகழ வேண்டும். மாணவர்களின் உயரிய நலனின் பொருட்டு செயற்படும் நல்லாசிரியர்கள் சுயநலமாகச் செயற்படுவதை தவிர்த்துக் கொள்ளவேண்டும்.

ஆசிரியர்,மாணவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். ஆசிரியர்கள் மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெறும் போது மட்டுமல்லாது நற்செயல்களை வெளிப்படுத்தும் போதும் வெகுமதிகளை வழங்கி ஊக்குவிக்க வேண்டும். பெறுபேறுகள் குறையும் போதும், தீயநடத்தைகளை வெளிப்படுத்தும் போதும் தண்டனைகளை வழங்காது உண்மைக் காரணங்களைக் கண்டறிந்து பரிகாரச் செயற்பாடுகளில் ஈடுபடவேண்டும்.

மற்றும் ஆசிரியர் ஒருவர் வகுப்பறையைத் திறம்பட முகாமை செய்தல், பிரச்சினை தீர்த்தல், மாணவர்களின் இயல்பு மற்றும் திறமைகளை அடையாளம் காணல், தெளிவாகக் கற்பிக்கும் திறன், புத்தாக்கத் திறனை வளர்த்தெடுத்தல், மாணவர்களிற்கு கற்றலில் ஆர்வத்தை ஏற்படுத்தல் போன்ற திறன்களுடனும் மாணவர்களது உடல், உள ஆரோக்கியத்தைப் பேணலும் ஆசிரியரின் கடமையாகும்.

நல்லாசிரியர் ஒருவர் மாணவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிற்கு சில சந்தர்ப்பங்களில் பெற்றோராகவும் தக்க சமயத்தில் மருத்துவராகவும் உள ஆற்றுப்படுத் துபவராகவும், செயற்பட வேண்டும். தேவையை அறிந்து இத்தகைய வகிபாகங்களை எடுத்தல் வேண்டும்.

எனவே அறிவு, திறன், மனப்பாங்கு, நடத்தையில் ஏற்படும் நிரந்தர மாற்றம் கற்றல் ஆகும். இத்தகைய சமூக மாற்றத்தை ஏற்படுத்திக் கூடிய ஆரோக்கியமான மாணவ சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் பணி ஆசிரியர்களுடையதே ஆகும்.


இறுதியாக நோக்குமிடத்து மாணவர்களை கல்வியில் மட்டும் சிறந்த பெறுபேற்றினைப் பெற வைப்பது மட்டுமல்ல இந்நாட்டிற்கு உகந்தவாறு சிறந்த கலாசாரத்தினைப் பேணுபவர்களாகவும் உயரிய விழுமியங் களைப் பின்பற்றுபவர்களாகவும் வளர்த்து எடுப்பதே ஆசிரியப் பணிக்குப் பெருமை சேர்ப்பதாக அமைகின்றது..

உசாத்துணை நூல்கள் :-

1.முத்தரசன்.தி -கல்வியின் உளவியற் புலங்கள்
திருமொழி பதிப்பகம் 2007
யாழ்ப்பாணம்

2.பேராசிரியர் S.சந்தானம் -"கல்வியியல்"

3.பேராசிரியர் மா.சின்னத்தம்பி
பாடசாலைமுகாமைத்துவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இன்றைய எமது கலாசாரம்

திருமதி. சிவசுதனி கிரிவேல்
ஆசிரியர்

இன்றைய நவீன உலகில் மனித வாழ்வின் கணினி அல்லது கொம்பியூட்டர் என்று நாம் பரவலாக அழைக்கும் இயந்திரத்தின் ஆதிக்கம் ஒரு பெரும் பாதிப்பினை ஏற்படுத்தியிருக்கின்றது. குறிப்பாக மேற்குலக நாடுகளில் கணினியும் அதனோடு இணைந்த இணையம் அல்லது இன்ரநெற் (Inter net) எனப்படும் வலைய மைப்பும் ஒருங்கிணைந்து புதிய தொரு கலாசாரத்தையே தோற்றுவித்திருக்கின்றது என்று கூறின் அது ஒன்றும் மிகையில்லை.

இந்நாடுகளில் ஒரு சாதாரண அலுவலக ஊழியர் அதிகாலையில் தன் வீட்டில் மிகவும் அவசியமான அன்றைய காலையில் தொடங்கி அன்று தனக்கு வந்திருக்கும். பிரத்தியேக மின்னஞ்சல்களைக் கவனித்து பதிலளித்து இணையத்தில் உள்ளூர் மற்றும் தாயக செய்திகளில் ஒரு கண்ணோட்டம் விட்டு அன்றாட வங்கி அலுவல்களைப் பூர்த்தி செய்து வீட்டில் தீர்ந்து போய் விட்ட மளிகைப் பொருட் கொள்வனவுக்கான கொள்வனவுக் கட்டளைகளையும் உரிய விநியோகத்தினரின் இணையத்தளத்தினூடாக வைத்து விட்டு அன்று மாலை வீட்டிற்கு வரும் விருந்தினரை உபசரிக்க தெரிந்தெடுத்த உணவுச்சாலையில் முற்பதிவு செய்து விட்டு அலுவலகம் நோக்கிய பயணத்திற்காக பேரூந்தின் உரிய இணையத்தளத்தில் பேரூந்தின் பயண நேரங்களை அவதானித்துக் கொண்டு அலுவலகம் கிளம்பும் பயணத்தில் முதற்கட்டமாக பேரூந்தின் தரிப்பிடம் நோக்கிப் பயணிக்கும் கலாசாரமே கணனிக் கலாசாரம் ஆகும்.

இந்நிலை இன்று இலங்கையிலும் பரவியாழ்ப்பாணத்திலும் சாவகச்சேரியிலும் ஏன் மட்டுவிலிலும் கூட பரவிவிட்டது என்பது ஏற்றுக்கொள்ளக் கூடடியது. இன்று கணினி என்பது மாற்றமடைந்து (Smart Phone) உயர்தொழில்நுட்பம் கொண்ட கைத் தொலைபேசிகள் அனைத்துப் பணிகளையும் மேற்கொள்ளும் நிலை காணப்படுகிறது.

எமது நாளாந்த வாழ்க்கைக்கான தேவைகளில் கணினிகளின் Smart Phone களின் பயன்களோ அளவற்றவை. எங்கள் பிரத்தியேக மற்றும் அலுவலகக் கடிதங்களை உயர்தரத்தில் தயாரிப்பதில் தொடங்கி இந்த ஆக்கம் நூல்வடிவம் பெறுவது வரைக்கும் கணினியின் தேவை காணப்படுகின்றது. கணினியும் இணையமும் ஒன்றிணைந்து எமது நாளாந்த வாழ்வில் எத்தனையோ சாதக பாதக மாற்றங்களை ஏற்படுத்துகின்றது. இவற்றின் பாதிப்பு வீட்டிலும் அலுவலகங்களிலும் மனித வினைத்திறனைப் பன்மடங்காக உயர்த்த உதவுகின்றது என்பது மிகையானதல்ல. இன்று வீட்டுக்கு வீடு வாசல் படியைக் காண முடியாவிட்டாலும் கூட இணையமும் கணினியும் Smart Phone உம் இணைந்த நிலையை அங்கு காணமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணையம் என்பது உலகம் முழுவதும் பரவிக் கிடக்கும் கணினிகளைக் கொண்டு உருவாக்கப்பட்ட பல்வேறு வலையமைப்புக்களின் ஒருமித்த ஒரு வலையமைப்பாகும். பல்வேறு தொண்டார்வ நிறுவனங்கள், பொது நிறுவனங்கள், இலாப நோக்கமற்ற ஸ்தாபனங்கள் அரசு என்பவற்றினால் உருவாக்கப்பட்ட இணையத்தளங்கள் பல பல்வேறு தரப்பினருக்கும் மிகவும் பயனுடையதாக இருக்கின்றது. இதனால் கணினி அல்லது Smart Phone கலாசாரத்தினருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது.

மாறாக இலாப நோக்கம் அல்லது வர்த்தக நோக்கிலான இணையத் தளங்களால் பல்வேறு பாதக விளைவுகள் ஏற்படகின்றன. கணினி கலாசச்ாரம் அல்லது Smart Phone ல் ஊறித் திளைத்தவர்களில் சிலர் இன்று பல பிரச்சினைகளுக்கு முகங் கொடுக்க வேண்டியுள்ளது. Face book, twitter, IMO, Viber, Whatapp என்பன போன்ற விடயங்களினூடாக பயணிக்கும் போது கிடைக்கும் நன்மைகளை விட தீமைகள் அதிகமாக இருக்கும்.

எனவே கணினி அல்லது Smart Phone கலாசாரம் என்பது பயன்தரக் கூடியதாக வேண்டுமானால் நாமும் அதனுடன் கைகோர்த்து கொள்ளல் அவசியமாகும். இதனை ஒரு பொழுது போக்குக் கருவியாக அல்லாமல் ஓர் அறிவுக் கருவியாக ஆக்கிக் கொள்ள வேண்டும். கோடானகோடி இணையத்தளங்களிலே புதைந்துள்ள பயனுள்ள தகவல்கள் மற்றும் ஆய்வுத் தரவுகளை நுகர நாம் முன்வர வேண்டும்.

மேலும் இன்றைய கணினிக் கலாசாரம் அல்லது Smart Phone கலாசாரத்தில் இணையத்தின் முற்றுமுழுதான பயனை நாம் நுகர்ந்து கொள்வதற்கு தடைக்கல்லாக இருப்பது ஆங்கில மொழியில் தேர்ச்சியின்மையாகும். இன்றைய கணிசமான இணையத்தளங்கள் ஆங்கில மொழியிலேயே உள்ளன. ஆனால் இன்றைய கலாச்சாரத்திற்கு எம்மை அறியாமல் நாம் மாற்றப்படும் போது ஆங்கில மொழித் தேர்ச்சியும் நமக்குத் தெரியாமலே வளர்கின்றது.

ஆகவே தொகுத்து நோக்கும் போது எம்முடலுடன் உயிருடன் ஒன்றாகிவிட்ட இன்றைய கலாசாரமான கணினிக் கலாசாரம் அல்லது Smart Phone கலாசாரம் எம்மிலிருந்து பிரிக்க முடியாத ஒன்றாகி விட்டது. ஒரே ஒரு நாள் Smart Phone இல்லாமல் அலுவலகம் சென்றால் அன்றைய நாள் ஏதோ எதனையோ தொலைத்து விட்ட உணர்வை எமக்குள் ஏற்படுத்தும் என்பது மறுக்க முடியாத உண்மை. ஆயினும் எங்கள் கணினிக் கலாசாரத்தினை தேவையான முறையில் அறிவியலுக்காகப் பயன்படுத்தி மற்றவர்களுக்கும் பயன்படும் வகையிலும் வழிகாட்டி இக் கலாசாரம் மேலும் தொடரக் கூடிய நிலையை ஏற்படுத்த வேண்டும். எமது இலங்கையும் மேற்குலக நாடுகளைப் போன்று வாழ்வின் முக்கிய அலுவல்கள் அனைத்துமே இந்த கணினிக் கலாசாரம் அல்லது Smart Phone கலாசாரம் என்பதில் தங்கியிருக்கும் நிலை வரும் என எதிர் பார்க்கின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசில் நாள் பதிவுகள்



2012



2013



2013



2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசில் நாள் பதிவுகள்





2015





2016



ஆசிரியர் தினம் 2016



கற்றல் வள நிலையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நுணசை ஆரம்

மாணவர் பகுதி



யா/ கைதடி நுணாவில் அ.த.க பாடசாலை

J/Kaithady Nunavil GTMS

2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வணிகக் கல்வியும் எதிர்கால தொழில் வாய்ப்புக்களும்

செல்வி. சி. தாரகா
தரம் – 11

மக்கள் தம் வாழ்க்கைத் தரத்தை பேணு வதற்கும் அதிகரிப்பதற்கும் தேவையான பொருட்கள் சேவைகளை வழங்குவதிலும் அதனுடன் தொடர்பான சகல கருமங்களும் வணிகம் என அழைக்கப்படும். வணிகச் செயற்பாடுகள் எமது எதிர்பார்ப்புக்களை அடைவதில் நேரடியாகத் தொடர்பு படுகின்றன. உலகமானது நாடு, நகரம், வலயம் எனப் பிரிக்கப்பட்டிருந்தாலும் அது வணிகத்தினால் பிணைக்கப்பட்டிருக்கிறது. இதனால் சமூகத்தின் எல்லா உறுப்பின ர்களும் வணிகக் கல்வியை பெற்றிருத்தல் அவசியமாகும்.

ஆதிகால வணிக நடவடிக்கைகள் எளிமையாக இருந்த போதிலும் இன்று அவை மிகச் சிக்கலான நிலைமையை அடைந்துள்ளன. வணிகம் தொடர்ச்சியாக வளர்ச்சியடைகிறது. மாற்றமடைகிறது. விருத் தியடைகிறது. தொழில்நுட்ப முன்னேற் றத்துடன் ஏற்பட்ட நவீன கருத்துக்கள், புதிய முறைகள், புதிய பொருட்கள், புதிய சேவைகள் நாளுக்கு நாள் புரட்சிகரமாக மாற்றமடைந்து வருகின்றன. இன்று செயற்றிறன் மிக்கதெனக் கூறப்பட்டவை நாளை, காலங் கடந்ததாகின்றன. இன்றைய பாணி நாளை பொருத்தமற்றதாகி வருகிறது. இவ்வாறு வணிகத்தின் தன்மை மாற்றமடைகின்றது.

கைத்தொழில், வியாபாரம், துணைச் சேவைகள் ஆகிய அனைத்தும் வணிகமே. துணைச்சேவை எனும் போது வங்கி, போக்குவரத்து, காப்புறுதி, களஞ்சியப் படுத்தல், தொடர்பாடல் என விரிந்து செல்கிறது. எனவே வணிகம் நுழையாத தொழில்வாய்ப்பு எதுவும் இல்லை என்றால் அது பொய்யாகாது.

தொழில்நுட்ப முன்னேற்றம் தொடர்பாக மனிதன் நீண்ட பயணம் மேற்கொண் டுள்ளான். வீட்டில் இருந்த வண்ணம் சகல பொருட்கள் சேவைகளையும் பெற்றுக் கொள்கிறான். வீட்டிற்குள்ளேயும் சில பட்டின்களை அழுத்தி தனது வேலைகளை இலகுவாகச் செய்கிறான். கடனட்டையைப் பயன்படுத்தி கணினி, இணையம் மூலம் பொருட்கள் சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் இலத்திரனியல் வணிகம் இன்று உலகளாவிய ரீதியில் பரந்து விரிந்து செல்கின்றது. இந்நிலையில் வணிகக் கல்வியின் மகத்துவம் என்னவென்றால் உலகினை பற்றிச் சிறப்பாகவும் தர்க்க ரீதியாகவும் சிந்திக்கக் கூடிய வாய்ப்பினைத் தருவதாகும். இதனால் பல்வேறு தேர்ச்சி கொண்ட பிரஜையாக மிளிரலாம். நாளாந்த வாழ்க்கையை தொழில் நுட்ப மாற்றத்துடன் இசைவுபடுத்திக்கொள்ளலாம். அறிவுள்ளதும் பலம் வாய்ந்ததுமான நுகர்வோராக ஒழுக்க விழுமியங்களையும் சமூகப்பொறுப்புக்களையும் அறிந்தவராகலாம். வேலை ஒன்றில் ஈடுபடவும் சுயதொழிலை ஆரம்பித்து வெற்றியடையவும் வாய்ப்பு உண்டாகும். நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினைத்திறமையுடன் பங்களிப்பு செய்யலாம். உயர் கல்வியைத்தொடர ஒரு வழிகாட்டியாக அமையும். இத்தகைய இதர செயற்பாடுகள் மூலம் வணிகக் கல்வியின் முக்கியத்துவம் தெட்டத் தெளிவாக விளங்குகின்றது. .

வணிகமானது தன்னகத்தே கொண்டுள்ள தொழில் வாய்ப்புக்கள் மிக அதிகம். கைத்தொழில், வியாபாரம், சேவைத்துறைகள், வங்கி, காப்புறுதி, களஞ்சியப்படுத்தல் என அதன் இதர சேவைகள் பல்கிப் பெருகி வருகின்றன.

வணிகக் கல்வியை உயர்தரத்தில் கற்பதன் மூலம் எதிர்காலத்தில் அதிக வேலை வாய்ப்புக்களை பெறமுடியும். உயர்தரத்தில் வணிகக்கல்வி, கணக்கியல், பொருளியல் போன்ற பாடங்களை கற்பதன் மூலம் ஒரு கணக்காளராக உருவாக முடியும். மேலும் மேற்குறிப்பிட்ட ஏதாவது இரு பாடங்களுடன் ஆங்கிலம், கணிதம், ICT ஆகிய பாடங்களை தெரிந்து வங்கிகளிலோ, பாரிய கம்பனிகளிலோ தொழில் வாய்ப்பைப் பெற முடியும். மேலும் க. பொ. த (சா/த) இல் வணிகக் கல்வி கற்ற ஒருவர் கூட அரச, தனியார் நிறுவன தொழில் வாய்ப்பு கிடைக்காத போதும் சுயமாக வணிகத்தை ஆரம்பித்து நடத்திச் செல்வதற்கான திறமைக்கு வணிகக் கல்வி பாடம் இட்டுச் செல்கிறது.

இவ்வாறு அனைத்து செயற்பாடுகளையும் உள்ளடக்கிய · நவீன சாதனங்கள் உலகை சுருக்கி வணிக உலகமாக மாற்றி வருகின்றது. இந்த நிலையில் எதிர்காலத்தில் வணிகத் துறையினூடாகவே கூடுதலான தொழில் வாய்ப்புக்களைப் பெற முடிவதுடன் ஏனைய துறைகளும் சிறப்புற அமைய வணிகக் கல்வி அவசியம் என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய உண்மையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தாய் தந்தை பேண்

செல்வன். பகீஷன் அக்ஷஜன்
தரம் -05

எமது வாழ்க்கையின் ஊன்று கோலாக இருந்து எமது வாழ்க்கையின் வெற்றிக்கு வழிவகுப்பவர்கள் எமது தாய் தந்தையர் இவர்கள் சூரிய சந்திரர்கள் போல் தம் நலன் பாராது குழந்தைகளின் வளர்ச்சிக்கு செய்யும் சேவைகள் சொல்லில் அடங்காது

தந்தை எம்மை படிக்க வைத்து நல்ல வைத்தியராகவே பொறியியலாளராகவோ மாற்றுகின்றார் ஒரு தந்தை ஏழைத்தந்தை யாகவோ அல்லது நோய் உள்ளவராகவோ இருந்த போதும் முயற்சி எடுத்து எம்மை ஒரு நல்ல நிலைக்கு கொண்டுவருகின்றார் வீட்டிற்கு தலைவனாகவும் எமக்குத் தந்தையாகவும் இருந்து கண்ணை இமை காப்பது போல் காத்து வருகின்றார் தன் வாழ்வில் பெற்ற அனுபவங்களை அன்பு கலந்த பொன் மொழிகளாகவும் கண்ணி யமிக்க கண்டிப்புக்களாகவும் எமக்கு வழங்கி எமது நல்லொழுக்கத்திற்கு வழி வகுப்பவரும் அவரே அதனால் தான் தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை என்று பெரியோர் கூறுவார்.

தந்தை அறிவுக்கு மூலாதாரம் எனின் தாயோ அன்பிற்கு ஆணிவேர் அன் னையோ முன்னூறு நாள் தன் கருவறையில் எம்மை சுமந்து பிரசவிக்கின்றாள் நாம் அறியும் முதல் முகமும் முதல் சொல்லும் தாயே தான். ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனை சான்றோன் எனக் கேட்ட தாய் என்கின்றார் வள்ளுவர்.

இந்த உலகத்திலே அவள் அன்பிற்கு ஈடு இணை ஏதும் இல்லை எந்தக் குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே அவன் நல்லவன் ஆவதும் தீயவனாவதும் அன்னை வளர்ப்பினிலே என்பது கவிஞன் கண்ணதாசனின் கவி வரி ஆகும். தன் குழந்தை பிழை செய்யும் போது தாய் அந்த பிள்ளையை அன்புடன் கலந்த கனிவுடன் திருத்துகின்றாள். பிள்ளையின் வளர்ச்சிக்காக தன் இரத்தத்தையே பாலாக்கி எம்மை வளர்த்தெடுக்கின்றாள் நாம் நேரிலே கண்டு தொழும் தெய்வமும் அவளே.

எமது வெற்றிப்படிக்கு ஏணியாக இருக்கும் தாய் தந்தையரை அவர்களின் முதுமைக் காலத்தில் கண் கலங்காது பேணிப்பாதுகாப்பதே நாம் அவர்களுக்கு செய்யும் கைம்மாறு ஆகும். நாம் அவர்களைப் பொன் போல் பேணி அவர்களின் ஆசியுடன் இந்த நாட்டின் மன்னர்கள் ஆவோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிரியைகளின் விழாக்களின் போது வாழை, மாவிலை, தோரணம் கட்டுவது ஏன்?

செல்வி. நி. றதீபா
தரம் – 07

நாம் சைவ சமயத்தவர். நாம் கொண்டாடும் கிரியைகளைப் பூர்வக் கிரியைகள் அபரக் கிரியைகள் என இரண்டு வகைப்படுத்தலாம். இந்த இரண்டு வகைக் கிரியைகளிலும் மாவிலை, வாழை, தோரணம் கட்டுவதும் அலங்கரிப்பதும் முக்கிய இடம் பெறுகின்றன. இந்த அலங்காரங்கள் வெறுமனே அழகை மட்டும் கொடுக்காது நமது பண்பாட்டு பாரம்பரிய பழக்க வழக்கங்களைப் பேணு பவையாகவும் உள்ளன.

எமது சைவ சமயம் வகுத்த பழக்க வழக்கங்கள் யாவும் விஞ்ஞான ரீதியாக பார்க்கும் போது எமது சுகாதாரப் பழக்க வழக்கங்களைப் பேணி எம்மை நோய்களில் இருந்து வருமுன் காப்பவையாகவே உள்ளன. அந்த வகையில் தான் நாம் கட்டும் வாழை, மாவிலை, தோரணங்களும் அலங்காரப் பொருளாக அமைவதுடன் கலாசார பழக்க வழக்கங்களினைப் பேணுபவையாகவும் காணப்படுகின்றன.

விழா நிகழும் மண்டபத்தைச் சூழவும் கயிறு கட்டி மாவிலைகளையும் தென்னங் குருத்தினால் ஆன தோரணங்கள் ஆங்காங்கே கட்டும் வாழை மரங்கள் கண்ணுக்கு இனிய நிறங்களாக அமைந்து மண்டபத்தை அலங்கலரிப்பதுடன் சூழலை குளிர்ச்சியாகவும் வைத்திருக்க உதவுகின்றன. அத்துடன் விழாக்களின் போது பலர் ஒன்று கூடுவதனால் அங்கு ஒவ்வொருவரும் வெளிவிடும் அசுத்த வாயவான காபனீரொட்சைட் அதிகரிப்பதால் நாம் உட்சுவாசிக்கும் உயிர் வாயுவான ஒட்சிசன் குறைவடைவதைத் தடுத்து இந்தப் பச்சிலைகளிலிருந்து வெளியேறும் உயிர்வாயு காற்றின் நச்சுத் தன்மையைப் போக்கிச் சமநிலையைப் பேண உதவுகிறது.

இவை கட்டப்பட்ட முறையிலிருந்து அதனைப் பார்க்கும் ஒருவர் அங்கு நடைபெறும் விழா மங்கலகரமானதா? அல்லது அமங்கலகரமானதா? (மரண சடங்கு முதலியன) என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

மங்கல விழாக்கள் (பூர்வ கிரியை) மாவிலைகள் உட்புறமாக மடித்துச் சொருகப் பட்டிருக்கும் மாவிலை தலை வணங்கி வரவேற்பதாக இது அமையும். அது போலவே தோரணங்களின் குருவிகளும் 5 குருவிகள் கொண்டதாகவும் மேல் நோக்கியும் காணப்படும். அமங்கல கிரியைகள் மரணச் சடங்கு முதலானவற்றிற்கு மாவிலைகள் வெளிப்புறமாக மடித்துச் சொருகப்பட்டிருக்கும். தோரணங்களின் குருவிகள் முன்றாகவும் கீழ் நோக்கியும் காணப்படும். இது போல வாழைமரம் நாட்டுவதும் மங்கல நிகழ்வுகளுக்கு கதலிப் பழத்துடன் கூடிய வாழையும் கதலி வாழைக்குட்டிகளும் கட்டப்படும். அபரக் கிரியைகளுக்கு சாம்பல் வாழைக் குலையுடன் கூடிய வாழை மரங்களும் சாம்பல் வாழைக் குட்டிகளும் கட்டப்படும்.

எனவே நாமும் கொண்டாடும் விழாக்களில் மாவிலை தோரணம் கட்டி சூழலை அழகுபடுத்துவதுடன் சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருக்கவும் பழகுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

செல்வி. அபிஸ்நயா சர்மிலன்
தரம் – 05

- நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பது நமது முன்னோர்கள் தமது வாழ்க்கையில் கடைப்பிடித்த கொள்கையாகும்.
- நாம் நோயின்றி வாழ்வதற்குச் சுத்தம் பேணுதல் மிகவும் அவசிமானதொன்றாகும்.
- நாம் காலையில் தினமும் உடற் பயிற்சி செய்வதால் உடற்தகமை விருத்தியடையும்.
- நாம் வீட்டுத்தோட்டம் ஒன்றை அமைத்து அதிலிருந்து நச்சுத்தன்மையற்ற காய்கறிகளை உண்டு ஆரோக்கியமாக வாழ்வோம்
- சுத்தமே என்றும் சுகமளிக்கும் என்பர் கவிமணி தேசிக விநாயாகம் பிள்ளை அவர்கள் சுத்தம் வேணுவதால் ஏற்படும் நன்மை பற்றிக் கூறியுள்ளார்.
- நாம் தினமும் சத்துள்ள மரக்கறிகளை உண்டு நோயற்றவர்களாக வாழ்வோம்.
- நாம் சுத்தமான இருப்பதோடு சுற்றுச் சூழலையும் சுத்தமாக வைத்திருப்போம்.
- நாம் வீட்டுச் சூழலை தினமும் கூட்டிப்பெருக்கிச் சுத்தமாக வைத்திருத்தல் அவசியமான தொன்றாகும்.
- பல அறிஞார்கள் சுத்தம் பேணுதல் அவசியம் எனக் கூறியுள்ளனர்
- நாம் வீட்டுச் சூழலையும் அயற் சூழலையும் சுத்தமாக வைத்திருந்தால் டெங்கு நுளம்புகள் எம்மை அணுகாது.
- நாம் மலசல கூடம் சென்று மலம் கழித்த பின் கைகளை சவர்க்காரம் இட்டு கழுவ வேண்டும்
- நாம் உணவு உண்ண முன்பும் உணவு உண்ட பின்பும் கைகளை சவர்க்காரம் இட்டு கழுவ வேண்டும்.
- நாம் உணவு உண்ட பின் பல் துலக்குவதால் வாய்க் குழிக்குள் உள்ள கிருமிகள் அழியும்.
- மாநகர சபை குப்பைகளை சேர்க்க வரும் போது எங்கள் வீட்டுக் குப்பைகளை அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும்
- சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை சுத்தம் பேணி நோய்நொடி அற்றவர்களாக வாழ்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மானிட வாழ்க்கையின் வளர்ச்சிப் படிகள்

செல்வி. மா. மகிழினி
தரம் – 10

மனிதனின் தோற்றம்

மனிதன் இயற்கையுடன் இணைந்த விலங்காவான் எனினும் அவன் ஏனைய விலங்குகளை விட முன்னணியில் இருக்கின்றான். பல்வேறு விதங்களில் தொழில்நுட்பம், கருத்துப் பரிமாற்றம் செய்யும் ஆற்றல் ஆடல்பாடல் போன்ற அழகியல் விடயங்கள் மனிதனால் செயற்படுத்தப்படும் செயல்கள் ஆகும். ஏனைய விலங்குகளிடம் இவற்றைக் காண முடியாது. மனிதன் தூரத்திலுள்ள கோள்களைக் கூட நீண்ட ஆய்வு செய்யத் தொடங்கிவிட்டான். பல காலமாக சவால்களுக்கு முகங்கொடுத்ததன் விளைவாக பல்வேறு துறைகளிலும் முன்னேற்றம் அடைந்து விட்டான். இயற்கையில் பல மாறுதல்களைச் செய்து தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முற்படுகின்றான். அதன் விளைவே இன்று ஏற்படும் காலநிலை மாற்றங்களும் இயற்கை அழிவுகளுமாகும். இதனால் இன்று பல இன்னல்களுக்கு மனிதன் முகங் கொடுக்க நேரிடுகின்றது.

மனிதன் குரங்கிலிருந்து தோன்றினான். இன்றிலிருந்து இருபத்தைந்து இலட்சம் வருடங்களுக்கு முன்னர் நாம் வாழும் புவியானது மிகவும் குளிர்ச்சியாக இருந்தது. இந்தக் காலம் பனியுகம் எனப்பட்டது. இந்தப் பனியுக காலப் பகுதிகளில் ஆபிரிக்காவில் வாழ்ந்த சிம்பன்சிகளின் ஒரு குழுவினர் தமது ஏனைய உறவினர்களை விட வித்தியாசமாக வளரத் தொடங்கினர். இந்த சிம்பன்சிகளின் பற்கள், முகம் என்பவற்றில் மாற்றங்கள் ஏற்படலாயின. இரண்டு கால்களால் நடக்கவும் பழகினர். இந்த மாற்றங்கள் சிம்பன்சியிலிருந்து மனிதன் தோன்றுவதற்கான காரணமாக அமைந்தது. வானரப் பரம்பரையைச் சேர்ந்த சிம்பன்சியிலிருந்து மனிதன் முன்னேறியது இப் பனி யுகத்திலாகும். இச் செயன்முறையானது மானிட பரிணாமம் எனப்படும். உருவ அமைப்பில் வானரத்திற்கும் மனிதனுக்கும் இடையே சில ஒற்றுமைகள் காணப்படுகின்றன. வானரங்கள் செய்யாத ஒன்றை மனிதன் செய்யத் தொடங்கினான். அது உபகரணங்களை பயன்படுத்தியமையாகும். நீர் பாய்ந்து செல்லும் ஓடைகளிலுள்ள வட்டமான கற்களை சேகரித்து அவற்றினால் விதைகளை இடித்து உணவாக உட் கொண்டான். இவ்வாறு மனிதனுடைய நிலையை அடைந்த வானரம் ஒஸ்ரலொபிதிகஸ் எனப் பெயர் பெற்றது.

காலம் செல்லச் செல்ல கற்களினால் ஆயுதங்களைச் செய்தான். அவை கேத்திர கணித பொறிமுறைக்கேற்ப ஆக்கப்பட்டவை ஆகும். பெரும்பாலும் இவை பளிங்குப் பாறைகளாலும், மஞ்சள் நிற பளிங்கு கற்களாலும் தயாரிக்கப்பட்டவை. இவ்வாறான கல்லாயுதங்கள் 4.5cm ஐ விட பெரியனவல்ல. இவை மட்டுமல்ல தட்டையான சுத்தியல், அம்மி என்பனவும் தயாரிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான முயற்சிகளில் இறங்கிய மதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதன் ஹோமோஹேபிலிஸ் எனப்பட்டான்.

இவன் 2.3 முதல் 1.4 மில்லியன் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்திற் குரியவன் ஆவான். அக்காலத்தில் எளிமையான ஆயுதங்களை செய்வதற்கு பயிற்சி பெற்றமை இன்றைய காலத்தில் முன்னேற்றமடைந்துள்ள நவீன உபகரணங் களை செய்வதற்கு உறுதுணையாக அமைந்தது.

மனிதனின் முன்னேற்றத்திற்கு மற்றுமொரு படியாக விளங்கியது அவன் நெருப்பைப்பயன்படுத்தத் தொடங்கியதாகும். நெருப்பில் உணவை சுட்டுப் பயன்படுத்தத் தெரிந்து கொண்டான். 12500 வருடங்களுக்கு முன்னர் காட்டுப் பலாவின் விதைகளை சுட்டு சாப்பிட்டுள்ளான். குளிர்காலத்தில் நெருப்பை பயன்படுத்தி குளிர்காயத் தொடங்கினான். இது நாளடைவில் வாழ்க்கையை சௌகரியமாக்கியதுடன் உடல் அமைப்பு அழகு பெற உதவியது. ஆதி மனிதனின் கண்டுபிடிப்புக்கள் இன்று எமக்கு பல வழிகளிலும் பயன்படுகின்றன. அதற்குச் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குவது நெருப்பைக் கண்டுபிடித்தமையாகும். ஹோமே இரெக்டஸ் எனும் மனிதனே நெருப்பை முதல் உபயோகித்தவனாவான். வானர பரம்பரையிலிருந்து தோன்றிய பொழுதிலும் காலம் செல்ல செல்ல மனிதனின் உடலமைப்பு மாற்றமடைந்து இன்றைய நிலையில் அமைப்பை பெற்றது. மனிதனின் மூளையும் படிப்படியே வளர்ச்சியடைந்தது. இதுவரை மனித இனத்துடன் தொடர்புபடுவது மற்றுமொரு முன்னேற்றமடைந்த வானரத்தின் ஊடாக வாழும் அது ஹோமோ நியன்டதாலன்சிஸ் ஆகும். இந்த வானரம் பெரிய மிருகங்களின் எலும்புகளைக் கொண்டு வீடுகளை அமைத்தது. உணவிற்காக வேட்டையாடத் தொடங்கியது. வேட்டையாடப்பட்ட விலங்குகளான சிறுமான், காட்டுக்கோழி, பன்றி, முள்ளம் பன்றி, முயல் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

காலவோட்டத்தில் கருத்துக்களை பரிமாறிக் கொள்ளவும் உணர்வினை வெளிப்படுத்த ஆடல், பாடல், ஓவியம் போன்றவற்றை மேற்கொள்ளவும் தெரிந்து கொண்டான். இவ்வாறான செயற்பாடுகளை செய்த மனிதன் ஹோமோ சேப்பியன் எனப்படுகிறான். இவன் இன்றைய மனித இனத்துடன் நெருங்கிய உறவைக் கொண்டவனாவான். இலங்கையில் ஆதி ஹோமோசேப்பியன் இனமனிதனே முதலில் குடியேறியவனாவான். நாம் அனைவரும் ஹோமோ சேப்பியன் இனத்தைச் சேர்ந்தவர்கள். முன்னைய காலத்தில் கல் ஆயுதங்களால் வேட்டையாடிய மனிதன் ஹோமோசேப்பியன் இனத்திற்கு வந்தவுடன் வில், அம்பு போன்றவற்றை பயன்படுத்தி வேட்டையாடினான். ஹோமோ சேபியன் மனிதனால் பல நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. அவற்றில் விவசாயம் முக்கியமானதாகும். கோதுமை, பார்லி, குரக்கன் என்பன பயிரிடப்பட்டன. மிருகங்களை வளர்த்து அவற்றிலிருந்து பால், முட்டை, தோல், இறைச்சி என்பனவற்றை பெற்றுக் கொண்டனர். கல்லாயுதங்களுக்கு பதிலாக உலோக ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டன. ஒரே இடத்தில் வாழும் முறை வளர்ச்சியடைந்து கிராமங்கள் உருவாகின.

புதிய சமய வழிபாடுகளில் ஈடுபட்டமை இக்காலப் பகுதியிலேயே ஆகும். மிருகங்களை வேட்டையாடுவதற்கு பதிலாக விலங்குகளை வளர்க்க ஆரம்பித்தனர். இவ்வாறு காலம் செல்லச் செல்ல மட்பாண்டக் கைத்தொழில், இரத்தினக்கல் கைத்தொழில், உலோக கைத்தொழில் போன்றவற்றில் ஈடுபட்டனர். நாம் அனைவரும் ஹோமோ சேப்பியன் இனத்தை சேர்ந்தவர்களாயினும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று உலகில் சில பிரதேசங்களில் வாழும் மனிதர்களின் முகம் வித்தியாசமாகவுள்ளது. அவ்வாறான வேறுபாடுகளுக்கு காரணம் சூழல் வேறுபாடேயாகும். ஹோமோ சேபியன் மனிதள் கொக்சோயிட், நிக்ரொயிட், ஒஸ்ரலோயிட், மொங்கோலோயிட் என 4 வகையாகப் பிரிக்கப்படுகின்றான்.

கொக்கோசொயிட் இனத்தை சேர்ந்தவன் வட அமெரிக்கா, ரஷ்யா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிலும் நிக்ரொயிட் இனத்தைச் சேர்ந்தவர் ஆபிரிக்கா நாட்டிலும் ஒஸ்ரிலொயிட் இனத்தைச் சேர்ந்தவன் இந்தியா நாடுகளிலும் மொங்கலொயிட் இனத்தைச் சேர்ந்தவன் தென்கிழக்காசியா நாடுகளிலும் காணக்கூடியதாகவுள்ளது.

யாவற்றையும் நோக்குமிடத்து மனிதனின் இன்றைய வளர்ச்சிப் பாதையின் ஆரம்ப கட்டங்களின் படிப்படியான முன்னேற்றங்களை அறிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது. இடைவிடாது மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளும் அயராத முயற்சியுமே மனிதனின் விருத்திப் போக்கின் வளர்ச்சிப்படிகளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தானத்தில் சிறந்தது அன்னதானம்

செல்வி.ச. சுலோஜனா
தரம் – 10

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே" பசியினால் வாடுவோருக்கு உணவை அன்போடு வழங்குதல் அன்னதானம் எனப்படும். தானங்களில் சிறந்தது அன்ன தானமாகும். அன்னதானம் வழங்குவதன் நோக்கம் ஆன்மாக்களின் பசியினைப் போக்குவதாகும். அதற்கமைய பிறருக்கு அன்னதானம் செய்வது நமது கடமையாகும். இது மனிதப் பண்புகளில் சிறந்தது. "பசியென்று வந்தோர்க்கு ஒரு பிடி சோறு புசியென்று தருவாயப்பா" எனப் பாரதிதாசன் பாடியதும் இதன் மாண்பு அறிந்தேயாகும்.

திருமூலரும் தனது திரு மந்திரத்தில்
யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவிற்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கின்னுரை தானே

என்பதில் வரும் யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி என்பது யாவர்க்கும் நன்மை தருவது உணவு உண்ணும் போது பசியென வரும் எவருக்காயினும் பேதம் பாராது ஒரு பிடி சோறு கொடுத்தலாகும். அன்னதானம் எல்லாத் தானங்களிலும் உயரியது. ஆயிரக் கணக்கான ஆண்டுகள் பழமை வாய்ந்த பாரத ரிஷிகளின் சமூக சிந்தனையாக விளங்குவது தைத்திரீய உபநிடதத்தில் சொல்லப்பட்டுள்ளது. எக்காலத்திலும் பொருந்தக் கூடியது. அன்னத்தை வெறுக்கக் கூடாது. மிகுதியாக உண்டாக்க வேண்டும். அன்னத்தை வேண்டி வந்த எவரையும் தள்ளி விடக்கூடாது. எவ்விதத்திலாவது அவர்களது பசியைப் போக்க வேண்டும். வருகிறவர்களுக்கு அன்னம் எப்போதும் தயாராக இருக்கிறது என்று சொல்லுவார் பெரியோர்.

இதனை உலகிற்கு காட்டவே இறைவன் பெரு மழைக்காலத்தில் சிவனடியார் வேடத்தில் வந்து உணவு கேட்ட போது பெரும் சிரமத்தின் மத்தியிலும் அன்புடன் அன்னமளித்த இளையான் குடிமாற நாயனார் அன்னதானம் செய்து முத்திடையந்தவராவார். ஈழத்தில் நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்திலும் தொண்டைமானாறு செல்வச் சந்நிதி ஆலயத்திலும் தினந்தோறும் அன்னதானம் வழங்கப்படுகிறது.

இன்றைய காலகட்டத்தில் பெரும்பாலான ஆலயங்களில் மகோற்சவ காலத்தின் போது அன்னதானம் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. அன்னபூரணே ஸ்லோகம் அன்னபூரனியே சதாபூரணே சங்கரப்பிராண வல்லபே! ஞான வைராக்கிய சித்யர்த்தம் பிஹடம் தேவஹிச பராசக்தி உலக மக்கள் பசிப்பிணிபோக்கும் பொருட்டு அன்னை பராசக்தியானவள் அன்னப் பூரணியாக அவதரித்து காசித் திருத்தலத்தில் அருள் புரிகின்றாள். இந்தச் சுலோகத்தைத் தினமும் உணவு உண்ணும் போது சொல்லிவரின் எப்போதும் உணவிற்கு குறைவிராது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புகைத்தலை எதிர்க்கின்ற நற்பிரஜையாக மாறுவோம்.

செல்வி. ஜீ.டல்சிகா
தரம் – 07

ஒரு நாட்டின் சிறப்பான செல்வம் ஆரோக்கியமான சிறுவர்கள்.

" நல்ல நல்ல பிள்ளைகளை நம்பி
இந்த நாடே இருக்குது தம்பி
சின்னஞ்சிறு கைகளை நம்பி
ஒரு சரித்திரம் இருக்குது தம்பி "

என்ற பாடல் வரிகள் இன்றைய சிறுவர்களே நாளைய நாட்டின் தலைவர்கள் என்பதை விளக்குகின்றது. இச்சிறுவர்கள் எப்படியானவர்கள் கள்ளம் கபடம் அற்ற பிஞ்சு உள்ளமுடையவர்கள். துள்ளித்திரியும் துடிப்பு மிக்கவர்கள் நன்மை எது? தீமை எது? தமது எதிர்காலம் எப்படியானது? அதற்கு என்ன செய்ய வேண்டும்? என்பன பற்றிச் சிந்திக்க முடியாத சிறகடித்துப் பறக்கும் பறவை போன்றவர்கள். இவர்களை பயன்படுத்தி இவர்களின் பாதையைத் திசை திருப்பி வாழ்வைப் பாழாக்கும் கும்பல்கள் இன்று எம்மத்தியிலே மலிந்துள்ளன. மது போதை வஸ்து புகைப்பிடித்தல் போன்ற தீய பழக்க வழக்கங்களை மாணவர்கள் மத்தியில் உருவாக்குவதன் வாயிலாக இளைஞர் யுவதிகளை போதைக்கும் புகைத்தலுக்கும் அடிமையாக்கி அதன் மூலம் பெரும் பொருளீட்டும் கயமையுடையோர் எம்மத்தியில் மலிந்தும் பரந்தும் உள்ளனர். இவர்களால் ஏற்படும் தனிநபர் மற்றும் சமூகப் பாதிப்புக்களை தவிர்த்துக் கொள்வது எம்மை மேன்மைப்படுத்தும்.

புகைத்தல் என்பது இன்று எமது கட்டிளமைப் பருவ மாணவர் மத்தியில் பெருகி வரும் ஒரு தீய பழக்கமாகவுள்ளது. இது வீடு சார்ந்தும் சமூகம் சார்ந்தும் நாடு சார்ந்தும் பல பின்னடைவான தீய விளைவுகளை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. இன்றைய இளைஞர்கள் போதையின் பிடியில் தள்ளாடி புகையின் பிடியில் மயங்குகின்றார்கள். மாறிவரும் உலகின் பயன்தரு பெருமை மிக்க விடயங்களை விடுத்து அழிவைத் தரும் பாதையை நோக்கிச் சென்று கொண்டிருக் கின்றார்கள். கோளமயமாதலின் நன்மைகளை நாம் நலம் தரும் வகையில் பயன்படுத்த வேண்டும். உலக மயமாதல் என்ற பெயரில் மேலைத்தேச கலாசாரத்தின் பிடியில் எம் பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்களைத் தொலைத்து விடக்கூடாது.

மனமகிழ் போதைப் பொருள் பயன்பாட்டின் பொதுவான வடிவங்களில் புகைத்தலும் ஒன்றாகும். புகைத்தலானது தனக்கும் குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் கேடு தரும் என்பதை அனைவரும் உணர வேண்டும். தன் மீதும் தன் குடும்பத்தின் மீதும் சமூகத்தின் மீதும் அக்கறை உடையவர்கள் புகைத்தலின் பிடியில் இருந்து தம்மை சுலபமாக விடுவித்துக் கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ந்து வரும் தீய பழக்கங்களில் புகைத்தல் என்பது முதலிடம் பெறுகின்றது. கூடுதலான நபர்கள் இலகுவாகவும் குறைவான செலவிலும் இதனை நுகரமுடியும் என்பதால் இதன் பிடியில் சிக்குண்டு தவிக்கின்றனர். இன்றைய இளைஞர்களை தொற்றிக் கொள்ளும் ஆபத்துக்களில் இதுவும் பிரதானமானது. நான் பெரியவனாகி விட்டேன் என்பதை உணர்த்தும் அடையாளமாக புகைத்தலைப் பலர் கருது கின்றனர். உண்மையில் புகைப்பிடிப்பதற்கும் விஷம் குடிப்பதற்கும் எந்த வேறுபாடும் இல்லை என்பதை இவர்கள் அறிவார்களா?

புகைத்தலானது எம்மை நாமே அழித்துக் கொள்ளும் ஒரு செயல் என்றால் மிகையில்லை. ஏனெனில் புகையிலையில் காணப்படும் நிகொட்டின் எனும் வேதிப் பொருளானது சுவாசப்பை, வாய், தொண்டை போன்ற பகுதிகளில் புற்றுநோயை ஏற்படுத்துவதாக மருத்துவ ஆய்வுகள் உரைக்கின்றன. இவ்வேதிப் பொருளானது இரத்தத்தோடு கலந்து இரத்த நாளங்களை அடைகின்றது.

இறுதியில் புகைப்பழக்கமானது எமது உயிரையே குடித்துவிடுகின்றது. எனவே மாணவர்களாகிய நாம் எம்மையும், எம் சார்ந்தவர்களையும் புகை எனும் அரக்கனின் பிடியிலிருந்து பாதுகாப்போம். இது எமது தார்மீகக் கடனும் பொறுப்புமாகும். புகைத்தலை ஒழிப்போம். புகையற்ற போதையற்ற உலகை உருவாக்குவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செல்வன். சி.சாரங்கன்
தரம் – 07


சிறுகதை

சிங்கமும் எலியும்



ஒரு கிராமத்தின் அருகே காடு இருந்தது. அந்த காட்டில் அனைத்து விதமான விலங்குகளும் வாழ்ந்து வந்தன. அந்த காட்டிலுள்ள விலங்குகளுக்கு சிங்கராஜா ஒருவர் இருந்தார்.ஒரு முறை சிங்கத்திற்கு உணவு கிடைக்கவில்லை. அது பசியோடும் தாகத்தோடும் அலைந்து திரிந்தது அப்பொழுது எலியொன்றைக் கண்டது. உடனே சிங்கம்பாய்ந்து பிடித்து கால்களால் நசித்தது சிங்கத்தை பார்த்த எலி பயந்து சிங்கத்திடம் "சிங்கராஜாவே நீங்கள் மிகுந்த பசியுடன் இருப்பதாக தெரிகிறது உங்கள் பசிக்கு நான் போதாது எனவே என்னை விட்டு விடுங்கள்" என மன்றாடிக் கேட்டது.

அப்போது சிங்கம் எலி மீது வைத்திருந்த காலை எடுத்தது எலி நீங்கள் செய்த உதவிக்கு நான் எப்போதாவது நன்றிக் கடனை செலுத்துவேன் எனக் கூறியது.அதை கேட்ட சிங்கம் நான் என்ன உதவி செய்தேன் எனக் கேட்டது. அப்பொழுது எலி என்னை உயிர் பிழைக்க வைத்தமைக்கு நான் என்றும் நன்றிக் கடன் பட்டவன் என்று கூறியது.



சில மாதங்கள் கழிந்தன சிங்கம் வழமை போல உணவு தேடிச் சென்றது.அப்பொழுது சிங்கம் வேடர்களின் வலையில் சிக்கியது. சிங்கம் பலத்த ஒலியுடன் பல தடவை கர்ச்சித்தது. அந்த ஒலி எலியின் காதில் விழுந்தது.அந்த எலி வேகமாக ஓடி வந்தது.அங்கு சிங்கம் வலையில் அகப்பட்டிருப்பதை பார்த்தது.உடனடியாக வந்து அதன் கூர்மையான பற்களால் கண்ட கண்ட இடங்களில் கடித்து வலையை கிழித்தது மிகுந்த சந்தோசத்துடன் வெளியே வந்த சிங்கம் எலிக்கு நன்றி கூறி தனது இருப்பிடத்தை நோக்கி சென்றது.

பிறருக்கு செய்த உதவி என்றும் ஆபத்தில் எமக்கு உதவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நான் கண்ட புதுமைப்பெண்

செல்வன் ந. பிரியங்கன்
தரம் – 06

பத்து மாதம் சுமந்து
பாலூட்டி சீராட்டி
பருவம் வரப் பள்ளியனுப்பி
பக்குவமாய் காத்தாள்
என் தெய்வம் என் தாய்

கோடி நன்றி கூறினாலும்
கோவில் கட்டி வணங்கினாலும் ஈடாகுமோ
என்னை பாரினிலே பலரும்
பாராட்டப் பாடுபட்டவள்
என் தெய்வம் என் தாய்

எனது இன்பத்திற்கு தனது துன்பத்தை
துச்சமாக நினைத்து
மேதினியிலே மேன்மையுற்று
வாழ்ந்திட வழி வகுத்தாள்
என் தெய்வம் என் தாய்

என் கண்ணில் நீர் வந்தால்
அவர் கண்ணில் இரத்தம் சொரியும்
எனது துயரத்தைக் கண்டு
பசி நோக்காள், கண்துஞ்சாள், துயருறுவாள்
என் தெய்வம் என் தாய்

எனது வாழ்வே அவளது இலட்சியம்
எனது முன்னேற்றமே அவளது குறிக்கோள்
என்மீது அளவில்லா பாசத்தைப்பொழிவாள்
இவளே நான் கண்ட புதுமைப் பெண்
என் தெய்வம் என் தாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இலத்திரனியல் குப்பைத்தொட்டிகள் எமது வீடுகள்.

செல்வன்.ரா.ராகவன்
தரம் – 10

இன்றைய இலத்திரனியல் யுகத்திலே விஞ்ஞான தொழில்நுட்ப வளர்சியின் எழுச்சி காரணமாக பல்வேறு இலத்திரனியல் சாதனங்கள் பாவனையில் உள்ளன இலத்திரனியல் சாதனங்களினால் மனிதன் தனது வேலைகளை வினைத்திறன்களாக மேற்கொள்வதுடன் பல்வேறு மூலை முடுக்குகளிலும் தொடர்புகொண்டு தனது தொடர்பாடலை சிறப்பாக மேற்கொள்கின்றான்.

தனது அறிவை சிறப்பாக பெருக்கி பல்வேறு சாதனங்களை கையாள்வதுடன் பல்வோறு சாதனைகளையும் நிலை நாட்டியுள்ளான் இன்று மண்ணில் இருந்து விண்வெளியில் நிகழ்பவற்றை அவதானிக்கும் அளவிற்கு இலத்திரனியல் சாதனங்களின் வெகுவான வளர்ச்சி காரணமாக பல சர்ச்சைகளும் ஏற்பட்டுளன இவ்வாறாக இலத்திரனியலின் வளர்ச்சியின் காரணமாக இலத்திரனியல் கழிவுகளை முகாமை செய்வதில் பெரும் பிரச்சினை தோன்றி உள்ளது.

வெளிநாடுகளில் இருக்கும் பல்வேறு அமைப்புக்கள் கடன் அடிப்படையுலும் சலுகைகளாகவும் எமது நாட்டிற்கு இலத்திரனியல் உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கி வருகின்றன வெளிநாடுகளில் இருக்கும் எமது உறவுகள் தாம் வெளி நாடுகளில் பயன்படுத்திய இலத்திரனியல் உபகரணங்களை அங்கே அகற்றுவதில் உள்ள சட்ட நியமங்கள் முகாமைத்துவ நடைமுறைகளுக்கு அஞ்சி எமக்கு அன்பளிப்பாக வழங்கி வருகின்றனர்.

வெளிநாடுகளிலே இலத்திரனியல் பொருட்களின் பயன்பாடு அதிகம் எனினும் அக்கழிவுகளை அகற்றுவதில் சட்ட நியமங்கள் இலத்திரனியல் கழிவு முகாமைத்துவம் ஓரளவு வளர்ச்சியடைந்த நிலையிலே உள்ளன எமது நாட்டில் கண்மூடித்தனமாக இலத்திரனியல் சாதனங்களை பயன்படுத்தும் நுட்ப முறைகள் கணினி இணையம் கையடக்கத் தொலைபேசி போன்ற தொலைத்தொடர்பு சாதனங்களின் பல்வேறு பயன்பாடு என்பவை பற்றிய அறிவு பெருமளவில் காணப்படினும் இலத்திரனியல் துணை சாதனங்களின் பாதிப்புக்கள் பற்றிய அறிவு இன்மை கண்டறியப்பட்டுள்ளது.

மற்றும் கணினி தொலைபேசி பாவனையினால் அவற்றில் பயன்படும் மின் கலங்களின் கதிர் தொழிற்பாட்டு மூலகங்கள் பார உலோகம் என்பன காணப்படுகின்றன கதிர் தொழிற்பாட்டு மூலகங்கள் உணவுத்தொடரினூடு உயிர் இரசாயன செறிவடைதலுக்கு உட்படுதலுடன் கதிர் தொழிற்பாட்டு மூலகங்கள் உமது உடற்கலன்களை சிதைவிற்கு உட்படுத்தி புற்று நோயை ஏற்படுத்தும் அபாயம் காணப்படுகின்றது. இலத்திரனியல் கழிவுகளை மண்ணில் விடப்படும் போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை தொடர்ச்சியாக பல சந்திதிகளில் இக் கதிர் தொழிற்பாட்டை விடுவிக்கும் அபாயம் உள்ளது தற்போது ஒரு வீட்டின் கௌரவம் என்பது வரவேற்பறையிலோ அல்லது சமையல் அறையிலோ காணப்படும் இலத்திரனியல் உபகரணங்களை கொண்டே தீர்மானிக்கப்படுகின்றது.

இந்த வகையில் நாம் அனைவரும் இலத்திரனியல் உபகரணங்களை போட்டி போட்டு கொள்வனவு செய்வதில் அதிக அக்கறை காட்டி நிற்கும் அதே வேளை அவற்றின் பாவனை முடிந்தவுடன் உரிய முறையில் அகற்றுவதற்கான உத்தியை அறியாதுள்ளோம்.

கையடக்க தொலைபேசியில் எழுப்பும் மணி செப்பம் செய்த பின்னர் அதனை தலைக்கு அண்மையில் வைத்துக்கொண்டு நித்திரை செய்கின்றோம் அப்போது தொழிற்படும் கதிர் செயற்பாடுகள் காரணமாக மூளைக்கலங்கள் இறக்கின்றன கணினியை தொடர்ந்து பாவிக்கையில் மூளையின் ஞாபக பரப்புக்கள் மறைந்து செல்வதற்கு வாய்ப்புக்கள் ஏற்படுகின்றது.

கையடக்க தொலைபேசி இணைய பாவனையால் பல்வேறு கலாசார சீர்கேடுகள் நிகழ்வதற்கும் குற்றம் செய்யாதவர்களை குற்றவாளிகளாக்கும் துர்பாக்கிய நிலையும் ஏற்படுவதே மனவருத்தத்துக்குரிய விடையம் ஆகும். எனவே விஞ்ஞானம் கற்கும் மாணவர் என்ற ரீதியில் நாம் இலத்திரனியல் உபகரணங்களை தேவைக்கேற்ப வினைத் திறனுடாக பழகிக்கொள்வதுடன் ஆடம்பரங் களுக்கு ஏற்ப தேவைகளுக்கும் அவற்றை பயன்படுத்துவதை தவிர்த்துக் கொண்டு தற்கால சமூகத்தில் ஆரோக்கியமாக வாழ்வோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிராணிகளின் கால்கள்

செல்வி. இ.டன்சியா
தரம் – 02

காகம் கிளி புறா மைனா
கொக்கு கோழி சிட்டுக்குருவி
போன்றன யாவும் பறவைகள்
பறவைக்கோ கால்கள் இரண்டு

ஆடு மாடு நாய் பூனை
யானை கரடி சிங்கம் புலி
போன்றன யாவும் மிருகங்கள்
மிருகங்களுக்கோ கால்கள் நான்கு

எறும்பு, நுளம்பு, தேனீ தும்பி
குளவி ஈ வண்ணத்துப்பூச்சி
போன்றன யாவும் பூச்சிகள்
பூச்சிக்கோ கால்கள் ஆறு

சிலந்தி தேன் உண்ணி நண்டு
புவிமுகச்சிலந்தி ஒட்டடைப்பூச்சி
இவைகள் சிற்றுண்ணி இனங்கள்
இவைக்கோ கால்கள் எட்டு

மட்டைத்தேள் மரவட்டை
இறால் பூராண் ஆயிரம் காலி
இவையும் சூழலில் உள்ள பிராணிகள்
இவைக்கோ கால்கள் அனேகம்

பாம்பு, நத்தை, மண்நுழையான்
மண்புழு, மயிர்க்கொட்டி போன்றன யாவும்
கால்கள் இல்லா பிராணிகள்
இவை யாவும் எமது சூழலில் நடமாடும்.



முயற்சி

செல்வி. சி.குசந்தன்
தரம் – 11

முயற்சி எனும் முதற்படியில் ஏறி
மூவுவகில் நின்றாலும்
நிற்காது உன் தேடல்
உன் பன்முகத் தேடலிலே

நீ கழிக்கும் காலங்களில்
தோன்றும் சூழ்நிலைகளோ
பலவாறு மனதை உற்சாகப்படுத்தவும்
ஒருநிலைப் படுத்தவும் தேடி வரும் ஞானம்

ஞானம் கிடைக்க நீ ஞானியல்ல
ஞாலத்தை செதுக்கிட செயலாற்று

நல்லதை எடுத்து தீயதை விடுத்து
கைக்கொள்வதிலும் கையாள்வதிலும்
திறமை காட்டு அது நலம் தரும்.

எறும்புகள் போல் சுறுசுறுப்பாய் நீ
நாளும் தேடு. எறும்புக்கு
கண்கள் இல்லை முகர்ந்து
கொண்டே அது முன்னோக்கிச் செல்லும்

உன் கண்களின் பார்வை அதில்
பேரொளி இருந்தும்
முயற்சி இன்றி நாளும்
சோம்பி இருப்பதேன்

வானவில் எப்போதோ ஒரு தடவை தான்
வானில் தோன்றும் - அது போல் வரும்
வாய்ப்பிற்காய் நீ காத்திருப்பதேன்
விரைந்திரு நீ வானவில்லையும் வளைக்கலாம்

முயற்சி எனும் தேரில் நீ உலகை வலம் வந்திடு
முனைப்புடன் தேடு முன்னே வர
செயற்கரிய செய்திடு உயர்ந்திடு
நாளை உலகம் உன் கையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பழமொழியும் கருத்தும்

செல்வி. ஜெ. குகப்பிரியா
தரம் – 03

1. பேராசை பெரு நட்டம்
எல்லை கடந்த ஆசை துன்பம் தரும்

2. இரக்கப் போனாலும் சிறக்கப்போ
வறுமையிலும் செம்மையாக வாழவேண்டும்

3. உப்பிட்டவரை உள்ளளவும் நினை
நன்றி செய்தவரை மறத்தலாகாது

4. ஆழமறியாமல் காலை விடாதே
ஒரு விடயத்தை நன்கு ஆராயாது அதனில் ஈடுபடலாகாது

5. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு
ஒற்றுமையே அதிக பலத்தைத் தரும்

6. நித்தம் போனால் முற்றம் சலிக்கும்
அடிக்கடி சென்றால் யாருக்கும் சலிப்பு ஏற்படும்

7. போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து
மனத்திருப்தி அளவில்லாத செல்வத்தைத் தரும்

8. விளையும் பயிரை முளையில் தெரியும்
இளங்காலச் செயல்களில் எதிர்கால வாழ்வு புலப்படும்



நாடு போற்ற வாழ்வோம்

செல்வி. செ. செங்கயல்
தரம் – 03 (2017)

அன்பை வளர்ப்போம்
அறிவைப் பெருக்குவோம்
ஆசையை ஒழிப்போம்
ஆனந்தம் கொள்வோம்
இன்சொல் பேசுவோம்
இன்பமுடன் வாழ்வோம்
ஈன்றவரை பணிவோம்
ஈகையை மறவோம்
உண்மை பேசுவோம்
உத்தமனாய் வாழ்வோம்
ஊக்கமுடன் உழைப்போம்
ஊர் போற்ற வாழ்வோம்
எண்ணும் எழுத்தும் கற்போம்
எறும்பு போல் உழைப்போம்
ஏளனம் செய்யோம்
ஏழ்மையை விரட்டுவோம்
ஐயம் நீக்குவோம்
ஐங்குரவரைப் போற்றுவோம்
ஒற்றுமை பேணுவோம்
ஒன்றுபட்டு வாழ்வோம்
ஓங்கார நாதனைப் போற்றிடுவோம்
ஓதுவதை மறவோம்
ஔவை நூல் கற்போம்
ஔடதம் வேண்டோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எறும்புகள்

செல்வி. த.கஜானிசி
தரம் – 02

- எறும்புகள் சுறுசுறுப்பான பிராணிகளாகும்.
- உழைப்பதில் இவற்றுக்கு ஈடு இனை எதுவும் இல்லை
- இவற்றின் கண்கள் மிகத்துல்லியமாகத் தெரியும்
- எறும்புகள் ஒன்றை பின்பற்றி ஒன்றன் பின் ஒன்றாகச் செல்லும் சுபாவமுடையவை
- இவை கூட்டமாக வாழும் தன்மை கொண்ட உயிரினமாகும்.
- எறும்புகள் முட்டையிடும் வகையைச் சேர்ந்தவையாகும்.
- தோல் வழியாகவே சுவாசிக்கின்றன.
- இவற்றின் இரத்தம் நிறமற்றதாகும்.



ஆசானை போற்றுவோம்

செல்வி. சு.பாவினியன்
தரம் – 04

எழுதிப் படிக்க கற்றுத் தந்து
ஏற்றம் பய வைப்பார் - ஆசிரியர்
தூண்டா விளக்காய் விளங்கும் எங்களை
சுடர் விட வைப்பார் - ஆசிரியர்

நூலால் உயரும் பட்டம் போல் எம்மை
ஏற்றிச் செல்பவர் - ஆசிரியர்
தீய எண்ணங்கள் போக்கியே நிதம்
வளம் பெற வழிகாடுவார் - ஆசிரியர்

ஆதவனின் கதிரொளியாய் மாணவர்க்கு வழிகாட்டி
மாணவரின் அறிவுக்கண் திறப்பவர் - ஆசிரியர்
நற்செயல் அனைத்தையும் நலமுறக் கற்பித்து
நாம் புகழ் பெறச் செய்பவர் - ஆசிரியர்

எழுத்தறிவித்த இறைவனே!
தாயினும் சால வழிநடத்தும் குருவே!
எம் வாழ்வின் ஏணிப்படிகளே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செல்வன். சி . ஜோபிதன்
தரம்:- 02

புதிர்கள்

வினா

1. பால் எப்போது வெட்கப்படும்?
2. எலிக்கும் மவுஸிக்கும் என்ன வித்தியாசம்?
3. எலிக்கும் ஏன் வால் இருக்கிறது?
4. பஸ் ஏன் பஸ்ஸ்ராண்டில் நிற்கிறது?
5. கொக்கு ஏன் ஒற்றைக்காலில் நிற்கிறது?
6. ஆறில் ஆறு போனால் என்ன வரும்?
7. ஓர் ஆட்டுக்கு 3 கால்கள் இரண்டு ஆட்டிற்கு எத்தனை கால்கள்?
8. கிளி ஏன் பச்சையாக இருக்கிறது?
9. யானை ஒரு பெரிய மிருகம் அதை விடப் பெரிய மிருகம் எது?
10. யானை ஒன்று வீதியால் போகிறது. திடீரென மழை பெய்கிறது. உடனே யானை என்ன செய்யும்?
11. ஒரு யானையும் ஒரு எலியும் பஸ் ஏறப்போகிறார்கள் பஸ் வந்தவுடன் யானை பஸ்ஸில் ஏறி விட்டது எலி ஏறவில்லை ஏன்?
12. தோசையை ஏன் பரட்டி விடுகிறார்கள்?
13. முட்டைக்கு நடுவில் என்ன இருக்கிறது?

விடை

1. பாலாடையை எடுக்கும் போது.
2. எலிக்கு பின்னால் வாலுண்டு மவுஸிற்கு முன்னால் வாலுண்டு
3. செத்த பின் தூக்கி எறிய.
4. அதுக்கு இருக்கத் தெரியாது
5. மற்றக்காலை எடுத்தால் விழுந்து விடும்
6. பெரு வெள்ளம்.
7. 7 கால்கள்.
8. அதை ஒரு தரும் வேகவைப்பதில்லை.
9. இன்னொரு யானை.
10. உடனே நனையும்.
11. பஸ்சாரதியும் நடத்துநரும் பூனை என்பதால்.
12. அது தானாக பிரளமாட்டாது.
13. ட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எனது பாடசாலை

செல்வன் ம.அக்சயன்
தரம் 05

அறிவின் பண்பட்ட நிலையான பண்பாட்டையும் வாழ்வின் பண்பட்ட நிலையான நாகரிகத்தையும் கட்டி வளர்ப்பதில் பாடசாலைகள் பெரும் பங்காற்றி வருகின்றன. அறிவுப் பொருளாதாரத்திற்குத் தேவையான வளங்களை பாடசாலைகள் உற்பத்தி செய்கின்றன.

இந்த வகையில் எனது பாடசாலையும் சிறப்பார்ந்த பங்கினை ஆற்றி வருகின்றது. எனது பாடசாலையின் பெயர் யா/ கைதடி நுணாவில் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆரம்பிக்கப்பட்ட எமது பாடசாலை பல சாதனைகளைத் தனதாக்கி எமது வலயத்தி லேயே சிறப்பானதொரு இடத்தினைப் பெற்று உயர்ந்து நிற்கிறது.

தரம் 1 தொடக்கம் 11 வரையான வகுப்புக்களைக் கொண்ட (வகை II) பாடசாலையாகக் காணப்படும் எனது பாடசாலையின் தற்போதைய அதிபராக திரு. ஆ. தங்கவேலு விளங்குகின்றார். 20 ஆசிரியர்களையும் 130 மாணவர்களையும் தன்னகத்தே கொண்டுள்ள கலவன் ஆகத் திகழ்கின்றது.

எம் பாடசாலையின் மகுட வாசகம் "ஒதுவது ஒழியேல்" என்பதாகும். இங்கு வெற்றிவேலு செல்லையா, கதிர்காமர் என மூன்று இல்லங்கள் உள்ளன. எமது பாடசாலைக்கெனத் தனியான விளையாட்டு மைதானமும் சிறந்ததோர் அரங்கும் உண்டு.

எனது பாடசாலை பல்வேறு தடைகளையும் தாண்டி இன்று வீறுநடை போட்டு வருகின்றது. புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த. சாதாரண பெறுபேறுகளில் முன்னேற்ற நிலை அடைந்து வருகின்றது.

இதை தவிரவும் இணைபாடவிதான செயற்பாடுகளில் தொடர் வளர்ச்சியைக் கண்டு வருகின்றது. வலயமட்ட மாகாணமட்ட தமிழ்த்தினப் போட்டி ஆங்கிலத் தினப்போட்டி மெய்வன்மைப் போட்டிகளிலும் எமது பாடசாலை தனது முத்திரையினைப் பதித்து வருகின்றது. குறிப்பாக 2016, 2017ம் ஆண்டு முதல் மாகாணமட்ட விளையாட்டுப் போட்டியில் தங்கப் பதக்கத்தினைப் பெற்றுத் தனது சாதனையை நிலைநாட்டி உள்ளது.

அந்த வகையில் எமது அதிபரின் கட்டுக்கோப்பான நிர்வாகத்திலும் எம் ஆசிரியர்களின் பயன்கருதாப் பணியாலும் மாணவர்களது முழு ஆளுமை வெளிப் பாட்டாலும் எமது பாடசாலை இன்னும் பல சாதனைகளை நிலைநாட் நிமிர்த்து நிற்கும் என்பதில் ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வணிகத்தின் வளர்ச்சிக் கட்டங்களும் அதன் இன்றை நிலையும்

செல்வி பா.சிந்துஜா
தரம் – 10

இன்றைய மனித உலகம் பொருளாதார, தொழிநுட்ப, சமூக கலாசார அம்சங்களினூடே பல்வேறு மாற்றங்களுக்கு உட்பட்ட வண்ணம் உள்ளது. உலக சனத்தொகை கிராமம், நகரம், நாடு, வலயம், கண்டம் எனப் பிரிக்கப்பட்டிருந் தாலும் ஏதோ ஒரு வகையில் ஒன்றாக பிணைக்கப்பட்டதாகவே உள்ளது. இப் பிணைப்பு வணிகத்தினால் ஏற்பட்டதாகும். இதனால் மனித உலகம் "வணிக உலகம்" என அழைக்கப்பட்டது. வணிகத்தின் வளர்ச்சிக் கட்டங்களை ஆராய முற்பட்டால் விவசாய யுகம், கைத்தொழில் யுகம் என்பவற்றுடன் ஆரம்பமாகி இன்று தகவல் தொழிநுட்ப யுகமாக வணிகம் வளர்ச்சி கண்டுள்ளது.

மனித தேவைகளை தாமே பூர்த்தி செய்து கொண்ட சுயதேவை பொருளாதார முறைமை தமது தேவைகள் விருப்பங்களை பூர்த்தி செய்ய தானே உற்பத்தி செய்து கொள்ளல் நேர்உற்பத்தி எனப்பட்டது. பின்னர் தனிநபர் சிறப்பு தேர்ச்சி காரணமாக எழுந்த மிகை உற்பத்தி பண்டமாற்று முறை உருவாக வழிவகுத்தது. இது வியாபாரம் உருவாக அடிப்படையாக அமைந்தது. இதன் மூலம் மொத்த சில்லறை, உள்நாட்டு, வெளிநாட்டு வியாபாரங்கள் வளர்ச் சியடைந்தது. பண்ட மாற்றில் எழுந்த குறைபாடுகளை நீக்கும் பொருட்டு பரிமாற்று ஊடகமான பணம் அறிமுகமானது. இப் பணப்பயன்பாடானது வியாபார வளர்ச்சிக்கு மட்டுமன்றி பொருளாதார முன்னேற்ற த்திற்கும் பயனுடையதாயிற்று.

ஆரம்பத்தில் உள்ளீட்டு பெறுமதியற்ற பொருட்கள் மாற்றூடகமாக பாவிக்கப்பட்டு பின் உலோக உள்ளீட்டுப் பெறுமதியுடைய பொருட்கள் பயன்படுத்தப் பட்டன. அதைத் தொடர்ந்து கடதாசிப்பணம், காசு என்பன அறிமுகமாகின. இன்று கடனட்டை செலவுத் தாள் போன்ற இலத்திரனியல் பணம் பிரபல்ய மடைந்து வந்து விட்டன. நுகர்வோரது தேவைகள், விருப்பங்களை பூர்த்தி செய்தல், வியாபாரியின் பிரதான பாணியாகும். இப் பணியை சிறப்பாக மேற்கொள்ள வங்கி தொடர்பாடல், காப்புறுதி, போக்குவரத்து, களஞ்சியம் போன்ற துணைச் சேவைகள் உறுதுணையாக அமைந்தன.

18ம் நூற்றாண்டில் ஐரோப்பிய நாட்டில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சி வணிக வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக இருந்தது. இக்காலத்தில் ஏற்பட்ட புதிய கண்டு பிடிப்புக்கள் உற்பத்தி அமைப்பு முறையிலும் பாரிய மாற்றத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்துகின்றது. தொழிநுட்பமானது பேரளவில் உதவி வருகின்றது. வேட்டை யாடுவதில் ஆரம்பித்த மனிதன் இன்று தொழிநுட்ப வளர்ச்சி வேகத்தால் உச்ச நிலையை அடைந்து நிற்கின்றான்.

இன்று சந்தையில் பலதரப்பட்ட உற்பத்தி பொருட்கள் குவிந்து காணப்படுகின்றன. இவற்றில் கூடுதலானவை இலத்திரனியல் பொருட்களே ஆகம். இன்று கணணி, இணைம் என்பன மூலம் கடணட்டையை பயன்படுத்தி கொள்வனவு செய்யும் இலத்திரனியல் வர்த்தகம் அடைந்து வருகின்றது.

எனவே தொழிநுட்பத்தால் எழுந்த நவீன முறைகள், நவீன பொருட்கள், புதிய சேவைகள் என்பன நாளுக்கு நாள் வேறுபட்டடு இன்ஞ செயற்றிறன் மிக்கவை. நாளை காலங்கடந்ததாகி விடுகின்றன. இன்றைய விலை நாளை மாறி விடுகிறது. எனவே வணிகத்தின் வளர்ச்சி நிலை மாற்றமடைய கூடியது என்பதில் ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



My Best Friend

Miss. J.Thipisha
Grade - 3

1) My best friend's name is Thagee
2) He is 8 years old
3) His favourite food is Noodles
4) He is in Grade - 3
5) He is from Madduvil south
6) His favorite pet is parrot
7) I play with my best friend at lunch Break time.
8) His favourite flower is Rose.
9) We also share our Tiffins
10) Thank God for giving my such a nice friend



My Village

Mas.Vikneshwaran piravanan
Grade - 04

The name of my village is kaithady Nunavil. It is situated in the Jaffna District. It is in the Northern Province. There are temples, Shops and Co-operative shop in my village. My village is famous for paddy cultivation. Most of the villagers are farmers. there are many Jak trees and Mango trees in my village. There are lot of coconut trees in my village.

there are many Hindu temples and a school in my village. the majority of my villagers are Hindus. There are some Christians also. The people of my village are frieddly and helpful. We live peace and harmony. I love my village very much.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



My School

Miss. Bavujika
Grade - 5

My school is J/ Kaithady Nunavil Government Tamil Mixed School. It is a very beautiful and big school in Kaithady Nunavil. It is a mixed school. It is situated in Jaffna District The name of our principal is Mr. A. Thankavelu. There are eighteen teachers and more than hundred and twenty students in my school. There are from grade 1 to 11 classes in my school There are office, Ict room, music room, library, Science lab and some classes are in my school. There are many facilities in my school. Our sports team is very strong. There is a big play ground and a small garden in my school. "Selvanayaka Theve stage" is in our ground. There is a cycle park. Most of the well wishers help to develop our School. Our School moto is "Othuvathy ozhiyel" {learning is life long process} our school vision is "To produce a healthy society with good Education, Culture and Ethics. Our school mission is "To heighten the personality and Health through Education and culture as two eyes. My school anthem was written by Pon Sri Vamadevan. I love my school because it likes my house.



My Self

Mas. M.Jenusiyan
Grade - 04

My name is Mayarasa Jenusiyan. I am from Kaithady Nunavil, Chavakachcheri. It is a small village. But it is a beautiful Village. I am eleven years old. My birthday falls on 12th june I am a grade six student of J/ Kaithady Nunavil G. T. M. School. I am proud of my school. It gives, many facilities to lern our lessons sports discipline, leadership and other things. Mr. A. Thangavelu is our principal. He is very helpful for our studies My father is Mayarasa. He is a labour. My mother is Jeyalitha. She is a housewife in my family. There are seven members. They are father, mother, three brothers, a sister and my sibilings. My sister and I are studying in same school. She is in grade 10. My elder brother is a shop keeper in Kilinochchi, Second brother is secutity Guard Younger brother is studying G. C. E. O/L.My favourite food is hoppers. My hobby drawing. It is my interesting work I draw the pictures in the evenings. Most of the time. I draw the pictures of the nature. I like grapes. My father buys it for me. My favourite subject is English. I got marks in English above 95 as marks for each term. I have a pet. It is rabbit. My favourite game is cricket. I watch the cricket match and listen the commentry on T. V. My best friend is Nadesakumar Piriyankan. He studies at J. H. C. He passed in Gr - 5 scholorship Exam I want to become an Engineer one day.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



My Best Friend

Miss. R.Nirushika
Grade - 6

My best friend is sinthuriya. She is from Madduvil South Chavakachcheri. She is in grade 6 at J/ Kaithady Nunavil G. T. M School. She is eleven years old. Her birthday fall on 3rd of August. Her father is Kugathasan. He is a driver. Her mother is Chandrakumari. She is famous tailer in her village. He has two brothers and a sister. They are working. Sinthuriya is thin and short. She has long black hair. She has around face. She is fair in complexion. She is 125 cm in height. Her weight is 23 kg. Her favourite food is idly. Her hobby is reading story books. She is interesting in English book. She also has a pet It is parrot. It's name is "Betty". She talks with it. It talks with her. Her favourite subject is English. She is smart girl in our class. She comes to school on motorbike with her sister. Her ambition is to be a teacher. in one day I love my friend. She loves me.



Flightless Bird

Mas. S.Sujeevan
Grade - 08

The dodo (Rapurs cucullatus) is an extinct flightless bird that was endemic to the island of Mauritius, east of Madagascar in the Indian Ocean. The dodo's closest genetic relative was the also extinct Rodrigues solitaire the two forming the subfamily Raphinae of the family of pigeons and doves. The closest living relative of the dodo is the Nicobar pigeon. A white dodo was once throught to have existed on the nearby island of Reanion, but this is now thought to have been confusion based on the Reunion ibis and paintings of white dodos.

Subfossil remains show the dodo was about 1 metre (3 ft 3 in) tall and may have weighed 10.6 - 17.5 kg (23 - 39 16) The dodo's appearance in life is evidenced only by drawings, painting, and written accounts from the 17th century. Because these vary considerably, and because only some illustrations are known to have been drawn from live specimens, its exact been appearance in life remains unresolved and little is known about its behavior. Though the dodo has historically been considered fat and clumsy, it is now thought to have been well - adapted for its ecosystem. It has been depicted with brownish - grey plumage, yellow feet, a tuft of lail feathers, a grey, naked head, and a black yellow and green beak. It used gizzard stones to help digest its food, which is thought to have included fruits, and its main habitat is believed to have been the woods in the drier coastal areas of Mauritius. One account states its clutch consisted of a single egg. It is presumed that the dodo became flightless because of the ready availability of abundant predators on Mauritius.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Nature

Miss. A.Saruni
Grade - 08

Nature is the natural environment which surroundings us cares us and nourishes us every moment. It provides us a protective layer around us to prevent from the damages. we are not able to survive on the earth without nature a like air, land, water, fire and sky nature includes every thing around us like plants. animals. rivers, foresk, rain lake, birds, sea, thunder, sun, moon, weather, atmosphere, mountain, desserts, hills, ice, etc. Every from of natures is very powerful which has ability to nourish as well as destory us. Now a day every one has less time to enjoy nature. In the increasing crowed we forget to enjoy nature and improve health. We stared using technological instruments for our health fitness. However it is very true that nature has power to nourish us and fit us forever.Most of the writers have described the real beauty and advantage of the nature in their writings Nature has ability to make our mind tension free and cure our diseases. Because of technological advancement in the life human being our nature is declining gradually which needs a high level of awareness to keep it in balance and to conserve natural assets. God has created everything very beautifully seeing which our eyes can never be tried. But we forgot that we too have some responsibility towards our nature to relationship between nature and human beings How beautiful seenery it books in morning with sunrise, songs of lakes , rivers ,air ,and happy gatherings of friend in the evening in garden after a long day of crush. But we forget to enjoy the beauty of the nature in just fulfilling our duties toward our familics. If we want to to be happy and healthy always was should try best to save our planet and its beautiful nature by stopping our foolish and selfish activities. It order to keep ecosystem in balance we should not cut trees, forests, practice energy and water conservation and many more ultimately we are the real user of the nature so we should really take care of it.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



The Person I want To describe is my mother

Miss. N.Jesnika
Grade - 10

Arunthathy is my mother. She's 39 years old. Mediumbuilt and dhe's about 166 centimetres height. She has an attractive face and looks younger than her age. She has long face, big eyes and beautiful eyelashes. She likes wearing casual clothes I unless she's at work when she normally wears lady's farmer wear. My mother works as an accountant at fuding university and she has always been working as an accountant since graduation. She's warm heasted, open - minded, and always willing and ready to accept new things. She likes singing, dancing, watching movies, reading, planting flowers at home. She is also a big sports fan. I mean she likes playing badminton, jogging, cycling.

I guess that's the reason why she is still in very good shape at 39's. I think what makes me love my mother the most is that she is so dedicated to the family that is she loves my father and me so much. No matter how tired she is after working for a long day or how many frustrations she has faced herself of work when she comes back home from her office, she becomes very happy straight to way when seeing my father and me. I guess she has given me so many supports in so many ways..... for example telling me not to give up if I fail to get in to university. encouraging me to be a strong person with her blessing I believe that I can learn my way to grow up and finally reach my destination. I tjink she's the most important person in my life. I am very proud of my mother and I love her. I feel so lucky to have such a great mother. I love her. she love me!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



If You're Happy

Miss. S. Tharaka
Grade - 11

If You're Happy

If you study well
You can reach your goal
If you help others
You can get wishes

If you pray the God
You can get be blessed
If you're patient with others
You'll do anything

If you think positively
You'll succeed in your life
If you're co-operative
You'll make a peaceful world



Development of Science and Technology

Miss. S.kanappiriya
O/L (2012)

Early life of man was full of difficulties and hardships without inventions of science. Technology plays a very important role in modern civilization. We are able to save time and money by mass production. Traditional old ways of his living were no successful because, development of science in various fields was not satisfactory. Science has palyed a very wonderful role in modern man's life. In modern world man needs many things Internet, Television, Radio, Computer, Fax machine and Communification. Robot is a very good living example for the advancement in mans scientific and technological invention.

They are trying to make more and more trying robot with heart feeling and kindness, But they can't do it at all. Because there are going in the opposite direction. That the science and technology has found enough weapons to destroy the whole world and man kind in a few minutes through it. Space flight and quick transport facilities are made possible. In the field of medicine too many modern drug; major operation and lasers are used in surgery.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மாணவர் பாராளுமன்றம் 2016 - 2017



செயற்பட்டு மகிழ்வோம்
தரம் - 03 வலயமட்டம் 2ம் இடம்



மேலைத்தேய வாத்திய குழு - 2017



மைதானம் முன்னைய தோற்றம்



மைதான கொள்வனவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலமைப்பரிசில் நிதியங்கள்

பேராசிரியர் கோபன் மகாதேவா அமரர் வைத்தியர் சீதாதேவி மகாதேவா புலமைப்பரிசில்

க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் சிறந்த பெறுபேறுபெற்று உயர்தரத்தில் கணித விஞ்ஞானத்துறை அல்லது தொழிநுட்பப்பிரிவிற்கு அனுமதி பெறும் மாணவருக்கு வழங்கப்படும் இப்பரிசானது நிலையான வைப்பிலுள்ள 200,000/=வின் வருடாந்த வட்டியிலிருந்து (வைப்புச்சான்றிதழ் இல NSB Chava (2 0073 03 92367) வழங்கப்படுகின்றது.

அமரர் கந்தையா அம்பலவாணர் புலமைப்பரிசில்

தரம்5 புலமைப்பரிசில் பரீட்சையில் வருடாந்தம் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்றுச் சித்தியடையும் மாணவருக்கும் அவ்வாறு சித்தியடைந்து தரம் 6 இலிருந்து இங்கு தொடர்ந்து கல்விபயிலும் மாணவருக்கும் ஒவ்வொரு வருடமும் வழங்கப்படும்.

இதனை அமரது மகன் மருமகள் திரு.திருமதி சுகுமார் தம்பதியினரால் வருடாந்த பரிசில் நாளின் போது தெரிவு செய்யப்படும் மாணவருக்கு தலா 500 வீதம் வழங்கப்படுகின்றது.

திரு.செல்லத்துரை தவரட்ணம் புலமைபப்பரிசில்

கற்றலில் முன்னேற்றமும் ஆர்வமும் உடைய மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றது. பாடசாலை நிர்வாகத்தால் வருடாந்தம் தெரிவு செய்யப்படும் 5 மாணவர்களுக்கு தலா 5000ரூபா வீதம் அவராலேயே வழங்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரம் 5 புலமைப்பரிசில் பெறுபேற்று வீதம்

வருடம்	தோற்றியோர்	சித்தியடைந்தோர்	சத வீதம்
2000	11	01	09%
2001	10	–	–
2002	03	–	–
2003	18	03	17%
2004	17	02	12%
2005	18	01	06%
2006	17	–	–
2007	17	03	18%
2008	13	01	08%
2009	18	05	28%
2010	15	01	07%
2011	10	03	30%
2012	15	02	13%
2013	08	–	–
2014	10	03	30%
2015	13	03	23%
2016	12	03	25%

கா.பொ.த சாதாரணதர பரீட்சைப் பெறுபேற்றுவீதம்

வருடம்	தோற்றியவர்	சித்தியடைந்தோர்	சதவீதம்
2000	13	05	38%
2001	08	01	13%
2002	06	01	17%
2003	05	01	20%
2004	13	06	46%
2005	10	03	30%
2006	07	04	57%
2007	16	03	19%
2008	11	01	09%
2009	07	01	14%
2010	09	01	11%
2011	17	04	24%
2012	12	06	50%
2013	11	06	55%
2014	11	05	45%
2015	11	07	64%
2016	08	04	50%

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் பாடசாலையின் சாதனையாளர்கள்



செல்வன்.கலியுகராசா மதுசன்
சமூக விஞ்ஞானப் போட்டி தேசிய மட்டம்
2012 - 3ம் இடம்
2013 - 9ம் இடம்,
2014 - 9ம் இடம்



செல்வன். ரவீந்திரபிரசாத் மகிந்தன்

2016 – நீளம் பாய்தல், உயரம் பாய்தல், 100 மீற்றர் ஓட்டம் வலயமட்டம் 1ம் இடம்

2016 – நீளம் பாய்தல் மாகாணமட்டம் 1ம் இடம், 100மீற்றர் ஓட்டம் 5ம் இடம் (15 வயதுப் பிரிவு)

2017 – நீளம் பாய்தல், உயரம் பாய்தல் வலயமட்டம் 1ம் இடம் (16 வயதுப் பிரிவு)
200 மீற்றர் வலயமட்டம் 2ம் இடம்

2017 – மாகாணமட்டம் : நீளம் பாய்தல் , உயரம் பாய்தல் 1ம் இடம்
16 வயதுப் பிரிவு – சிறந்த விளையாட்டு வீரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் பாடசாலையின் சாதனையாளர்கள்



செல்வி அபிஸ்நயா சர்மிலன்

2017 தமிழ்த்தினப்போட்டி கட்டுரையாக்கம் : வலயமட்டம் 1ம் இடம்
பிரிவு – I : மாகாணமட்டம் 2ம் இடம்
2017 ஆங்கில தினப்போட்டி Resitation வலய மட்டம் 1ம் இடம்



செல்வி பா.சிந்துஜா

10 வயதுப்பிரிவு (பெண்கள்) 2012
100மீற்றர் ஓட்டம் : வலயமட்டம் 1ம் இடம்
: மாவட்டமட்டம் 1ம் இடம்



செல்வன் மா.ஜெனுசியன்

2017 (12 வயதுப்பிரிவு)
நீளம் பாய்தல் : வலயமட்டம் 1ம் இடம்
யாழ்மாவட்ட மெய்வல்லுனர் சங்கப்போட்டி மாவட்டமட்டம் : 2ம் இடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைக் கலைத்திட்ட செயற்பாடுகள்

வலயநிலை மெய் வன்மைப் போட்டிகள்

2012	11 வயது	பா.சிந்துசா	100மீற்றர் ஓட்டம்	1ம் இடம்
2016	15 வயது	ர.மகிந்தன்	நீளம் பாய்தல், 100 மீற்றர் உயரம் பாய்தல்	1ம் இடம்
2017	12 வயது	மா.ஜெனுசியன்	நீளம் பாய்தல்	1ம் இடம்
	16 வயது	பா.சிந்துசா	நீளம் பாய்தல்	3ம் இடம்
			100 மீற்றர் ஓட்டம்	2ம் இடம்
		சோ.அபிசன்	ஈட்டி எறிதல்	3ம் இடம்
		ர.மகிந்தன்	நீளம் பாய்தல்	1ம் இடம்
			உயரம் பாய்தல்	
			200 மீற்றர் ஓட்டம்	2ம் இடம்
	18 வயது	ம.ஜெகேதீஸ்	1500 மீற்றர் ஓட்டம்	3ம் இடம்
		தி.அஜிந்தன்	சட்டவேலி ஓட்டம்	2ம் இடம்

மாகாணநிலை மெய் வன்மைப் போட்டிகள்

2016	15 வயது	ர.மகிந்தன்	நீளம் பாய்தல்	1ம் இடம்
2016	17 வயது	ர.மகிந்தன்	நீளம் பாய்தல்	1ம் இடம்
			உயரம் பாய்தல்	

செல்வன் ர.மகிந்தன் 2017ம் ஆண்டு நீளம் பாய்தல், உயரம் பாய்தல் போட்டிகளில் தெரிவு செய்யப்பட்டு சிறந்த வீரரிற்கான வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்மொழித்தின போட்டிகள்

வலயமட்ட தமிழ்தினப் போட்டிகள்

2011	பிரிவுI	கட்டுரையாக்கம்	சி.லக்சிகா	1ம் இடம்
2012	பிரிவுII	வாசிப்பு	சு.ஆஞ்சிகன்	3ம் இடம்
2014	பிரிவுI	கதைகூறல்	கி.சாகித்தியன்	3ம் இடம்
	பிரிவுIV	கட்டுரையாக்கம்	செ.செந்தேகனா	1ம் இடம்
2015	பிரிவுI	எழுத்தாக்கம்	சு.தேனுஷன்	2ம் இடம்
2017	பிரிவுI	எழுத்தாக்கம்	ச.அபிஸ்நயா	1ம் இடம்

மாவட்ட மட்டம் தமிழ் தினப் போட்டிகள்

2011	பிரிவுIII	கட்டுரையாக்கம்	சி.லக்சிகா	2ம் இடம்

மாகாண மட்டம் தமிழ் தினப் போட்டிகள்

2017	பிரிவுI	எழுத்தாக்கம்	ச.அபிஸ்நயா	2ம் இடம்

ஆங்கில மொழித் தினப்போட்டிகள்

வலயமட்டம் ஆங்கில தினப் போட்டிகள்

2011	பிரிவு I	ஆங்கில உறுப்பெழுத்து	இ.ஆருஷன்	1ம் இடம்
		ஆங்கில வாசிப்பு	ம.ஆரணி	1ம் இடம்
	பிரிவு III	ஆங்கில உறுப்பெழுத்து	சி.சிவசிகா	1ம் இடம்
	ஆரம்பப்பிரிவு	ஆங்கில நாடகப் போட்டி		2ம் இடம்
	பிரிவு IV	Roleplay		3ம் இடம்
	பிரிவு III	உறுப்பெழுத்து	செ.தயானா	1ம் இடம்
	கனிஷ்டபிரிவு	ஆங்கில நாடகப்போட்டி		1ம் இடம்
2012	Grade10	Roleplay		2ம் இடம்
2013	பிரிவு I	ஆங்கில வாசிப்பு	கி.சாகித்தியன்	3ம் இடம்
		Listening Vocabulary	கி.சாகித்தியன்	1ம் இடம்
	தரம் 11	Roleplay		2ம் இடம்
	தரம் 9	Roleplay		3ம் இடம்
2017	Grade05	Poem	ச.அபிநஸ்யா	1ம்இடம்
		Copywriting	ச.அபிநஸ்யா	3ம் இடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக விஞ்ஞானப் போட்டி

வலயமட்டம் சமூக விஞ்ஞானப் போட்டி

2012	பிரிவுI	க.மதுசன்	1ம் இடம்
	பிரிவுIII	செ.கானஸ்பிரியா	3ம் இடம்
2013	பிரிவுII	க.மதுசன்	1ம் இடம்
2014	பிரிவுII		1ம் இடம்
2015	பிரிவுIII		3ம் இடம்

மாகாணமட்டம் சமூக விஞ்ஞானப் போட்டி

2012	தரம்07	க.மதுசன்	3ம் இடம்
2013	தரம்08		2ம் இடம்
2014	தரம்09		2ம் இடம்

தேசிய மட்டம் சமூகவிஞ்ஞானப் போட்டிகள்

2012	தரம்07	க.மதுசன்	3ம் இடம்
2013	தரம்08		9ம் இடம்
2014	தரம்09		9ம் இடம்

சைவசமயப் போட்டிகள்

வலயமட்டம்

2015	தரம்9	சைவசமய கண்காட்சி	சி.குசந்த	1ம் இடம்
	தரம் 8		பா.சிந்துசா	3ம் இடம்
	தரம் 3	வண்ணை சாந்தையர் மடம்	ம.அக்சயன்	1ம் இடம்
2016	தரம்4		ம.அக்சயன்	2ம் இடம்

ICT

வலயமட்டம்

2014	Level I	ICT	Quiz	சி.சாகித்யன்	1ம் இடம்
				சு.தேனுசன்	2ம் இடம்
2016	Level I			ச.அபிஸ்நா	2ம் இடம்
2017	Level I			ச.அபிஸ்நா	2ம் இடம்
				ம.அக்சயன்	3ம் இடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தாக்கப் போட்டி

2014	தரம் 7	ரா.ராகவன்
	தரம் 9	ம.ஆருண்

விவசாயம்

2012	தரம் 10	விவசாய விஞ்ஞானப் போட்டி	1ம் இடம்
2016		பாடசாலைத்தோட்டம்	1ம் இடம்
2017			2ம் இடம்

மனைப்பொருளியல்

2015	தரம் 11	மனையியல் அறிவுப் போட்டி	கி.கௌசிகா	2ம் இடம்

சுகாதாரம்

மாகாணமட்டம்

2014	சுகாதார மேம்பாடு	வெண்கலப்பதக்கம்

கற்றல் வள நிலையம் வலயமட்டம்

வலயமட்டம்

2014	கற்றல் வள நிலையம்	3ம் இடம்
2015		3ம் இடம்
2016		2ம் இடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை

பழைய மாணவர் சங்க அறிக்கை

எமது பாடசாலையின் பழைய மாணவர் சங்கம் 2012ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 4ஆம் திகதி பாடசாலையில் ஆரம்பிக்கப்பட்டது. வினைத்திறனான செயற்பாட்டைக் கொண்ட இப் பழைய மாணவர் சங்கத்தினால் பாடசாலை பௌதீக, கலைத்திட்ட, இணைக்கலைத்திட்ட செயற்பாடுகளில் கணிசமான வளர்ச்சிப் போக்கைக் காட்ட காரணமாய் அமைந்துள்ளது

பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் ஊடாகவே வெளிநாடுகளில் வதியும் இப் பாடசாலையின் பழைய மாணவர்கள் உதவிகளை வழங்கி வருகின்றனர். Home Work Club செயற்றிட்டம் பழைய மாணவர் சங்கத்தினூடாகவே செயற்படுத்தப்படுகிறது. அத்துடன் பாடசாலையின் பல்வேறு அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கும் பழைய மாணவர் சங்கம் ஆதரவு வழங்குகிறது. அந்த வகையில் இவ்வாண்டு பரிசில் நாளில் வெளிவரவிருக்கும் "நுணசை ஆரம்" மலருக்கு எமது மனம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

	செயற்குழு	: உறுப்பினர் விபரம்	
1.	தலைவர்	: திரு.ஆ.தங்கவேலு	(அதிபர்)
2.	உப தலைவர்	: திரு.ஐ.கமலநாதன்	(ஓய்வுநிலை ஆசிரியர்)
3.	செயலாளர்	: Dr.திரு.ப.நித்தியானந்தன்	(பழைய மாணவர்)
4.	உப செயலாளர்	: திருமதி.ஜெ.சுப்பிரமணியம்	(பழைய மாணவி)
5.	பொருளாளர்	: திரு.நா.அருட்சோதி	(முன்னாள் அதிபர்)
6.	போசகர்	: திரு.க.விக்கினேஸ்வரன்	(ஓய்வுநிலை வங்கியாளர்)
7.	நிர்வாகக் குழு உறுப்பினர்கள்	: திரு.க.சுதாகரன்	
		திரு.வே.சுபாஸ்கரன்	
		திரு.பா.சிவரூபன்	
		திருமதி.ஜெ.ஸ்ரீமலர்	
		திருமதி.ஜெ.சுதர்சனா	

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளம் நிறைந்த நன்றிகள்...

எமது பாடசாலை மலரான "நுணசைஆரம்" வரலாற்று இதழாக இவ்வருடம் முதன் முதலாக மலர்ந்து உங்கள் கரங்களில் தவழ்கின்றது. இவ்விதழின் ஆக்கங்கள் எமது பாடசாலை குடும்பத்தினது கூட்டு முயற்சியின் விளைவே ஆகும். இவ்விதழுக்கு ஆசிச்செய்திகள் ,வாழ்த்துச்செய்திகள், ஆக்கங்கள் வழங்கிய அனைத்து உள்ளங்களிற்கும் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம்.

இந்த வகையில் மலர் சிறக்க ஆசிச் செய்தி வழங்கிய கலாநிதி கு.து ஜெகதீஸ்வரக் குருக்கள் (விளைவேலி ஆதீனம்) அவர்களிற்கும் வாழத்துச் செய்தி வழங்கிய கல்வி புலம் சார் சமூத்திற்கும், பழைய மாணவர், பெற்றோர், நலன் விரும்பிகள் ஆகியோர்க்கும் எமது நன்றிகளை தெரிவிக்றோம்.

இந் நூலின் சிறப்புப் பகுதிக்கு ஆக்கங்கள் தந்துதவிய ஆசிரியர் மற்றும் மாணவர்கள் அவர்களை நெறிப்படுத்திய ஆசிரியர்கள் யாவருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

இம் மலர் சிறப்பாக வெளியீடு செய்வதற்கு தேவையான புகைப்படங்களை எடுத்து செவ்வனே தந்துதவிய குகன் ஸ்ருடியோ நிறுவன அதிபர் திரு.பி.சிறிபிரகாஸ் அவர்களிற்கும் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இம் மலரை செம்மையாகவும், அழகாகவும் அச்சுப் பதிவு செய்துதவிய ஸ்ரீ மாருதி பதிப்பகத்தினருக்கும் எமது பாடசாலை சமூகம் சார்ந்த நன்றிகள்.

-மலர் வெளியீட்டுக் குழு-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ மாருதி பதிப்பகம் 0777917680